திருச்சிற்றம்பலம்

## தென்கைலாயம் என்னும்

# வெள்ளியங்கிரித் தலவரலாறு

## (உரை நடை)

★

[வெள்ளியங்கிரி வரலாறு, முட்டத்துநாகீசுரமுடையார், திருமுத்துவாளியம்மையார்
கோயில் வரலாறுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.]

★


தொகுப்பாசிரியர்:

வித்துவான். ஐ. இராமசாமி

(இக்கரை போளமாம்பட்டி.)

தமிழாசிரியர்,

...ாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, ஆலாந்துறை.


★


வெளியீட்டாளர் :

திருமதி. S. T. அக்கம்மாள் இராமசாமி

இக்கரை போளமாம்பட்டி.

முதற் பதிப்பு: 1964.
உரிமை வெளியீட்டாளர்க்கு.

விலை ரூ. 2—00

மாருதி பிரஸ் 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

# முன்னுரை

நல்ல சொற்பொரு ளுணடாத்தவு
மெல்லை காணரும பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்லபைக்குரி யானை வழுத்துவாம்

திருவளரும் வெள்ளியம்பலத்து வெள்ளி விநாயகரது விறலடிகளையும், பிறவா நெறியாம் திருப்பேரூர்த் தலம் மேவிய பட்டிப்பெருமான் பொன்னடிகளையும் வணங்கி, முட்டத்து நாகீச்சுரத்தான் திருக்கருணையையும், திருமுத்து வாளியம்மையாரின் திருவருளையும் உளத்திற்கொண்டு இந்நூலைத் தொகுக்கின்றேன். தென்னகத்தில் கொங்கு நாட்டின் மேற்கெல்லையாய் விளங்குவதும், சித்தர் முனிவர்களால் தொழப்பட்டதுமான தென்கைலாயம் என்னும் வெள்ளியங்கிரி மலைக்கு ஆண்டுகள்தோறும் வேனிற் காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். சிவபெருமானின் திருவுருவமாக அமைந்த இம் மலையின் அடி முதல் முடிவரை சென்று உலவும் பக்தர்கள் இத்தலத்தின் சிறப்பையும் வரலாற்றையும் அறிய விரும்புவார்கள். திருப்பேரூரின் வரலாற்ருேடு இணைந்துள்ள இத் தலத்தின் வரலாறுகளைத் திருப்பேரூர்ப் புராணம் பாடியருளிய ஸ்ரீலஸ்ரீ கச்சியப்ப முனிவர் அவர்கள் தமது நூலில், புராண வரலாற்றுப் படலம், நாரதர் வழிபடு படலம், காமதேனு வழிபடு படலம், விம்மிதப் படலம் ஆகியவற்றுள் மிகவும் விரிவாகப் பாடியுள்ளார்கள். இன்றுவரை இத் தலத்தின் வரலாறுகளை விரித்துரைக்கும் செய்யுள் நூல் இஃதொன்றேயாம். இந்நன்னூலை முழுமையும் கற்றுச் சுவைப்பார் ஒரு சிலரேயாவர். இத்தலத்திற்கு வரும் அன்பர்களுக்கு, இம்மலையின் பெருமைகள் அடங்கிய உரைநடை நூல் ஒன்று இத்தலத்திலேயே கிடைக்குமாறு செய்தால் ஒரு சிறிது கற்றவர்களும் படித்துணருமாறு அது மிகவும் பயனுடையதாக இருக்குமெனக் கருதியே இந்நூலை அடியேன் தொகுத்தனன்.

இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் கோவையில் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவ[illegible], [illegible]ச்சங்கத்தின் தெய்வத் தலங்

களின் வரலாறுகளையும், தலபுராணங்களையும், தெய்வப் பிரபந்தங்களையும் வெளியிடச் செய்தவரும், 'கொங்குமலர்' என்ற மாத இதழ் மூலம் கொங்கு வரலாற்றையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டுத் தாம் பல செய்யுள் உரைநடை நூல்களை இயற்றிப் பதிப்பித்தவரும், தென்னாட்டில் கல்வெட்டுச் சாசன ஆராய்ச்சித் திறன் மிகுந்தவர்களில் தலைசிறந்தவரும், கொங்கு வரலாறு என்னும் மாபெரும் ஆராய்ச்சி நூலை இயற்றியவரும், சென்னைச் சைவ சித்தாந்த மகா சபையின் திங்கள் வெளியீடாகிய 'சித்தாந்தத்'தைப் பத்தாண்டுகள்வரைஆசிரியராக இருந்து நடத்தியவரும் உயர் சைவத் திருவாளருமாகிய கோவை கிழார் இராவ்பகதூர் செந்தமிழ்ப் புரவலர் சித்தாந்தப் புலவர், சைவஞாயிறு C. M. **இராமச்சந்திரஞ் செட்டியார்** B.A., B.L., F.R.G.S., அவர்களும், திருப் பேரூர்ப் புராணம் போன்ற பல நூல்களை வெயிட்டவரும், மாபெரும் புலவர்கள் வழித்தோன்றியவரும், பல ஆராய்ச்சி நூல்களையும், பிரபந்தங்களையும் இயற்றியவரும், திருத் தொண்டர் புராணமாம் பெரியபுராணத்திற்குப் பேருரை வகுத்த பெரியாரும், தென்னாட்டின் தவப்புதல்வருமான உயர்சைவத் திருவாளர் **சிவக்கவிமணி** C. K. சுப்பிரமணிய **முதலியார்** B.A., F.M.U. அவர்களும், தாம் வாழ்ந்த நாள் முழுவதும் தமிழ்ப்பணி புரிந்து வரும் நாட்களில் அவ்வப் போது தாம் வெளியிட்டுள்ள பல நூல்களில் வெள்ளியங்கிரி யின் சிறப்புக்களை ஆங்காங்குக் குறித்துள்ளனர். கொங்கு நாட்டில் தமிழை வளர்த்த இப்பெரியார்கள் ஆற்றிய தொண்டுகள் அளவிலவாம். கொங்கு நாட்டுக்கு மைய மாகத் திருப்பேரூர்த் தலத்தில் தவத்திரு. **சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி**யைத் தோற்றுவித்த பெருமை கோவை கிழாரையே சாரும். இத்தமிழ்க் **கோயிலைத்** திறம்பட நடத்தி வருபவர். **தவத்திரு. இராமசுவாமி அடிகளா**ராவர். மற்றும் அக்காலத்தில் தலவரலாறுகளை வரைந்து வெளியிட்ட பல நூல்களின் ஆசிரியரான உயர் சைவத் திருவாளர் **வித்துவான் சி. கு. நாராயணசாமி முதலி யார்** அவர்களும் நற்பணி புரிந்த அன்பராவர். இத்தகு பெரியார்களின் பணிகளை நாம் என்றும் மறத்தலாகாது.

சில ஆண்டுகளின் முன்பு கோவை கிழார் அவர்களின் நன்முயற்சியால் சென்னை கீழைக்கலைக் கையெழுத்துப் பிரதிச் சாலையினர் (Madras Government Oriental Manuscripts Library) வெளியிட்டுள்ள '**சோழன் பூர்வ பட்டையம்**' **என்னும் உரைநடை நூல் ஒன்றைக் கற்று வரும்போது**

அதில் கொங்கு வரலாறும், வெள்ளியங்கிரி, முட்டத்து நாகீசுரமுடையார் கோயில் திருப்பேரூர் ஆகிய இடங்களின் வரலாறும் முறையே அமைந்திருத்தலைக் கண்டு மகிழ்ந் தேன். வெள்ளியங்கிரியின் வரலாற்றை இயம்பும் வகையில் இந்நூலின் கருத்துக்களைச் சுருக்கி, நாகேசுரர் கோயில் வரலாற்றோடும், திருப்பேரூர்ப் புராணத்தின் தொடர்பு கொண்டும், முற்கூறிய பெரியோர்கள் கூறிய ஆராய்ச்சிகளை ஒன்று கூட்டியும் தொகுத்து வெள்ளியங்கிரியின் வரலாற்றை வெளியிட விரும்பினேன். இத்தகைய நூலை வெளியிடுதற் கேற்ற புலமையும், வரலாற்றறிவும், ஆற்றலும் அற்றவ னாகிய நான் பெரியோர்களின் அன்பையும் ஆதரவையும் பற்றுக் கோடாகக் கொண்டு என் கருத்தை நமது சிவக் கவிமணியவர்களிடம் உரைத்தேன். அவர் என்னை மிகவும் ஊக்கியதோடு அதற்கேற்ற வழி முறைகளையும் திருவாய் மலர்ந்து ஆதரவும் தந்து பின் இறைவன் திருவடி நிழலை யடைந்தனர். உயர்சைவ தெய்வப் பெரியாராம் அன்னா ருக்கு என் சென்னிதோய்ந்த வணக்கங்களும் நன்றியும் உரித்தாகுக!

மற்றும் வெள்ளிமலைக்கு வந்து செல்லும் அன்பர்கள் அருகிலுள்ள திருமுத்துவாளியம்மையார் பங்கில் வளர் முட்டத்து நாகீசுரமுடையாரையும், முட்டத்திலுள்ள பிற கோயில்களையும் கண்டு சிற்பச்சிறப்பமைந்த திருமுத்துவாளி யம்மையாரையும் கண்டு வணங்கி நற்பேறு பெற்றுச் செல்லவேண்டும் என்பது என் விருப்பம். அதனாலேயே முன் பகுதியில் அக்கோவில்கள் உள்ள இடங்களையும் வழிகளையும் சிறப்புக்களையும் கூறியுள்ளனன். இக்கோயில்களைக் காணும் வாய்ப்பை இந்நூல் மூலமாக உண்டாக்க வேண்டும் என்ற கருத்தினால் இவ்வரலாற்றோடு இவைகளும் இணைக்கப்பட் டுள்ளன. கரிகாலன் என்னும் சோழ மன்னன் கொங்கு நாட்டின் பலவிடங்களிலும் திருப்பணி செய்ததோடு முட்டத்து நாகீசுரத்தில் இருந்துகொண்டு சமய முதலிகள் வாயிலாக வெள்ளியங்கிரியின் வரலாற்றைக் கேட்டனன் என்பதால் அடுத்து இப்பகுதியில் சோழன் முன்னவர்களது வரலாறும் திருப்பணிகள்பற்றிய வரலாறும் சேர்க்கப் பட்டுள்ளன. வெள்ளியங்கிரியின் வரலாற்றுடன் பிற் சேர்க்கையில் சில குறிப்புகளும் இத்துடன் குறிக்கப் பட்டுள்ளன.

முற்பகுதியால் இங்குப் பார்க்கவேண்டிய இடங்களை யறிதல், மேலும் சில கோயில்களைத் தரிசித்தல் என்று

பயனும், சோழர் வரலாற்றுப் பகுதியால் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று, தெய்வப்பற்று வரலாற் றுணர்ச்சி இவைகளையுணர்தலாகிய நற்பயனும், அடுத்த பகுதியால் வெள்ளியங்கிரியின் வரலாற்றை ஓரளவு உணர்ந்துகொள்ளும் நற்பயனும், பிற்பகுதியால் இன்னும் சிலவற்றை உணர்ந்துகொள்ளும் பயனும்இதைக் கற்பார்க்கு உண்டாகும். வெள்ளியங்கிரிக்கு வருவோர் ஓரளவு இத் தலத்தின் வரலாறுகளைச் சுருக்கமாக எளிதில் உணர்ந்து கொள்ளும் அளவு இந்நூல் துணைபுரியும் என்பது திண்ணம்.

இந்நூல் வெளியாதற்குத் துணை புரிந்த **'சோழன் பூர்வ பட்டையம்'** என்னும் நூலிலிருந்து போதிய கருத்துக்களை எடுத்துக்கொள்ள எமக்கு அனுமதி தந்த சென்னை அரசினர் கீழைக்கலைக் கையெழுத்துப் பிரதிச் சாலையினருக்கு என் உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் அறிவிக் கின்றேன். என்னை இவ்வழியில் ஊக்கிய பெரியார்களான சிவக்கவிமணியவர்கட்கும், கோவைக் கிழாரவர்கட்கும் என் வணக்கங்கள் உரியன. மற்றும் என் தமிழாசிரியர்களான தென்னகத்துத் தமிழ்ப் புலவர்கள் குழுவினரில் ஒருவரும், புலவரேறு அவர்களின் உடன் பிறந்தாரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் பழம் புலவரும் ஆன உயர்சைவத் திருவாளர் இலக்கண நிறைகடல், பண்டித **அ. கந்தசாமிப் பிள்ளை** அவர்கள்; மற்றும் அரசப்பன் இருசொல் அலங்காரம், கோவைச் சிலேடை வெண்பா, தனிப்பாடல்கள் ஆகிய நூல் களின் ஆசிரியரும், பழம்புலவருமான உயர்திருவாளர் முத்தமிழ்க்கவி, வித்வான் **K. R. அரசப்பனூர்** அவர்கள் ஆகியோர் திருவடிகளுக்கு என் வணக்கங்கள் உரியன. இன்னும் இத்துறையில் எமக்கு ஆதரவளித்த போளமாம் பட்டி ஊராண்மைக் கழகத் தலைவரும் தமிழகப் பஞ்சாயத் துக்களின் சபைச் செயலாளரும் பொதுநலப் பணியாளரும் தமிழறிஞரும் நண்பரும் ஆசிரியருமான உயர்திருவாளர் **B. K. ஆண்டியப்பன்** அவர்களுக்கும், வெள்ளியங்கிரி தேவத்தான டிரஸ்டியாக உள்ளவரும், செம்மேடு பெரு நிலக் கிழாருமான உயர்திருவாளர் **V. P. கந்தசாமிக் கவுண்டர்** அவர்களுக்கும், இதனை நன்கு அச்சிட்டு உதவிய சென்னை மாருதி அச்சகத்தார் அவர்களுக்கும் என் வணக் கங்கள். மற்றும் இந்நூல் வெளியிடுவதில் கருத்துக்கொண்டு பல தடவைகளில் என்னைப் பணித்து ஆவன செய்தருளிய உயர்சைவத் திருவாளர் **கா. மாரிமுத்து முதலியார்** (நெம். 6, அர்ப்பன் பாங்கு தெரு, ஈரோடு) அவர்கட்கு என் நன்றியும் வணக்கங்களும்.

வெளியிடுங்கால் பல உதவிகளையும் புரிந்த என் நண்பர்கள் திருப்பேரூர்த் தமிழ்க் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் புலவர் இரா. வையாபுரி அவர்களுக்கும், சந்தனபுரம் நண்பர் இரா. கந்தசாமி அவர்கட்கும், கோவை நாடக அறிஞரும் நடிகருமான நா. இராசகோபால் அவர்கட்கும், கோவை செ. சுப்பிரமணிய கவுடர் அவர்கட்கும் என் நன்றி. மற்றும் அணிந்துரைகள் எழுதியுதவிய பேராளர் எல்லார்க்கும் என் வணக்கங்கள். இந்நூல் பொருட்குறைவின் காரணமாக மலிவுப் பதிப்பாக வெளியிடப்படுகின்றது. இதில் குறிப்பிடப்படாத செய்திகளையும், குறித்தும் மாறுபாடுற்ற பெயர்களையும் பிறவற்றையும் எமக்கு அன்பர்கள் அறிவிப்பார்களாயின் அடுத்த பதிப்பில் அவைகளைச் சேர்க்குமாறு செய்வேன். அன்பர்களது ஆதரவு இச்சிறு நூலுக்கு இருக்குமானல் அடுத்த பதிப்பு படங்களுடன் வெளியிட நேரலாம். வணக்கங்கள்.

சோபகிருது ஆண்டு,
பங்குனி மாதம்.

இங்ஙனம்,
ஐ. இராமசாமி.
(தமிழாசிரியர்)

---

## பதிப்பாசிரியர் முன்னுரை

இறைவனருளால் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே நான் கேட்டுக் கொண்டவாறு என் கணவர் எமக்குத் தொகுத்தளித்த இவ்வுரை நடை நூலை, எல்லாம் வல்ல வெள்ளியம்பலவாணன் திருவடிகளை நினைத்து இவ்யாண்டு வெளியிடுகின்றேன். இந்நூலின் பதிப்புரிமையும் வெளியீட்டுரிமையும் எமக்கே உரியது. ஆண்டவன் திருவருளும், இறைவனடியார்களது நல்ல ஆதரவும் இந்நூலுக்கு ஏற்படுமானல் மேற்கொண்டு அடுத்த பதிப்பை நன்கு தேவையான படங்களோடும் இணைத்துப் பதிப்பிக்க எண்ணியுள்ளேன். அன்பர்கள் இந்நூலை வாங்கிக் கற்று வெள்ளியங்கிரியாண்டவன் திருவருளைப் பெற்று மகிழ்வார்களாக.

இக்கரை
போளமாம்பட்டி,
5-4-1964.

S. T. அக்கம்மாள் இராமசாமி

தென்னகத்துப் பழம்பெருங் கவிஞரும்
செந்தமிழ்ப் பன்னூல் இலக்கியங்களின் ஆசிரியரும்,
தமிழகத்து முன்னாள் அரசவைக் கவிஞரும் ஆன
**நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை M.L.C.**
அவர்கள் அருளிய

# அணிந்துரை

மூலமும் நடுவும் முடிவும் இலதாய்க்
காலமும் கணக்கும் கடந்து நிற்கும்
நித்திய மான சத்தியப் பொருளையே
நாடும் படித்தாம் நல்லறி வூட்டித்
தெய்வம் என்பதைத் தெளிவுறக் காட்டும்
இலக்கியங் களையே ஈந்துளச் சிறப்பால்
என்றும் உள்ளது தென்றமிழ் என்று
புலமை மிக்கோர் போற்றி வணங்கும்
தமிழக் குரியத் தண்மையும் மென்மையும்
அன்பும் பண்பும் அறநெறிப் பற்றும்
பணிவும் தணிவும் பரந்த நோக்கமும்
உள்ளவ ராகிய ஒண்டமிழ் ஆசான்
ஐ. இராம சாமி அவர்கள்
சீரிய முறையில் சிந்தனைத் தெளிவும்
ஆர்வம் மிகுந்த ஆராய்ச்சித் திறனும்
நலியா ஊக்கமும் சலியா உழைப்பும்
சேர்த்துப் படைத்துளச் செந்தமிழ் இலக்கியம்
'வெள்ளியங் கிரித்தல வரலாறு', விழைதரும்
எளிய நடையும் இனிய பதங்களும்
ஆழ்ந்த கருத்தும் அமைந்துள தாகப்
படிப்பவர் மனதில் தெய்வ பக்தியைப்
புகட்டத் தகுந்த புத்தக மாகும்
தமிழ்த்திரு நாட்டின் சரித்திரச் சிறப்பை
விளக்கக் கூடிய வெகுநல்ல நூலாம்.
இத்தகு நூலை இயற்றிக் கொடுத்துத்
தமிழ்த்தா யாரின் தாள்கள் கமழப்
புதுமலர் சூட்டும் புலவனுகிய
இனிய நண்பர் இராம சாமியின்
சீரும் சிறப்பும் செல்வமும் பெருகிப்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்கென
வெள்ளியங் கிரிவரும் விமலனைப் பணிந்து
மனமார வாழ்த்தி மங்களம் பாடுவோம்.

**சென்னை,**
**28-3-64**

**வெ. இராமலிங்கன்.**

கேட்டறிந்தும் சிறந்தவற்றை இந்நூலுக்கு எடுத்துக் கொண்டும் பிற ஆசிரியர்களைப் போல் அல்லாமல் எடுத்த இடங்களைக் குறித்தும் நன்றி செலுத்தியும் உள்ள பெருந்தன் மையைக் கண்டால் எனக்கு ஒரே வியப்புத்தான் வருகிறது.

பொதுவாகவே தமிழாசிரியர்கள் ஏழைகள். பள்ளி யாசிரியர்களுக்குப் போதிய வருவாயும் இல்லை. அதனால் ஊக்கமும் வராது. சொந்தமாக நூல்களை வாங்கிப் படிப்பது என்றால் மிக அரிது. அப்படியிருந்தும் இந்த நூலாசிரியர் கொங்கு நாட்டுப் பதிப்பு நூல்களை முற்றும் வாங்கித் தம் சொந்த நூலறையில் வைத்துள்ளார். அவைகளைப் படித் தும் குறிப்புக்கள் எடுத்தும் கல்வெட்டுக்களைப் படித்துப் பயன்படுத்தியுமுள்ளார். இம் முயற்சி மெச்சத் தக்கது.

சென்னை அரசியல் கையெழுத்துப் பதிப்புச் சாலையில் அங்கத்தினர் என்ற வகையில், சோழன் பூர்வ பட்டையம், கொங்குதேச இராசாக்கள், பேரூர்க் கோவை, இராமையன் அம்மானை முதலிய அரிய நூல்களை வெளியிட வேண்டு மென்று வற்புறுத்தி மேற்கூறியவற்றைப் பிழைதிருத்தி முகவுரைகளோடு நானே அரசியலாருக்காகப் பதிப் பித்தேன். அவைகளில் சோழன் பூர்வ பட்டையம் என்ற நூல் கொங்கு நாட்டு முப்பத்தாறு பெருங் கோயில்களின் வரலாறுகளையும் கூறுவதாகும். அதில் கர்ணபரம்பரைக் கதைகள் போகலாக வரலாற்றுக்குரிய பகுதிகளைத் தொகுத்து எழுதினேன். இந்நூலாசிரியர் அந்தப் பதிப்பை நன்கு ஆராய்ந்து அவற்றில் சிறந்தவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறார். மேலும் என்னுடைய மற்ற ஆங்கிலம் தமிழ் நூல்களையும் ஆராய்ந்திருக்கின்றார். மேலும் கொங்கு மண்டல சதகம், ஊர்த்தொகை முதலிய பழய நூல்களையும் எடுத்தாண்டிருக்கின்றார். அவர் ஓய்வு நேரத்தை மிக அரிய செயலில் கழித்து இருக்கிறார் எனக் காண எனக்கு மிகவும் மகிழ்ச்சி. கல்லூரி ஆசிரியர்களும் செய்ய இயலாத ஒரு செயலை ஒரு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் நூலகங்கள் இல்லாத நாட்டுப்புறத்தில் இருந்து கொண்டு இந்த ஆராய்ச்சி நூலை எழுதினால் அதற்குக் காரணம் அவரது நாட்டுப்பற்று, இறையன்பு, மக்கள் இணக்கம் முதலிய அருங்குணங்களேயாகும் எனலாம்.

இந்நூல் கொங்கு நாட்டுப் பொதுமக்கள் பலருக்கும் பயன்படும் என்று நம்புகிறேன். பொதுமக்கள் இதனைப் பாராட்டிப் படிப்பார்களாக! மொழி வாழ்க, சமயம் பெருகுக, ஆண்டவன் தாள்மலர் சிறக்க!

9-3-1964. கோவை கிழார்.

தென்னகத்துப் பழம்புலவர் குழுவினரில் ஒருவரும்,
மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும் ஆன
உயர் சைவத் திருவாளர், இலக்கண நிறைகடல்

**பண்டித. அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்**

அளித்த

# அணிந்துரை

---

திருச்சிற்றம்பலம்

அமிழ்தினுமினிய நம் தமிழ் மொழியதனின் பன்மாண் துறையும் பயின்று தேர்ந்தறிந்து அம்மொழியின் அரிய தீஞ்சுவை திளைத்து, ஆராய்ச்சித் திறனில் நுழைந்து பல்வகை நூல்களின் ஒருமைப்பாடு கண்டு மகிழ்ந்து, அதிலும் பிறர் எவரும் அஞ்சும் வரலாற்றுணர்ச்சியின் நுண்மாண் நுழைபுலமுடையவராய் விளங்கும் புலவர் பெருமகன் ஆவர் நமது அன்பர் உயர்திரு. ஐ. இராமசாமிக் கவுடர் அவர்கள். இவர் என்னிடம் தமிழ் பயின்ற முன்னாள் மாணவராவர். இவர் தோன்றிய குலம் ஒக்கலிகர் குலம், ஒக்கலிகர் பல்வகைச் சிறப்பும் பல்வகைப் பண்பாடும் உடையவர்கள்; இத்தகைய பெரு மக்கள் உள்ளமையினாற்றான் இவ்வுலகம் நடைபெற்று வருகின்றது என வள்ளுவர் பெருமான், "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்" என்னுந் திருக்குறளால் விளக்குகின்றார்; இன்னும் இதுபற்றிப் புறநானூற்றுப் பாடலொன்றும்,

"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவிலர்,
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவதஞ்சிப்
புகழெனின் உயிருங்கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர், அயர்விலர்
அன்ன மாட்சி யனையராகித்
தமக்கென வாழா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

என விளக்குகின்றது; இத்தகைய பண்பாடுடையவர் ஒக்கலிகர்; எடுத்துக்காட்டாக, டெல்லி சட்டசபையினர் கோவைக் கம்பன் என்னுஞ் சிறப்புற்று கம்பன் கவியில் தொகுத்து வகுத்துரையிட்டு வெளியிட்ட திருவாளர்.

P. G. கருத்திருமன் M. P. அவர்களும், அரசினரால் இராவ் சாகிபு பட்டம் பெற்ற காலஞ் சென்ற தீனம்பாளையம் மாரண்ண கவுடரவர்களும், கோவை மாவட்டக் கழகத் துணைத் தலைவராய் விளங்கி மாட்சியுடன் ஆட்சி புரிந்த தாளியூர் திருவாளர் T. T. S. திப்பைய கவுடர் முதலியோரும் ஆவார்கள். கழக உயர்நிலைப் பள்ளிகளிலும் பலர் தமிழாசிரியராகப் பணி புரிகின்றனர்.

இந்நற்குலத் தோன்றலாகிய அன்பர் வித்துவான் ஐ. இராமசாமியவர்கள் நமது கொங்கு நாட்டின் பலவகைச் சிறப்பியல்களையும் நன்கோர்ந்து கடைப்பிடித்துத் தற்போது, 'வெள்ளியங்கிரித் தல வரலாறு' ஆகிய இந்நூலையியற்றி வெளியிட்டுள்ளார். இந்நூலால் வெள்ளியங்கிரி சூழ் குன்றுகள், அவற்றில் உதித்துக் குதித்தோடிவரும் நதிகள், அருகிலுள்ள தலங்கள், சிறந்த இட விசேடங்கள், இன்னும் அறிதற்கரிய வரலாற்றுண்மைகள் பலவும் தொகுத்து வகுத்து விரித்துணர்த்தியிருக்கின்றனர்; கற்றுணர்ந்தவை எத்தனை நூல்கள், சென்று இயல்பறிந்த இட விசேடங்கள் எத்தனை? இவ்வரிய முயற்சித் திறனையெல்லாம் நினைக்குங்கால் நமக்கு ஓர் பெருவியப்பு உண்டாகிறது.

இத்தகைய அரும்பெரும் நூலை நம் நாட்டிற்கு உபகரித்த செந்தமிழணங்கின் செய்தவப் புதல்வனாகிய இப்புலவர் திலகமாகிய நமது உயர்திரு ஐ. இராமசாமிக் கவுடர் அவர்கள் இயற்றமிழ்ப் புலமை மட்டுமின்றி இசைத் தமிழ்ப் புலமையும் உடையவர். இன்னும் சோதிடத்திலும் மாதிடத்தினர். அடக்கம், அன்பு, வாய்மை, தூய்மை ஆகிய நற்குண நற்செயல்களும் ஒருங்குடையவர். இப்பெருந்தகை இன்னும் இதுபோன்ற பல நூல்கள் இயற்றி நாட்டிற்கு நலம் புரிவாராக! இப்பெருந்தகைக்கு நீடிய ஆயுள், நிரம்பிய செல்வம், நோயில் யாக்கை, அமைதியுடன் மகிழ்தரு வாழ்க்கையாதி அனைத்து நலனும் இனிதினருள்கவென என்னையாளுடைய சிவகாமி நேசச் சிற்சபேசன் திருவடிகளைச் சிரமேற் கொள்கிறேன். வாழி தமிழுலகம், வாழி தமிழன்னை, வாழி வரலாற்று நூல்கள், வாழி நமது ஐ. இராமசாமிக் கவுடரவர்கள். தமிழ் தழைக்க! நலம் விளைக!

19—3—'64 இங்ஙனம்,
திருப்பேரூர். பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை

திருப்பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி முதல்வரும், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடாலயத்தின் இளம் பட்டம் சுவாமிகளுமான

**தவத்திரு. வித்துவான். இராமசாமி அடிகளார்**

அவர்கள் அருளிய

# வாழ்த்துரை

தமிழகம் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதன் மேற் பகுதியாக அழகிய மலைத்தொடர்களுடன் விளங்குவது கொங்கு நாடு. கொங்கு நாட்டிற்குப் பெரிதும் விளக்கம் தருவது வெள்ளியங்கிரியும் அதன் பகுதிகளுமாகும். வெள்ளியங்கிரி பற்றிப் பேரூர்ப் புராணத்திலும் சில கட்டுரைகளிலும் ஒரு சில செய்திகளை அறிகிறோம். வெள்ளியங்கிரிக்குத் தொடர்புடையதாக விளங்கும் பல செய்திகளையும் கல்வெட்டுக்களையும் தொகுத்துள்ளார் வித்துவான் திரு. இராமசாமி அவர்கள். வரலாற்றுப் போக்கிலும் சமயத் துறையிலும் அமைந்த செய்திகளைத் திரட்டி அரிது முயன்று இந்நூலை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் கொங்கு நாட்டின் பண்டைய செய்திகள் பலவற்றை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு அமைந்திருக்கிறது. இவர் இதுபோன்ற பல நூல்களை உருவாக்கித் தமிழ் மொழிக்கும் சமயத்திற்குமான நற்பணிகளைச் செய்ய எல்லாம் வல்ல சாந்தலிங்கப் பெருமான் திருவருள் துணை புரிவதாக.

25—3—'64
திருப்பேரூர்.

**இராமசாமி அடிகள்**
முதல்வர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
தமிழ்க் கல்லூரி, திருப்பேரூர்.

பழம்பெரும் புலவரும், பன்னூல்களின் ஆசிரியரும் ஆன்
முத்தமிழ்க் கவி.

## வித்துவான் K. R. அரசப்பனார்

அவர்கள் அருளிய

# சாத்து கவி

---

### ஆசிரிய விருத்தம்

பொன்னுளுங் கலையரசி மின்னுளும் ஒன்றியுறை
பொங்கிவளர் கொங்குநாட் டில்
பூலோக கயிலாய மேலாகு வெள்ளிமலை
போற்றுதவ மாற்றுமுனி வர்
தன்னேரி லாததவ மிந்நாள் எழுந்த பயன்
தானென்ன வானோர்பு கழ்
தக்ககலை பற்பலவு மிக்குபயில் கல்வெட்டு
சாசனமும் ஆய்ந்தறிந் தே
முன்னோரு மறியாத முட்டமும் பஞ்சகிரி
மூதைந்து லிங்கங்க ளின்
முன்பின் னறிந்துகிரி யின்தன்வர லாறுதனை
மொழிந்தநம் இராமசாமி
பொன்னார மெனுமிந்நூல் துன்னுரு மகிழ்வெய்த
பூவெள்ளி புத்தார மாய்
பொன்னுலகு மந்நுலகு தன்னிலிது மன்னியொளி
பொங்கி யருள் தங்குமன் றே.

---

### தாழிசை

சங்கீத வல்லவன்காண் கொங்கோது சொல்லழகன்
சாற்றுமிந் நூல்
மங்காத புகழ் பரப்பி மண்டலங்கள் தான்போற்ற
வாழ்கமா தோ.

Rtd. Senier Tamil Pandit
M. P. L. H. School
Coimbatore
29—3—'64

இங்ஙனம்,
முத்தமிழ்க்கவி. வித்வான்
K. R. அரசப்பன்.

கோவை வட்டம் ஆலாந்துறை நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளித்
தலைமையாசிரியரும், சிறந்த தமிழறிஞருமாகிய உயர்திருவாளர்.

## இரா. கோபாலன், B.A., B.T. அவர்கள் அளித்தது.

குயிலெல்லாம் மறைபாடக் கொண்டல்நிறக் கண்டன்முன்
மயிலெல்லாம் பதமாட மானுடரும் விண்ணவரும்
பயில்கின்ற அரன்நாமப் பண்ணூர்ந்த வெள்ளிமலை
ஒயிலெல்லாம் காட்டிநின்றார் ஓர்புலவர் இராமசாமி.

வான்மலைகள் புகழுரைத்தார் வளமார்ந்த கொங்குலவும்
கான்நதிகள் புகழுரைத்தார் கமழ்கின்ற பொழிலுரையும்
தேன்மலர்கள் புகழுரைத்தார் செந்தமிழில் இசைகொண்ட
வானுயரும் கோபுரங்கள் வரிசையெலாம் விரித்துரைத்தார்.

செப்பேடு காட்டுகிறார் திருத்தலங்கள் சுற்றிவர
எப்பாடு பட்டாரோ எழிலனைத்தும் இயம்புகிறார்
ஒப்பாரு முளரோவென் றுரைக்கின்ற பெருமைதனைத்
தப்பாமல் சார்ந்திட்டார் தவப்புதல்வர் இராமசாமி.

25-3-64
ஆலாந்துறை

இரா. கோபாலன்

---

வெள்ளியங்கிரி-பூண்டி தேவத்தானம் பரிபாலகரும்
செம்மேடு பெரு நிலக்கிழாருமான உயர்திருவாளர்.

## V. P. கந்தசாமிக் கவுண்டர் அவர்கள் அளித்தது.

வெள்ளியங்கிரித் தல வரலாறு என்னும் நூல் இவ்யாண்டு அக்கம்மாள் இராமசாமி அவர்களால் இத்தலத்தில் வெளியிடப்படுகின்றது.

திருவாளர் வித்துவான் ஐ. இராமசாமி அவர்கள் இத்தலத்தின் வரலாறுகளையும், அருகிலுள்ள கோயில்களின் வரலாறுகளையும் நன்கு குறிப்பிட்டு வரைந்துள்ளார். பல குறிப்புக்களையும் கண்டறிந்து இந் நன்னூலைத் தொகுத்து உள்ளமை மிகவும் அரிய செயலாகும். இதுவரை கேட்டிராத மலைகள், ஆறுகள், சரிதங்கள் என்பனவற்றை இந்நூலால் நன்கு அறிகின்றோம். இத்தலத்தின் வரலாறு நன்முறையில் வெளியிடப்படுவது இதுவே முதல் தடவையாகும். எல்லாரும் நன்கு கற்றுணருமாறு உரைநடையால் அமைந்துள்ளது. வெள்ளியங்கிரிக் கோயிலுக்கு வரும் அன்பர்கள் இந்நூலை இத்தலத்திலேயே பெற்று நன்கு கற்று இறையருள் பெறுவார்களாக.

செம்மேடு.
29-3-'64

V. P. கந்தசாமி

# உள்ளுறை

## அ. முற்பகுதி

1. தோற்றுவாய், 2. கொங்குநாடு, 3. கொங்குநாட்டு மலைகளும் ஆறுகளும், 4 ஆறைநாடு, 5. வெள்ளியங்கிரிமலை, 6. இத்தலத்தின் வரலாற்று நூல்கள். திருப்பேரூர்ப் புராணம். சோழன் பூர்வபட்டையம், வெள்ளிமலைப் பிரபந்தங்கள், 7. நாகபட்டணக் கோயில்கள். முட்டத்து நாகீசுரமுடையார் கோயில், திருமுத்துவாளியம்மையார் கோயில், வெங்கடேசுரப் பெருமாள் கோயில், நாககாளி என்னும் கரியகாளி கோயில், வீரகாளியம்மையார் கோயில், முட்டத்துராயர் கோயில், அங்காளம்மை கோயில், 8. காஞ்சி மகாநதி, 9. பஞ்சகிரிகள். பிரமகிரி, திருமால்கிரி, உருத்திரகிரி, வெள்ளியங்கிரி (மயேசுரகிரி) சதாசிவகிரி.

## ஆ. சோழர் வரலாற்றுப் பகுதி

1. சாலிவாகனன் ஆண்டது, 2. மூவேந்தர்கள் தோற்றம், 3. கச்சி வீரனைக் கண்டது, 4 பட்டையம் வாசித்தது, 5. மூவேந்தர்கள் காசிக்குச் சென்றது, 6. கச்சிவீரன் தூது சென்றது, 7. சாலிவாகனனோடு போர் புரிந்து வென்றது, 8. சோழனுக்குச் சட்டை நோய் கண்டது, 9. உறையூர்ச் சோழன் ஆண்டது, 10. உறையூரில் மண்மாரி பெய்தது, 11. கரிகால் சோழன் பிறந்தது, 12. கரிகாலன் அரசனானது, 13. காமாட்சியம்மையார் குறத்தியாக வந்து குறி சொன்னது, 14. கரிகாலன் திருப்பணிகள். கோவன்புத்தூருக்கு வந்தது. திருப்பேரூர்த்தலம் கண்டது. முட்டத்து நாகீசுரமுடையார் கோயில் திருப்பணி.

## இ. வெள்ளியங்கிரி வரலாற்றுப் பகுதி

1. சிவபெருமான் தேவர் முனிவர்களைச் சபித்துத் தென்கைலாயமாக மாறியது, 2. தேவர் முனிவர்கள் துன்புற்றது, 3. அகத்தியர் புண்ணிய நதிகளைக் கமண்டலத்தில் அடக்கியது, 4. தேவர்கள் சாபம் நீங்கியது, 5. நாரதர் சிவபெருமான் இருக்குமிடத்தை அறிவித்தது, 6. தேவர் முனிவர்கள் ஐந்து சனிவார விரதம் இருந்தது, 7. காவிரி முதலான நதிகள் பெருக்கெடுத்தோடியது, 8. தேவர் முனிவர்கள் பிரமகிரிக்குச் சென்றது, 9. திருமால் கிரிக்குடி உருத்திர கிரிக்கும் சென்றது, 10. மயேசுர கிரிக்கும் சதாசிவ கிரிக்கும் சென்றது, 11. ஆறுமுகக் கடவுள் அவதாரம், 12. நவ வீரர் தோன்றியது, 13. சூரபதுமனோடு போர் செய்து வென்றது. 14. கரிகாலன் வெள்ளியங்கிரிக்குச் சென்றது, 15. நாரத முனிவர் வெள்ளியங்கிரிக்குச் சென்றது, 16. வெள்ளியங்கிரியில் விம்மிதங்கள்.

## ஈ. பின்பகுதி

1. மலைமேல் திட்டுகள் நதிகள் முலிகைகள், 2. மருதகிரியும் கரிமலையும், 3. பூண்டிக் கோயில், 4. அன்னதானமும் ஒளிவழிபாடும், 5. பஞ்சகிரிகளுக்குட்பட்ட ஊர்கள், 6. ஆராய்ச்சிக் குறிப்புக்கள், 7. தெய்விக நிகழ்ச்சிகள், 8. கொங்கு நாட்டுக் குறிப்புக்கள், குன்று தோருடல், புலவர்களும் நூல்களும், கல் வெட்டுக்கள் உள்ள இடங்கள், மன்னர் மரபினர், பிற குறிப்புகள், 9. முட்டத்து நாகீசுரமுடையார் கோயில் கல்வெட்டுக்கள், 10. வெள்ளியங்கிரி யாத்திரையின் நற்பயன்களும் இனிச் செய்ய வேண்டுவனவும், 11. திருக்கைலாயத் தேவாரப் பாடல்கள், 12. வெள்ளியங்கிரித் தோத்திரப் பிரபந்தப் பாடல்களும் பிறவும்.

# வெள்ளியங்கிரித் தலவரலாறு

## திருச்சிற்றம்பலம்

பூமிக்கு வெண்மலைப் பூண்டியிலோடும் புனற்படிந்து
நேமிக்கு மம்பல வாணனைப் போற்றி நிமலசிவ
காமிக்கு மானை முகனுக்கு மற்றுங் கருதுகின்ற
சாமிக்கு முன்சஞ்ச லஞ்சொல்லு வாயவர் தாட்பணிந்தே. க

*　　　　*　　　　*

கற்பித மார்வெள்ளி மாமலைப் பக்கங் கலைபயின்ற
நற்புகழ்ச் சேடன் பிரதிட்டை செய்தநா கேசனையும்
சிற்பரை யான திருமுத்து வாளியாங் தேவியையும
பொற்பொடு போட்ட ளமுவப்பக் கண்டடி போற்றுமினே. உ

# அ. முற்பகுதி

## 1. தோற்றுவாய்

கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்திலுள்ள எல்லா மதத்தினரும் இறைவனை வணங்குகின்றனர். இறைவனை முன்னிட்டே தாம் செய்யும் எல்லாக் காரியங்களையும் செய்கின்றனர். எல்லாம் வல்ல இறைவன், பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமாய் எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கே இருந்து இவ்வுலக மக்களுக்கு அருள் செய்கின்றார். அவ்வப்போது அன்பர்கள் நினைக்கும் வண்ணம் சக்தியாகிச் சிவமாகி, அயனாகி, அரியுமாகி, நிலமாகி, நீராகி, நெருப்பாகி,

காற்ருகி, ஆகாயமாகி இன்னும் எல்லாமாகி இனிது விளங்கு கின்ருர்.

" வாஞகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊஞகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோஞகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வாஞகி நின்ருயை என்சொல்லி வாழ்த்துவனே?"

என்ருர் மணிவாசகஞரும்.

இத்தன்மைய இறைவனை நம் தமிழகத்தார், மலையும் மலைசார்ந்ததான குறிஞ்சி நிலத்திலும் குறிஞ்சியும் முல்லை யும் திரிந்த பாலை நிலத்திலும், காடும் காடு சார்ந்ததாகிய முல்லை நிலத்திலும், வயலும் வயல் சார்ந்ததான மருத நிலத்திலும், கடலும் கடல் சார்ந்ததான நெய்தல் நிலத் திலும் தாம் விரும்பியவாறெல்லாம் உருவ வழிபாடு செய்து தொழுது வந்தனரென்பதைத் தொல்காப்பியம் போன்ற சங்க நூல்களால் அறிகின்ருேம்.

இம்முறையில் மற்ற நிலங்களைக் காட்டிலும் குறிஞ்சி நிலமே உயர்ந்து காணப்படுவதாலும் மக்களுக்கு உண வளிக்கும் ஆறுகள் பல மலைகளில் தோன்றி ஏனைய நிலங் களைக் கடந்து கடலை அடைவதாலும், தமிழ் மக்கள் தாம் வணங்கும் கடவுளரை உயர்ந்து தோன்றும் மலைகளின்மேல் அமைத்து வழிபட்டனர். மலைத்தலங்கள் தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ளன. இம்முறையில் சிவத்தலங் களும், முருகன் குடிகொண்ட தலங்களும், திருமால் தங்கி யுள்ள மலைகளும் பிறவும் பலவாகக் காணப்படுகின்றன. அன்பர்கள் மலைத்தலங்களுக்குச் சென்று தாம் கருதிய கருத்துக்கு ஏற்றவாறும், மன நலத்திற்கேற்பவும், பக்திப் பெருக்கின் காரணமாகவும், உல்லாசமாகப் பொழுது போக்கியும், உடல் நலம் கருதியும் பல வழிகளிஞலும் இறையஞருக்கு உகந்தவராகி இம்மை மறுமைப் பயன்களை அடைகின்ருர்கள். மேலே கண்டவாறு அமைந்த மலைத் தலங்களுள் தென்கயிலாயம் என்று கூறப்படுகின்ற வெள்ளி யங்கிரி மலையும் ஒன்ருகும். சிவபெருமான் திருவுருவமாக அமைந்த இம்மலைத் தலத்திற்கு ஆண்டுகள்தோறும் பின்பனி, இளவேனில், முதுவேனில் காலங்களாகிய மாசி பங்குனி சித்திரை வைகாசி என்ற மாதங்களில் பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் சென்று வருகின்றனர். கொங்கு நாட்டவரேயல்லாமல் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலு

மிருந்து மக்கள் திரளாக வருகின்றனர் எனலாம். 'மஞ்சிலே உலாவலாம்' என்று கூறினாற்போல இம்மலையில் சில சமயங்களில் மேகங்கள் சூழ்தலால் அவைகளில் உலவி வரும் அன்பர்கள் வியப்பையும் இன்பத்தையும் அடைவார்கள்.

## 2. கொங்கு நாடு

கொங்கு என்பது தேன். தேன் மிகுதியாய்க் கிடைப்பதால் இந்நாடு இப்பெயர் பெற்றது. கொங்கு நாட்டுக் கொல்லி மலையில் தேன் மிகுதியாகக் கிடைத்ததை, "கொல்லி மலைத் தேன் சொரியும் கொற்றவா" எனக் கம்பர் பாடிய தனிப் பாடலடியால் உணரலாம். கொங்கு என்ற சொல்லுக்குத் தேன் என்ற பொருள் உண்மையை,

"கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி"

(குறுந்தொகை—2)

"அணிற்பல்லன்ன கொங்கு முதிர் முண்டகத்து"

(ஷை—49)

"கொங்கு கவர்நீலச் செங்கட் சேவல்"

(சிறுபாணாற்றுப்படை)

என்ற நூற்பாடல்களின் தொடரால் அறிகின்றோம். சேர சோழ பாண்டிய நாடு என்பதுபோல இந்நாடு சங்க காலத்திலிருந்தே தனி நாடாக விளங்கியது. சங்க காலத்திற்கு முன்பு மிகவும் பழங் காலத்தில் இந்நாட்டைச் சேரர்கள் ஆண்டனர். சேரர்களுக்குக் கொங்கர் என்ற பெயர் உண்டு.

"பூழிய னுதியன் கொங்கன் பொறையன்
வானவன் குட்டுவன் வான வரம்பன்
வில்லவன் குடநாடன் வஞ்சி வேந்தன்
கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்
பொருநைத் துறைவன் போந்தின் கண்ணியன்
மலையன் மலையமான் சேரன் பெயரே"

(பிங்கல நிகண்டு 5—20)

"கோதை கமழுங் கவிகைக் கொங்கனென விள்ளும்
கோதை நனியாண்ட தொரு கொங்குவள நாடு"
(பேரூர்ப் புராணம்)

எனவே கோதை மன்னர்கள் இந்நாட்டை ஆண்டனர் என்றும் அறிகின்ருேம். கொங்கிளங் கோசர் என்ற கோதை மன்னர்கள் என இவர்கள் கூறப்பட்டனர். சிலர் கோதை மன்னர்கள் கோசரினின்றும் வேருனவர்கள் என்பர். கி. மு. 27 முதல் கி. பி. 189 வரை இந்நாட்டை வீரராய மன்னர்களும், பின் கி. பி. 850 வரை தலைக்காட்டுங் கங்க மன்னர்களும், இடையில் சிறிது காலம் பாண்டியர் களும் கி. பி. 850 முதல் பிற்காலச் சோழர்களும் ஆண்ட னர். பிற்காலச் சோழர் காலத்தில்தான் கொங்கு சோழர்கள் சிறப்பாக ஆட்சி புரிந்துள்ளனர். கொங்கு சோழர் காலத்தில் பல கோயில்கள் திருப்பணி செய்யப் பட்டன. கொங்கு சோழர்களில் விக்கிரமன், குலோத் துங்கன், வீர சோழன், வீர ராசேந்திரன் என்போர் (கி. பி. 1004—1252) சிறக்க ஆண்டுள்ளனர். துவார சமுத் திரத்தைத் தலைநகரமாக வைத்துக்கொண்டு ஒய்சளர்கள் (கி. பி. 1189—1340) ஆண்டனர். விஜய நகர மன்னர்கள் கி. பி. 1335—1667 வரை; உம்மத்தூர் தெற்கணும்பி மன் னர்கள் கி. பி. 1489—1517 வரை; மதுரை நாயக்கர் ஆதிக்கம் 1559—1670 வரை; பின் மைசூர் ஆதிக்கம் கி. பி. 1557—1765 வரை. பின் ஐதரலியும் திப்பு சுல்தானும் ஆண்டனர். 1799 முதல் ஆங்கிலேயர் ஆட்சி யெனலாம்.

இவ்வாருகப் பல மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. கங்கர்களில் அவநிதன் என்னும் மன்னன் சிறப்புடையவன். ஐங்குறுநூறு கூறும் ஆதன் அவனி வேருனவன் என்பர்.

மற்றும் சங்க காலத்தில் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலையெடுத்தபோது கொங்கு மன்னனும் கண்ணகிக்குச் சிலையெடுத்து வணங்கினன் என்பதை,

"அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தன் நாட்டகத்து விழவொடு
சாந்தி செய்ய மழை தொழில் எங்கும் மாருதாயிற்று"

என்ற சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரையாலும் அறிகின்ருேம்.

சங்க காலத்திற்குப் பின்பு இந்நாட்டைப் பல்லவர்கள், கங்கர்கள், பாண்டியர்கள், சோழர்கள், கொங்கு சோழர் கள், ஒய்சளர்கள், தெற்கணும்பி மன்னர்கள், விஜய

நகரத்து மன்னர்கள், மைசூர் அரசர்கள், ஐதர் அலி, திப்பு சுல்தான், ஆங்கிலேயர் போன்ற மன்னர் மரபினர் பலர் ஆண்டு வந்தனர் என்பதைக் கொங்கு வரலாறு, சேர சோழ பாண்டியர் வரலாறு, கங்கர் வரலாறு என்னும் நூல்களில் பரக்கக் காணலாம். கொங்கு நாடு 24 பிரிவுகளை யுடையது. இந்நாட்டின் சிறப்புக்களை எடுத்துக் கூறுவதாக அமைந்த நூல் 'கொங்கு மண்டல சதக'மாகும். விசய மங்கலத்துக் கார்மேகக் கவிஞர் என்பார் இந்நூலின் ஆசிரிய ராவர். 24 நாடுகளாவன:—(கொங்கு மண்டல சதகம் கூறுமாறு)

பூந்துறை நாடு—தலைய நகடு—வாழவந்தி நாடு.
தென்கரை நாடு—தட்டைய் நாடு—அண்ட நாடு.
காங்கேய நாடு—பூவர்ணிய நாடு—வெங்கல நாடு.
பொங்கலூர் நாடு—அரைய நாடு—காவடிக்க நாடு
ஆறை நாடு—ஒடுவங்க நாடு—ஆனைமலை நாடு.
வாரக்க நாடு—வடகரை நாடு—இராசிபுர நாடு.
திருவாவினன்குடி நாடு-கிழங்கு நாடு-காஞ்சிக்கூவல் நாடு
மண நாடு-நல்லுருக்க நாடு-குறும்பு நாடு (குறுப்பு நாடு)

என்பனவாம். இதன் பிரிவுகளையும் உட்பகுதிகளாகிய ஊர் களையும் இந்நூலின் துணைகொண்டு காண்க. ஒரு சில ஊர் கள் அன்று இருந்தவை இன்று காணப்படவில்லை. கொங்கு மண்டலத்தின் பெருமையை இந்நூலின்,

'' பொற்பு மிகுகொங்கு நாடு செழித்திடப் பூமியெங்கும்
நற்பய னுற்றுச் சுகித்திடு மென்ன நவிற்று பழஞ்
சொற்பெற வெல்லா வளமும் பொருந்திச் சுரபியொடு
வற்சக மோங்கி வளர்வதன் றேகொங்கு மண்டலமே''

(கொங்கு மண்டல சதகம்—க.)

என்ற பாட்டால் உணரலாம். மற்றும் பேரூர்ப் புராணம் நாட்டுப் படலச் செய்யுட்கள் சிலவும் இந்நாட்டின் பெரு மையை உரைப்பனவே.

'' திங்களு முரோகணியுந் திகழ்ந்த திறமென்ன
மங்கல வினைத்தொழிலு மங்கையரும் வேத
அங்கியும் வளர்க்குமறை யந்தணரும் காவுங்
கொங்குமலி கின்றதொரு கொங்குவளநாடு''

"கோதைபயில் விற்கொடி குலாவிய புயத்தன்
கோதையர் விழிக்கணை குளிக்கு மரு மத்தன்
கோதைகம ழுங்கவிகைக் கொங்கனென விள்ளுங்
கோதைநனி யாண்ட தொரு கொங்குவள நாடு". உ

(திருப்பேரூர்ப் புராணம்: நாட்டுப் படலம் 1—2)

என்னும் பாடல்களையும் காண்க.

கோவை மாவட்டத்தில் கொள்ளேகாலம் ஒழிந்த ஒன்பது வட்டங்களும், சேல மாவட்டத்தில் ஓமலூர், திருச்செங்கோடு, நாமக்கல் ஆகிய வட்டங்களும், திருச்சியில் கரூர், குளித்தலையின் மேற்பகுதியும், மதுரை வட்டத்தின் வட பகுதியும் கொண்டதே கொங்கு நாடு.

இதன் எல்லைகள் :

மேற்கே : வெள்ளி மலையும் நீலகிரியும் (அஸ்தகிரி)

வடக்கே : தலைமலை தோப்பூர் மலை, பர்கூர் மலைகள், பிளிகிரிரங்கன் ஓசூர் மலைகள்.

கிழக்கே : சேர்வராயன் மலை, கொல்லி மலை, குழித்தலை, கல்வராயன் மலை, பச்சை மலைகள், சவ்வாது மலைகள்.

தெற்கே : பழநி மலை, வராக மலைகள் என்பனவாம்.*

"மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழநி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின்வடக்கு
விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்று மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமே"

(கொங்கு மண்டல சதகம்)

"வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்கு வெள்ளிப் பொருப்புக் குன்று—கிழக்கு
கழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவுங் கொங்கு" (பழம்பாட்டு)

என்னும் பாடல்களாலும் உணர்க.

*கி. மு. நான்காம் நூற்றுண்டின் முன்னரே இந் நாட்டுச் சேலத்தில் எஃகு செய்யப்பட்டதென்றும், எஃகு ஆயுதங்களை எகிப்து நாட்டார் விரும்புவர் என்றும், அவர்கள் நாட்டுப் பிரமீடுகளில் (Pyramid) சேலம் எஃகுத்

* கொங்குநாடுபற்றிய கட்டுரைகள் என்னும் நூற்குறிப்புகள்.

துண்டுகளைத் தோண்டியெடுத்தனரென்றும், எஃகு செய்யக் கொங்கு நாட்டாருக்குத்தான் தெரியும் என்றும், கி. மு. 10000 ஆண்டுகளுக்கு முன்பே கொங்கில் எஃகு வாணிகம் நடந்ததென்றும் வில்ஸ்கின் (Sri J. G. wilkinson) எல்த் (Sri J. M. Health) என்ற மேல் நாட்டறிஞர்கள் கூறு கின்றனர். கி. மு. 326ல் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்த அலெக்சாந்தர் மன்னனுக்குப் புருசோத்தமன் வெகு மதியாக 38 பவுண்டு சேலம் எஃகுத் துண்டைக் கொடுத் தான் என்பர் வரலாற்றாசிரியர்கள். இவ்வாணிபம் கொங் கின் வடபாகத்தில் நடந்ததென்பர். திருப்பூருக்கு அருகே சங்ககாலத்தில் கடல் நிறக் கற்கள் கிடைத்தனவாம்—இது கொங்கில் மட்டும் கிடைக்குமென்பர். இக் கற்களை உரோ மானியர்களும் டைரியன் (Tyrians) களும் விரும்புவார் களாம். மற்றும் இந்நாட்டுத் தலங்களாகிய திருப்பேரூர், வெள்ளலூர் என்னும் இடங்களில் டைபீரியஸ், அகஸ்டஸ், கேரகுல்லா, நிரோ, பைசாண்டியன் என்ற கி. மு. முதல் நூற்றாண்டில் ஆண்ட் ரோமானிய மன்னர்கள் காலத்திய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டனவாம். எனவே கொங்கு நாடு மிகவும் பழமை பெற்றது என்றும், கி. மு. நூற்றாண்டு களிலேயே இந்நாட்டவர் மேலை நாட்டாரோடு வாணிபம் செய்து பொருளீட்டினர் என்றும் அறிகின்றோம்.

இந் நாட்டைக் கங்க மன்னர்கள் தாராபுரம் என்ற ஸ்கந்தபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கி. மு. முதல் நூற்றாண்டு வரை ஆண்டனர். 'வீரராய சக்கரவர்த்தியே இவர்களில் முதல் மன்னனவன். கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரை தலைக்காட்டையும், 9ஆம் நூற்றாண்டுவரை முகுந்த பட்டணத்தையும்பின் கங்கவாடி முதலான இடங்களையும் தலை நகராகவைத்துக்கொண்டு கங்கர்கள் சிறக்க ஆட்சிபுரிந்தனர். கங்கர்கள் வேறு என்றும், கொங்கர் என்ற கோதை மன்னர் கள் வேறு என்றும் கூறுவர். இடையே பாண்டியர்கள் ஆண் டனர். நெடுஞ்சடையன் பராந்தக பாண்டியன் (கி. பி. 765—790) காலத்தில் காஞ்சிமகா நதிதீரம் பேரூரில் ஒரு திருமால் கோயில் கட்டப்பட்டதை ஜடாவர்மன் சாசனங் களால் (Musium plates of Jadavarman) அறிகின்றோம். இறுதியில் அமரபுயங்க பாண்டியன் வசம் இந்நாடு இருந் தது. 'அமர புயங்க சதுர்வேதிமங்கலத்து ஆவுடையார்க்கு' என்னும் போளமாம்பட்டி நாகீசுரமுடையார் கோயில் கல்வெட்டுக் காண்க. 8, 9, 10ஆம் நூற்றாண்டுகளில் இந்நாடு பிற்காலச் சோழர்கள் வசமாயிற்று. இவர்கள்

வழியே கொங்கு சோழர்கள் இந்நாட்டைச் சிறக்க ஆண்டனர். பல கோயில்களை இவர்கள் கட்டியுள்ளனர். இவர்கள் காலத்திலும், துவார சமுத்திரம் கண்ணனூர் என்னும் இடங்களில் ஆண்ட ஒய்சள மன்னர்கள் காலத்திலும், பிற் காலம் ஆண்ட மன்னர்கள் காலத்திலும் இந்நாட்டில் கல் வெட்டுச் சாசனங்கள் பலவும் எழுந்தன.

## 3. கொங்கு நாட்டு மலைகளும் ஆறுகளும்

24 நாடுகளைக் கொண்ட இப் பெரிய நாட்டிலுள்ள மலைகளையும் ஆறுகளையும் காண அவைகள் பலவாம்.

கோவை வட்டம்: மருத மலை, சென்னிமலை, குருவிருடி மலை, அனுமக் குமரமலை, கணவாய்மலை, செவணன் பட்டிக் கரடு, வெள்ளியங்கிரி மலை, பஞ்சகிரிகள் என்பன.

அவிநாசி வட்டம்: ஓதி மலை, குருந்த மலை, தோகைமலை.

பல்லடம் வட்டம்: தென் சேரிகிரி, அலகுமலை, முத்துக் குமர மலை, மலைப்பாளையம் என்பன.

பொள்ளாச்சி வட்டம்: பொன் மலை, கோலார்ப்பட்டி, ஆனை மலை என்பன.

உடுமலை வட்டம்: திருமூர்த்தி மலை, குமணன் ஆண்ட குதிரை மலைத்தொடர்.

தாரை வட்டம்: ஊதியூர், பட்டாலியூர் மலை, சிவமலை, வட்டமலை, திருமான் கரடு என்பன.

ஈரோடு வட்டம்: சென்னிமலை, கதித்த மலை, மலைப் பாளையம் மலை, எழுமாத்தூர் மலை, எட்டி மலை, அரச்சலூர் மலை, அரசண்ணாமலை,

பவானி வட்டம்: ஊராச்சிக் கோட்டை மலை, பருவாச்சி மலை, ஆப்பக் கூடல் மலை என்பன.

கோபி வட்டம்: தவளகிரி, பச்சை மலை, பவழ மலை, நாக மலை, திட்டமலை, ஒழலக் கோயில் என்பன.

சேலம் வட்டம்: கொல்லிமலை, சங்ககிரிமலை, திருச் செங்கோடு மலை, மோரூர் மலை, கஞ்சமலை, வேளுக் குறிச்சி மலை.

நாமக்கல்: கபில மலை, கந்த மலை, சேர்வராயன் மலை,

திருச்சி வட்டம்: புகழிமலை, வெண்ணெய் மலை.

மதுரை வட்டம்: பழநி மலை, வராக மலை, ஐவர் மலை, கொண்டரங்கி மலை என்பன.

மேற்கண்டவாறு பல மலைத்தலங்கள் கொங்கு நாட்டை அணிசெய்து விளங்குகின்றன. இனி இம் மலைகள் தோறும், மேற்குத் தொடர்ச்சி மலையினின்றும் இழிந்து ஓடிவரும் பேராறுகளும் சிற்ருறுகளும் பலவாக உள்ளன. காவிரி யாறு, பவானி யாறு (வானி யாறு) காஞ்சி மகா நதி, ஆன் பொருநை யாறு என்பன கிழக்கு நோக்கி வரும் பேராறுகளாம். இவைகள் காவிரியோடு கலந்து சென்று கொங்கு நாட்டையும் சோழ நாட்டையும் வளப்படுத்து கின்றன. மற்றும் மணிமுத்தாறு, தொப்பையாறு, நள்ளாறு, சண்முக ஆறு, சண்பக ஆறு, பாலையாறு, வாழை யாறு, குடவன் ஆறு என்பனவும், பல சிற்ருறுகளும் உள்ளன வென்க. ஆங்காங்கு மாபெருங் குளங்களும், குட்டைகளும், பள்ளங்களும் கால்வாய்களும் நாட்டை வளப்படுத்து கின்றன. இத்தகைய மலைகளும் ஆறுகளும் பயனுகும் இந் நன்னுட்டில் அன்பும், அருளும், பண்பும், ஈகையும், ஒழுக்க மும், ஆண்மையும் ஒருங்கே அமைந்த வேளாண்குடி மக்கள் பலர் நிலக்கிழாராகி எல்லாப் பயன்களையும் துய்த்து மற்றை யோரும் துய்க்குமாறு நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இதனை,

"நீடுந் தமிழ்மன்னர் மூவர்க்கு மம்பொன் நெடுமகுடம்
சூடும் பெருமை படைத்துயர் மக்களின் சோர்வகற்றிக்
கூடும் பலவுண வூட்டுவே ளாளக் குடிசிறந்து
மாடும் பெருகி வளர்வதன் ருேகொங்கு மண்டலமே"

என்ற கொங்கு மண்டலப் பாட்டால் உணரலாம்.

## 4. ஆறை நாடு

கொங்கு நாட்டின் 24 நாடுகளுள் ஒன்ருன ஆறை நாடு என்பது கொங்கின் மேல் பகுதியில் உள்ளது. மேல் கொங்கின் பகுதியிலென்க. கொங்கு நாடு ஒரு சமயம் வட கொங்கு மேல் கொங்கு என்ற பகுதிகளாகவும் கூறப்பட்டு வந்தது. "மீகொங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூரர் பெரு மானை" என்பர் சுந்தர மூர்த்தி சுவாமிகள். கோவை,

அவிநாசி, பல்லடம் வட்டங்களில் கோவை அவிநாசியும் பல்லடத்தின் மேல் பகுதியும் இதைச் சார்ந்தன. இந்த ஒரு சிறு நாடே ஆறு உபநாடுகளாகிய, கோவங்க நாடு, பேரூர் நாடு, கவய நாடு, பழநநாடு, சேலூர்நாடு, வடபாரிசார நாடு என்னும் பகுதிகளைப் பெறும். *மன்னி நாடு, செம்பை நாடு, தணக்கு நாடு, வெள்ளா நாடு,பூலுவநாடு, நிரற்றூர்ப் பற்று நாடு, வளையலூர் நாடு, நாலூர்ப்பற்று நாடு என்ற பகுதி நாடுகள் கல்வெட்டுக்களிலும், சதகத்திலும் காணப் படுகின்றன.

" காவியஞ்சூழ் கோவை கோவங்க நாடு
கவித்துவளர் அன்னியூர் மன்னி நாடு
மேவியசா மக்குளத்தூர் கவைய நாடு
மிக்க சேலூர் தனக்குச் செம்பை நாடு
தேவிநடு வச்சேரி தணக்கு நாடு
சேய் சவள பூண்டியாம் பெருமா நல்லூர்
ஆவிபெறும் பழனநா டிவையென் றோதும்
ஆறுநாட் டிதன் பெருமை அளக்கொணாதே"

(கொங்கு மண்டல சதகம்)

என்ற பாட்டாலும் ஆறு நாட்டை (ஆறை நாடு) இன்னதென உணரலாம். கோவையின் சுற்றுப் புறங்களே கோவங்க நாடு எனப்படும். இதனுள் பேரூர் அடங்குதலால் பேரூர் நாடு எனவும் பெயர் பெறும். ஆறு நாட்டின் ஊர்த் தொகையைக் குறித்த பாட்டு ஒன்று சதகத்தில் உள்ளது. அது,

" கோவைநக ரன்னியூர் வெள்ளாதி கோமங்கை
திசை புகழ வாழ்முடுதுறை
தென்கவசை துடிய லூர் நீலநகர் பேரையொடு
தெக்கலூர் கரைமாதையும்
மேவுபுக ழவிநாசி கஞ்சை கானூர் கரவை
வெண்பதியு மிருகாலூரும்
விரைசேரு முழலையொடு வடதிசையி லுறுகின்ற
வெள்ளையம் பாடி நகரும்

---

*See "The Geographical Limits of Kongu Nadu at Various Epochs" by Mr. C. M. Ramachandran Chettiar B. A., B. L. F. R. G. S. (கோவை கிழார்)

நாவலர்க் கினிதான திருமுருகு பூண்டியொடு
நல செவலை பழந நகரும்
நம்பியூ ரோடெலத் தூருக்ரம் புலவர்
நகரமுட னினிமையான
கோவிநகர் தொண்டைமான் புத்தூரு முட்டமே
கூடலூர் சிங்க நகரும்
குடக்கோட்டூர் குன்னந்து றைப்பதியு வாளவந்தி
கோட்டைக் கரையாறை நாடே''

என்பதாகும்.

இப்பாடலில் வரும் ஊர்களின் பெயர்களைக் காண்க. கவசை நகர் என்பது கோவில்பாளையம். செவளாபுரி நடுவச்சேரி; பழனை—பெருமா நல்லூர்; புலவர் நகர்—கருக்கம் பாளையம்; குடக் கோட்டூர்—மொக்கணீசுவரம்; வெள்ளியங்கிரிப் பகுதியில் கூறப்பட்ட ஊர்கள் தொண்டைமான் புத்தூரும் முட்டமும் ஆகும். இந் நாட்டின் மேற்கெல்லையென உயர்ந்து விளங்கும் வெள்ளியங்கிரி மலையின் அடிவாரத்தில் இம் மலையின் நிழல் தோயும் பகுதியே முட்டம் என்ற முட்டத்து நல்லூர். பிற்காலத்தில் அமரபுயங்க சதுர்வேதி மங்கலம் என்றும், நாகீசுரம் என்றும் நாகபட்டணம் என்றும் வழங்கப்பட்ட இடம் இதுவேயாகும். இப் பகுதியின் வரலாறுகளும் இதனுள் இடம் பெறுவதைக் காண்க. வெள்ளி மலையை இறைவனது உடலாகவும் சிரமாகவும் கொண்டு பஞ்சகிரிகளையும் இரு கைகளாக அமைத்துக்கொண்டால் இறைவன் இப் பகுதியைத் தன் திருக்கரங்களால் அணைப்பதைப் போன்று மலையின் அமைப்புகள் காணப்படும். வில்லைப்போன்று வளைந்த மலைகளின் இடையே பஞ்சகிரிகள் உள்ளன. இவைகள் சிவபெருமானின் ஐந்து திருமுகங்களாகும்.

## 5. வெள்ளியங்கிரி மலை

### (தட்சிண கைலாயம்)

பூலோக கைலாயம், தட்சிண கைலாயம், தென் கயிலை, வெள்ளி மலை என்றெல்லாம் அழைக்கப்படும் இத்தலம் முன் கிருத யுகத்தில் மாணிக்கப் பச்சை மரகத ரத்னகிரியாகவும், திரேதா யுகத்தில் பசும் பொன் கனககிரியாகவும், துவாபர யுகத்தில் நாகதாம்பிர செம்பொன் கனககிரியாகவும், கலி

யுகத்தில் வெள்ளியங்கிரியாகவும் பின்பு மண்மலையாகவும் மாறியது என்பர். திருக்கைலாசத்தில் சிவபெருமான் உமையாளோடும் வீற்றிருந்தனர். முன்னொரு சமயம் பதினெண் புராணங்களையும் கேட்டுவந்த நந்தி தேவர் ஒரு நாள் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, "இறைவனே! தாங்கள் எழுந்தருளியிருக்கும் தலங்களில் இத் திருக் கைலாயத்திற்கு ஒப்பான மகிமையுடைய தலம் எது?" என விண்ணப்பம் செய்தனர். அதற்குச் சிவபெருமான், "உத்தர கைலாயம் மத்திய கைலாயம் தட்சிண கைலாயம் என்ற மூன்று கைலாயங்களும் ஒத்த சிறப்புக்களையுடையன வென்றாலும், உத்தர மத்திய கைலாயங்கள் தேவர்களும் முனிவர்களும் அடையத் தக்கதேயன்றி, மற்றவர்கள் சென்று அடைதல் இயலாது. தேவர் முனிவர்களும் மானுடரும் விலங்குகளும் பறவைகளும் என்ன யாவரும் சென்று வணங்கத் தக்கதே தட்சிண கயிலாயம் என்னும் வெள்ளியங்கிரியாகும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இச் செய்தியை நந்திபகவான் மூலமாகக் கேட்டுணர்ந்த முருகக் கடவுள் நாரத முனிவருக்குத் திரு வாய் மலர்ந்தருளினார். இதைக் கேட்டுணர்ந்த நாரத முனிவர் வெள்ளியங்கிரியைக் காணும் விருப்பம் உடையவராகி இத்தலத்தைக் கண்டு பேறுபெற்ற முறையைத் திருப்பேரூர்ப் புராணத்துட்காண்க. கயிலைமலைகளைக் குறித்துக் கூறும் பேரூர்ப் புராணப் பாடல்கள்:

" உத்தர கயிலை என்றுந் தக்கிண கயிலை யென்றும்
மத்தியிற் கயிலை யென்றும் வழங்கிடுங் கயிலை மூன்றும்
உத்தர கயிலை சுத்தோ தகக் கடற் பாலதாகும்
மத்தியிற் கயிலையீது மாடக வீணை வல்லோய். க

தெக்கிண கயிலை கன்மஞ் செயத்தகு பரதகண்டத்
தெக்கட வுளரும் போற்ற வெழில்வளர் கொங்கு நாட்டில்
தக்கமேற் றிசையினெல்லை முடிவினிற் றயங்கா நிற்கும்
ஒக்குமிக் கயிலை மூன்று மாயினு முரைப்பக் கேட்டி. உ

அருந்தவப் பேறுவாய்ந்த வமரர்கண் முனிவரனறித்
திருந்தவெவ் வுயிருமின்பந் தெவ்வுதற் கெளிய வல்ல
விருந்திடு வடபாற் குன்று மிடைப்படு குன்று மென்று
பொருந்திய கருணை வெள்ளப் பூரண னுளத்திற்
கொண்டு. ந

வழுவறு மோலித்தேவர் மானுடர் விலங்கு புள்ளுத்
தழுவிநீ ருறைவபூர்வ தருவென மறைகள் சாற்றும்
எழுவகைத் தோற்றத் துள்ள வெவ்வகை யுயிரு முய்யக்
கொழுமணி யிமைக்கும் வெள்ளிக் குன்றமாய்த்
தென்பானின்ருள். ச

களத்துநஞ் சடக்கு மெங்தை கயிலையங் கிரியாய் நின்ருேன்
உளத்திடை யன்பு பொங்க வுறுமடியார்கள் பூசை
விளைத்தலும் வேண்டி மேலால் விரிகதி நெறிக்கும் தேசு
திளைக்குமைம் முகமும் ஐந்து சிவலிங்க மாகக்
கொண்டான்'' ரு

என்னும் பேரூர்ப் புராணம் புராண வரலாற்றுப் படலம் 41-45 பாடல்களையும் காண்க. எனவே தென்கயிலை என்னும் வெள்ளியங்கரி மலையே மக்கள் சென்று இறைவனை வணங்குதற்கேற்ற தென்பதை இதனுல் உணரலாம்.

இம்மலை கோவைக்கு மேற்கே சுமார் 18 கல் தூரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீலகிரிக்குத் தெற்கே சுமார் 6000 அடி உயரத்தில் உயர்ந்து விளங்குகின்றது. கிழ மேலாகத் தம்முள் ஏழு அடுக்குகளைக் கொண்டு, ஏழாவது மலையாகிய கிரிமலை மிக உயர்ந்து காணப்படுகிறது. மலைபடு பொருள்கள் எல்லாவற்றையும் தம்முட்கொண்டு, எவரு மறியாத பல விம்மிதங்களை யுடையதாய், எண்ணவும் கூறவும் இயலாத இயற்கைவள முடையதாய் எல்லாம் வல்ல சிவபெருமானது திருவுருவமாகவும் விளங்குகின்றது. இங்குள்ள குறிஞ்சி நிலத்து வளங்கள் கண்டார் கண்களைக் கவரும் இயல்பினவாகும். கோவையிலிருந்து திருப்பேரூரை அடைந்த அன்பர்கள் மாதநகர், பூவிலுவர்பட்டி, ஆலாந் துறை, மத்துவராயபுரம் வழியாகவும், தொண்டாமுத்தூரி லிருந்து தேவராயபுரம், பரமேசுவரன் பாளையம், நரசீபுரம் வழியாகவும், போளமாம்பட்டி நாகீசுரத்தின் வழியாகவும் விரும்பியவாறு பூண்டியை அடைவார்கள். மறுநாள் கதிரவன் உதயத்தின் முன்பு மலையேறுவார்கள். தாம் செல் லும் வழிகளில் பலவிதமான இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பர். கோவையினின்று மேற்கு நோக்கிப் புறப்பட்ட மக்கள் கால் நடையாகவும் காவடி எடுத்து ஆடிப்பாடிக் கொண்டும் பேருந்து வண்டிகள் மூலமாகவும் தாம் விரும்பிய வாறு செல்வார்கள். ''இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்பதை யுணர்ந்த பக்தர்கள் இறைவன்

திருநாமங்களை வாயாரக் கூறி மகிழ்ந்தும் "அரகர அரகர அரகர" என்று உயர்ந்த குரலால் இயம்பியும் வருகின்றவர்கள் மூன்று பக்கங்களிலும் உயர்ந்து காணப்படும் பஞ்சகிரிகளையும் காண்பார்கள். "இம்மலைகள் வளைந்து காணப்படுவதால் இது வில்லின் தோற்றமோ, இடையிடையே உயர்ந்து காணப்படும் பஞ்சகிரிகள் அவ்வில்லின் கணுக்களோ, அல்லது இறைவன் தன் ஐந்து முகங்களாலும் காட்சி தருகின்றாரோ, அருகில் ஓடும் இவ்வாறு (காஞ்சி மகாநதி) அவ்வில்லின் கணையோ, அல்லது இறைவன் மக்களுக்கு ஊட்டி வளர்க்கும் அமுதமோ, மேற்கே யிருந்து வீசுகின்ற வெள்ளி மலையின் மூலிகைக் காற்று அன்பர்களுக்கு ஆறுதல் அளிக்கும் இன்பமோ என்றெல்லாம் எண்ணியவர்கள் அடுத்து விளங்குகின்ற பிறவா நெறி காட்டி நிற்கின்ற பட்டிப் பெருமானது கோயிற் கோபுரங்களைக் காண்பார்கள். பின்பு மேற்கு நோக்கிச் செல்லுகின்றவர்கள் தன் இரு மருங்கிலும் தோப்புகளையும் வயல்களையும் கொண்ட பொன் கொழிக்கும் காஞ்சிமகா நதியைக் காணலாம். அடுத்து விளங்குவது மாதநகர் என்னும் மாதம்பட்டி. வடபுறம் செல்லும் வழி தொண்டாமுத்தூர்ப் பெருவழியாகும். தெற்கே உள்ள பிரமகிரியை (அயன்மலை) அடுத்து விளங்கும் முல்லை வெளிகள் தென்கரை குப்பனூர் கிராமத்தைச் சார்ந்தனவாம். அடுத்து விளங்குவது சென்னனூர் சித்திரைச்சாவடி என்பன. இங்கு தண்ணீர்ப் பந்தலும் இராமகிருட்டின விவேகானந்தர் மடமும், அருகில் அப்பச்சிமார் (அப்பூதியடிகள்) கோயிலும் இருப்பதைக் காண்க. காஞ்சிமகா நதிக்கு இங்கு அணையுள்ளது. பின் பூவிலுவர்பட்டி (சந்தை கூடுமிடம்) இராமநாதபுரம், அருகே ஆலாந்துறை உயர்நிலைப்பள்ளி, சீனிவாசபுரம், *ஆலாந்துறை மத்துவராயபுரம் என்னும் ஊர்களைக் கடந்து செல்ல இருட்டுப் பள்ளம் என்னும் சிற்றோடையை அடையலாம். வலதுபுறம் வடக்கு நோக்கிச் செல்ல நொய்யல் ஆறு (நோயில்லா ஆறு) என்னும் நதியின் பாலத்தைக் கடக்க அன்பர்கள் வளப்பம் பொருந்திய வயல் வெளிகளையும், தோப்புகளையும் அடுத்து செம்மேட்டூர் என்ற ஊரையும் காணலாம். செம்மேட்டூராக இருந்து, பின் செம்மேட்டுப் புஞ்செய் என்றாகிப் பின் செம்மேட்டுப்புதூர் என்று இவ்வூர் விளங்குகிறது. இவ்வூரின் பகுதிகள்தான் முட்டத்துநல்லூர்

* ஆலாந்துறை முன்னம் சங்கரராயபுரம் என்னும் பெயரால் அவ்வூரைச் சார்ந்து விளங்கியது என்க.

என்ற பழமையான ஊர். இவ்வூர்க் கோயில்களை நாகப் பட்டணக் கோயில்கள் என்ற தலைப்பில் காண்க. 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவ்வூரைத் தோற்று வித்தவர்கள் நமது உயர்திருவாளர் V. C. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள் மரபினராவர். வெள்ளிமலையை இந்த 20ஆம் நூற்றாண்டில் விளக்கம் செய்தவர்கள் இவர்களே யாவர். பெரும் புகழ் பெற்ற வெள்ளியங்கிரிக் கவுண்ட ரவர்களை அறியாதார் எவருமிலர். அருகில் உள்ளதே முள்ளான் காடு. முள்ளன் என்னும் இருளன் பேரால் இக் காடு அமைந்திருக்கலாம். பேருந்துவண்டிகள் இதுவரைதான் செல்லும். பின் இருள் செறிந்த காடுகளுக்கிடையே சோலை யின் மணத்தை நுகர்ந்து செல்லும் அன்பர்களை வெள்ளி மலையானது அருகில் வந்து தோன்றி வரவேற்கும். அவ்வளவு தான் பூண்டியை அடைந்து விடலாம். இறைவன் திருவுரு வமே வெள்ளிமலையாகும். பூண்டிமலையே அவரது திருப் பாதங்கள். கிரிமலையே அவரது திருமுகம் என்க. சற்றே இளைப்பாறிய அன்பர்கள் பின் மலையேறுவர். மலையின் மேல் காணப்படும் காட்சிகள் முழுமையும் கண்ணையும் கருத்தையும் கவருவனவாம். தாம் கண்டவற்றை எண்ணிப் பார்க்கவும் பார்த்தவைகளைக் கூறி முடிக்கவும் வல்லவர் யாவர்? எவரெவர் எவையெவைகளைக் கண்டார்களோ அவைகளை மட்டும் கூறுவர். உள்ளத்தில் இடங்கொள்வதெது? நீங்குவ தெது? ஆராய்ந்து காணும் உள்ளங்களையே இடனாகக் கொண்டு அறிதல் நேரானது. இம்மலையிலுள்ள விம்மிதங் களையும் பிறவற்றையும் பின் பகுதிகளில் காண்க. இறை வனது மாயேசுர முகத்தின் அமைப்பாக விளங்குகின்ற மயே சுரமலையே வெள்ளியங்கிரி என்று அறிக.

# 6. இத்தலத்தின் வரலாற்று நூல்கள்

## 1. திருப்பேரூர்ப் புராணம்

சிவபெருமான் திருவருளால் இப் புவியில் தோன்றித் தெய்வத் தமிழ்த் தொண்டாற்றிச் சிவப்பேறடைந்த பெரி யார் ஒருவர் தொண்டை நாட்டில் தோன்றினர். அவர் கச்சியப்ப முனிவர் எனப்படுவர். திருத்தணிகையிற் பிறந்து வளர்ந்து திருவாவடுதுறை நமசிவாய மூர்த்திகளைத் தரிசித்து, பின் வேலப்ப தேசிகர் என்னும் சுவாமிகளிடம்

தீட்சை பெற்று, சிவஞானயோகியார்பால் தமிழ்மொழி வடமொழிகளை ஐயந்திரிபறக் கற்றுத் தாம் பல நூல்களை இயற்றி அதன் மூலம் தமிழ்ப்பணி செய்த பேராளராவர். இவர் தில்லைச் சிற்றம்பலத்து நடமாடும் சிவபிரானை, "மீகொங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூர்" என்னும் தலத்தில் கண்டு வணங்கி, இத்தலத்தில் உறையும் பச்சை மரகதவல்லி பங்கரான பட்டிப் பெருமானைப் பலவாறு பாடித் துதித்துப் பின்பு 'திருப்பேரூர்ப் புராணம்' என்னும் நூலையும் பாடியருளினர். தெய்வ மணமும் தமிழ் மணமும் கமழும் இந்நூல் 36 படங்களையும் 2220 விருத்தப்பாக்களையும் கொண்டதாகும். *ஸ்ரீலஸ்ரீ கச்சியப்ப முனிவரவர்கள் திருப்பேரூரில் தங்கியிருந்து அன்பர்களுக்கு அருள் புரிந்து பல சித்திகளையும் செய்து காட்டினர். விநாயக புராணம், திருவானைக்காப் புராணம், பூவாளூர்ப் புராணம் என்பன இவரால் இயற்றப் பட்டனவேயாம். பேரூர்ப் புராணத்தில் திருப்பேரூருக்கு மூலத்தானமாக வெள்ளியங்கிரிமலையே உள்ளதாகக் கூறப் படுவதால் இம்மலையின் வரலாற்றை இந்நூலின் பகுதிகளான புராண வரலாற்றுப் படலம், காமதேனு வழிபடு படலம், நாரதன் வழிபடுபடலம், விம்மிதப் படலம் என்பவற்றுள் விரிவாகக் காணலாம். வெள்ளிமலையின் வரலாற்றை மிகவும் விரித்துக் கூறும் அருமைவாய்ந்த நூல் இது ஒன்றேயாம்.

## 2. சோழன் பூர்வ பட்டையம்†

இப்பெயர் கொண்ட சாசனம் ஒன்று செப்பேட்டில் எழுதப்பட்டு காஞ்சீபுரத்தில் வெகு காலம் இருந்ததாம். ஓலை யேட்டில் வரையப்பட்ட 462 பக்கங்களைக் கொண்ட இதன் பிரதியொன்று †சென்னைக் கீழைக் கலைக் கையெழுத்துப் பிரதிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளதை, இந்நூலகத்தினர், கோவை கிழாரின் துணைகொண்டு இதை நன்கு அச்சிட்டுள்ளனர். கொங்கு மண்டலத்தின் வரலாறு இந்நூலால் நன்கு புலப்படுகின்றது. ஒருவகையில் சாசனவடிவம் போன்ற முன்காலத்து நடையில் அமைந்த உரை நடை நூல் என்றாலும் இது மிகவும் அருமை வாய்ந்த நூலாகும்.

---

* கச்சியப்ப முனிவர் முக்தியடைந்தது. கி. பி. 1790 (20—4—1790)

† Government Oriental Manuscripts Library. Madras, Special Editor Sri. C. M. Ramachandran Chettiar BA.,B.L. Coimbatore.

கரிகாலன் என்ற மன்னன் கொங்கு நாட்டிலுள்ள சிவாலயம், விஷ்ணுவாலயம், மடாலயம், சுப்பிரமணிய ஆலயம், துர்க்கையாலயம் ஆகியவற்றைக் கண்டறிந்து திருப்பணிகள் செய்த விவரங்களும், அக்கால மக்களது பழக்க வழக்கங்களும் இந்நூலால் வெளியாகின்றன. சுமார் 1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட சாசனமாக இது கருதப்படுகிறது. இதனுள் கூறப்பட்ட கரிகால மன்னன் கரிகால மன்னனே அன்றி வேறு மன்னனே என்பதை ஆராய்தல் நேர். இம்மன்னனது காலத்திற்கும் கரிகால் வளவன் காலத்திற்கும் வேறுபாடு உண்டென்பர். எனவே சரிதம் இங்கு மௌனம் சாதிக்கிறது. கொங்கு நாட்டிலுள்ள காடுகளை அழித்து அதனிடையே காணப்பட்ட கோயில்களுக்குத் திருப்பணி செய்து, ஆங்காங்கு மதிலும், குளமும், அணைகளும் பேட்டையும் கோட்டையும் கட்டி முடித்தனன் என்று இந்நூல் உரைக்கின்றது. திருப்பணிகள் முடிவு பெற்ற காலங்கள் நன்கு உரைக்கப்படுகின்றன. இந்நூலில் கூறப்பட்ட கோயில்களும் சுவாமி, அம்மையார் பெயர்களும், மலைகளில் உள்ள ஊற்றுக்கள், நதிகள் என்பனவும் இன்றளவும் அவ்வாறே ஆங்காங்கு வழக்கத்தில் உள்ளனவாகையால் இந்நூலைத் தமிழ் மக்கள் கற்றறிவது மிகவும் நலமாகும் என்க. கொங்கு நாட்டிலுள்ள ஊர்களின் வரலாற்றைக் கூறுவதில் இது தலைசிறந்த நூலாகும். கரிகாலனுக்குத் துணையாக சேரமான் பெருமாள் என்ற சேரமன்னனும், சமய முதலிகள் என்ற பெரியாரும், உத்தம பண்டிதர் என்ற துறவியரும், கஸ்தூரி ரங்கப்ப செட்டி என்னும் வாணிகப் பெருமகனும், நல்லண்ணன் என்பார் ஒருவரும் உடன் இருந்தனர். ஆங்காங்கு வாழ்ந்த மக்கள் இவர்களுக்கு உறுதுணையாக இருந்து திருப்பணிகளை முடிவு பெறச் செய்துள்ளனர். சமய முன்னேற்றத்திற்கு அக்கால மக்கள் புரிந்த தொண்டு, இறைவன் குடிகொண்ட திருத்தலங்களைப் பாதுகாத்து வந்த பண்பு, நீதி தவறாது வாழும் வாழ்வு முறை என்பனவற்றை இந்நூலில் அறிகின்றோம். நாட்டு ஆட்சி முறை, ஆலயத் திட்டம், வகுப்புத் திட்டம், மன்னர்களின் ஆட்சி முதலாயின நன்கு கூறப்படுகின்றன. மூவேந்தர்களைக் குறித்து இந்நூல் கூறும் செய்திகள் அவ்வளவு தூரம் சரிதத்திற்கு ஒத்துக்கொள்ளவில்லை. எனினும் சாலிவாகன சங்காரம் முதலியன கற்பனையாகக் கூறப்பட்டுள்ளன எனலாம்.

இந்நூலில், கரிகாலன் செய்த திருப்பணிகளுள், திருப்பேரூர், வெள்ளியங்கிரி, முட்டம், கோவை என்ற

இடங்களைப் பற்றியன ஒருவாறு திருப்பேரூர்ப் புராணத்தோடு தொடர்பு கொண்டுள்ளமையானும், வெள்ளி மலையைக் குறித்தும் பஞ்சகிரிகளைக் குறித்தும் அங்குள்ள இடங்களைக் குறித்தும் நல்ல வரலாறுகள் அடங்கியிருப்பதாலும் நமக்குத் தேவையான பகுதிகளை முறையே இங்கு குறிப்பிடுதல் நலமாகும். வெள்ளிமலை யடிவாரத்தில் விளங்கும் நாகீசுரமுடையார் கோவிலைக் குறித்து இந்நூலில் குறிப்புகள் உள்ளன. இந்நூலில் குறிப்பிட்ட சோழர்கள் வரலாறு கற்பவர்கள் மனதில் சமயப் பற்றை உண்டாக்குவதாகவும், கடவுள் பக்தியைப் பெருக்குவதாகவும் உள்ளமையால் அவ்வரலாற்றையும் தழுவுதல் நன்றாகும். இந்நூற் கருத்துக்கள் பெரும்பாலும் இதில் இடம் பெறுகின்றன.

## 3. வெள்ளிமலைப் பிரபந்தங்கள்

கொங்கு நாட்டில் எழுந்த காப்பியங்களும், புராணங்களும், பிரபந்தங்களும், தனிப்பாடல்களும் பலவாகும். கொங்குப் புலவர்கள் பலர் அக்காலத்தில் பாடிய பாடல்களின் தொகுதிகள் பல அச்சுவாகனமின்றி ஆங்காங்கு உள்ளனவென்பர். 24 நாடுகளிலும் நூற்றுக் கணக்கான புலவர்கள் வாழ்ந்திருந்தனர். ஆங்காங்குள்ள திருத்தலங்களின் பேரில் பாடிய பிரபந்தங்கள் பல அச்சாகியுள்ளன. தாம் பாடிய எல்லா நூல்களிலும் கொங்கு நாட்டின் வளத்தையும், வெள்ளியம்பலவாணன் புகழையும் மிகுதியும் பாடியுள்ளனர். அவைகளையெல்லாம் ஒன்று தொகுத்து நூலாக்குதல் நம் கடமையாகும். வெள்ளிமலை வழியில் ஆடு மேய்க்கும் இடையர்கள் உழவர்கள் என்போர் பாடிய நாட்டுப் பாடல்களும் உள்ளன. எந்த ஒரு ஏட்டிலும் வெள்ளியங்கிரி ஆண்டவன் துதியும், வாழ்த்தும் அமைந்திருப்பதை அறிகின்றோம். ஆனால் செந்தமிழ் நூல்களாக அமைந்த துதிப்பாடற் பிரபந்தங்கள் சிலவேயாம். நால்வர் பெருமக்கள் பாடிய தேவாரப் பாடல்கள் பல திருக்கைலாயத் தேவாரம் என்ற முறையில் அமைந்துள்ளன. பதினொன்றாந் திருமுறையிலுள்ள சேரமான் பெருமாள் நாயனார் பாடிய 'திருக்கைலாய ஞான உலா' என்பதும் கயிலை இறைவன் உரைக்கின்ற தெய்வத் திருநூலாகும்.

பிற்காலத்தில் இம்மலையைக் குறித்துப் பாடிய பிரபந்தங்கள் சிலவே நமக்குக் கிடைக்கின்றன. போளமாம்பட்டி

அங்கண்ண முதலியார் என்ற வித்வான் பாடிய ''வெள்ளி மலைக் கட்டளைக் கலித்துறை அந்தாதி'' சொற்சுவையும் பொருட்சுவையும் உடைய நூல். இதன் ஆசிரியர் இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் மறைந்தனர். சிரவணபுரம் (செவணன்பட்டி) கௌமார மடாலயம் ஸ்ரீலஸ்ரீ கந்த சுவாமி சுவாமிகள் பாடிய 'வெள்ளிமலைப் பிரபந்தங்கள்' என்ற நூல் அருமை வாய்ந்த நூலாகும். கொங்கு மண்டலத்தின் தவச் செல்வரான இவர் இராமானந்த சுவாமிகளின் மாணவர். பல ஆண்டுகளுக்கு முன்னம் சிவனடி சேர்ந்த இம்மகான் மாபெரும் கவியரசர். தாம் வரைந்த நூல்கள் மிகவும் பலவாம். கோவை கிழாரவர்கள் பாடிய வெள்ளிமலையந்தாதி, சீவக் கவிமணியவர்கள் பாடிய வெள்ளிமலை ஆண்டவர் தோத்திரங்கள் என்பனவும், ஒற்றை மாநகரம் சுப்பிரமணியக் கவிராயர் பாடிய வெள்ளியங்கிரி யாண்டவர் மாலை, போற்றிப் பத்து, அடைக்கலப்பத்து என்பனவும், அண்ணூர் குமாரபாளையம் இரங்கசாமி முதலியார் பாடிய பாடல்களும், கோவை அரங்கசாமி தாசு அவர்கள் பாடிய பல இசைவண்ணப் பாடல்களும், காளிந்தி தாசர் என்பார் பாடிய பாடல்களும், போளமாம்பட்டியில் வாழ்ந்த அக்காலப் பெருநிலக்கிழார் இராசகோபால ஐயங்கார் பாடிய வழிநடைச்சிந்தும், இவ்வூர்க் கூளைய நாயக்கர் என்பாரும், சந்த நகர் என்ற சந்தேகவுண்டன்பாளையம் அண்ணுசாமிப் பாவலர் என்பாரும் பாடிய இசைக் கீர்த்தனங்களும், கொண்டையன்பாளையம் தமிழாசிரியர் முத்தமிழ்க்கவி வித்துவான் K. R. அரசப்பனர் என்பவர் இயற்றிய 'வெள்ளியங்கிரி மகிமை' என்ற நல்ல ஆராய்ச்சி நூலும், செல்வபுரம் திரு. குப்புசுவாமி அவர்கள் பாடிய பஞ்சலிங்கப் பதிகமும், வெள்ளிமலைப் பட்டணம் பூண்டி சுக்கிர கவுண்டர் பாடியபாடல் தொகுதிகளும், இவ்வூரில் 100 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திரு. கந்தப்ப கவுண்டர், க. காளிக்குட்டிக் கவுண்டர் என்பார் பாடிய பாடல்களும் எனப் பலவகை நூல்கள் இத்தலத்தின் புகழை இயம்புவன வாக உள்ளன.

மற்றும் போளமாம்பட்டிக் கருணீகரும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருமான வித்துவான் இரா. ஆறுமுகம் பிள்ளையவர்கள் பாடிய வாகைவிநாயகர் அந்தாதி, மாலை, பதிகம், பட்டி விநாயகமாலை, திருப்பேரூர் ஊடல் உற்சவச் சிறப்பு, வேணுகோபாலர் பதிகம், அங்காளம்மன் பதிகம் என்னும் நூல்களுள்ளும் வெள்ளிமலை சிறப்பிக்கப்

படுகின்றது. திருப்பேரூர்த் தலத்திற்குப் பல பிரபந்தங்கள் உள்ளன. அவைகளுள்ளும் பல துதிப்பாடல்கள் உள. ஒருசில நூல்களாவன: பேரூர் மும்மணிக் கோவை, பச்சை நாயகியார் ஊசல், பந்தடி, மரகதவல்லியம்மை மாலை, பச்சை நாயகியார் பிள்ளைத்தமிழ், திருப்பேரூர்வண்ணம், பதிற்றுப்பத்தந்தாதி, பட்டிப் புராணம், அரசம்பல விருத்தம், மரகத மஞ்சரி, கண்ணுடி விடுதூது, விளக்கு விடுதூது, பட்டீச்சுரக் கோவை, மரகத மாலை, வருகை, ஊஞ்சல், தெம்மாங்கு, தாய்மகளேசல், உயிர்வருக்க மாலை சதகம் போன்ற பல பிரபந்தங்களில் ஒருசில இன்று கிடைத் தற்கரியனவாகும். நாகபட்டணத்துத் திருமுத்து வாளி யம்மையார் பேரிலும், அங்காளம்மன், முத்து கணபதி பேரிலும், தனிப் பாடல்கள் சில ஏடுகளில் காணப்படு கின்றன. முட்டத்துநல்லூர் பற்றிய தனிப் புராணமும் பிரபந்தங்களும் கிடைக்கவில்லை எனினும் அக்காலத்தில் இவைகள் மிகுதியும் இருந்திருக்க வேண்டும் என்பதை இக் கோயில்களைப் பார்த்த அளவில் அறியலாம்.

## 7. நாகபட்டணக் கோயில்கள்

கொங்கு மண்டலத்தின் ஒரு நாடாகிய ஆறை நாட்டு ஊர்களில் *முட்டம் என்பதும் ஒன்று. இது முட்டத்து நல்லூர் எனப்படும். கிழக்கும் வடக்கும் காஞ்சி நதியும் மேற்கே வெள்ளிமலையடிவாரமும் தெற்கே மலைகளும் எல்லையாகக் கொண்டிருந்த பெரிய ஊராகும். தெற்கு மேற்கு மலை அடிவாரத்தில் உள்ள வயல்கள் நல்லூர் வயல் எனப்படும். தென் வடல் நீளமாக அமைந்த இவ்வூர் அருகே உக்குளம் என்ற செம்மேட்டூர் ஏரி உள்ளது. இதன் பாசனம் அமைந்த ஊராகிய இது பிற்காலம் அமரபுயங்க சதுர்வேலிமங்கலம் என்றும் பின் நாகபட்டணம் என்றும் அழைக்கப்பட்டது. 80 ஆண்டுகளின் முன்பு இவ்வூர் அரசினர் கணக்கில் இருந்து வந்தது. சுமார் 200 ஆண்டு களுக்கு முன்பு இவ்வூர் அழியாது நல்ல நிலைமையில் இருந்த தென்பர். பிற்காலத்தில் இவ்வூர் தெற்கு சரிபாதி நொய் யலுக்குத் தென்பால் அக்கரைபோளமாம்பட்டியாவும் வட பால் இக்கரை போளமாம்பட்டியாகவும் மாற்றப்பட்டு

* "தொண்டைமான் புத்தூரு முட்டமே கூடலூர் சிங்க நகரும்"
(ஆறை நாட்டு ஊர்த்தொகைப் பாடல் காண்க)

தென்பால் உள்ள இருட்டுப்பள்ளத்திற்கு மேற்கே சிறுவானி வரை உள்ள பகுதிகள் இவ்வூரைச் சார்ந்ததாக இருந்தது. இவ்வூரிலும் இதன் பகுதிகளும் உள்ள கோயில்கள் சில வற்றை முறையே காண்போம். இன்று இதன் கீழ் வரும் கோயில்கள் போளமாம்பட்டி கிராமத்தைச் சார்ந்துள்ளன. அக்கரை போளமாம்பட்டி மத்துவராயபுரத்தோடு பின்னர் இணைக்கப்பட்டது.

## 1. முட்டத்து நாகீசுரமுடையார் கோயில்*

பூண்டி வருவோர் ஆலாந்துறை உயர்நிலைப்பள்ளியருகே இறங்கிப் பின் போளமாம்பட்டி வழியாகவும், செம்மேடு வந்தவர்கள் அங்கிருந்தும் கிழக்கே 1½ கல் பாதை வழியாகக் கிழக்கே வந்தாலும் இக்கோயிலையடையலாம். இவ்வழி யிலும் மற்று தொண்டாமுத்தூர் வழியே போளமாம்பட்டி யைக் கடந்தும் உந்து வண்டியில் இக்கோயிலுக்கே வரலாம். தனிக் காஞ்சி மகா நதிக்கரையில் உள்ள இரு கோயில் களுள் ஒன்று. இங்குள்ள நதியில், கல்லாறு, காஞ்சியாறு, பச்சையாறு, வெள்ளையாறு, பொன்னியாறு என ஐந்து நதிகள் கூடுகின்றனவாம். இயற்கை வனப்புகளுக்கிடையே அழிந்து கிடக்கும் இக்கோயில்கள் சங்ககாலம் முதற் கொண்டு சிறந்து விளங்கிய கொங்கின் மிகப்பழங் கோயில் களில் இதுவும் ஒன்ருகும். மூன்று பக்கங்களிலும் மதில்கள் போன்ற மலைகளுக்கிடையே செழிப்பான பகுதியில் அமைந் ததும் தமிழர் மறந்ததுமான இவ்வாலயங்களைக் காண எவரும் விரும்புவர். சுமார் ஒரு மைல் தூரத்தில் வளைந்து காணப்படும் கோட்டை அகழியின் சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றன. பழைய சாம்பல் மண்மேடுகள், ஓடுகள் தாழிகள் என்பன காண்பார்க்குப் புலனுகும். விளைநிலமாக மாறியமைந்த இப்பகுதியில்தான் நாகீசுரமுடையார் கோயிலும் திருமுத்து வாளியம்மையார் கோயிலும் உள்ளன. செடிகொடிகள் படர்ந்தமையால் அழிவுற்ற சுவர்கள், மண்டபங்கள், தூண்கள் இடிந்த பகுதிகள் என்பன கண்டார் மனதைக் கலங்கவைக்கும்.

தென்புறம் உள்ளதே நாகீசுரமுடையார் கோயில். கோயிலை வலம் வந்து உள்ளே செல்ல சபாமண்டபம் முன்

*ஆலாந்துறை மிராசுதாரணி திருமதி A. K. பருவதாம்பாள் அவர்கள் நாகீசர் கோயிலில் பல விழாக்களையும் கொண்டாடி வருகின்றனர்.

மண்டபம் இவைகளைக் கடந்து உள்ளே செல்ல நாகலிங்கம் காட்சி தருகின்றார். இலிங்கத்தில் நாகர் வடிவங்களைக் காண்க. முன்னம் பிரகாரத்தில் குடிகொண்டிருந்த தட்சிணா மூர்த்தி, முத்து விநாயகர், நாகர்கள் என்னும் கடவுளர் உள்ளே காட்சி தருகின்றனர். இக்கோயிலின் பல சிலைகள் நாளாவட்டத்தில் பக்கத்து ஊர்களிற் சென்று குடிபுகுந்தன வாம். *கோயிற் சுவர்களில் உள்ள கல்வெட்டுகள் பல வாம். அவைகள் இறைவனை, "அமரபுயங்க சதுர்வேதி மங்கலத்து ஆவுடையார், முட்டத்து நல்லூர் நாகீசர்" என்று வழுத்துகின்றன. கல்வெட்டுகளில் நிலத்தின் அளவு கள் எல்லைகள் முதலியன குறிக்கப்பட்டுள்ளன. கொங்கு சோழர்கள் வல்லாள தேவர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் இறைவனுக்கு நிலம் விட்ட செய்திகளைச் செப்புகின்றன. அக்காலத்தவரது பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. "றயில் வல்லுவன் கோவன் விட்ட நிலம்—தூணி நிலமும்—பதக்கு புதுத்தூம்பில் நெல்—கன்னிவாய்க்கால்—கன்னி யப்பன் திட்டு—இராச வாய்க்கால்—உத்தமசீலன் வாய்க் கால்" என்ற தொடர்களைக் காண்க. கோவன் இருளன். இறயில் என்பது இருளர் வாத்தியமாகலாம். கோயிற் சுவர்களில் சித்திர வடிவச் சிலைகள், தாமரை வடிவப் போதிகைகள் தூண்கள் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலின் முன்பு ஓடும் காஞ்சிநதிக்கு முன்னம் படிக்கட்டுகளும் அருகே மலர்வனமும் இருந்ததாம். கோயிற் சாசனங்களிற் பல அரசினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. பல மண்ணுள் மறைந்து கிடக்கின்றன. கோயிலின் முன்பு நந்நீசர் மண்டபம் அழிவுற்றது.

இத்தலத்தையுடைய முட்டத்துநல்லூரில் தனபாலன் விழுமிபட்டியான் என்ற வாணிகனும், பேரூர் நாட்டு முட்டத்து வியாபாரி மருதன் முதலி என்ற வணிக சக்கர வர்த்தியும் இருந்தார்களாம். திருப்பேரூர் ஈசுவரன் கோயில் முன் மண்டபத்தூணில் 'விழுமி பட்டியான் உபயம்' என்ற கல்வெட்டுக் காண்க. எனவே நாகேசுரமும், முட்டத்து நல்லூரும் மிகப் பழங் காலத்திலிருந்தே சிறந்து விளங்கின என்பதை உணரலாம். நாகீசுரர்மேல் உள்ள துதிப்பாட லாகச் சில ஈண்டுத் தருகின்றோம். இப்பாடல்களை அக்காலப் பள்ளியாசிரியர்கள் இயற்றியிருக்க வேண்டும். மகா நோன்பு கோலடிப் பாடல்களாக அமைந்த ஏட்டிலிருந்தும் கிடைத்

* S. I. Inscriptions, No. 1910/150 to 155—(6 Inscriptions)

தன. நாகீசர் பெயரால் இன்னும் எத்துணைப் பாடல்கள் இருந்தனவோ அவைகளில் எதுவும் நமக்குக் கிடைத்தில.

**நாகீசுரர் துதி**

"கடவாரண முறித்த கனக கயிலாசா
அடல்மாரன் தனையெறித்த அருணை சர்வேசா
விடமமருங் கண்டனே விமல நல்லூர்வாசா
நடராசா விடையேறு நண்பா நாகேசா."

*   *   *

"அருணசலாபொதுவி லாடியவி நோதா
கருணகரக்கடவுள் கயிலாத நாதா
திருமாலு மயன்தேடும் செய்யபொற் பாதா
அருமறைநா கீசுரனே அருளுடைய கீதா."

**முத்துவிநாயகர் துதி**

"செந்தமிழ்க் கூடமதில் சிறப்புட னுகந்து
செயவிசயம் பெருகநல்லூர் செழிக்கவரமுகந்து
சந்ததமும் தழைக்கவே தரணிதனில் வாழும்
தந்திமுக னமுத்து அத்தவிநா யகனே."

*   *   *

**வெள்ளிமலைக் கட்டளைக் கலித்துறை அந்தாதிப் பாடல்**

"கற்பித மார்வெள்ளி மாமலைப் பக்கங் கலைபயின்ற
நற்புகழ்ச் சேடன் பிரதிட்டை செய்தநா கேசனையும்
சிற்பரை யான திருமுத்து வாளியாங் தேவியையும்
பொற்பொடு போட்ட ளமுவப்பக் கண்டடி போற்றுமினே."

## 2. திருமுத்து வாளியம்மையார் கோயில்*

திருமுத்து வாளியம்மையார் கோயில் சிவன் கோவிலைச் சார்ந்து வடபுறம் சற்று மேற்கே தள்ளிக் காணப்படுகின்றது. சபாமண்டபம் அழிவுற்றதெனினும் முன் மண்டபம் நன்கு உள்ளது. உள்ளே செல்ல அம்மையார் காட்சி தருகின்றனர். 'எல்லாம் அழிந்து போயிற்று' என

---

* முத்துக்களாலாகிய காதணியை அணிந்த காரணத்தால் அம்மையார் இப்பெயர் பெற்றனர் என்ப.

எண்ணும் அன்பர்கள் மனதுக்கு, திருமுத்து வாளியாந்தேவி திரிபுரசுந்தரியாகும் உமையவள், "அழியாது காக்க யானுள் ளேன், அஞ்சாதீர்கள்" என ஆறுதல் கூறுவாள் போன்று தன் கருணை முகத்தால் புன்முறுவல் பூத்து நிற்கின்றனள்.

பொன்னங்கொடியே உபநிடதப் பொருளே பிறவிக்
கடலினுக்கோர்
புணையேபரம னடனமிடும் போதிவனத்தில் வளர்குயிலே
யுன்னவரிய பேரொளியே யோதற்கரிய செழுந்தேனே
யுண்ணத் தெவிட்டாத் தெள்ளமுதே யொப்பற்றிருந்த
கற்பகமே
கன்னன்மொழியே தவப்பயிரே கருணாநிதியே மடவனமே
கனியே யெமதுகண்மணியே கைகொண்டெழுதாச்
சித்திரமே
வன்ன மயிலே பசுங்கிளியே மானே வருகவருகவே
வளர்தென்பேரை மரகதப்பெண் வாழ்வே வருகவருகவே.

(பச்சை நாயகியம்மை பிள்ளைத் தமிழ்*)

என்றும் ஓராட்டுக்குப்பை செட்டிபாளையம் முத்து நைனுத்தை முதலியாரவர்கள் இயற்றிய உயர்ந்த பாடலை இங்கு பாடி மகிழ்தல் நலம் தரும். அம்மையாரின் சிலையை நேரிற் காணும் அன்பர்கள் பல நாழிகைகள் வரை அவ்விடம் விட்டுப் பெயரார். மதுரை மீனாட்சியம்மையின் சிலையைச் செய்த சிற்பியே இவ்வம்மையின் சிலையையும் செய்தனர் என்பது வழக்கு. இச்சிலை அவ்வளவு அழகுடன் விளங்கு கிறது! நேரில் காண்பவர் இச்சிலையையே போற்றுவர் என்க. இடையில் மேகலை என்ற அணியைக் காண்க. அதில் பத்துக்கு மேற்பட்ட துவாரங்கள் உள்ளன. மணிக்கழுத்தில் சிலையில் விடுவிக்கப்பட்ட அணிகள், வேறு ஒரு அணியைப் பொருத்த மார்பில் ஒரு துவாரம், மலர்ந்தும் மலராத தாமரை மலர் ஏந்தியுள்ள வலது கையின் வடிப்புமுறை, கைகளில் வளையல்கள், காந்தள் மலர் போன்ற விரல்களின் நகங்கள், அவைகளின் கூர்மை, கையில் இரேகைகள், கால் களில் தண்டை சிலம்புகள், தலையில் உயர்ந்த முடி, முடியில் கதிரவனும், மதியவனும் உள்ளமை என்னும் இவைகளை யெல்லாம் காண ஆயிரம் கண்கள் வேண்டும். அழகே வடி வாக அமைந்த இவ்வம்மையாரின் கருணை முகத்தின்

* பச்சை நாயகியம்மை பிள்ளைத்தமிழை இயற்றிய முத்துநைனுத்தை முதலியார் சென்ற நூற்றாண்டினர்.

பார்வையிற்பட்ட அன்பர்கள் தாயைச் சென்றடைந்த சேய்களுக்கு ஒப்பாவார்கள். திருச்சடையில் அமைந்த சடைவில்லையையும் அது பொருத்தப்பட்டிருக்கும் அமைப்பு முறையையும் கண்ட நமது தங்கையர்கள் தாமும் அவ்வாறே முடித்துக்கொள்ள விரும்புவார்கள். அழகிய திருமுடியணிந்து நிற்கும் இவ்வம்மையார் ஒரு நடனமாது நிற்கும் தோற்றத்திற்கு ஒப்பாவாள். அம்மையாரின் முகப் பொலிவு எல்லாவுயிர்களையும் ஈர்க்க வல்லது. இச்சிலையை நேரில் காணும் அன்பர்கள் இங்குதான் தாம் பிறந்த பிறவியின் பயனை அடைகின்றனர் எனலாம். இன்றே, இன்னே, இவ்வம்மையாரைக் கண்டு அருள் பெற்று இம்மை மறுமைப் பயனை அடைவார்களாக! திருமுத்துவாளி என்ற பெயர் பழைய ஏடுகளிலும், வெள்ளிமலை அந்தாதியிலும் காணப்படுகின்றது. அம்மையாருக்கு இப்பெயர் உண்டு என்பதைப் பின்வரும் குருநமசிவாயர் பாடல்களாலும் பிற பாடல்களாலும் அறியலாம். நூறு ஆண்டுகளுக்கு முன்னம் வரையப்பட்ட ஏடுகளில் திருமுத்துவாளி என்ற பெயர் உண்டு. முத்துவாளி என்பது முத்துக்களாலாகிய காதணி. இதை அணிந்தவள் முத்துவாளி என்க. அம்மையார் தமது காதுகளில் அணிந்த அணியும் முத்துவாளியேயாம். இத்தலத்து விநாயகர்க்கு முத்துவிநாயகர் என்ற பெயர் உண்மையை முன்னம் அறிந்தோம்.

திருவண்ணுமலையில் குகைநமசிவாயர் என்ற முனிவரின் மாணவர் குருநமசிவாயர் என்பார் தம் குருவின் ஆணைப்படித் தல யாத்திரை புறப்பட்டனர். சிதம்பரத்தை நோக்கி வருபவர் அங்கு அருகே உள்ள இரிஷிவந்தியம் என்னும் தலத்தில் தங்கினுர். அங்கு சுவாமி தரிசனம் செய்து பின்பு குளக்கரையில் நிஷ்டையில் இருந்தனர். அவருக்கு அதுவேளை பசிதாகம் உண்டாயிற்று. உடனே அவர் அம்மையாரை வணங்கி,

"தாயிருக்கப் பிள்ளை தளருமோ தாரணியில்
நீயிருக்க யான்தளரல் நீதியோ—வேயிருக்கும்
தோளியே விண்ணோர் துதிக்கும் திருமுத்து
வாளியே சோறுகொண்டு வா"

எனப் பாடினர். எல்லாம் வல்ல உமையாள் அசரீரிவாக்காக, "நீவிர் என்னை மட்டும் பாடினீர்; நானே இறைவன் பங்கில்

இருக்கின்றேன்; அவரையும் சேர்த்துப் பாடுக!'' என்றனள். மீண்டும் குருநமசிவாயர்,

''மின்னும் படிவந்த மேவுகல தீசருடன்
மன்னும் திருமுத்து வாளியே—பொன்னின்
கலையாளே தாயேஎன் கன்மனத்தே நின்ற
மலையாளே சோறுகொண்டு வா''

எனப் பாடினார். திருமுத்துவாளியாந்தேவி உடனே சோறு கொண்டு வந்து கொடுத்துத் தன் அன்பனின் பசியைப் போக்கினளாம். 1887ஆம் ஆண்டில் சென்னை சிவஞான போத அச்சகத்தில் பதிப்பான குருநமசிவாயர் சரிதை யிலும், அருணசல புராணப் பதிப்புகளிலும் காண்க. நாகீச் சுரர் பங்கில் உறையும் திருமுத்துவாளியம்மையாருக்கும் குருநமசிவாயருக்கும் உள்ள தொடர்பினை ஆராய்தல் வேண்டும். இவ்வரலாறு எத்தலத்திற்குரிய தெனவும் ஆராய்தல் நலம்.

### திருமுத்துவாளி துதி

''நந்தூரும் தடம்புடைசூழ் நல்லூர்வாழ் கோதே
நாவலோர் புகழ்ந்தேத்தும் நளினமுறை மாதே
மந்திரமா மலையரசன் ஈன்றருளுஞ் சேயே
மங்கையே திருமுத்து வாளிநா யகியே.''

(பழய பாடல்)

## 3. வெங்கடேசுரப் பெருமாள் கோயில்

இக்கோயில் முற்கூறிய சிவாலயங்களை யடுத்து கோட்டைக்கு வெளியில் வடமேற்கில் ½ பர்லாங் தூரத்தில் உள்ளது. இக்கோயிலைக் *''குலசேகரவிண்ணகரம்'' எனக் கல்வெட்டுக் கூறுகின்றது. இங்கு கல்வெட்டு உண்டு. இக் கோயிலில் குடிகொண்ட திருமால் உலகளந்த பெருமாள் எனப்படுவர். கோயில் சிதைந்து போனதால் இங்குள்ள சிலைகளும் மூர்த்தமும் காணப்படவில்லை. ஒரு மண்டபமாக மட்டும் உள்ளது. முன்னம் இக்கோவில் பெரியதாக இருந்த தெனல் வேண்டும். இக்கோயிலுக்குச் செல்லப் போதிய வழிவகைகளை அமைக்கவேண்டும்.

---

* S. I. Inscriptions 1910/156; 1910/157 காண்க.

## 4. நாககாளி என்னும் கரியகாளி கோயில்

இக்கோயில் திருமால் கோயிலுக்கு வடக்கே ½ பர்லாங் தூரத்தில் உள்ளது. செம்மேட்டுப் பாதையில் உள்ளது. முன்னம் பழய கட்டடமாக இருந்த இக்கோயில் இன்று புதிய கட்டடமாக உள்ளது. செம்மேடு, உயர்திரு V.C. பழநிசாமிக் கவுண்டர் மனைவியார் தாயம்மாள் என்னும் அம்மையாரால் இக்கோயில் கட்டப்பட்டது. முன்னம் நாககாளியாக இருந்த இத்தெய்வம் இன்று கரிய காளி என அழைக்கப்படுகின்றார். கரிகாலன் இப்பகுதியி லுள்ள காடுகளை அழித்தபோது இத்தெய்வம் முப்பலி கேட்டதாகவும் அவ்வாறே அம்மன்னன் செய்ததாகவும் பூர்வபட்டையம் என்னும் நூல் கூறும். இக்கோயிலிலிருந்த பழய சிலை இன்று இல்லை. அச்சிலை மிகவும் அழகுடையது. இப்போது வைக்கப்பட்டுள்ள சிலை புதியது.

## 5. வீரகாளியம்மையார் கோயில்

பூண்டிக்குத் தெற்கே ஒரு மைல் தூரத்தில் நொய்யல் நதிக் கரையில் உள்ளது. வீரகுல அம்மன், வீரகோலம்மன் என அழைக்கப்படும் தெய்வமாகும். மக்கள் பூண்டியி லிருந்தும் இங்குச் சென்று வருவர். பூண்டி அடிவாரத்தி லிருந்து இக்கோயிற்கு மேற்கே உள்ள போரேத்திவரை நாகபட்டணத்து நல்லூரின் எல்லை பரந்து கிடந்தது. இன்று இப்பகுதிகள் காட்டிலாகாவாக இருக்கின்றது. மலைவாழ் மக்கள் மரபினர் இங்கு பூசை செய்து வருகின் றனர். பூண்டியிலுள்ள வசவநதி ஊற்றில் (குடிநீர்க் குளம்) 1933 ஆம் ஆண்டில் சேறு எடுத்துக் கொண்டிருக்கும்போது இதனுள் மூன்று சிலைகள் எடுக்கப்பட்டன. அவைகள் காளி, முருகன், சூரியன் சிலைகளாகும். காளிசிலை மிகவும் அழகுடையது. இச்சிலைகளில் ஒன்றான முருகன் சிலைக்கு மாதந்தோறும் கிருத்திகை விழாக்கள் நடைபெறுகின்றன. மேல்கண்ட மூன்று சிலைகளும் வீரகாளியம்மையாரின் கோயிலிலிருந்தோ அல்லது நாகபட்டணத்து நல்லூரி லிருந்தோ கொண்டுவரப்பட்டு இக்குளத்தில் போடப் பட்டவை என அறியலாம். வசவநதிப் பொய்கையில் இச்சிலைகள் இருப்பதை யறியாதவர்கள் இச்சிலைகளுக்குப் பின்னம் உண்டாக்கினர் என்க.

## 6. முட்டத்து ராயர் கோயில்

இக்கோயில் நாகீசுரமுடையார் கோயிலின் தெற்கு ½ மைல் தூரத்தில் ஆற்றின் தெற்குக் கரையோரம் அமைந் துள்ளது. முண்டத்துராயர் எனக் கூறி இங்கு தலையில்லா உருவமொன்றை வழிபடுகின்றனர் என்க. இக்கடவுள் தொண்டாமுத்தூர்ப் பக்கம் உள்ள ஒக்கலிகர் மரபினருக்குக் குலதெய்வமாவர். இதுபற்றிய பிறவரலாறுகள் கிடைத்தில. மத்துவராயபுரம் கிராமத்தில் ஆற்றோரம் உள்ளது. ஆலாந் துறை வழியே சிறுவானியாற்று அணைக்குச் செல்லும் வழியில் முண்டந்துறை, முரசம்பூர் ஆறு என்ற நதிகளைக் கடக்கின்றோம். முண்டந்துறை என்பது ஆலாந்துறை என்பதைப்போல ஒரு ஊராகவே இருந்தது எனவும், மொசரம்பு, மசளறும்பு ஆறு என்பது முரசம்பூர் என்னும் ஊரின் பெயரே என்பதும் அறிக. எனவே அங்கு முரசம்பூர், முண்டந்துறை (முட்டத்துறை) என்ற ஊர்கள் இருந்தன என்பதை அறியலாம். நொய்யலாற்றில் மேல்கண்ட ஆறுகள் கலக்கின்றன. இவ்வாற்றின் வடகரையில்தான் நல்லூர் இருந்திருத்தல் வேண்டும். பின் காலத்தில் நாக பட்டணம் என்னும் ஊர் காஞ்சி நதியின் கரையில் தோன்றி யிருக்க வேண்டும். நல்லூர் சிறப்படைந்திருந்த காலத்தில் மேற்கண்ட கோயில்கள் சிறப்புற்று விளங்கியன எனலாம்.

## 7. அங்காளம்மன் கோயில்

முட்டத்து நல்லூரில் அங்காளம்மன் கோயில் ஒன்று இருந்தது. நாகபட்டணம் அழிந்த பின்பு இக்கோயிலின் தெய்வம் இக்கரைபோளமாம்பட்டிக்குக் கொண்டு வரப் பட்டு அங்கு வடக்கு முகமாக உள்ள கோயிலில் வைக்கப் பட்டதென்பர். போளமாம்பட்டியிலுள்ள அங்காளம்மன் கோயில் மைசூர் மன்னன் ஐதரலி காலத்திற்கு முன்பே கட்டப்பட்டதென்பர். ஐதரலி காலத்தில் விட்ட மான்ய நிலம் இன்னும் உள்ளது. ஏட்டுப் பிரதியிலிருந்த ஒரு பாடல்,

" திருமால்ச கோதரியே சீர்பரா பரியே
செகதலமெ லாம்புகழும் சிங்கவா கனியே
அருள்மேவு நல்லூரில் அமர்ந்தசங் கரியே
அங்காள தேவியே அன்னபூ ரணியே."

(பழம் பாட்டு)

முட்டத்துநல்லூரில் அங்காளம்மன் கோயில் இருந்த தென்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. சுமார் 17-ஆம் நூற்றுண்டின் முன்பே நாகபட்டணத்து நல்லூர் அழிந்து விட்டது என்று கருதலாம்.

## 8. காஞ்சி மகா நதி

இவ்யாறு என்றும் வற்ருத ஜீவ நதி. வெள்ளிமலையின் வடபாரிசத்தில் மலையின் மேல்பகுதியில் உற்பத்தியாகி அங்கு வேறு ஒரு ஆருகிய நீலியாற்ருேடு கலந்து கீழே இறங்குகின்றது. மலையடிவாரத்தில் இவ்வாற்றுக்கு ஒரு அணை உண்டு. அதுவே முட்டத்து அணை. காஞ்சி மகா நதிக்கு முதல் அணை இதுவே. இன்று இவ்வணை நாகபட்டணத்து நல்லூருக்கும் போளமாம்பட்டிக்கும் பயன்படு கின்றது. முட்டத்து வயலுக்கும் மானியத்து நிலம் என்னும் வயல்களுக்கும் உக்குளம் என்னும் செம்மேட்டூர் ஏரிக்கும், கிழக்கே அம்பாவயல் என்னும் புதுக்காட்டுக்கும் பாயும் நீர் காஞ்சியாற்று நீரே என்க. இப்பகுதி காஞ்சியாற்றின் வளத் தால் அமைந்தது என்க. இவ்யாறு வெள்ளிமலையில் காஞ்சி மரத்தின் வேரிலிருந்து உற்பத்தியாகின்றது. காஞ்சி மரங்கள் நதியின் கரைகளில் மிகுதியும் காணலாம்.

“ தடவரைத் தெய்வக் காஞ்சி மரமுள தங்கதன்கீழ்
தவழ்தலின் னதிகாஞ்சி நதியெனத் தக்கதுவே ”

என்ற பேரூர்ப் புராணம் விம்மிதப்படலப் பாட்டும் கர்ண்க.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருன பதிற்றுப்பத்து என்னும் நூலுள் பரணர் என்ற புலவர் செங்குட்டுவனைப் பாராட்டியதாக அமைந்த ஐந்தாம்பத்து எட்டாவது பாட் டாகிய, ‘பேரெழில் வாழ்க்கை’ என்னும் தலைப்பில்,

“ தீம்புனலாய மாடும்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே ”

(பதிற்றுப்பத்து—48)

என்ற பாட்டில் காஞ்சிமகா நதி கூறப்பட்டுள்ளது. சங்க காலத்திலேயே இவ்யாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றும் பேரூர்ப் புரா்ணத்தில்,

" மணிவாரிப் பொன்கொழித்து மலர்களுந்தித் தேன்விராய்
அணியாரத் தவழ்ந்தேகு மருநீர்க் காஞ்சி"

(காமதேனு வழிபடு படலம்—57)

" கதிர்மணிக் குலமும் பொன்னும் கையரிக் கொண்டு போந்து
அதிர் புனல் வழக்கருத அற்புதக் காஞ்சி"

(நாரதன் வழிபடு படலம்—58)

மின்னை ழுக்கி மிளிர்தர வைத்தென
பொன்னை ழுக்கிப் புகுநதிக் காஞ்சிநீர்
தன்னை ழுக்கிற் றகப்புகுந் தாடினன்"

(காலவன் வழிபடு படலம்—30)

கிழக்கு நோக்கி வரும் இவ்யாறு கல்லாறு பச்சையாறு என்பவற்றோடு கலந்து வெள்ளிமலைப் பட்டணத்தருகே புதுக்காட்டு அணை அருகே தெற்கே திரும்புகிறது. சுமார் 1½ மைல் தூரத்தில் மேற்கேயிருந்து வரும் நொய்ய லாற்றோடு கலக்கிறது. கலக்குமிடத்தில் கூடுதுறையும் அங்கு முருகராலயமும் உள்ளன. இடையே வலதுபுறம் விளங்குவதே நல்லூர்க் கோயில்களான நாகேசுரமுடையார் கோயிலும் பிற கோயில்களும். நாகீசுரத்தை யடுத்து இவ் யாற்றில் கல்லாறு, காஞ்சியாறு, பச்சையாறு, வெள்ளை யாறு, பொன்னாறு என்னும் ஐந்து பஞ்ச நதிகள் கலப்பதால் இவ்யாற்றில் முழுகினவர்கள் இம்மை மறுமை என்ற எல்லாப் பேறுகளும் பெறுவர். ஒரு வகையில் கூடுதுறையில் (தொம்பிலிபாளையம் அருகே) மேற்கேயிருந்து வரும் வெள்ளையாறும் பொன்னாறும், வடக்கிருந்து வரும் காஞ்சி யாறு, கல்லாறு, பச்சையாறு என்பனவும் சேர்ந்து கூடு கின்றன என்பது மிகவும் பொருந்தும். பச்சையாறும் கல் லாறும் வடக்கு மலையில் தோன்றிக் காஞ்சியோடு வெள்ளை யாறு நொய்யலோடும் கலந்து ஐந்து நதிகளாகின்றன வென்று அறிக. வெள்ளியங்கிரி மலையில் பல மூலிகைகள் இருப்பதால் அம் மூலிகைகள் இவ்யாற்று நீரில் கலந்து வருவதால் இதில் குளித்தவர்கள் எவ்வகையான பிணியும் நீங்கிச் சுகம் பெறுவர். முக்தியும் பெறுவர் என்க. இவ் யாற்றிலிட்ட எலும்பு கல்லாகும் எனப் பேரூர்ப் புராணம் கூறுகிறது. நொய்யலாற்றை நொய்யல் நோயிலாறு

மூழ்கினுர்க்கு நோயைத் தீர்க்கும் ஆறு என்று கூறவும் பொருந்தும். எனவே காஞ்சி மகாநதி புண்ணிய நதி என்பதும், இந்நதி காவிரியில் கலக்கின்ற இடம்வரை தன் கரைகளில் உள்ள தலங்களை வளப்படுத்துவதோடு, பல கோயில்களின் தலபுராணங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பெருமை பெற்றது என்பதும் உணரற்பாலது.

வெள்ளிமலையில் சுவாமிகிரிக்குக் கீழ் ஓடும் ஆறே ஆண்டிகளை என்பது. இதன் நீர் மிகவும் குளிர்ச்சி பொருந்தியது. பல மூலிகைகளின் சாரமாக மலையினுள்ளே உள்ள ஆறு நதிகளோடு கூடி வரும் இது சாமிமுடியாறு எனப்படும். இவ்யாற்றில் மூழ்கியே பின் கிரிமலைக்குச் செல்ல வேண்டும். நாரத முனிவர் இத்தீர்த்தத்தில் மூழ்கியெழுந்து பின் நேம நிட்டைகளை முடித்துக்கொண்டு கிரிமலை யேறினராம். அருச்சுனனோடு போராடிக் களைத்து விழுந்தார் இறைவன். அவர் களைத்து விழுந்த இடமே ஆண்டிகளை. ஆண்டி—சிவபெருமான். போரத்திப் பதியருகே ஓடும் வெள்ளையாறு இவ்யாறு என்பர்.

"அங்கி பாங்கரின் அமைத்தலாற் றெருடுவதற்
கவனியுளோ ரஞ்சும்
பொங்கு சீதளத் தாவயின் ஒழுகிய புதுமணநதி தீர்த்தம்
முங்கி நீறுடன் முழுவது மணிந்துசெய் முறைமைமுற்
றுறவாற்றி
எங்க ளையகன் திருமலை யிவர்ந்தன னிவர்ந்தயாழ்
மணித்தோளான்."

(நாரதன் வழிபடு படலம்—20)

"சுகமா கியவெள்ளி மாமலை யேறித் தொடர் வழியில்
யுகமா மரசம்பலஞ் சித்தர் மாமுழை யூதமிளைப்
பகலுமம் போதிதிட் டங்கைதட் டுஞ்சுனை யாய்ந்தகன்று
மகமாறு மாண்டி களை தீர மாடவும் வம்மின்களே."

"பற்குனன் பாசு பதம்வேண்டு நாளுற்ற பண்டமரில்
விற்சரம் பூட்டு மிடம்பூண்டி யெனபர் விரதியவன்
கற்பிற் களைத்து விழுமிடமாண்டி களையதற்குத்
தெற்குள முக்தி குளம் வெள்ளி மாமலைத் தேசகத்தே"

(வெள்ளிமலைக் கட்டளைக் கலித்துறை அந்தாதி)

என்னும் பாடல்கள் அவனியிலுள்ளவர்கள் தொடுவதற்கு அஞ்சுகின்ற ஆண்டிகளையைச் சிறப்பிக்கின்றனவென்க. மற்றும் வெள்ளிமலையின் மேற்குத் திசையில் தென்வடலாக ஓடும் வானி ஆறு பதிற்றுப்பத்து 9-ம் பத்தில் 86-ஆம் பாட்டில் குடக்கோ இளஞ்சேர லிரும்பொறையைப் பாடிய பெருங்குன்றூர்க் கிழாரால்,

"சாந்துவரு வானி நீரினும்
தீந்தன் சாயலன் மன்றதானே"

என்று புகழ்ந்து கூறப்பட்டதையும் காண்க. சிறுவானி உற்பத்தியாகும் மலையடிவாரத்தில் 'முத்திகுளம்' என ஒரு குளம் உள்ளதாம். அங்கு படிக்கட்டுகள் சிலைகள் முதலியன உள்ளதென்பர். சிறுவானி அணைக்கு மேற்கே வெகு தூரத்தில் இக்குளம் உள்ளதென்பர். வானியாறு உற்பத்தியாகும் இடத்தில் குளமும் சிலையும் உள்ளனவென்பர்.

## 9. பஞ்சகிரிகள்

சிவபெருமான் ஐந்து முகங்களையுடையவர். பிரம முகம், திருமால் முகம், உருத்திர முகம், மயேசுர முகம், சதாசிவ முகம் என ஐம் முகங்களாம். கொங்கு நாட்டில் தென் கைலாயத்தைச் சார்ந்தவாறு தன் ஐந்து முகங்களையும் ஐந்து கிரிகளாக்கினர் எல்லாம் வல்ல இறைவன்.

பிரமமுகம்—பிரமகிரி—ஐயாசாமி மலை (அயன்மலை)

திருமால்முகம்—பெருமாள்முடி—விஷ்ணுகிரி.

உருத்திரமுகம்—உருத்திரகிரி—தொள்ளாயிரம் மூர்த்திக் கண்டி.

மயேசுரமுகம்—மயேசுரகிரி—வெள்ளியங்கிரி.

சதாசிவமுகம்—சதாசிவகிரி—நீலிகிரி.*

"தினைக்குமைம் முகமும் ஐந்து சிவலிங்கமாகக் கொண்டான்" என்னும் பேரூர்ப் புராணம் புராண வரலாற்றுப் பாடல். பஞ்சகிரிகளை மேற்கொண்டவாறு சோழன் பூர்வ பட்டையம் கூறுகின்றது. பேரூர்ப் புராணம் உமையவள்

* இம் மலையில் உற்பத்தியாகும் ஆறு நீலியாறு (நீலிவாய்க்கால்)

மலை, பிள்ளையார்மலை, பிரமன்மலை, பெருமாள்மலை, மருதகிரி என்னும் இவைகளை வெள்ளியங்கிரியை அடுத்த பஞ்சகிரிகள் எனக் கூறுகின்றது. சத்திகிரியைச் சேர்த்தும், மருதகிரியைச் சேர்த்தும் ஏனைய கிரிகளோடு பஞ்சகிரிகளாகின்றன என்னும் குறிப்புகள் பேரூர்ப் புராணத்தில் உள்ளன. பூர்வ பட்டையம் உருத்திரகிரியைச் சேர்த்துக் கூறுகின்றது. பேரூர்ப் புராணம் ஐங்கரன் மலை (குஞ்சரமலை)யைச் சேர்த்துக் கூறுகின்றது. எப்படியாயினும் சிவபெருமானது ஐந்து கிரிகளும், பிறவும் இங்கு வணங்கத்தக்கனவென்பதை அறிகின்றோம்.

''இமய மீன்றவ ளோதியு மைங்கர னிரும்புகூழ் தடங்குன்றுஞ்
சிமய மோங்கிய நான்முகன் விலங்கலுஞ் செங்கண்மால்
வளர்வெற்பும்
அமைவி ராவிய வேலவன் பறம்புந்த னடிவரை யெனத்தாழ
உமையோ டாரண மறிகலா னிருப்ப நீண் டொளிர்வரை
முடிசேர்ந்தான்.''

(நாரதன் வழிபடு படலம்—21)

''......மேற்றிசை முடிவினி லிரசத வரையாய்
முப்புரங்களை எரித்தருண் முதல்வனே யிருந்தான்.''

'' அமல நாயகற் கேற்புற வவ்வரை வலப்பால்
விமல நாயகி விளங்குமே மாசல மானுள்
கமல நாரணன் கண்ணுதல் வலமிடம் வரலான்
நிமலன் பாலவர் தாமுநின் றூர்நெடுங் கிரியாய்.''

'' வேற்கரத்தோன்...பூரணன்தனக் கேற்புறத் தானுமோர்
பொருப்பாய்
நாரணன் வரைக் கீழ்த்திசை நண்ணியவ் வரையில்
பார ணோங்தெழத் தனதிய லுருவொடும் பயின்றான்.''

'' அயன் புவியிடந்தவ னிவரும் தழையுந் தத்தம தோங்கலிற்
சகமெலா மிறைஞ்சி, விழைய வேறுமாய்த் தமதிய
லுருவின் வீற்றிருந்தார்.''

'' அந்த ரத்துளா ரனைவரும் முனிவரும் சூரன்
வெந்தி றற்குளம் வெரீஇயா னருளினை மேவித்
தந்தம் பேரினாற் றுபித்த சிவலிங்க மனேகம்
பந்த நீக்குமவ் விரசதப் பறம்பிடை யுளவால்''

(பேரூர்ப் புராணம்—காமதேனு வழிபடுபடலம்)

மேல்கண்ட பாடல்கள் சிவபெருமானது ஐம்முகங்களும் ஐந்து கிரிகளாயின வென்பதையும், திருமால், ஐங்கரன், உமையவள், பிரமன், வேலவன் முதலியோர் தம் அருகே கிரியாக வீற்றுள்ளனர் என்பதையும், முனிவர்கள் முதலாயினேர் தொழுத லிங்கங்கள் பல இக்கிரிகளில் உள்ளனவென்பதையும் நமக்கு அறிவிக்கின்றன. ஐம்பொறிகளையும் புலன்களையும் அடக்கியாளும் மனதைப்போல வெள்ளியங்கிரியில் ஆதிலிங்கம் காட்சி தருகின்றதென்பதை அறியலாம்.

## 1. பிரமகிரி

இக்கிரி தென்பாலுள்ளது. மாதம்பட்டி, குப்பனூர், கரடிமடை, தித்திபாளையம் வழியாகத் தெற்கே சென்றால் இம்மலையை அடையலாம். இதுபோழ்து ஐயாசாமிமலை என வழங்கப்படுகிறது. இங்கு வாரந்தோறும் ஒருவர் சாமியாடி அருள்வாக்குக் கூறுவர். அவ்வாக்குகள் தெய்வீக சக்தியுடையனவாம். நில மட்டத்திற்குமேல் அரை மைல் சென்றால் அங்கு ஒரு பாறை மேடையாக உள்ளது. குகையும் கோயிலும் காணலாம். இக்கிரிவாசத்தில் தேவர்கள் பூசித்த பிரமலிங்கம் சரசோதி (சரசுவதி) பீடம், மணிப்பாறை வேதப்பாறை என்பன உள்ளன. பிரமநதி, சதுர்வேத நதி, சரசுவதி நதி, அந்த நதி, கன்னி நதி என்ற புண்ணிய நதிகளும், இத்தலத்தைச் சுற்றிய மலைச் சரிவுகளில் கூத்தாடித் திடர், குழுந்தென்றல் திடர், சங்கார வேட்டைத் திடர் என்பனவும், எப்பொழுதும் மலர்களைச் சொரியும் மரங்களடர்ந்த கரைகளையுடைய செந்தாமரை நதியும், கன்னியால விருட்சம், களபவாச விருட்சம், வேட விருட்சம் என்ற அதிசய மரங்களும் உள்ளனவாம். தேவேந்திரன் முதலான தேவர்களும், முனிவர்களும் கார்த்திகை மாதம் முதல் சோமவாரத்தில் பிரமனை நோக்கி ஏழு நாள் தவம் இருந்தனர். ஏழாம் நாள் பிரமதேவன் காட்சி தந்து இங்குள்ள வட்டப்பாறையில் தேவர்களை இருத்தி விநாயகர் லிங்கம் தாபித்துப் பூசை செய்து பாறையைச் சாந்திஞல் சதுர் கோணமாக மெழுகி அதன்மேல் 108 வெண் முத்துக்களைப் பரப்பி வேதத்தை அவிழ்த்துப் பார்த்துத் தேவர்களுக்கு அருள் வாக்குத் தந்தனர் என்ப. இக்கிரி சிவபெருமானது பிரமமுகம் என்று கூறப்படுகிறது. இவ்வரலாறுகளைச் சமய முதலிகள்பால் கேட்டுணர்ந்த கரிகால் மன்னன் தாமும் தன் பரிவாரங்களோடு சென்று பிரமதேவனின் கோயில் கண்டு வணங்கித் திருப்பணிகள் புரிந்தனன் என்று பூர்வபட்டையம்

கூறும். இங்குள்ள நதிகளையும் விருட்சங்களையும் ஆராய்ந்து காணல் நேர்.

பிரமகிரிக்கு மேற்கே உள்ள கூத்தாடித் திடர் என்பதுவே கரிமலைத் தொடரிலுள்ள கூத்தாண்டிக் கருப்பராயன் மலை. வடிவேலன் பாளையம், மேள பாளையம் வழியாகச் செல்ல, மலையிடுக்கில் சுனையும் வென்னல் பெருமாள் கோயிலும் உள்ளன. மேலே ஒரு மைல் செல்ல அங்கு கூத்தாடித் திடரைக் காணலாம். அங்கு சுனையும் உண்டு. இங்கும் ஒருவர் அருள்வாக்குத் தருவர். அயன்வரையிலும் இங்கும் அருள்வாக்குத் தரும்போது தெய்வம் (சாமியாடி மூலம்) தன் வரலாற்றைத் தானே கூறுவது நன்கு அமைந்திருக்கும்.

## 2. திருமால்கிரி (பெருமாள்முடி)

கோவை நரசீபுரம் வழியில் தேவராயபுரம் பரமேசுவரன் பாளையத்தருகே $2\frac{1}{2}$ கல்லில் வடக்கே உள்ள கிரியாகும். பாதையில் வெங்கடேசுரப் பெருமாள் கோயிலும் உலகளந்த பெருமாள் கோயிலும் உள்ளன. வெங்கடேசுரர் கோயில் சிதைந்து காணப்படுகிறது. அருகே குளம் ஒன்று அழிந்த நிலையிலுள்ளது. மலையின் மேல் பாதை இயற்கைப் பாறைகள் குகைகள் கோயில் இவைகளைக் காணலாம். இங்கு தாள நதி, சங்காளி நதி, கருட நதி, விஷ்ணு நதி, சக்கர நதி, அனுமந் நதி, இலட்சுமி நதி என்ற நதிகளும், இங்குள்ள குகையில் இராமபாண முத்திரையும், வீக முத்திரையும் உள்ளனவாம். தேவர்களாலும் முனிவர்களாலும் தொழப்பட்ட விஷ்ணு லிங்கம் இங்குள்ளது. இலங்காபுரித் துங்க பத்திரை, வாசமருகு, கணுவில்லாப் பிரப்பங்கொடி, பஞ்ச வித நாமம் என்பனவும், வசந்தப் பாறையும் காத்தாடிக் குகையும், பஞ்சகூவிளமும் பாம்பணைப் பாறையும் பள்ளி கொண்ட திடரும் இங்கு உள்ளனவென்பர். தேவர் முனிவர்கள் சித்தர் சாதுக்கள் ஆகியோர் இங்கு கார்த்திகை மாதம் இரண்டாம் சோமவாரத்தில் ஏழு நாள் திருமாலைக் குறித்துத் தவம் இருந்தனர். ஏழாம் நாள் திருமால் இவர்களுக்குக் காட்சி தந்தனர் என்ப. இக்கிரி இறைவனின் திருமால் முகமாகும். விஷ்ணு முகம் என்பர். இத்தலத்திற்கும் கரிகால மன்னன் சமய முதலிகள் முதலாயினுரோடு வந்து இறைவனை வணங்கப் பேறு பெற்றனன் என்று பட்டையம் கூறுகின்றது.

## 3. உருத்திரகிரி

இக்கிரியைக் குறித்து, இப்போது இது இருக்குமிடத்தைத் திட்டமாகக் கூறுதற்கியலாது. பூர்வபட்டையம் 162ஆம் பக்கத்தில் வெள்ளியங்கிரி வரலாறு கூறுமிடத்து, "உருத்திர கிரிக்குத் தென்பால் விஷ்ணு கிரிக்குக் கீழ்ப்பால் உள்ள முக்தி கிரி, சத்திகிரி யடிவாரத்தில் தேவர் கூட்டத் திருப்பாறையின்மேல்" என்ற தொடர் காணப்படுகின்றது. உருத்திரகிரி உத்தரகிரி எனவும் வழங்கப்படும். விஷ்ணுகிரி என்பது பெருமாள்முடி. இதன் வடபாகத்தில்தான் உருத்திரகிரி இருக்கிறதென்று கருதவேண்டும். வெள்ளியங்கிரியின் வடபால் காணப்படும் உயர்ந்த கிரிகளில் ஒன்றே உருத்திர கிரியாகும். *சதாசிவகிரி, சத்தியகிரி என்பன இம்மலைத் தொடரின் பகுதிகளேயாகும். பாரதமலைத் தொடர் என்ற மலையும் இப்பகுதியினதே. இக்கிரிகளுக்கு மக்கள் செல்லுதல் அரிது என்பதை கிரிமலையில் நின்று வடக்கு நோக்கிக் காணும் அன்பர்கள் நன்கு அறிவார்கள். காஞ்சி மகாநதி, நீலியாறு என்பன இப்பகுதிகளில் உற்பத்தியாகின்றன. கிரிமலையின் கீழும், வடபாகத்திலும் காணப்படும் அடர்ந்த சோலைகளையும் குன்றுகளையும் எளிதிற் சென்று கண்டவர்கள் இலர் எனவே கூறலாம். அதனால்தான் சத்திகிரி, சதாசிவகிரி, உருத்திரகிரி என்னும் இவைகளுக்கு மக்கள் செல்லுதல் அரிதாயிற்று. இதற்கும் போதிய காலம் வரும். கரிகாலன் முதலாயினூர் சங்ககாலத்தில் இங்கெல்லாம் சென்று பலவற்றையும் கண்டுள்ளனர். காலவாக்கில் அங்குச் செல்லும் வழிகள் மறைந்துவிட்டன எனலாம்.

மற்றும் நரசீபுரத்திற்கு மேற்கே சுந்தரப் பெருமாள் கோயில், பச்சையாறு கல்லாறு என்பவைகளைக் கடந்து செல்ல கல்லாற்றுக்கருகில் மலையின்மேல் கல் தூரத்தில் ஒரு தலம் உள்ளது. அடர்ந்த சோலைகளுக்கிடையே உள்ள பெரிய பாறையின்மேல் ஒரு மாமரம் உள்ளது. அவ்வெளியில் பறந்து கிடக்கும் பாறையின்மேல் பல மூர்த்தங்கள் வைக்கப்பட்டுள்ளன. உருத்திர பகவானின் பல திருமுகங்களாக இம் மூர்த்தங்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளன எனலாம். இவ்விடத்தைத் "தொளாயிரம் மூர்த்திக் கண்டி" என்பார்கள். மக்கள் இங்குச் செல்ல வழி வசதியுண்டு. சில

---

* பேரூர்ப் புராணத்தில் சத்திகிரி வேருகக் கூறபபட்டுள்ளது. (நீலகிரி-சதாசிவகிரி) இம்மலையின் ஆறு நீலி வாய்க்கால், சோழன் பூர்வபட்டையம் நீலி கிரியையே சதாசிவகிரி எனக் கூறுகிறது.

சமயங்களில் இங்குச் சென்று மக்கள் பூசை செய்வதும் உண்டு. உருத்திரகிரிக்குச் செல்ல இயலாத மக்கள் அக் கிரியின் சாயலாக இச்சாரலில் இக்கோயிலை வெகு காலத் திற்கு முன்பே வைத்துத் தொழுது வந்தனர் எனலாம். சத்திகிரி என்னும் நீலிகிரிக்குச் செல்ல இயலாதவர்கள் காஞ்சி மகா நதிக்கரையில் நீலியாற்றுப் பிரிவில் ஆண்டு தோறும் அணையேற்றம் என்ற விழாவை நடத்தி அதன் மூலம் நீலியம்மையை அதாவது சக்தியை வழிபடுகின்றனர் எனவும் கூறலாம்.

உருத்திரகிரியில் தேவர் முனிவர்களால் தொழப்பட்ட உருத்திர லிங்கம் உள்ளது. இங்கு வீரபத்திர நதி, கன்னி நதி, தகர நதி, அக்கினி நதி, காற்று நதி எனப் பஞ்ச நதிகளும், சித்தர் நதி, அகத்தியர் நதிகளும், சித்தர் குகை, சித்தர் லிங்கம், உத்திர குகை, சித்தி விருட்சம், அகத்தியர் குகை, அகத்தியர் விருட்சம், கன்னிக் குகை, கன்னி லிங்கம், கன்னிப் பூவனச் சோலை, சிதைப் பாறை என்பனவும் உள்ளனவாம். தேவர் முனிவர்கள் இங்கு கார்த்திகை மூன்றும் சோம வாரத்தில் ஏழு நாள் உருத்திர பகவானை நோக்கித் தவமிருந்தனர். ஏழாம் நாள் உருத்திரர் இவர் களுக்குக் காட்சி தந்தனர். தேவர்கள் பிரம, விஷ்ணு, ருத்திர மூர்த்திகளை அழைத்துக்கொண்டு பின்பு மயேசுர கிரிக்குச் சென்றனரென்றும், கரிகாலன் முதலாயினுர் முறையே இறைவனை இங்கு வழிபட்டனர் எனவும் கூறப் படுகிறது. உருத்திரகிரி இறைவனது உருத்திர முகமாகும் என்க.

## 4. மயேசுரகிரி (வெள்ளியங்கிரி)

இக்கிரி இறைவனது மயேசுர முகமாகும். இறைவன் சொரூபமாகவும் சிவலிங்க வடிவமாகவும் விளங்குகிறது. முதல்மலையை ஆவுடையாராகவும் இறுதி மலையைச் சிவலிங்க வடிவமாகவும் கொள்க. தேவர், முனிவர், சித்தர், சாதுக்கள், பிரம விஷ்ணு ருத்திர மூர்த்திகள் யாவரும் கார்த்திகை நான்காம் சோம வாரம் ஏழுநாள் இங்கு சிவனை வேண்டித் தவம் இருந்தனர். தேவேந்திரன் கிரிவாசத்தில் மாணிக்கப்பச்சை மரகத வைடூரிய சிகர கோபுரக் குகையை இங்கு சோடித்து அழகுபடுத்தினுன். தேவர் முனிவர்கள் இங்குள்ள நதிகளில் மூழ்கி யெழுந்து குகையில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்ற நான்கு லிங்கங்களையும் தாபித்து இறைவனுன மயேசுரனைத் தொழுதார்கள். ஐந்து கிரிகளின்

அடிமூல வேரும் ஒன்று கூடுகின்ற குகை வாசலில் தவ மிருந்தார்கள். மகேசுவரர் தோன்றி எல்லாருக்கும் காட்சி தந்தனர். பின்பு மயேசுரரோடு சதுர்முகத் தேவர்களையும் அழைத்துக்கொண்டு குகை வழியே இறங்கி சதாசிவ மூர்த்த மாக விளங்குகின்ற சதாசிவ கிரிக்குச் சென்றனர். வெள்ளி யங்கிரியிலுள்ள நதிகள்: *இரிடப நதி, பச்சை நதி, சிவ கங்கை நதி, கன்னி நதி, விநாயகர் நதி, பிரம நதி, விஷ்ணு நதி, உருத்திர நதி, மயேசுர நதி, சதாசிவ நதி, சத்தி நதி, கணபதி நதி, குமர நதி, அன்ன நதி, கருட நதி, சிங்க நதி, ஐராவத நதி, தேவர் நதி, தேவேந்திரர் நதி, இந்திராணி நதி, கந்தர்வ நதி, வசுக்கள் நதி, அகத்தியர் நதி, பொன்னி நதி, செம்பொன் நதி, வெள்ளி நதி, கல் நதி, காஞ்சி நதி, இரச நதி, முத்தி நதி, வெண்சங்கு நதி, கூர்ம நதி, சர்ப்ப நதி, அனுமந் நதி, மயில் நதி, வசவ நதி, ஆகுவாகன நதிகள் என்பன. இவற்றுள் கிரிவாசத்திலுள்ள ரிடப நதி, பச்சை நதி, சிவகங்கை நதி, கன்னி நதி, விநாய கர் நதி என்பன பஞ்ச நதிகளாம்.

இக்கிரியின் அதிசயங்களாகச் சோழன் பூர்வபட்டையம் கூறுமாறு காண்க. வெள்ளியங்கிரிக் குகையில் சிவபெரு மான் இருந்துகொண்டு தேவர்களை முறை விசாரித்தார் என்பதால் இக்குகை ஆண்டான் குகை எனப்படும். இங்கு ஏக முகம், இரண்டு முகம், மூன்று முகம், சதுர்வேத முகம், பஞ்ச முகம், சண்முகம் (ஆறுமுகம்) சத்த முகம் (ஏழு முகம்) அஷ்ட முகம், நவமுகம் என்னும் *உருத்திராட்ச மரங்களும் சோதி மரங்களும், முண்டக (தாழை) விருட்சமும், பஞ்ச வண்ண சித்தேச (சித்தி தரும்) விருட்சமும், பஞ்சதீப விருட்சமும், தேமாமரம், சண்பக மரம், மந்தார மரம், பாரிசாத மரம், பஞ்சகூவிளமரம், அனவரத காலமும் பூச் சொரியும் செங்கழுநீர்ப்பூ, சோதிப்புல் (லெமன் கிரேஸ்) என்பனவும், சிவலிங்க நாழிவிருது, சீலாரச் சுரபி மேய்க் கின்ற இடையருக்குப் பால்கறக்கப் பாலண்டை விருது, முடிமன்னருக்குத் தண்டிகை விருது, வேடருக்குத் தனு விருது, ஆரிட டொம்பருக்குத் திருக்கழை விருது வேளா ளருக்கு உழவுக்கோல் விருது என்பனவும் உள்ளனவாம்.

---

* பஞ்ச கிரிகளிலுள்ள எல்லா நதிகளும் இங்கு தொகுத்துரைக்கப் பட்டுள்ளன எனலாம். மலைமேல் உள்ள இந்நதிகளின் சிறப்பை மழை காலத்தில் சென்று காணவேண்டும். நதிகள் இருக்குமிடத்தை அறிதல் அரிது. ஒரு சில பிற்பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன.

நாரத முனிவர் வெள்ளியங்கிரியின் சிறப்புக்களை முருகக் கடவுள் வாயிலாகக் கேட்டுணர்ந்தனர். ஏனைய கிரிகள் வெள்ளியங்கிரியின் அடியே தாழ்ந்து நிற்கவும் உயர்ந்து காணப்படும் வெள்ளியம்பலத்தைத் தாமும் காண விரும்பினர் என்பதை,

" இமய மீன்றவ ளோதியு மைங்கர னிறும்புசூழ் தடங்குன்றுஞ்
சிமய மோங்கிய நான்முகன் விலங்கலுஞ் செங்கண்மால்
வளர்வெற்பும்
அமைவி ராவிய வேலவன் பறம்புந்த னடிவரை யெனத்தாழ
உமையோ டாரண மறிகலா னிருப்பநீண் டொளிர்வரை
முடிசேர்ந்தான்"

(நாரதன் வழிபடு படலம்—21)

என்னும் திருப்பேரூர்ப் புராணப் பகுதியால் அறியலாம். இம்மலையில் தேவதுந்துபி நாதம் கேட்கும் என்பதையும், நாரதர் இத் தெய்வ ஒலியைக் கேட்டுப் பேரானந்த மடைந்தார் என்பதையும் கீழ்வரும் பாட்டு உணர்த்து கின்றது.

" கருத்த டங்கியோ கத்தினுல் சோதியைக் காண்பவர்க்
கவணைந்தை
நிருத்த வண்சிலம் பொலியெழு வித்தென நெடுகிவிண்
கிழித்தோங்கு
நிருத்தன் வைகிய சிலம்பினை யடுத்தலுந் தேவதுந்துபி
யோடும்
அருத்தி மெய்யடி யார்சிவ முழக்கமு மடர்ந்தெழு மகிழ்
கூர்ந்தான்"

(நாரதன் வழிபடு படலம்-19)

வெள்ளி மலையை அடுத்து விளங்கும் ஊர்களிலுள்ள சிவநேயச் செல்வர்கள் பலரும், மற்றவர்களும் இவ்வொலியைக் கேட்டுள்ளனராம்.‡ உண்மையான அன்புள்ளவர்

‡ ஈரோடு உயர்சைவத் திருவாளர். கா. மாரிமுத்து முதலியார் அவர்கள் பல தடவைகளில் இவ்வொலியைக் கேட்டுள்ளனராம். சௌந்தர பாண்டிய சுவாமிகளின் உடன் இருந்த தெனமநல்லூர் பெ இராமசாமிக் கவுண்டர் இந்நாதத்தைக் கேட்டனரென்பர். சோதி மரங்களையும் கண்டார்களாம்.

கட்கே இவ்வொலி கேட்குமென்பர். சிவக்கவி மணியவர்களும், கோவை கிழாரவர்களும் இதுபற்றியும் சோதி மரம் பற்றியும் பலவிடங்களில் குறித்துள்ளனர்.

சோதி மரம் என்பது இரவில் ஒளி விடும் மரமாகும். ரேடியம் என்ற ஒளியைப் போல் ஒளி விடுமாம். பகலில் இதன் ஒளி காணப்படாது. நாரத முனிவர் இம்மரத்தைக் கண்டு அதிசயித்தனர் என்பதை,

" செங்கையி னமைந் தொளி திகழ்ந்ததழ லொப்ப
துங்கவொளி கான்றுவளர் சோதிமர முங்கைத்
தங்குதுடி யின்றெலி தழங்குதல் கடுப்ப
அங்கணமர் வேடரெழூஉ மாகுளியுங் கண்டான்"

(நா. வ. படலம். 14)

இம்மலையில் சோதி மரங்கள் ஒளி விடுகின்றன என்பதைக் கீழ்வரும் பாட்டால் அறியலாம்.

" ஓதலுறும் பால்கிணற்றுக் கீழ்த்திசையில் ஓசனைமூன்
றளவிற் காணும்
சோதிமர முளதாங்குச் சருக்கரைமா நதியந்தச் சூழன்
மேற்பால்
தீதகலு மநேகநதி யுளவந்தத் தீரத்திற் செறியா நின்றோர்
கோதகலுஞ் சித்தர்சாத் தியானந்தர் போற்றுநர்க்குக்
கொடுப்பர் சித்தி"

(விம்மிதப் படலம். 8)

" செந்தழல் ஒளியிற் றேன்றும் தீபமா மரங்களாலும்
ஐந்து மாறடக்கி யுள்ளார் அரும்பெருஞ் சோதியாலும்
எந்தையார் திருக்காளத்தி மலையினை விரவொன் றில்லை"

(பெரிய புராணம்-கண்ணப்பர். 131)

எனக்காளத்தி மலை சிறப்பித்துக்கூறப்பட்டதும் காண்க. சோதி மரத்தில் கூடு கட்டி வாழ்ந்து வந்த பறவைகள் மாலை வேளையில் காலந்தாழ்ந்து தம் இருப்பிடத்திற்கு வந்தன. ஒளி விடும் மரத்தைக் கண்டு மரம் தீப்பற்றி எறிகின்றதென அறிந்து தமது இல்லங்களையும் குஞ்சுகளையும் நினைத்து அலமரும் என்ற செய்தியைச் சிவப்பிரகாச சுவாமிகள் தமது பிரபுலிங்க லீலையிற் குறிப்பிடுகின்றார்.

"செங்கதி ரவனெழுந்த திவாவிடைக் குடம்பை தெற்றிப்
பொங்கொளி மரத்திற் சீர்சால் புள்ளினம் பொறையு யிர்த்து
கங்குவி னடைகி டப்பக் கருதிவந் ததனைக் கண்டு
வெங்கனல் கொழுந்திற் றென்று மீமிசைச் சுழன்றிரங்கும்"
(பிரபுலிங்கலீலை-கோரக்கர் கதி. 19)

சோதியங்கொடி என்பது ஒளி விடும் தன்மையது. இம் மலையில் இக்கொடி மிகுதியும் உள்ளனவென்பர். இதனை,

" பொங்கு சோதியங் கொடி விரித்த சடையெனப்
பரந்து கிடங்
தொளிர் சோண சயிலனே கயிலை நாயகனே"
(சோணசலமாலை—சிவப்பிரகாசர்)

என்று சிவப்பிரகாசர் கூறியதும் காண்க. எனவே சோதி மரமும், கொடியும் சோதிப்புல் முதலானவையும் இரவில் ஒளி விடும் என்பதை அறியலாம்.

மற்றும் கிரிமலையில் இயற்கைக் கோபுர வாயிலாக இருப்பது தோரணக்கல். இரு பெரிய கற்களின்மேல் வாயில் போல மேலொரு கல் தொடுத்து நிற்பதை யாவரும் அறிவர். மேலே உள்ள கல் அந்தரத்தில் தொங்குவது போல் மற்ற கல்லோடு தொடாமல் நின்றதாம். சுமார் 50 ஆண்டுகளின் முன்பு இக்கல் இடைவெளி விட்டு நின்ற தாம். இக்கல் இன்று தாமாகச் சென்று பொருந்து இயற் கைக் கோபுர வாயில் போல் அமைந்துள்ளது வியப்பினும் வியப்பு என்று கூறினுல் மிகையாகாது. ஆண்டான் குகை யில் இயங்கிச் செல்லும் அளவு வழி இருந்ததாம். குகைக்குள் பஞ்சலிங்கங்களும் வைக்கப்பட்டுள்ளனவாம். நாரத முனிவர் கிரிமலையை வலம் வந்தாரென்று கூறப்படு கிறது. அவர் வலம் வந்த கிரிவழி (சுற்று வழி) இன்று இல்லை. கிரிமலையிலுள்ள சீதை வனத்தில் பல மூலிகை களும், அதன் வடக்குப் பாகத்தில் படிகம் போன்ற நல்ல கற்களும் இருக்கின்றனவாம். பிற பின் பகுதிகளில் காண்க.

## 5. சதாசிவகிரி

பேரூர்ப் புராணம் குறித்த சத்திகிரி என்னும் நீலிகிரி (நீலகிரி) மலையே சதாசிவ கிரியாகும். நீலிகிரி என்பதுவே சதாசிவ கிரியாகும் என்று பூர்வபட்டையம் கூறுகின்றது.

சத்தி கிரியே பஞ்ச கிரிகளுள் ஒன்ருகுமெனப் பேரூர்ப் புராணம் கூறுகின்றது. இங்குள்ள நதிகள், சுப்ரதீப நதி, பஞ்ச கல்யாண நதி, நீலமேக வண்ண நதி, பரமசோதி நதி, பரிமள கங்கா நதி என்பன. சிவபெருமானுடைய சதாசிவ முகமாக விளங்குகின்ற ஆராதார வீடு இது வாகும். பலவகையான குகைகள், பஞ்சதீப லிங்கம், ஆயிரம் முகப்பற்று, நீலசோதி விருட்சம், ஏறுசிங்கை, இறங்கு சிங்கை, நல்ல விபூதி, நீல நாமம் விளையும் திடர் என்பனவும், நீலச்சுனை, தாளச்சுனை, மகரச்சுனை, வசவச்சுனை, மாணிக்கச்சுனை இரத்தினச்சுனை, கல் சுனை, உப்புச்சுனை, பாம்புச்சுனை, குங்குமச் சுனை, வெள்ளிச் சுனை என்ற சுனைகளும், வெள்ளைச் சிங்கை, வெண்புலி விருட்சங்களும், சந்தனச் சோலை, அந்தித்தள கூவிள விருட்சம் மனமேவு சோலை வசந்தத் திடர் என்பனவும் இங்கு உள்ளனவாம். தேவர் முனிவர்கள் மேல்கண்ட ஆறு நதிகளிலும் மூழ்கியெழுந்து ஆதார லிங்கத்தைத் தாபித்து ஆகாய லிங்கமாக விளங்குகின்ற சதாசிவனைக் குறித்து ஏழு நாள் தவம் இருந்தனர். தேவர்கள் முதலாயினுர் ஐந்தாம் சோமவார இறுதியில் சதாசிவனது தரிசனத்தைப் பெற்ருர்கள். பஞ்ச தீப வீடாகிய இங்கு இறைவனிடம் தமது குறைகளைக் கூறி முறையிட்டார்கள். இறைவன் ஆணைப்படி எல்லாரும் முன்போலக் குகை வழியே புகுந்து நான்காம் பாதமாகிய வெள்ளியங்கிரியை அடைந்தார்கள். வெள்ளியங்கிரியில் தேவர்கள் முனிவர்கள் இறைவனை வணங்கினுர்கள். மாணிக்கப்பச்சை மரகதத்தால் சோடித்த குகையில் ஆறுகாற் பொற்பீடம் வைத்து அதன்மேல் வெண்புலியாசனம் விரித்து சதாசிவன் அமர்ந்து தேவர்களை முறை விசாரித்தார். தேவர்கள் அங்குள்ள வட்டப் பாறையில் அமர்ந்து இறைவனருளைப் பெற்ருர்கள் எனப் பட்டையம் கூறும். முறையே இக்கிரிகளின் வரலாறுகளைக் கேட்டுணர்ந்த கரிகாலன் முதலாயினுர் தாமும் இங்கெல்லாம் சென்று இறைவனை வணங்கினர் என்று கூறப்பட்டுள்ளது.

கரிகால மன்னன் என்பார் கொங்கு நாட்டின் பலவிடங்களிலும் திருப்பணி புரிந்துள்ளதாகச் சோழன் பூர்வ பட்டையம் கூறுகிறது. சோழ மன்னன் முட்டங்கோடி 32 அணைகளையும் 360க்கு மேற்பட்ட ஆலயங்களையும் கட்டி முடித்தனனும். முட்டம் என்னும் முட்டத்து நல்லூர் வெள்ளிமலையடிவாரம் பூண்டியருகில் இருந்தது. இங்குள்ள நாகீசர் கோயில் திருப்பணி செய்து முடித்த கரிகாலன் தன்

அருகிலிருந்த கச்சிவீர காமாட்சிராய சமய முதலிகள் என்னும் பெரியாரை நோக்கி, வெள்ளியங்கிரியின் விருத்தாந்தங்களைக் கூறுமாறு வேண்டினர். அவரும் தமது கையேட்டின் முறைப்படி எல்லா வரலாறுகளையும் விரித்துரைத்தனர். பின்பு கரிகாலனும் வெள்ளியங்கிரியிலுள்ள பஞ்சலிங்கத்தைக் கண்டு வணங்கி, பஞ்சகிரிகளுக்கும் சென்று ஆங்காங்குப் பல திருப்பணிகளைச் செய்தனன் என்பர். மீண்டும் கரிகாலன் குழுவினர் நாகபட்டணம் என்ற முட்டத்து நல்லூருக்கே வந்து சேர்ந்தனர். இங்கு இருந்து கொண்டுதான் பல திட்டங்களையும் வகுத்தனராம். முட்டத்தில் இருந்துகொண்டு கரிகால மன்னன் வெள்ளியங்கிரி வரலாறு கேட்டனன் என்பதாலும், கொங்கு நாட்டுக் கோயில் திருப்பணி புரிந்தனன் என்பதாலும் கரிகாலனது வரலாற்றையும் அவன் முன்னோர்கள் வரலாற்றையும் சிறிதே உணர்தல் நன்றாகும். உண்மையான வரலாறுக்கு இங்குக் கூறும் வரலாறு முரண்பாடுடையது என்றாலும் அவ்வரலாறு சமய வளர்ச்சிக்குப் பெரும்பாலும் துணை செய்வதாக உள்ளதென்ற காரணத்தால் சுருக்கமாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது. சோழன் பூர்வபட்டையத்தில் இவ்வரலாற்றை நன்குக் கற்றுணர்க. பூர்வபட்டையத்தை வீரபாகு மரபு நந்திகோத்திரத்தினர் எனும் செங்குந்தர் முதலியார் மரபினர் சாசனம் எனக் கூறலாம். இம் மரபினர் சைவ முறைமை தவறாத பெருங்குடி மக்களாவர். இவர்கள் குலத்து முதல்வர்கள் இவ்வரலாற்றில் மிகுதியும் இடம் பெறுகின்றனர். அக்கால மன்னர்களுக்கு உறுதுணையாயிருந்து நாட்டில் நீதிமுறைகளை நிலைநாட்டினார்கள் என்ற வரலாறு கூறப்படுகின்றது. சரிதத்தோடு பொருந்துவதோ இல்லையோ, இங்குக் குறிப்பிடும் சோழர் வரலாற்றுப் பகுதி படிப்பார்க்குச் சுவையாக இருப்பதோடு கடவுள் பற்றையும் சமயப் பற்றையும் உண்டாக்கும் என்பது தெளிவு.

# ஆ. சோழர் வரலாற்றுப் பகுதி

## 1. சாலிவகானன் ஆண்டது

(சுருக்கம்)

ஆதிகாலத்தில் ஆதிசேடனால் தாங்கப்பட்ட இப்பூவுலகத்தைச் சாலிவாகனன் ஆண்டுவந்தான். அயோத்திவள நாட்டில் தோன்றி வளர்ந்து பல வித்தைகளிலும் கைதேர்ந்த இம்மன்னன் பிரமன் இட்ட விதிப்படி விக்கிரமாதித்த மன்னனை வென்று 426 ஆண்டுகள் முறையே ஆண்டு வந்தான். அதுமுதல் சாலிவாகன சகம் தொடங்கியது. இம்மன்னன் சமண சமயத்தை ஆதரித்து வந்ததால் விக்கிரமாதித்த மன்னன் காலத்தில் சிறந்துவிளங்கிய சைவ, வைணவ, சுப்பிரமணிய ஆலயங்களும், குருவாலயம், மடாலயம், அன்ன சத்திரம், சாலை மரங்கள், திருவீதிகள் என்பனவெல்லாம் முறை கெட்டு அழிவு பெறும் நிலையை எய்தின. நாடெங்கும் இருள் சூழ, மதாசிரியர்களும், சைவ வைணவ அன்பர்களும் துன்புறுத்தப்பட்டனர். தவயோகிகளும் சிவயோகிகளும் சாலிவாகனனறியாதவாறு மலைச்சாரில் குகைகளில் தங்கி அங்கேயே பலநாள் தவமியற்றி வந்தனர். இக்கொடுமைக்கு அஞ்சிய திருமாலும் முனிவர்களும் சிவபெருமானிடம் தம் குறைகளைக் கூறி முறையிட்டனர். சிவபெருமான் அக்கினி மழையைப் பொழியச் செய்வதாகக் கூறவும், இச்செய்தியை ஆதிசேடன் வாயிலாகக் கேட்டுணர்ந்த சாலிவாகனன், "சமண மதத்தைச் சார்ந்தவர்களெல்லாம், கல் வீடுகள் கட்டி அதில் வாழ்ந்து வாருங்கள்" என ஆணையிட்டனன். எல்லாரும் அக்கினி மழைக்கு அஞ்சிக் கல்வீடுகளிற் புகுந்துகொண்டனர். ஒருசிலர் காவிரி போன்ற நதிகளில் மூழ்கினார்கள். எனவே அக்கினி மழையும் பெய்தது. எல்லாரும் தப்பித்து உயிர் வாழ்ந்தனர். மீண்டும் சினங்கொண்ட சிவபெருமான் தனது மகேசுவர முகத்திலே பராபரத்தை நோக்கி அஞ்சுகரமாகிய பஞ்சாட்சர முகாந்தரத்திலே தியானித்து மண்மழை பொழியச் செய்தார். கல் வீடுகளில் இருந்தோர் மாண்டனர். ஆற்றின் கரையில்

---

* இவ்வரலாறு "சோழன் பூர்வ பட்டையத்"திலிருந்து ஈண்டுச் சுருக்கமாக உரைக்கப்பட்டுள்ளது.

ஒதுங்கியவர்கள் மட்டும் நதியால் மண் கரைக்கப்பட்டு உயிர் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு அக்கினி மண் மழைகளுக்குத் தப்பிய சான்றோர்கள் பலர் மேடேறி வந்தனர். ஆதிசிவன் இப் புவனத்தைப் பார்த்து மூன்று முறை தியானம் செய்ய சோழ நாட்டு வேளாளர்பாடியில் வீரசோழனும், இடையர்பாடியில் உலாச்சேரனும், வலையர்பாடியில் வச்சி ராங்கத பாண்டியனும் தோன்றினார்கள். இவர்களில் வீர சோழன் கையால் சாலிவாகனன் இறப்பான் என்றும் மூவரும் இனிமேற்கொண்டு எல்லா ஆலயங்களையும் சிறப் பித்து வரவேண்டுமெனவும் திருவாய் மலர்ந்தருளினர்.

## 2. மூவேந்தர் தோற்றம்

மூவர் மன்னர்களும் இறைவனருளால் சகல வித்தை களையும் கற்று வல்லவர்களாகி மூவரும் திருமுக்கூடல் நகரில் சந்தித்து சிவனது அருளையும் பெற்றுக்கொண்டு, சாலிவாகனனை அழித்தற்கேற்ற தனமும் பலமும் தேடி யலைந்தனர். இறுதியில் காசி நகரத்தை யடைந்து அங் குள்ள விசுவலிங்கமும், கங்கை நதியும், வட ஆல விருட்ச மும் அழிந்து கிடக்கும் பகுதிகளில் இருக்குமிடம் தெரி யாமல் மறைந்து கிடக்கக் கண்டு விசுவலிங்கரையும், விசாலாட்சியாரையும் வழிபட்டுப் பின் துவாரகாபுரிக்குச் சென்று இறுதியில் தெற்கேயுள்ள காஞ்சீபுரத்தை யடைந் தனர். காஞ்சியில் நதிகள் லிங்கங்கள் முதலாயின வெல் லாம் எட்டிமரக் காட்டிடையே மறைந்து கிடந்தன. காஞ்சி ஏகாம்பரரையும், காமாட்சியம்மையாரையும் வணங்கிப் பின் அங்குள்ள காடுகளை வெட்டி வெளிபண்ணி வீடு கட்டி வாழ்ந்திருக்கும்போது, அவ்வனத்தைக் காத் திருந்த **கருமாரி** என்னும் தெய்வம் (உருமாரி, உதிரமாரி என்றும் பெயர் பெறுவர்) மிகவும் கோபங்கொண்டு, ''என் காணியாட்சியாக உள்ள இவ்விடத்தை ஏன் வெட்டி வெளி செய்தீர்கள்? உங்கள் மூவரையும் நான் பலியாகக் கொள்வேன்'' என்றது. இதைக் கேட்ட மன்னர்கள் அச்ச மும் வியப்பும் கொண்டு நிற்கும்போது, அவ்வனத்தின் ஒரு மூலையில் வீடுகட்டி வாழ்ந்துவரும் உத்தமனாகிய 'கச்சி வீரன்' என்பான் அவ்விடம் வந்து சேர்ந்தனன். இவ்வீரன், ''இவ்வுலகத்திற்கு என்று நல்ல காலம் வருமோ, தான

தருமங்களும் தவமும் என்று வளருமோ, தீயவர்கள் என்று அழிவார்களோ'' என்றெல்லாம் எண்ணி வாழ்ந்து வந்தவனுவான்.

## 3. கச்சிவீரனைக் கண்டது

நாள்தோறும் ஏகாம்பர லிங்கத்திற்கு ஆராதனைகள் புரிந்து வரும் சிவ பக்தனுன கச்சிவீரன், இவர்கள் மூவரும் தருக்கம் செய்து நிற்பதைப் பார்த்து, "வேட்டைக்கு வந்தவர்கள் இலிங்கங்களைக் கண்டும் காடு வெட்டியும் இவ்வாறு இச்செயல்கள் புரியக் காரணமென்ன? இவர்கள் சாலிவாகன சங்காரம் செய்யப் பிறந்தவர்களே யாவர்'' என்று உள்ளுணர்ந்து அவர்கள் மூவரது வரலாறுகளையும் கேட்டறிந்து கருமாரியை நோக்கி, "தாயே! உதிரமாரியே! சாலிவாகன சங்காரத்தின் பின்பு நாமே உமக்குப் பலிகள் தருகின்றோம். இவர்கள் மூவரும் உலகம் காக்க வந்த உத்தமர்களாவார்கள். அம்மையே! காஞ்சியைக் காத்து நிற்கும் உருமாரியே! இக்காஞ்சிமா நகரத்தின் வரலாறு யாது? எமக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டும்'' என்றனன்.

சான்றோனுகிய கச்சிவீரனைக் கண்ட கருமாரி மிகவும் மனமகிழ்ந்து, "அன்பனே! முன்னொரு சமயம் விக்கிரமாதித்தன் காலத்தில் சிறப்புற்று விளங்கிப் பின் சாலிவாகனன் காலத்தில் துன்பத்திற்கு ஆளான மக்கள் எட்டுத் திசைகளிலும் ஓடிப் போனுர்கள். இக்காஞ்சி இந்நிலையில் அழிவுற்றது. உன் முன்னோர்கள் தமது கத்தி, வேல் முதலிய உயர்ந்த பொருள்களை யெல்லாம் பெட்டியில் அடைத்து அப்பெட்டியைக் கருமாரியாம் எனது குளத்தருகே மறைத்துச் சென்றனர். என்னுடன் வருவாயாக! அவைகளை எடுத்துத் தருகின்றேன்'' எனக் கூறி அக்கச்சிவீரனை அழைத்துச் சென்று அக்குளத்திலுள்ள குகையைத் திறந்து பெட்டியை எடுத்து வீரன் கையில் கொடுத்துவிட்டுத் தான் வீரனுக்கு ஆசி கூறி மறைந்தனள். மிகவும் மனம் மகிழ்ந்த கச்சிவீரன் அப்பெட்டகத்தை அணைத்து வந்து அதை மூவர் இராசாக்களுக்கும் காட்டினன்.

இவர்கள் நால்வரும் இவ்வாறு இருக்கும்போது அவ்விடத்திற்கு மல்லிகார்ச்சுனம் என்னும் தலத்தவரும் தவயோகியுமான "**அல்லமாப் பிரபு**" என்பவர் வந்தனர்.

வீரசைவ சிவாசாரியராகிய இவரை நால்வரும் தொழுது உபசரித்துத் தம் வரலாறுகளைக் கூறி நின்றனர். சிவாச்சாரியார் கச்சிவீரனையும் அவன் குடும்பத்தவரையும் கம்பை நதியில் மூழ்கி வரச் செய்து எல்லாருக்கும் குருபதேசம் செய்தனர். தன் மனைவி பழமுதிர் சோலையங்கிரியம்மாள், மூத்த மகன் கச்சி முத்துவீரப்பன், அவன் மனைவி வையாபுரியம்மாள், இளைய மகன் கச்சிக் கச்சாலியப்பன், அவன் மனைவி பழநிபுரியம்மாள் ஆகியோர் அல்லமாப் பிரபுவிடம் உபதேசம் பெற்றனர். பின் இவர்கள் பெட்டகத்திற்குப் பூசைகள் புரிந்து அதைத் திறந்து பார்க்கவும் உள்ளே, பூசைப் பெட்டி, வீரகட்டாரி, முனைப் பூசை அலகு, வீக முத்திரைக் கோல், பாதாளம் சோதிக்கும் பஞ்ச முத்திரைக் கோல், கைக் கடப்பாரைக் கூடம், பதினாயிரம் பொன், சந்தன மகாராயன் கம்பட்டம் என்பனவும், கணபதி, முருகன், வள்ளி, தெய்வானை, சிதம்பரநாதர், சிவகாமியம்மையார் விக்கிரகங்களும், ஆலவாய்த் திருவெண்ணீற்றுப் பழம், ஏகமுக ருத்திராட்சம், வலம்புரிச்சங்கு, கணுவில்லாப் பிரப்பங்கொடி, சிவமாலை, சமயமுத்திரை மோதிரம் என்பனவும் இருக்கக் கண்டு அவைகளுக்குப் பூசையும் செய்து முடித்து அவைகளைத் தமது குருவின் ஆணைப்படிக் குடும்பத்தாரிடம் ஒப்படைத்தான் கச்சி வீரன். கச்சிவீரன் தன் மகன் முத்துவீரப்பனை அழைத்து அவனிடம் பாதாளவிசு கடற்பாறை இவைகளைக் கொடுத்து, "காஞ்சி காமாட்சி ஏகாம்பரர் சந்நிதிக்குச் சென்று அங்குள்ள குகையில் வைக்கப்பட்டிருக்கும் ஆதிபூர்வ செப்பேட்டுப் பட்டயத்தை எடுத்து வா" என்றனன். முத்து வீரப்பனும் அவ்வாறே சென்று பட்டயத்தை எடுத்து வந்து சிவாச்சாரியார் கையில் தரவும் அதை அவர் மூவேந்தர்களிடம் கொடுத்துவிட்டு எல்லாருக்கும் ஆசி கூறித் தம் இருப்பிடம் சென்றனர்.

## 4. பட்டையம் வாசித்தல்

மூவர் மன்னர்களும், கச்சிவீரன் குடும்பத்தவரும் காஞ்சி ஏகாம்பரர் காமாட்சித் தாயார் என்னும் தெய்வங்களை வணங்கி, அங்கு மண்தூர்ந்து போன இடங்களைத் தூய்மைப் படுத்தித் தெய்வங்களுக்குப் பச்சைக் குடிசை கட்டித் தோரணங்கள் கட்டி அலங்கரித்தனர். பின்னே தாளங்கள் முழங்கவும் இறைவர்க்கு நைவேத்தியம் கனகாபிசேகம்

முதலாகப் பூசைகள் முடித்து அக்கினிக் குண்டம் இறங்கினர். பெட்டகத்தைக் காமாட்சித் தாயாரின் பாதங்களில் வைத்துப் பூசை செய்து பின் அதைத் திறந்து அதிலுள்ள செப்பேட்டை எடுத்து மூவர் மன்னர்கள் முன்னிலையிலும் கச்சி முத்துவீரப்பன் படித்துக் காட்டினன்.

அதாவது கிரேதா யுகத்தில் சிவபெருமான் தக்க முனி இவர்கள் வாழ்ந்து, பூலோகம் இந்திரன் வசமானது, தேவர் இந்திரர்கள் தவம் செய்து விண்ணுலகடைந்தது, திரேதாயுகத்தில் இரணியன், பிரகலாதன், பரசுராமன், முசுகுந்தன், அரிச்சந்திரன், லோகிதாசன் இவர்கள் வம்சத்தில் தசரதர் முதலியோர் ஆண்டது, இராவணன் ஆண்டதும் இராமன் பட்டமடைந்ததும் அமரரானதும், துவாபரயுகத்தில் மகாபலி இராவணாசுரர், சத்திரிய வம்சத்தில் சந்தன மகாராசன், சித்தன் திருதராட்டிரன், பாண்டவர்கள் துரியோதனாதிரியர்கள், பரீட்சித்து மகாராசா ஜெனமே ஜெயராசா போன்றவர்கள் ஆண்டதும், கலி யுகத்தில் விக்கிரமாதித்தன், சாலிவாகனன் போன்றவர்கள் ஆண்டதும், சாலிவாகனன் காலத்தில் ஆலயங்களெல்லாம் பூசையின்றிக் கிடந்ததும் ஆகிய வரலாறுகளெல்லாம் பட்டையத்தில் குறிக்கப்பட்டிருந்ததை யாவரும் கேட்டு இன்பமடைந்தனர்.

மூவர் மன்னர்கள் கச்சிவீரன் மரபினரை நோக்கி, "நீங்கள் சுப்பிரமணிய தேவன் அருளால் நந்திதேவன் கோத்திரத்து வீரபாகு தேவர் மரபினரான கைக்கோள்வர் மரபினராவீர்கள். சாலிவாகனனை வெல்ல எங்களுக்கு ஒரு உபாயம் கூறவேண்டும்" என்றனர். முத்துவீரப்பன் முதலியோர், "கிரேதாயுகத்தில் சுப்பிரமணிய தேவர் திருச்செந்தூரில் நின்று மகேந்திர புரத்துச் சூரபதுமனை வென்றனர். திரேதாயுகத்தில் இராமர் இராவண சங்காரம் செய்தார். துவாபர யுகத்தில் பாண்டவர்கள் குருச்சேத்திரத்தில் துரியோதனாதியரை வென்றனர். நீவிர் இக்கலி யுகத்தில் சாலிவாகனனை வெல்லுவீர்கள். அதன் நிமித்தம் காசிமாநகரத்திற்குச் செல்ல வேண்டும்" என்று பட்டையத்தின் வாசகமாக எடுத்துக் கூறினார்கள். பின்பு யாவரும் பட்டையத்தை முன்போலவே காமாட்சியம்மை பாதங்களில் வைத்துவிட்டு எல்லாரும் ஏகாம்பர லிங்கத்தைத் தொழுது காசிக்குச் சென்றனர்.

# 5. மூவேந்தர்கள் காசிக்குச் சென்றது

காசிக்குச் சென்ற வேந்தர் முதலாயினோர் பூசையற்று அழிந்து கிடக்கும் கோவில் குளங்களைப் பார்த்து மனம் வருந்தினர். அங்குள்ள காசிவிசுவநாத லிங்கருக்கும், அம்மை விசாலாட்சியாருக்கும் முறைப்படிச் செய்ய வேண்டிய பூசைகள் நடத்தி விழாக் கொண்டாடினர். கச்சிமுத்து வீரப்பனைக் கொண்டு பாதாளவிசு, முத்திரைக்கோல், கடப்பாறை இவைகளின் துணையால் அங்குள்ள பாதாள குகையைத் திறந்தனர். அங்கிருந்த அஷ்டநாகங்கள், திக்குப்பாலகர், பூதங்கணங்கள் என்பன இவர்களை எதிர்த்தன. அவைகளைத் தம் பராக்கிரமத்தால் விலக்கி சேகண்டி முதலிய வாத்தியங்கள் முழங்கவும் இரணவீர பராக்கிரமத்தோடு விசுவநாதர் விசாலாட்சியைத் தியானித்துக் கொண்டு குகை வழியே சென்றனர். அங்கு முன்னோர்கள் வைத்திருந்த மூன்றுகோடி திரவியங்களும் பஞ்சகல்யாணிக் குதிரை, வெள்ளையானை முதலியனவும் காணப்பட்டன. திரவியங்களை யானை குதிரைகளின்மேல் வைத்துக்கொண்டு வெளியே வந்து குகையை முன்போலவே சாத்தி முத்திரையிட்டுத் தாம் கொண்டு வந்த பொருள்களை மூவேந்தர்களிடம் தந்து, ''இனி இவைகளைக் கொண்டு நீவிர் சாலிவாகனனோடு போர் செய்து வெல்லலாம்'' என்று சொன்னார்கள். பின்பு எல்லாரும் கங்கையில் மூழ்கி வந்து விசுவநாதர் விசாலாட்சியை வணங்கி ஆராதாரப் பூசைப்பெட்டி, பிடிசெம்பு, வீரக்கட்டாரி முனை, பூசை அலகு, வீரவாள், தள்விசுசோதி, கடப்பாரைக் கூடம், வீகமுத்திரைக்கோல், வீரசேகண்டி, வலம்புரிச் சங்கு, பஞ்சமுக தீவட்டி என்பவைகளைத் தம் பெட்டியில் வைத்து அவைகளையும் எடுத்துக் கொண்டு மீண்டும் காஞ்சீபுரத்தையடைந்தனர். காஞ்சியில் இறைவழிபாடுகள் நிகழ்த்தியபின் கூடுதுறையூர் வந்து சேர்ந்தனர். மூவர் மன்னரும் கச்சிவீரனும் முத்துவீரப்பனும் என்ற ஐவரும் சாலிவாகனனோடு போர் செய்து வெல்லும் எண்ணத்தால், சமண மதத்தைச் சாராதவர்களும் 56 தேசங்களில் பலவிடங்களிலும் வாழும் மக்களுக்கு, ''எப்படிப்பட்டவராயினும் சாலிவாகனனோடு போர் செய்ய ஆள்படையாக இந்தக் கூடுதுறையூர் வந்து சேருங்கள்'' என இருளர், முடுகர்வசம் ஓலை அனுப்பினார்கள். எல்லாக் குலத்தவரும் போர் செய்யும் எண்ணத்தால் கூடுதுறையூர் வந்து சேர்ந்தார்கள்.

இது இவ்வாறாகவும் அயோத்தி விக்கிரமசேகரிபுரத் தைத் தலைநகராகக் கொண்ட விக்கிரமாதித்த மன்னனை வென்று அவன் நாடு நகரங்களைக் கைப்பற்றிக்கொண்டு போசராசபுரம் என்னும் பட்டணத்தில் முறைதவறி ஆண்டு வந்த சாலிவாகனன் மூவேந்தர்களும் குடிமக்களும் தன்னோடு போர் செய்ய வருவதையறிந்து மிகவும் அச்சங் கொண்டு தெற்கேயுள்ள சோழ தேசத்திற்கு வந்து அங் குள்ள திருச்சிராப்பள்ளியை அடைந்து அதைத் தன் இருப் பிடமாகக் கொண்டான். முன்னொரு சமயம் இராவணாசுரன் இராமலக்குமணருக்கு அச்சங்கொண்டு பாதாளத்தில் ஒரு பட்டணம் கட்டி அங்கு மயில்ராவணனையும், ஆகாயத்தி லுள்ள பட்டணத்திற்குத் தன் மகன் இந்திரசித்தையும், பூலோகத்தில் திருச்சிராப்பள்ளியில் கோட்டையும் பட்டண மும் கட்டி அதற்குத் திருசிரன் என்ற அசுரனையும் காவலர் களா வைத்தனன். ஆனாலும் இவர்களையெல்லாம் இராம லக்குமணர்கள் வென்றொழித்து சிராமலை உச்சியில் உச்சிக் கணபதியை நிலைநாட்டி, காவிரிதீரத்தில் சீரங்கத்தையும் தோற்றுவித்தார்களல்லவா? இவைகளையெல்லாம் கேட் டுணர்ந்த சாலிவாகனன் திருச்சியையே இருப்பிடமாகக் கொண்டு அங்கு கோட்டை கொத்தளங்களை ஏற்படுத்தி 'இனி நமக்கு எவரும் நிகரில்லை' என்று எண்ணித் தானும் தன் மதத்தைச் சார்ந்தவர்களுக்கு, "மூவேந்தர்களோடு போரிட வாருங்கள்" என ஓலை போக்கினார். இவனைச் சார்ந்தவர்கள் யாவரும் இவனோடு சேர்ந்தார்கள். அதோடு தன் சேனைகளையும் சேர்த்துக்கொண்டு சதுரங்க சேனை பலம் உடையவனாய் இருந்தான்.

## 6. கச்சிவீரன் தூது சென்றது

இது இவ்வாறாக வேந்தர்கள் மூவரும் 12 வகை சாதி கம்பளத்தவரையும் பதினெண்வகைக் குடிமக்களையும் ஒன்று சேர்த்துக்கொண்டு சதுரங்க சேனை பலத்தோடு இருந்து வரும் நாளில் வீரசோழன் கச்சிவீரனைச் சாலிவாகனன்பால் தூது செல்லுமாறு பணித்தனன். குறித்த நாளில் கச்சி வீரன் சாலிவாகன்பால் தூது சென்று, "சாலிவாகன மன்னனே! நீ இன்று முதல் சமண மதத்தைக் கைவிடல் வேண்டும்; திருச்சியை விட்டு நீங்கவேண்டும்; வேண்டு மானால் அயோத்தி நாட்டை ஆண்டுகொண்டு எமக்குக் கப்பம் செலுத்தி வருவாயாக! இல்லையேல் நாம் உம்மோடு

போர் தொடுப்போம். அதற்கு நீ ஆயத்தமாயிருப்பாயாக'' என்றனன். அதற்கு மிகவும் கோபங்கொண்ட சாலிவாகனன், ''காளை கட்டி உழுதுண்ணும் வேளாளச் சோழ மன்னனுக்கும், ஆடுமாடு மேய்த்து உண்ணும் இடையனும் சேரமன்னனுக்கும், வலைவீசி மீன் பிடித்துண்ணும் வலையனும் பாண்டிய மன்னனுக்கும் நாம் அஞ்சமாட்டோம். மூவேந்தர் படைகள் இன்றே கலைந்து செல்ல வேண்டும். எங்கள் சமண மதத்தில் சேர்ந்து சமணர்களாக வேண்டும். இல்லையேல் அவர்களை அழித்து விடுவேன்'' என்று கூறினான். கச்சிவீரன் அவ்விடத்தை விட்டு நீங்கி நடந்தவைகளை மூவேந்தர்க்கு எடுத்துரைக்க, அவர்கள், ''மீண்டும் சென்று உரித்த நாளை நிச்சயித்து வாருங்கள்'' என்றனர். கச்சிவீரன் மீண்டும் திரிசிரபுரம் அடைந்து சாலிவாகன போசனைக் கண்டு, ''மூவேந்தர்கள் போருக்கு வருகின்றனர். அதற்கு ஒரு நாளை நிச்சயித்து வரும்படி என்னை அனுப்பினர்'' என்று கூறவும் சாலிவாகனன், ''அப்படியானால் மிகவும் நன்று. அடுத்து வரும் பங்குனி மாதம் 7-ஆம் நாள் குருவாரம் அமர பட்சத் திரயோதசியன்று நீங்கள் கூடுதுறையூர் விட்டுத் '**திருவானைக்காவல்**' வந்து சேருங்கள். நாங்களும் திருச்சி சிந்தாமணிப் பகுதியை விட்டு அங்கு வந்து சேருகின்றோம்; போர் புரியலாம்'' என்று கூறிக் கச்சிவீரனை அனுப்பினான். இதன் பின்பு இருதிறத்து மன்னர்களும் தமது சேனைகளை மேலும் பலப்படுத்திக்கொண்டு குறித்த நாளில் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து தங்கினார்கள்.

## 7. சாலிவாகனனோடு போர் புரிந்தது

மறுநாள் காலையில் வீரசோழனுக்கு வீரப்பட்டம் கட்டுவித்துக் கையில் வச்சிராயுதம் கொடுத்து படைவீரர்களோடு ஒன்று சேர்த்துப் போருக்கு அனுப்பினர் கச்சிவீரன் முதலியோர். கொம்பு, வீரகாளம், வீரசங்கு, வீரபேரிகை, வீரபல்லாரி, வீரமுரசு என்னும் வாத்தியங்கள் முழங்கின. இரு படைகளும் மும்முரமாகப் போர் செய்தன. சூரிய உதயத்தில் வீரசோழன் படை திருச்சியை முற்றுகையிட்டது. வீரசேகண்டி முழங்க இரணகளத்தில் பூதபிசாசுகள் உதிரம் குடித்து நிணம் தின்ன, நாய் நரிகள் எட்டுத் திக்கிலும் பிணங்களை இழுத்துத் திரிய, கழுகினங்கள் பந்தலிட்டுப் பறந்து நிணம் தின்ன மூவேந்தர்களும் சாலிவாகனன் மரபினரும் சாலிவாகனன் படைகளைச் சின்னபின்னமாக்

கினர். சாலிவாகனன் குதிரையை வளர்த்துவந்த 'வல்லான்' என்பவன் அக்குதிரையின்மேல் ஏறிக்கொண்டு தன் குடும்பத்தவர்களையும் அழைத்துக்கொண்டு தப்பி ஓடினான். பின் சாலிவாகனனோடு வீரசோழன் உக்கிரமாகப் போர் செய்து சாலிவாகனனை வீரசுவர்க்கம் அனுப்பினான். சோழ மன்னன் திருச்சிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண் டான். வெற்றி விழாவும் கொண்டாடினான். எல்லாரும் மகிழ்ச்சியடைந்தார்கள். வெள்ளையானையும் பஞ்சகல்யாணி யும் காசிக்குச் சென்றன.

## 8. சோழனுக்குச் சட்டைநோய் கண்டது

சாலிவாகனனைக் கொன்றதால் சோழனுக்கு சர்வ தோச விருமத்தி மூடிக்கொண்டது. அதனால் நாக சர்ப்பம்போல் சீறி எழுந்து ஆவேசங் கொண்டு கத்தியை எடுத்துத் தன் வீரர்களைத் தானே வெட்டிக் கொல்ல முயன்றான். இது மாயமாக இருக்கின்றதேயென எல்லாரும் எண்ணும்போது சோழமன்னன் சரீரம் முழுதும் சட்டை விடுவதைக் கண்டார்கள். இக் கொடுமையைக் கண்ட சிவபெருமான் மனம் கனிந்து காமாட்சியம்மையாரைக் குறித்தியாக அனுப்பி சோழனுக்குக் குறி சொல்லி அவன் நோயைத் தீர்க்குமாறு கூறினார். காமாட்சித்தாயும் கோலக் கலையுடுத்து பொற்பிரம்பும் கையுமாய்க் கண்களில் மைதீட்டி பிறை நெற்றியில் திருநீறு அணிந்து திருச்சிக் கோட்டைப் புறம் வந்தனள். சேரபாண்டிய மன்னர்கள் சோழன் கையைப் பார்த்துக் குறி சொல்லுமாறு வேண்டினார்கள்.

முப்பத்திரண்டறங்களை வளர்த்த அத்தாயார் சோழன் கையைப் பார்த்து, "ஆதிசேடன் ஏவலால் பிறந்தவனாகிய சாலிவாகனனைக் கொன்றதனால் இவ்வாறு விருமத்தி யுண்டாயிற்று. முன்னொரு சமயம் சூரபதுமனைக் கொன்ற சுப்பிரமணியக் கடவுளுக்கும், இராவணனைக் கொன்ற இராமனுக்கும், துரியோதனாதியரை அழித்த தருமராசனுக் கும் இதுபோலவே விருமத்தி யுண்டானது. பதினாயிரங் கோடி சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும், நூறாயிரங் கோடி சுப்பிரமணிய ஆலயங்களும், பத்து நூறாயிரங் கோடி மடாலயங்களும், நூறு நூறாயிரங் கோடி குருவாலயங்களும், என இவைகளையெல்லாம் வழுவாது நடப்பித்து வருகின்றோ மென வீர சோழன் வாக்குக் கொடுக்கவேண்டும். இக் கோயில்களையெல்லாம் வீரபாகு வம்சம் நந்திகோத்திரத்துக்

கைக்கோள்வர் தளவீரர்களான கச்சி வீரன் வம்சத்தவர் களைக் கொண்டு நன்கு நடத்தி வருவதாக கச்சிவீரன் மரபி னருக்கு அபய ஹஸ்தம் கொடுத்தால் சோழன் விருமத்தி தீரும்; சிவசுப்ரமணியனும் அக்காலத்தில் ஆலயங்களை நன்கு நடத்தி வரும்படியாகத் தேவேந்திரனுக்கு அருளவும் தேவேந்திரன் ஏகாம்பரரையும் காமாட்சியாரையும் கூறி வீரபாகு தேவர்க்கு அபயம் தந்தனர். வீரபாகு மரபினரான கைக் கோள்வர் முதல்வனை கச்சிவீரன் மரபினர், ''தன் வம்சத்தவர்கள் எரிக்கின்ற விளக்கும் இடுகின்ற பிச்சையும் சுப்பிரமணியருக்கு ஆகும்'' என்று காமாட்சி ஏகாம்பரரை நினைத்து சுப்பிரமணியருக்குத் தாரை வார்த்தனர். சுப்பிர மணியரின் விருமத்தி நீங்கியது. இராமனுக்கும், தருமனுக் கும் உண்டான விருமத்தியும் இவ்வாறுதான் தொலைந்தது'' என்று காமாட்சியம்மையார் கூறக் கேட்ட சேர பாண்டி யர்கள் குறத்தி சொன்னவாறு ஆலயங்களை நன்கு பரிபா லித்து வருகிறோம் என்று கூறி கச்சிவீரன் முன்னவரான கச்சிவீர காமாட்சிராயன் கையில் தெய்வத்தை நினைத்து அபய ஹஸ்தம் கொடுத்து பூமியைத் தொட்டுறைத்து நெற்றியில் இடவும் சோழனைப் பிடித்த விருமத்தியும் சட்டை நோயும் தீர்ந்தது.

கலியுகாதி சகம் 1443ல் சாலிவாகனனோடு போர் தொடுத்தனர். வேந்தர்கள் கச்சிவீரன் மரபினருக்குப் பல வகை விருதுகளையும் பரிசுகளையும் தந்தனர். சிராமலை உச்சிக் கணபதிக்கு ஆராதனைகள் செய்து முடித்து அங்குள்ள சிந்தாமணி வாசலில் கல்வெட்டுப் பொறித்தனர். சீரங்க நாதரை வணங்கினார்கள். காவிரி நீரால் அபிசேகம் செய் தனர். எல்லாரும் காஞ்சீபுரம் சென்று காமாட்சி சமேத ரான ஏகாம்பரரை வணங்கினார்கள். அதாவது கலியுகாதி சகம் 1444 சுக்கில வைகாசி 10-ஆம் நாள் சோமவாரம் பூர்வ பட்சத் தசமியன்று தொடங்கிப் பல தான தருமங் களையும் கோயில் கைங்கரியங்களையும் முன் கூறியவாறு நடத்தி வந்தனர். பல வகையான மக்களுக்கும் அவரவர்கள் செய்யும் தொழில் முறைமைக் கேற்றவாறு விருதுகளும் பட்டங்களும் வழங்கினார்கள். சைவவைணவ் ஆலயங்கள், குரு மடாலயங்கள், சுப்பிரமணிய ஆலயங்கள் இவைகளை யெல்லாம் கட்டித் திருப்பணி செய்து மான்ய நிலங்களை விட்டார்கள். பிராமணர் அக்கிரகாரங்கள், மாவடி, பூங்கா வனம், தண்ணீர்ப் பந்தல் சாலை, தோப்பு, அன்ன சத்திரம் இவைகளை உண்டாக்கினர். பண்டித சிகாமணிகள், மருத்

துவர், வைத்தியர், சாத்ரீகள், புரோகிதர், கவிவாணர்கள், பட்டர்கள், பரதேசிகள், ஆருமற்றவர் என்னும் இவைகளை யெல்லாம் ஆதரித்து இராச நீதி வழுவாமல் மனு நீதி முறைப்படி 25 தலைமுறைகள் நாட்டை நன்கு ஆட்சி புரிந்து வந்தனர். சேர பாண்டியர்களும் தம் நாடு சென்று நன்கு ஆட்சி புரிந்தனர். வெகு காலத்திற்குப் பின்னர் உத்தம சோழன் மகன் உறையூர்ச் சோழன் என்பவன் நீதி தவறி ஆண்டதனால் அதன் காரணமாக ஏற்பட்ட விளைவுகளை முறையே காண்போம்.

## 9. உறையூர்ச் சோழன் ஆண்டது

கலியுகாதி 3535-ல் சித்தார்த்தி வருஷம் ஐப்பசி 27 பஞ்சமி திதி கூடிய சுக்கிர வாரத்தில் உத்தம சோழன் மகன் உறையூர்ச் சோழன் பட்டத்திற்கு வந்தான். பாண்டிய நாட்டில் கலி 3537ல் துன்முகி கார்த்திகை 7 பஞ்சமி புதன் கிழமை மீநாட்சி சௌந்தரபாண்டியனும், சேரநாட்டில் சங்கரசேரனுக்குப் பின்பு சேரமான் பெருமாள் என்பவர் கலி 3538ல் துந்துபி ஆவணி 16 பஞ்சமி சோமவாரத்திலும் பட்டத்திற்கு வந்தனர். காஞ்சியில் கச்சி முத்துவீர காமாட்சிராய சிரச்சிங்காதன கர்த்தராகிய சமய முதலி களுக்குப் பின்பு அவன் மகன் கச்சிவீரன் வெங்கடாசல முதலிக்குக் கலி 3539ல் ருத்திரோத்காரி வைகாசி 5 சுக்கிர வாரம் பஞ்சமி திதியில் ஆறு சமய விசாரணைப் பட்டம் தந்தனர். சாதி சமய பட்டம் முதல் நாட்டாண்மைக்கு வீர வெங்கடாசல முதலியும் தந்தை உறவினர் கச்சிக்கச் சாலையப்ப முதலியாரும், சாதிசமய தல விசாரணைக்கு சுந்தரமூர்த்தி முதலி மகன் சூரியமூர்த்தி முதலியும், சாதி சமய பட்டத்திற்கும் கணக்குக்கும் திருவேங்கட முதலி மகன் வடமலையப்ப முதலியும், சகாய சங்கதி விசாரணைக்கு சோலையங்கிரி முதலி மகன் வாரணவாசி முதலியும், சமய இளந்தாரியாக திருத்தணிகை முதலி மகன் தனுசுக்கோடி முதலியும் நியமிக்கப்பட்டனர்.

மற்றும் 56 தேசங்களிலும் உள்ள அங்காடி (கடை) வாணிகத்தில் பொருள் முட்டுப்பாடு இல்லாமல் சரிவர நடந்து வருவதற்கு, வலங்கைத் தலைவனான கச்சிவீர வரதராச செட்டி வம்சத்தில் வந்த கஸ்தூரி ரங்கப்ப செட்டி யையும், குடியானவர்க்குத் தலைவனாகத் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பனையும் நியமித்திருந்தனர். இவர்களை

யெல்லாம் முன்னிட்டு உறையூர்ச் சோழன் அரசாண்டு வரும் நாளில் முன்போலவே கோவில் குளங்களும் மடங்களும் நல்ல முறையில் பிரபலத்திற்குரியனவாகிச் செயல்பட்டு வந்தன. இடைப்பட்ட நாளிலே உறையூர்ச் சோழன் கருவத்தினுல் இராச நீதியை மறந்து ஒழுக்கம் தவறியதால் நாட்டில் அநியாயங்களும், தெண்டங்களும் வழிப்பறிகளும், கலகங்களும் ஏற்பட்டுக் கோவில் குளமெல்லாம் சாலி வாகனன் காலம் போல நிலேகுலேந்தன. மக்கள் அவதிப் பட்டனர்.

## 10. உறையூரில் மண்மாரி பெய்தது

இதையறிந்த எல்லாம் வல்ல சிவபெருமான் மிகவும் கோபம் கொண்டு முன்னெரு சமயம் செய்தது போல மண்மாரி பெய்வித்துச் சோழ நாட்டை அழிக்க எண்ணினர். கருமாரியை அழைத்து அவ்வாறு செய்யக் கட்டளேயிட்டார். கருமாரியம்மன் இச்செய்தியை உறையூர்ச் சோழனுக்குக் கனவில் சென்று உரைத்தனள். அச்சம் கொண்ட சோழன், 'மண்மாரி பெய்வதற்கு முன்பே சேரகொங்கு நாட்டிற் சென்று தப்பிப் பிழைப்போ'மென எண்ணங்கொண்டு தன் மனேவியரான சிங்கம்மாள் சாமளம்மாள் என்பவர்களுள் சிங்கம்மாள் மூன்றுமாத கருப்பிணியாக இருப்பதை அறிந்து இவர்கள் இருவரையும் முன்னமே கொங்கு நாட்டுக்கு அனுப்பிவிட்டுத் தான் பின்னுல் ஒண்டிக் குதிரையேறி வேக மாகச் செல்லும்போது கருமாரியின் அருளால் மண்மாரி பெய்ததால் அதில் அகப்பட்டுத் தப்ப வழியின்றி விண்ணுல கெய்தினன்.

கருமாரியானவள் ஆதிசதாசிவனே நினேத்துத் தன் நெற்றிக் கண்ணேத் திறந்து மண்மாரியை இறக்கவும் அம் மழை விண்ணும் மண்ணும் தெரியாதவாறு சூறைக்காற்றுப் போல் வந்ததால் சோழதேசம் துன்பத்துக்குள்ளாகியது. கருமாரி கண்ணேத் திறந்ததால் கண்ணனூர்மாரி எனப் பெயர் பெற்றனள். கொங்கு நாட்டுக்குச் சென்ற சிங்களம் மாளும் சாமளம்மாளும் அங்கு அந்தணர்பாடியில் அந்தணர் களால் ஆதரிக்கப்பட்டு ஒருவாறு காலங்கழித்துவந்தார்கள். உறையூரும், சோழ மன்னனும் மண்மாரியால் அழிந்து போனதை முன்னிட்டு மிகவும் துக்கப்பட்டுக் கொண்டு பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தார்கள்.

# 11. கரிகால் சோழன் பிறந்தது

கொங்கு நாட்டில் சில மாதங்களுக்குப் பின்பு சிங்கம்மாள் ஆண் குழந்தையை ஈன்றாள். குழந்தை நன்கு வளர்ந்து வந்தான். 12 ஆண்டுகள் வரை இவர்கள் இங்கேயே இருந்தனர். சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் மன்னன் இல்லாத காரணத்தால் நாடு துன்பத்துக்குட்பட்டது. அங்குள்ள அரசர் காரியத்தரும் மந்திரி பிரதானிகளும் ஒன்று சேர்ந்து, திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன், கஸ்தூரி ரங்கப்ப செட்டி, கச்சி வீர காமாட்சி முதலி ஆகிய சான்றோர்களுக்கு ஓலையனுப்பி அவர்களைத் திருவாரூருக்கு வந்து சேரும்படிக் கேட்டுக்கொண்டார்கள். அச்சான்றோர்களும் திருவாரூருக்கு வந்து எல்லாரையும் ஒன்று சேர்த்து, "இனி எப்படியாகிலும் மன்னன் மனைவியராகிய சோழமா தேவியரைக் கண்டு பிடிக்க வேண்டும்; சிங்கம்மாள் வயிற்றில் ஆண் குழந்தை பிறந்திருத்தல் கூடும். மேலும் சோழ மன்னனுதற்கு அக்குழந்தையே உரியவன்" என்று ஆலோசித்துக்கொண்டு எல்லாருமாகக் காசிச் சேத்திரத்திற்குப் புறப்பட்டனர். அங்கு விசுவநாதர் விசாலாட்சியை வணங்கி அங்குள்ள வெள்ளை யானையை வரவழைத்துக் கொண்டு திருவாரூருக்கு வந்து சேர்ந்தனர்.

வெள்ளை யானையின் கையில் மஞ்சன நீரும் மாலையும் கொடுத்து, "நீ யாரை அரசனாகக் கொண்டாலும் சரி; அவனே எங்கள் மன்னனாவான்" எனக் கூறி அதை அனுப்பினர். யானை கொங்கு நாடு நோக்கி மேற்கு முகமாகச் சென்றது. இரவில் 'வெள்ளானைப்பட்டி' என்னுமிடத்தில் தங்கி மறு நாள் ஒரு ஊரில் கொங்கரது நாட்டுக் குளத்திலே சிங்கம்மாள் மகன் விளையாடிக் கொண்டிருந்தானைக் கண்டு, 'இவனே நம் அரசனாவன்' என முக்காலமுமுணர்ந்த அவ் வெள்ளை யானை நினைத்து அவன்மேல் மஞ்சன நீரைச் சொரிந்து மாலையைக் கழுத்தில் இட்டு நின்றது. பின் அவனைத் தன்மேல் அமர்த்திச் செல்ல அவனைத் தன் துதிக் கையால் இழுக்கவும் குழந்தை நிலத்தைப் பற்றிக்கொண்டு அச்சத்தால் இடர்ப்பட்டதைக் கண்ட மற்றவர்கள் சிங்கம்மாளுக்கு இதை அறிவிக்கவும் ஓடி வந்து இதைக் கண்ட அம்மையார், "இவ்யானை என் மகனை வாழ்விக்க வந்ததாகும்" என்று கூறி நிலத்தை உறைத்துப் பொட்டிட்டு,

கரியைக் கொண்டு அவன் காலில் அகாரம் இட்டு எழுதி கரிகாலன் எனப் பேரும் வைத்து, ''இவனே இராசகுமாரன். இவனை எடுத்துப் போ'' என யானைக்கு ஆணையிட்டாள். யானையும் அவனைத் தன்மேல் இருத்திக்கொண்டு திருவாரூருக்குச் சென்றது. சிங்கம்மாள் சாமளம்மாளும் ஆதரவு காட்டிய இராமபட்டர் சந்திரபட்டர் என்ற அந்தணர்களும் உடன் சென்றனர். யானை கரிகாலனை வாரி எடுத்த குளம் ஆனைவாரிகுளம் எனப் பெயர் பெற்றது.

இதையறிந்த சோழநாட்டு மக்கள் மனம் மகிழ்ந்தனர். ''கரிகாலன் உங்களுக்கு வேண்டிய ஆதரவுகளைத் தாமே வந்து செய்வான்'' என அந்தணர்களுக்குக் கூறி அவர்களை நன்கு உபசரித்து அனுப்பினர். வெள்ளை யானையும் தன் காரியத்தை முடித்துவிட்டுக் காசிக்குச் சென்றது.

## 12. கரிகாலன் அரசனானது

தமது துன்பங்களெல்லாம் தீர்ந்து போனதாகக் கருதிய சோழ நாட்டுச் சான்றோர்கள் கரிகாலனுக்கு முடிசூட்ட வேண்டுமென எண்ணி முடி மன்னர்கள் பலருக்கும் சேர பாண்டிய மன்னர்க்கும் ஆக 56 தேச அரசர்களுக்கும் ஓலையனுப்பினார்கள். எல்லா மன்னர்களும் திருவாரூருக்கு வந்து சேர்ந்தார்கள். கரிகாலன் கொங்கு நாட்டில் வளர்ந்ததையும் வெள்ளை யானையால் வரவழைக்கப்பட்டதையும் அறிந்த மன்னர்கள், ''பதின்மூன்று ஆண்டுகளாகத் தொண்டைநாடும் சோழநாடும் அவதிப்பட்டன. மண்மாரி பெய்ததால் துன்பத்திற்குள்ளான நாடுகள் இன்னும் தலையெடுக்கவில்லை. முடிமன்னர் ஒருவர் இல்லாததால் நாங்களும் மிக வருந்துகின்றோம். மிகவும் நல்லது. இனியாகிலும் நீதி தவறாது நாடு நன்கு வாழட்டும். ஆனால் ஒன்று. இத்துடன் கரிகாலனுக்குத் திருமணமும் செய்து விடுதல் நலமாகும்'' என்று கூறினார்கள். பின் சான்றோர்கள் சோழ நாடு, தொண்டை நாடு இவைகளிலுள்ள கலியாணமாகாத பெண்களையெல்லாம் வரவழைத்து வேளாளர்பாடியைச் சார்ந்தவளும், தனக்குப் பொருத்தமானவளும், இலக்குமி போன்றவளும், இராச யோக்கியதையுள்ளவளுமான பெண் ஒருத்தியைத் தேர்ந்தெடுத்தனர். திருவாரூர்த் தியாகராசர் முன்னிலையில் இருவருக்கும் திருமணம் நடந்தது. இருவரையும் மெரவணை (ஊர்கோலம்) செய்வித்து

அங்கேயே கரிகாலனுக்குக் கனகமுடியும் சூட்டினார்கள். இராச்சிய பரிபாலனத்திற்குரிய எல்லா அதிகாரங்களையும் தந்து மன்னர் சான்றோர் முதலாயினார் கரிகாலனை வாழ்த்தினார்கள்.

அதாவது கலியுகாதி 3567ல் கர வருஷம் வைகாசி 27 பஞ்சம திதி சோம வாரத்தில் பட்டத்துக்கு வந்தான் என்க. முடிமன்னர்களும் சான்றோர்களும் மிகவும் நன்கு உபசரிக்கப்பட்டுத் தம்தம் ஊரை அடைந்தனர். கரிகாலன் நீதி தவறாமல் நாட்டை ஆண்டு வந்தான். எல்லா ஆலயங்களையும் நன்கு நடப்பித்துக்கொண்டு வந்தனன். குடி மக்களிடத்தில் ஆறில் ஒரு கடமை வாங்கினன். மாதம் மும்மாரி தவறால் பெய்து வந்தது. சாது சனங்களும், பக்த சனங்களும் நன்கு பாதுகாக்கப்பட்டனர். மதுரையில் மீனாட்சி சௌந்தர பாண்டியனும், தாராபுரத்தில் சேரமான் பெருமாள் என்னும் மன்னனும் ஆண்டு வந்தனர். சமய முதலிகள் முதலானவர்களும் தத்தமது சமய விசாரணையை நன்கு செய்து வந்தார்கள்.

*ஒருநாள் சோழன் கரிகால் மன்னனது மகன் திருவாரூர்த் தெருவில் தேரோட்டி வந்தனன். ஒரு காராம் பசுவின் கன்று தேர்க்காலில் சிக்கி மாண்டது. அது பொறாத பசுவானது அரண்மனை சென்று தன் கொம்புகளால் ஆராய்ச்சி மணியை அடித்தது. இதையறிந்த மன்னன் பசுவுக்கு முறை வழங்க எண்ணி அவை கூட்டி ஆராய்ந்தனன். தன் மகன் செய்தது குற்றமே என்பதை யுணர்ந்தவன் பழிக்குப் பழி வாங்குதலே தர்மமாகும் எனத் தன் மகனைத் தெற்குத் தலை வடக்குக் காலாகத் தெருவில் கிடத்தி அதே தேரில் ஏறி அவன்மேல் ஊர்ந்து சென்றனன். இவைகளையெல்லாம் அப்பசுவானது பார்த்துக் கொண்டிருக்குமாறு செய்து அதன் சோகத்தைப் போக்கினன். இதனால் மன்னன் மகனுக்குப் பசுவைக் கொன்ற தோஷம் நீங்கியது. ஆனால் கரிகால மன்னனுக்கு மகனைக் கொன்ற தோஷம் பற்றியது. பிருமத்தி தோஷமும் குலபாதக தோஷமும், கொலைப்பாதக தோஷமும் புத்திர சோகமும் உண்டானதால் மன்னனுக்குப் பயித்தியம் பிடித்துக்கொண்டது.

*இவ்வரலாறு பெரியபுராணம் மனுநீதிச் சோழன் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. இங்கு இவ்வரலாறு வேறாகக் கூறப்பட்டுள்ளது. பூர்வ பட்டையம் கூறுமாறு ஈண்டு வரையப்பட்டது.

# 13. காமாட்சியம்மையார் குறத்தியாக வந்து குறி சொன்னது

புத்திர தோஷ விருமத்தியால் பைத்தியமடைந்த சோழன் அங்கிருந்தோரையெல்லாம் அடிக்கவும் கடிக்கவும் வெட்டவும் செய்ய முனைந்ததைக் கண்டு மந்திரி பிரதானியர் வருந்தினர். ஆதிமகேசுவரன் காமாட்சியம்மையாரை நோக்கி, "கொங்கு நாட்டில் **360**க்கு மேற்பட்ட ஆலயங்களைச் சோழ மன்னன் கையால் திருப்பணி செய்விக்க வேண்டும். இடைக்காலத்தில் இம்மன்னன் இவ்வாறு அவதிப்படலாகாது. நீ போய் அவன் கையைப் பார்த்துக் குறி சொல்லி அவன் கொண்ட விருமத்தியைத் தீர்ப்பாயாக" என ஆணையிட்டனர். அம்மையாரும் அவ்வாறே குறத்தியாகவும் கையில் பிரம்புகோல் முதலியன தாங்கிப் புறப்பட்டனள். சான்றோர்கள் பலர் குறத்தியை அழைத்துவந்து கரிகாலன் கையைப் பார்க்குமாறு செய்தனர். அம்மையாரும் கணபதியைத் தொழுது குறி சொல்லுவார். "இது வியாதியல்ல; மருந்திடு மாய்கையுமல்ல; புத்திர தோஷமாகும். இது தீருவதற்கு ஒரே ஒரு வழியுண்டு. அதாவது சேர கொங்கு நாட்டில் வெள்ளிமலை முட்டம் கடையாக உள்ள 360க்கு மேற்பட்ட சிவாலயங்களையும் முட்டங்கோடி 32 அணைகளையும் கட்டி கொங்கு நாட்டை முன்போல் வளமுடையதாக்க வேண்டும். இவ்வாறு செய்து வருவேனென்று கூறி வீரபாகுதேவர் வம்சம் கைக்கோள்வரில் இலட்சம் வீரர்களுக்கு அதிபதியாகிய கச்சிவீரவம்சம் கச்சிவீர வெங்கடாசல முதலிக்கு ஏகாம்பரர் காமாட்சி பெயர் கூறி கஸ்தூரி ரங்கப்ப செட்டி முன்பு கனகசபை மாட்சியாகக் கொண்டு கரிகாலன் வலது கை கொடுக்கவும் வீரவெங்கடாசல முதலியானவர் அபயஹஸ்தம் வாங்கிக்கொண்டால் இந்நோய் தீர்ந்து போகும். இதற்கு வேறு மார்க்கமில்லை" என்று கூறிப் பின் குறத்தியாகிய காமாட்சியம்மையார் தம்மிருப்பிடஞ் சேர்ந்தனள்.

குறத்தி சொன்னதைக் கேட்டு வியந்து சொன்னபடிக்கு ஒப்புக்கொண்டபடியால் வீர வெங்கடாசல முதலியவர்கள் நிலத்தை உறைத்துக் கரிகாலன் நெற்றியில் திலகம் இடவும் அவனைப் பிடித்த பிருமத்தி தோஷம் விலகியது. பின் தியாக ராசருக்கு அபிசேக ஆராதனைகள் முடிப்பித்து எல்லோரும்

ஒருமனதாக, "சேர, கொங்கு நாட்டுக்குச் செல்வோம்" எனத் திட்டமிட்டுக்கொண்டார்கள். கச்சிவீர காமாட்சி ராய சமய முதலிகளும் அதற்கு ஒப்புக்கொண்டு காஞ்சீபுரம் செப்பேட்டுப் பட்டையத்திற்கு எதிர் ஏடாகிய வெள்ளேட்டுப் பட்டோலையையும் தருவித்துக்கொண்டு உடன் புறப்பட்டனர். கொங்கு நாட்டுத் திருப்பணி செய்யப் புறப்பட்டவர்கள் முறையே:

1. கரிகாலனும் அவன் காரியத்தர்களும். 2. திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பனும் அவன் காரியத்தர்களும். 3. கச்சிவீர காமாட்சிராய சமய முதலிகளும் அவர் காரியத்தர்களும். 4. கஸ்தூரி ரங்கப்ப செட்டியும் அவர் காரியத்தர்களும். 5. திருவையாற்று மெய்ஞான சிவாசாரியார் அவர்கள் வம்சத்துக் குமார சுப்பிரமணிய பண்டிதர். 6. சேரமான் பெருமாள் என்ற மன்னரும் அவர் காரியத்தர்களும் ஆவார்கள்.

இவர்கள் யாவரும் திருவாரூரிலிருந்து புறப்பட்டு கருவூர் முதற்கொண்டு வெள்ளியங்கிரி முட்டம்வரை சென்று திருப்பணிகள் செய்கின்றனர். கொங்கு நாடு அழிந்து கிடந்ததால் ஆங்காங்கு மரம் செடி கொடிகள் முளைத்துக் கிடந்ததால் அங்கெல்லாம் இருந்த காடுகளை அழித்தார்கள். காளி துர்க்கை போன்ற தெய்வங்கள் முப்பலி கேட்டன. தருவோம் என ஒப்புக் கூறித் தாம் முடிக்க எண்ணிய திருப்பணிகளைச் செய்து முடித்து இத்தெய்வங்களுக்கும் கோயில் கட்டி வழிபட்டனர். எல்லாக் கோயில்களுக்கும் முட்டா விரைப்பு நஞ்செய் புஞ்செய் நிலங்களை மானியம் விட்டனர். கோயில்களும் கோட்டையும் பேட்டையும் குளமும் உண்டாக்கினர். ஆங்காங்கு பல மக்களையும் குடியேற்றினர். கோயில் கணக்கு, மணியம், ஊர் அதிகாரம், குடித் தலைமை, ஊழியம், சமய விசாரணை, கோயிற் பூசை முதலாக எல்லாவற்றிற்கும் இன்னின்னவர் என்று நியமித்து அவர்களுக்குப் பட்டையம் சாசனம் என்பவைகளையும் கொடுத்து, ஆங்காங்குக் கல்வெட்டுக்கள் பொறித்து மானியத்தில் சமய முதலிகளுக்குப் பத்தில் ஒன்று என உரிமையும் கொடுத்து இவ்வாறாகத் திருப்பணிகள் பலவிடங்களிலும் செய்து வந்தனர்.

# 14. கரிகாலன் திருப்பணிகள்

1. **கருவூர்:** கோட்டை, பேட்டை நியமித்தல். மக்களைக் குடியேற்றல். மான்யம் விட்டனர்.
2. **கொடுமுடி:** இங்கும் பல திருப்பணிகள் செய்கின்றனர்.
3. **வெஞ்சமாக் கூடல்:** மான்யம் விட்டுத் திருப்பணி செய்தனர்.
4. **வானிக் கூடல்:** பல திருப்பணிகளை இங்கும் செய்கின்றனர்.
5. **கன்னிகாவனம்:** (திருவாவினன்குடிச் சிவமலைக் குமரர் கோயில்) பழநிமலையிலும், அடிவாரம் ஆவிநன்குடியிலும் திருப்பணிகள். பழனுபுரி, திருவாவினன்குடி, சிவமலை என முத்தலங்கள் உள்ளன. இதன் சிறப்புணர்ந்து பாண்டியனும் திருப்பணிகள் செய்தனர்.
6. **கொண்டரங்கி மலை:** (ஆய்குடி, அமரபாண்டி) கோட்டையும் பேட்டையும் கட்டினன்; கொண்டரங்கிமலை வேலவர்க்குக் கோயில் கட்டல்; மேற்பார்க்க அமரபாண்டி நகர்மக்களை நியமித்தல்; பழனுபுரியில் பஞ்சநதிகள் சேர்க்கை (பச்சை நதி, வாத்து நதி, பால நதி, சென்னை நதி, சுழலை நதி) திருப்பணிக்குப் பாண்டியனும் கலந்துகொள்ளுகிறான்.
7. **பூம்பறை:** (வராகமலை, பன்றிமலை வேலவர்) வராகமலையில் பஞ்ச நதிகள் உள்ளன. (வராக நதி, வேங்கை நதி, ரிஷப நதி, அனுமந் நதி, ஆளு நதி) வேலனுக்குக் கோயில்கள் கட்டி வழிபட்டனர்.
8. **ஆனைமலை:** (ஆனை என்ற இருளன்பதி) அவணீசுவரர் கோயில் திருப்பணி செய்தனர்.
9. **மந்திரகிரி:** (தென்சேரிகிரி) வேலாயுதர் கோயில். தென்சேரிக் கோட்டை உண்டு; ஐந்து நதிகள் (மகர நதி, சங்கு நதி, மேஷ நதி, கருட நதி, தர்ப்ப நதி.)
10. **சென்னிமலை:** (சென்னியங்கிரி; சென்னி இருளன்வனம்) வேலவன் கோயில், சென்னிமகாளி பலி கேட்டனர்.

11. **வெள்ளியம்பதி:** (இரும்பறை முதூர்; ஓதிமலை வேதியர் கோயில்) கரியகாளி முப்பலி கேட்டது; இங்கு நாகீசர் கோயில் உள்ளது. வெள்ளி இருளன் பதி, வெள்ளிமா நகரம் இரும்பறை முதூர்க் கோட்டை; நாகீசர் லிங்கம் கண்டது.

12. ***சத்திமங்கை:** (சத்தியமங்கலம்) சத்திமாகாளி பலி கேட்டனள். ஊருக்கு வடக்கே தனவாசி கோயில் குளம் உண்டு. கோட்டையும் பேட்டையும் (வடக்குப்பேட்டை) உண்டு.

13. **திங்கள்வனம்:** (திங்களூர்—பூமை முனி கோயில் உள்ளது) கரியகாளி என்னும் தெய்வம் பலி கேட்டனள்.

14. **விசயமங்கை:** (விசயமங்கலம்) மாகாளி பலி கேட்டனள். சங்கரலிங்க உடையார் கோயில்; எழு நதிகள்: தர்மமாநதி, வீமநதி, விசயநதி, நகுல நதி, சகாதேவநதி, திரௌபதி நதி. கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கோனார் வாழ்ந்த இடம். பெருங்கதை பாடிய கொங்கு வேளிர் பிறந்த இடம்.

15. **கீரனூர்:** (கீரன்வனம்—கண்டிகாளி கோவில்) கண்டி காளி பலி கேட்டனள்.

16. **கோனன்பதி:** (கோனுபுரி) சோழீசர் ஆலயம் உள்ளது. கோனமாகாளி பலி கேட்டனள்.

17. **நடுவாச்சேரி:** (சேவல் பூண்டி—செவள் பூண்டி வனம்) துர்க்கை செவளாபுரியம்மன்; நடுவன் என்ற இருளன்பதி; சேவல் துர்க்கை பலி கேட்டனள்.

18. **பல்லன்வனம்:** (பல்லடம், பல்லன் — இருளன்) பல்லிடத் துர்க்கை பலி கேட்டது.

19. **தணக்கன்பதி:** (சோமேசுவரர் கோயில் தணக்கன் கோட்டை) மசனி துர்க்கை பலி கேட்டது.

20. **குள்ளன் பதிவனம்:** (குள்ளந்துறை—மகாலிங்கம்) வானியாற்றின் கரையில் வானி துர்க்கை பலி கேட்டது.

---

* பிற்காலம் வேதாந்த தேசிகர் என்ற வைணவர் இங்கிருந்துகொண்டு 14-க்கு மேற்பட்ட வைணவ நூல்களை இயற்றினர். வேதாந்த தேசிகர் சிலை கோயிலில் உள்ளது.

21. **கோமங்கை வனம்:** (வண்டிப்பதி — வண்டிப் பேட்டை) பூமீசுரமுடையார்; வண்டிக்கோட்டை நகர்; வண்டிகாளி.

22. **வெள்ளைப் பதிவனம்:** (வெள்ளாதி—சங்கரலிங்கம்) வெள்ளை இருளன்பதி.

23. **கவையன்பதி:** (கோவில் நகர்; கவய துர்க்கை; கரியகாலர் கோயில்; கவயன் புத்தூர்; கவயகாளி; கோவில்பாளையம் காவநதி—ஏரிக்கரை.

24. **சிங்காநல்லூர்:** (சிங்கம்மாள் பேரால் பிரமதாயம்) கரிகாலன் பிறந்த இடம் ஊரும் கோட்டையும் கட்டினன். குளமும் கட்டினன். ஆனைவாரிக் குளம் உண்டு.

25. †**சாமளாபுரம்:** (சாமளம்மாள் பெயரால்) சோழீசர் கோயில் உள்ளது. சிங்கம்மாள் சாமளம்மாள் என்னும் இவர்கள் பேரால் இராமப்பட்டருக்குச் சிங்கநல்லூரும், சந்திரபட்டருக்குச் சாமளாபுரமும் கட்டிக் கொடுத்து அவைகளைப் பிரமதாயமாக்கினர். கோயில் குளம், கோட்டை பேட்டை இவைகளைக் கட்டிக் கொடுத்தனன். கரிகாலன் பிறந்த இடம் இதுவாகும்.

26. **வெள்ளலூர்:** (வெள்ளை—இருளன்) பேச்சிதுர்க்கை, தேனீசுரர் ஆலயம், வெள்ளைப்பதி.

27. **சூரனூர்:** (சூலூர்) அத்தம் பெரியம்மை, வைத்திய லிங்கேசுரர்.

28. **இருவனூர்:** (இருகூர்—இருவன் இருளன் வனம்) பொன்னூரர் துர்க்கை, சௌந்தரலிங்கர் கோயில்.

29. **இடிகரை:** (இடியன்பதி) வில்லீசர், வில்லி துர்க்கை கோயில்.

30. **துடியலூர்:** (துடியன் ஊர்; துடியன்—இருளன்) மாகாளி துர்க்கை, (மங்கைமாகாளி) அகத்திய லிங்கர், குருவிருடிமலை அகத்தியர் பூசித்த தலம், அகத்தியர் பெயரால் கட்டப்பட்டது குருவி ரிஷியூர். அகத்தியன் குளம், அகத்திய நதி, சித்தந் நதி உள்ளன.

---

† S. I. Inscription, Vol. III. No. 1174.

31. **கோவன் புத்தூர்:** (கோவன்—இருளன்பதி) கோனமாகாளி—சங்கீசுரமுடையார் ஆலயம், கோனீயம்மை.

32. **பேரையூர்:** (திருப்பேரூர்—பேரைப்பதி அரசவனம்) ஆதிமூர்க்கம்மன், பட்டிலிங்கம், பேரை என்ற இருளன்பதி.

33. **அவிநாசி:** (ஆவன்பதி-கருப்பன்—அவிநாசிலிங்கம்) திருமுருகன்பூண்டி, நாகதேவ கன்னிகாபுரி, தட்சிண காசி, பெருங்கருணைத் தாயார், மாமாங்கப் பொய்கை, ஐராவதப் பொய்கை, சரவணப் பொய்கை, சக்கரதீர்த்தப் பொய்கை, அகத்தியர் பொய்கை உள்ளன.

34. **சேவூர்:** (சேவன்பதி) அழகு நாச்சியம்மன், வாலீசர் கோவில், வாலிபூசித்த வாலீசுரலிங்கம், அறப் பெருஞ் செல்வியம்மன், பாதாள கங்கை, அக்கினி கங்கை, கருட தீர்த்தம், வாலி நதி, வாலி நதிக் குளம், அமிர்த நதி உள்ளன. செவன்—இருளன்.

35. **மன்னியூர்:** (அண்ணூர்) மன்னிவளம், மன்னி லிங்கம், சக்கர நதி, சங்கு அணை, தட்சிண கங்கை உள்ளன. மன்னி—இருளன்; அருந்தவத் தம்மை கோயில், மன்னிமாகாளி.

36. **முட்டம்:** (நாகீசுரர் வனம்) நாகபட்டணத்து நல்லூர், நாககாளி பலி கேட்டது, பிற்காலம் அமர புயங்க சதுர்வேதி மங்கலத்து நல்லூர், முட்டத்து நல்லூர் என்னும் பெயர்களில் வெள்ளிமலையடி வாரத்தில் இருந்த ஊர்.

ஒவ்வொரு தலத்துள்ளும் பல தலங்கள் உள்ளமையினாலும், மற்றும் பாண்டி நாட்டுத் தலங்களுக்கும், சேர சோழ நாட்டுக்கும் சென்று திருப்பணி செய்தார்களாகையால் மற்ற வைணவ தலங்களும், சுப்பிரமணிய ஆலயங்களும் பிற துர்க்கை ஆலயங்களும் உட்பட 360-க்கு மேற்பட்ட ஆலயங்கள் எனக் கூறப்பட்டது காண்க. 36 சிவாலயங்கள் முதலாயின என்றே குறிக்கப்பட்டுள்ளது.

அண்ணூரில் (மன்னியூரில்) இருந்துகொண்டு சோழன் கொங்கேழு தலங்களுக்கும் 36 சிவாலயங்களுக்கும் 360 இதர ஆலயங்களுக்கும் 24 நாடுகளுக்கும் விசாரணை வகுத்தான்.

நாட்டு விசாரணை, சமய விசாரணை இவைகளைக் கவனிக்கக் கச்சிக் கச்சாலையப்ப முதலி மகன் கந்தப்ப முதலிக்கு மன்னியூர் அருந்தவச் செல்வி மன்னீசுரர் முன்பு பட்டங் கட்டி விழாவும் கொண்டாடினுர். அங்கிருந்து மீண்டும் திருப்பேரூர்க்கு இரண்டாம் முறையாகப் பட்டீசரை வணங்கிப் பின் முட்டத்திற்கும் வெள்ளியங்கிரிக்கும் வந்தனர். இங்கு கோவை, பேரூர், முட்டம், வெள்ளியங்கிரி ஆகிய தலங்களில் கரிகாலன் செய்த திருப்பணிகள் முதலாயினவற்றை விரிவாகக் காணவேண்டும். வெள்ளியங்கிரிக்குச் செல்பவர்கள் இத்தலங்களைக் காணுது செல்ல இயலாது. எனவே இவைகளை இங்குக் காண்க.

## 1. கோவன்புத்தூருக்கு வந்தது

கரிகாலன் முதலாயினுர் கோவன்புத்தூருக்கு வந்து அங்குள்ள கோவன் என்ற இருளன் துணை கொண்டு காடுகளை யழிக்கவும் கோனமாகாளி என்னும் துர்க்கை பலி கேட்டனள். இங்கு சங்கீசுரமுடையாருக்குக் கோவில் கட்டி முடித்த பின்பு விரும்பியவாறு பலி தருவதாகக் கூறி, வேடர் கம்பளத்து மரபினரை விட்டு அங்குள்ள காடுகளை அழித்தார்கள். சங்கீசுவரலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்து இறைவனுக்கு ஒரு பெரிய கோயிலைக் கட்டி முடித்தனர். கோட்டையும் பேட்டையும் குளம் முதலானவைகளும் உண்டாக்கிய பின்பு கோவன் பெயரால் கோவன்புத்தூர் என்ற ஊரையும் கட்டி முடித்தனர். பதினெண் சாதிக் குடி மக்களையும் அங்குக் குடியேற்றினுர்கள். குடியானவர்க்கு முதன்மையாகப் பாலச்சேரி பிச்சையப்பனையும், பல குடிக்கும் முதன்மையாக கவறை வலஞ்சியரில் வரதப்பனையும், கோவன்புத்தூர் நகர் அதிகாரத்திற்கு துடியலூர்ச் சின்னப்ப மண்ணுடியையும், கோயில் கணக்குக்குச் சிதம்பர அதிகாரி பிள்ளையையும் வைத்து உத்தம பண்டிதரைக் கொண்டு கோவிலில் புண்ணியாங்க அஷ்டபந்தனமும் செய்து முடித்தனர்.

சங்கீசுவரமுடையாருக்கு 50 பொன் கிராமம், 50 பொன் சுங்கத் தீர்வை, 50 முடா விரைப்புப் புஞ்செய், குளக்கரையில் 50 முடா விரைப்பு நஞ்செய் நிலங்களும் விட்டு மானிய விவரங்களுக்குக் கல்வெட்டும் பொறித்தனர். மானிய நிலத்தில் சமய முதலிகளுக்குப் பத்தில் ஒன்று எனச் சாசனம்

உண்டாக்கி, திருவாடு தண்டிகைச் சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோள்வரில் 50 குடியினரையும், நம்பி முதல் திருவலகு கடைவரைக்கும் முதன்மைக்குக் கைக்கோள்வரில் திருவம்பல முதலியையும், நாகபாச முதன்மைக்கு வேலாயுத நட்டுவனையும், தாசி முதன்மைக்கு மயில் மாணிக்கியையும், கோயில் மணியங் கணக்குக்கு சோணாசல முதலியையும் வைத்து அவர்களுக்கு வெற்றிலை பாக்குங் கொடுத்து கோனமாகாளிக்கு உத்தர வாசல் கோயிலும் கட்டி அவ்வம்மையாருக்கு 10 முடா விரைப்பு நஞ்செய், 10 முடா விரைப்புப் புஞ்செய் நிலமும் விட்டு ஆலய ஊழியத்திற்கு ஆதிசோகி கோரக்கர் வர்க்கத்தில் கப்பினி பண்டாரத்தையும் வைத்து *அம்மையாருக்கு வருஷம் ஒரு எருமைக் கடா பலியும் கொடுக்குமாறு ஏற்பாடு செய்து இவ்விதமாகத் திருப்பணிகள் செய்து முடிக்கும்போது பேரை என்ற இருளன் வாயிலாகப் பேரூரின் சிறப்பைக் கேட்டு அங்குச் சென்றார்கள்.

## 2. திருப்பேரூர்த் தலம் கண்டது

பேரை என்னும் இருளன் வாழ்ந்த பேரைப் பதியில் காஞ்சி மகாநதியின் கரையில் வொகிலியர் (ஒகிலியர் என்பார் ஒக்கலிகர்) ஆடுமாடு மேய்த்துப் பட்டி போட்டுக் கொண்டிருந்தனர். மாலை வரை மேய்ந்து வந்த ஒரு காராம் பசு தன் கன்றுக்குப் பால் தருவதன் பொருட்டு வேகமாக வந்தது. வந்து பட்டியின் படலைத் தன் மூஞ்சி (முகம்) யால் தள்ளியது. உள்ளே சென்று தன் கன்றுக்குப் பால் கொடுத்தது. அங்கே ஐம்முகப் புற்று ஒன்று இருந்தது. கன்றின் காற்குளம்பு புற்றுக் கண்ணில் இறங்கியது. புற்றுக்குள் சிவலிங்கம் இருந்தது. சிவலிங்கத்தின் ஊனைக் கன்றின் குளம்பு தாக்கியதால் சிவலிங்கம் குளம்பை இறுகப் பிடித்துக் கொண்டது. கன்றை நோக்கிய தாய்ப் பசு மனம் பொறாமல் புற்றைத் தன் கொம்புகளால் குத்திப் பெயர்த்தது. பசுவின் கொம்பும், கன்றின் குளம்படியும் பட்டதால் சிவலிங்கத்தின் தலையிலிருந்து இரத்தம் ஆறாகப் பெருகியது. புற்றும் கரைந்து பட்டியெல்லாம் இரத்தச் சேறு படிந்திருந்ததையறிந்த ஒகிலியனது ஆட்கள் பட்டியிற் புகுந்து இந்த அதிசயத்தைக் கண்டு உடனே

* கோவையில் எருமைக்கடா பலியிட்டு வந்ததை யாவரும் உணர்வர் பல ஆண்டுகளின் முன்பே இவ் வழக்கத்தை நிறுத்தி விட்டனர்.

அங்குள்ள புற்றைத் தோண்டினர். உள்ளே லிங்கக் கண் இருந்தது. இலிங்கத்தில் குளம்படியும் கொம்படியும் பட்டிருந்தது. ஒகிலியன் இவைகளை யெல்லாம் பேரை என்ற இருளனுக்கு அறியப்படுத்த வேண்டி அவனைத் தேடும்போது, பேரை இருளன் வெள்ளியங்கிரி வனத்திற்கு வேட்டையாடச் சென்றிருந்தான். வேட்டைக்குச் சென்ற இருளன் தமக்கு எதுவும் கிடைக்காதது கண்டு திசை தடுமாறி வெள்ளியங்கிரி முடியில் தங்கியிருந்தான். அங்கு சுவாமியின் லிங்கத்தில் குளம்படிபட்டு இரத்தம் ஆறுக ஓடுவதைக் கண்டு, ''இதுவென்ன ஆச்சரியம்! மாயமாகவும் மகிமையாகவும் இருக்கிறதே!'' என்று கூறிய அவன் மறு நாள் காலையில் திருப்பேரூருக்கு வந்து இந்த அதிசயத்தை எல்லாருக்கும் சொல்ல எண்ணும்போது ஏற்கனவே பேரூரில் பட்டியில் பட்டிப் பெருமான் காட்சி தந்த திறங் களையெல்லாம் இவனுக்கு அறியப்படுத்திஞர்கள். திருப் பேரூரின் மூலமாக விளங்குவதே வெள்ளியங்கிரியாகும் என் பதை எல்லாரும் அறிந்தார்கள். அப்பொழுதே பட்டிலிங்கத் திற்கு ஆராதனைகள் செய்து வழிபட்டார்கள்.

இவ்வாருக உள்ள திருப்பேரூர் மான்மியத்தைக் கேட் டுணர்ந்த கரிகாலன் முதலியோர் பேரூருக்கு வந்து இலிங்கக் கண்ணைத் தோண்டிப் பார்த்தனர். அங்கு மூன்று ஆவுடை யார் தோன்றக் கண்டார்கள். அங்குள்ள சிலாசாசனங் களை யெல்லாம் படித்தறிந்தார்கள். பூலோக கைலாச மாகும் வெள்ளியங்கிரியே இதற்கு மூலத்தானம் என்றும், இத்தலம் கிருத யுகத்தில் தேவேந்திரனுல் பிரதிட்டை செய் விக்கப்பட்டதென்றும், பேரூர் காரூர் நகரமாகும் என்றும், வெள்ளியங்கிரி நவரத்தினகிரியாகு மென்றும், கிருத யுகத் தில் இலிங்கத்திற்குப் பெயர் சிதம்பரலிங்கம் என்றும் கண்டறிந்தனர். அதாவது:

1. திரேதாயுகத்தில் அரிச்சந்திர மன்னன் காலத்தில் பேரூர் லிங்கம் சிதம்பரலிங்கமென்றும், கிரி நவ ரத்தினகிரி என்றும் பெயர் பெற்றது.
2. துவாபரயுகத்தில் சந்தனு மகாராசன் காலத்தில் மார்க்கண்டிகப் பிரதிட்டையில் பேரூர் அரசமடல் லிங்கம் அரசம்பலம் என்றும் ஊர் பேரூர், கிரி, செம்பொன்கிரி என்றும் கண்டார்கள்.

மற்றும் கிரேதாயுகத்தில் பிரமப் பிரதிட்டையில் பட்டி முனியும் திரேதாயுகத்தில் வேதவியாசர் பிரதிட்டையில்

கோரமுனியும் துவாபர யுகத்தில் மார்க்கண்டிகப் பிரதிட்டையில் ஏகபாத முனிவரும் தொழுதார்கள். வெள்ளியங்கிரி கிரேதாயுகத்தில் மாணிக்கப் பச்சை மரகத கிரியாகவும், திரேதா—பசும் பொன் கனககிரியாகவும், துவாபர—நாக, தாம்பர செம்பொன்னுகவும் காட்சியளித்தது. கலியுகத்தில் சாலிவாகனனுக்கு அஞ்சிய சித்தர் முனிவர் முதலாயினுர் கிரி அடி மூலத்தில் குகை கட்டி வைத்து இரசம்வைத்து இரசவாதம் புரிந்தனர். இரச உப்பை பட்டு பசும்பொன் கனககிரி கரைந்து பசும் பொன் ஆருக ஓடியது. அதன் முன்பு துவாபரயுகத்தில் செம்பொன் கரைந்து வெள்ளி ஆருக ஓடியது. அதனுல் வெள்ளியங்கிரி என்னும் பெயர் பெற்றது. கலியுகத்தில் கருமண்மலேயாயிற்று என்பர். இந்தப்படி பேரூரில் இருந்துகொண்டே கேட்டறிந்த கரீகாலன், சமய முதலிகளின் கையேட்டுப் படிக்கு வேடர் கம்பளத்தை விட்டு அரசவனத்தை அழிக்கும்போது ஆதி மூர்க்க மாகாளி பலி கேட்டனள். தருவோம் என ஒப்புக் கூறி அங்குள்ள ஒரு தீர்த்தத்திற்குச் சிங்கநதி என்னும் பேரும் வைத்து பட்டீசுரர் பச்சை நாயகிக்குக் கோயில்கள் கட்டி, பேரூர் நகரத்தையும் கோட்டை பேட்டை இவைகளேயும் கட்டி முடித்தான். ஏரி, குளம், கிணறு இவைகளேச் சீர்படுத்தினுன். உத்தம பண்டிதரைக் கொண்டு இறைவனுக்கு அஷ்டபந்தனம் முடிப்பித்து பல குடிகளேயும் குடியேற்றினுர்கள். குடிகள் தலேவன் தென் திசையூர் வேளாளர் தலேவன் நல்லண்ணன். நகர் அதிகாரத்திற்கு பூவிலுவர் வம்சம் கொமாரக் கொப்ப மண்ணுடி, கணக்குக்குச் சிவலிங்கம்பிள்ளே இவர்களே நியமித்து 1000 பொன் கிராமம், 100 பொன் சுங்கத் தீர்வை, 100 மிடா விரைப்புப் புஞ்செய், 100 மிடா விரைப்பு நஞ்செய் (குளக்கரையில்) இவைகளே மானியமாக விட்டனர்.

கோயிலில் சீர்பாத ஊழியத்திற்கு 100 குடிக் கைக்கோள்வர், முதன்மை நாட்டாண்மைக்குத் தில்லேச் சிற்றம்பல முதலி, நம்பி முதன்மைக்குச் சரவண நம்பி நாகபாச முதன்மைக்குச் சுந்தரலிங்க நட்டுவனுர், மணியம் கணக்குக்குத் தில்லே நல்லதம்பி ஆகியோரை நியமித்து ஆதி மூர்க்க துர்க்கைக்கு உத்தரவாசல் கோவில் கட்டி வைத்து 10 முடா விரைப்புப் புஞ்செய் நஞ்செயை விட்டு இவ்வாருகத் திருப்பணிகளே முடித்தனர். பின் பேரூர்த் தலத்திலுள்ள நச்சிரநதி, அமிர்தநதி, சிங்க தீர்த்தம் இவைகளேக் கண்டு செப்பமிட்டு நச்சி (நச்சு) நதியை மூடி அதன்மேல்

நச்சிக் கணபதியைப் பிரதிட்டை செய்து, பூர்வீகத்து உறை கிணறு, ஆறுசடை நீர்ப்பாம்பு, வெள்ளைச் சிங்கை இவைகளை யெல்லாம் பார்த்து மகிழ்ந்தனர். அரசம்பலத்துப் பட்டி விநாயகர், பொன்கட்டி விநாயகர் கோவில், பொங்காளி யம்மை கோயில், பிறவாப்புளி, இறவாப்பனை என்பன வாதிய இடங்களையும் பிறவற்றையும் கண்டு மகிழ்ந்தார்கள். சமய முதலிகள் தமது கையேட்டை விரித்துப் பார்த்து நான்கு திருவீதிகள் உள்ள இத்தலத்தில் சாணம் புழுக்காது மண்டை வெடிக்காது, காஞ்சி நதியில் எலும்பையிட்டால் அது கல்லாகும். இத்தலத்தில் பிறக்கவும் இருக்கவும் இறக் கவும் முக்தி கிடைக்கும் என்பதையெல்லாம் எடுத்துரைத் தார்கள். † கலியுகாதி 3551ல் ஈசுவர கார்த்திகை 5ஆம் தேதி பஞ்சமி திதியில் இத்திருப்பணி முடிவு பெற்றது என்க. பின் சோழ மன்னன் முதலாயினுர் அவிநாசி திருமுகன் பூண்டி முதலான இடங்களுக்குச் சென்றுவிட்டு மீண்டும் பேரூர் வழியாகவே மேற்கே நடந்து சென்று முட்டத்து நல்லூர் என்ற இடத்திற்குச் சென்றனர். முட்டத்தில் இருந்துகொண்டு சமய முதலிகள் வாயிலாக வெள்ளியங் கிரியின் புராணவரலாற்றை அறிகின்றார்கள்.

## 3. முட்டத்து நாகீசுரர் கோயில் திருப்பணி

முட்டவனத்திற்குச் சென்ற கரிகாலன் வேடர்கம்ப ளத்தை விட்டு அங்குள்ள செடிமரங்களை வெட்டினான். வெட்டும்போது அவ்வனத்தைக் காத்திருந்த நாகதுர்க்கை பலி கேட்டனள். நாகீசர் கோயில் கட்டி முடிந்த பின்பு பலி தருவதாக ஒப்புக் கூறிப் பின் காடுகளை வெளிபண்ணி அங்குள்ள *நாகீசுர லிங்கத்தைக் கண்டார்கள். ஈசுரருக்குக் கோயிலும் மதிலும் கட்டினார்கள். அருகில் ஒரு குளமும் தோண்டினார்கள். கோட்டையும் பேட்டையும் உண்டாக்கி நல்லூர் என்ற ஊரையும் கட்டி முடித்தனர். பலகுடி மக்களையும் இங்குக் குடியேற்றினார்கள். உழவு குடியான வர்க்குத் தலைவன் தென்திசையூர் வேளாளன் நல்லண்ணன். பல குடிகளுக்கும் முதன்மை கவறை வலைஞ்சியரில் மயிலாபுரி, நகர் அதிகாரத்திற்கு பேரூர்க் கொமாரக்

---

†. கலி. 3613 என்று இருத்தல் வேண்டும்.

* திருமுத்துஷாளி பெயர் பூர்வபட்டையத்தில் காணப்படவில்லை. ஏடு களில் இப்பெயர் காணப்படுகிறது.

கொப்ப மண்ணுடி, நாகப்பமண்ணுடி, கணக்குக்கு வைரவ நாத பிள்ளை ஆகியோரை நியமித்து உத்தம பண்டிதரைக் கொண்டு புண்ணியாங்க அஷ்டபந்தனம் செய்வித்தனர். நாகீசுரமுடையாருக்கு ஐநூறு பொன் கிராமம் ஐம்பது பொன் சுங்கத் தீர்வை, ஐம்பது முடாவிரைப்புப் புஞ்செய் குளக்கரையில் ஐம்பது முடாவிரைப்பு நஞ்செய் இவைகளை மானியம் விட்டு அவற்றில் பத்தில் ஒன்று சமய முதலிகளுக்கெனக் கல்வெட்டுப் பொறித்து ஆலய ஊழியம் முதலானவைகளுக்கு ஐம்பது குடிமக்கள், நாட்டாண்மை முதன்மைக்கு மலையப்ப முதலியார், நம்பீ முதன்மைக்கு சிவலிங்க நம்பி, நாகபாச முதன்மைக்கு முதலி நட்டுவன், தாசிமுதன்மைக்குக் காளிமாணிக்கி, மணியம் கணக்குக்கு வயிராவதி முதலி ஆகிய இவர்களையெல்லாம் நியமித்து அவர்களுக்கு வெற்றிலை பாக்குங் கொடுத்து பட்டையமும் சாசனமும் எழுதிக் கொடுத்து, நாகதுர்க்கைக்கு உத்தர வாசல் கோயிலும் கட்டிவைத்து பத்து முடாவிரைப்புப் புஞ்செயும் நஞ்செயும் மான்யமாக விட்டு ஆலய ஊழியத்திற்கு ஆதிசோகி கோரக்கர் வர்க்கத்தில் வெள்ளைப் பண்டாரத்தையும் வைத்து தீப தூப ஆராதனைகளெல்லாம் முடித்துக் கொண்டிருக்கையில் அங்கு, வெள்ளியாறு, பொன்னுறு, காஞ்சியாறு, பச்சையாறு, கல்லாறு ஆகிய ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்டு இப்பஞ்ச நதிகளும் கோயில்களும் இருக்கும் அமைப்பைப் பார்த்து, "இந்தவூர் பேரூருக்குத் திருமுட்டமாக இருக்கின்றது; பேரூர் அரசம்பலத்திற்கும் மேலதிகமான முட்டவனமாகும்; திருமுட்ட நல்லூராகும்" என்று தம் வாயாரப் புகழ்ந்து கூறினார்கள்.

ஆதிகருவூர் முதற்கொண்டு வெள்ளியங்கிரி முட்டம் வரை கொங்கேழு சிவாலயங்கள் உட்பட்ட 360 ஆலயங்களையும் கட்டி முடித்தகாலம் *கலியுகாதி 3556 விஜய ஆண்டு தை மாதம் 12ம் நாள் சுக்கிர வாரத் தசமி திதி என்க. மற்றும் முட்டத்தில் அக்காலம் தேவதானம், முத்துவாளி, மீனுட்சி, வேதநாயகி, கணபதி, கரியகாளி, கடம்பொட்டித் தாண்டவேசுரர், இராயர், அங்காளம்மன், கன்னிமார், பட்டியாண்டி, வீரப்பெருமாள் திருமலைத்தேவர் என்னும் இவர்களுக்கும், சேசாத்திரி, இராமசாஸ்திரி கனகசபை முதலி, பரசுராமையன், புராணநரசிம்மாச்சார், தம்மணுச்

* கலியுகாதி 3629 என்று இருக்கவேண்டும்.

சார், வெங்கட்ரமணுச்சார், குருக்கள் ஐயன், சிதம்பர அய்யன், கிருஷ்ணுச்சார், வெங்கணுச்சார், ஆனையப்பன், மருத நாயகன், முத்துவிநாயகன், சித்திவிநாயகன், வெங்கிட்டையன் மடம் இவர்களுக்கும் நிலங்கள் இருந்ததையும், நந்தவனம், பூச்செடிக்காடு, கன்னிமார் கோயில், ஆலமரக் கோயில், வீரப்பெருமாள் கோயில், திருமலைத்தேவர் கோயில் என்பன இருந்ததையும் நில அடங்கல்களால் அறிகின்றோம்.

கி. பி. 1900-க்குப் பின்னர் பச்சை குருக்கள், உத்தம பண்டித முத்துசாமி குருக்கள், அய்யாசாமி குருக்கள், சுப்பராம குருக்கள் என்போர் நாகேசுரர் கோவில் ஆதீன அருச்சகர்களாக இருந்தனர். இவர்கள் மரபினரான நடராச குருக்கள் குமாரர் திரு. தண்டபாணி குருக்கள் பேரூரில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் முன்னவர்கள் முன்னம் பாரம்பரியமாக இக்கோயிலைப் பரிபாலித்து வந்தார்களாம்.

சோழமன்னன் முதலானவர்கள் முட்டத்து நல்லூரில் இருந்துகொண்டு அங்குள்ள சங்கு நதி, கூர்ப நதி, கர்ப்ப நதி, கருட நதி, அநுமந் நதி, இராமர் நதி, இடும்ப நதி, கடம்ப நதி, மயில் நதி, வசவநதி, அன்ன நதி, ஆகுவாகன நதி என்னும் வெள்ளியங்கிரியிலிருந்து வரும் நதிகளைக் கண்டு தாமும் வெள்ளியங்கிரியைச் சென்று காண விரும்பினார்கள். கரிகாலன் தன் அருகிலிருந்த சமயமுதலிகளை நோக்கி, ''இவ்வளவு சிறப்புக்களும் அமைந்துள்ள இந்த இடத்தின் எல்லையாக உள்ள இந்தப் பூலோக கைலாயமென்னும் வெள்ளியங்கிரி மலையின் விருத்தாந்தங்கள் என்ன? இதற்கு இப்பெயர் வரக் காரணம் யாது? திருவாய் மலர்ந்தருள வேண்டும்'' என்றனர். சமய முதலிகள் தமது கையேட்டை விரித்துப் பார்த்து கந்தபுராணத்தின் சாரமாக அமைந்த வெள்ளிமலையின் வரலாற்றைக் கரிகாலன் முதலானவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளினர்.

# இ. வெள்ளியங்கிரி வரலாற்றுப் பகுதி

## 1. சிவபெருமன் தேவர் முனிவர்களைச் சபித்துத் தென்கைலாயமாக மாறியது

முன்னம் கிருத யுகத்தில் தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானை நிந்தனை செய்து அவரை அழிப்பதற்குத் தக்க முனிவரோடு சேர்ந்துகொண்டு தாருகாவனத்தில் வேள்வியொன்று நிகழ்த்தினார்கள். ஆதிசிவ கைலாசத்தில் இருந்த சிவபெருமான் இதனையறிந்து மிகவும் கோபங் கொண்டு தம்முடைய உத்தர முகத்திலுள்ள வேர்வையை வாரி மணிப்பாறையில் எறிந்தார். உடனே அப்பாறை பல வெடிப்புகள் உண்டாகும்படி வெடித்தது. சுக்கு நூறாக வெடித்த அப்பாறையிலிருந்து ஆயிரம் முகத்தோடு கூடிய வீரபத்திரக் கடவுள் தோன்றினார். வீரபத்திரன் சிவபெருமானை நோக்கி, ''எனக்கு எதிரி யார்? அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?'' என்று கேட்டனர். சிவபெருமான், ''உமக்கு எதிராக முப்பத்து முக்கோடித் தேவர்களும் தக்க முனியும் இருக்கிறார்கள். போவாயாக'' என்று ஆணையிடவும் அகோர வீரபத்திர மூர்த்தியானவர் கோபாக்கினி கொண்டு கொதித்தெழுந்தார். விரைவாகத் தாருகா வனத்திற்குச் சென்று தக்கன் வேள்வியை அழித்தும் அவன் தலையை வெட்டியும் தேவர்களையெல்லாம் அழித்தும் இவ்வாறு செய்து வந்து தான் செய்த விவரங்களைச் சிவனிடம் எடுத்துரைத்தார்.

இதையறிந்த சிவபெருமான், 'எல்லாரையும் அழித்து விட்டுத் தான் மட்டும் இருந்து ஆவது என்ன?' வென்று ஆலோசித்து தேவர் முனிவர்கள்பால் மனம் இரங்கி மீண்டும் தன் வல்லமையால் தேவர் முனிவர்களுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்து அவர்களையெல்லாம் தன்னிடம் வர வழைத்தார். அஞ்சி நடுங்கிய தேவர் முனிவர்கள் சிவ பிரானை வணங்கி நின்றார்கள். சிவபெருமான் தேவர்களைப் பார்த்து, ''நீங்கள் சிவநிந்தை செய்தீர்களல்லவா; அதனால்

நீங்கள் யாவரும் இக்கிரேதாயுக ஆண்டில் சிவதரிசனம் காணுமல் சிவயோகம் செய்யாமல் அசுரர்களுக்கு அடிமைப் பட்டு ஆள்பட்டு வருந்துவீர்களாக'' என்று சாபம் கொடுத் தார். தேவர்களும் முனிவர்களும் மிகவும் நடுங்கி, ''எல்லாம் வல்ல எம்பெருமானே! வெள்ளியம்பலவாணனே! அறியாமல் பிழை செய்துவிட்டோம். தாங்கள் இட்ட சாபம் எங்களுக்கு எப்பொழுது தீரும்?'' என்று கேட்டார் கள். அதற்குச் சிவபெருமான், ''திரேதாயுக ஆண்டில் 91000 ஆண்டுகள் கழிந்த பின்பு சுப்பிரமணிய தேவர் தோன்றி உங்கள் சாபத்தைத் தீர்ப்பார். உங்களுக்கு விடுதலையும் கிடைக்கும்'' என்று திருவாய் மலர்ந்தருளினுர். பின் சிவபெருமான், தாம் இனி இவ்வாறு இருந்தால் மீண்டும் மீண்டும் தேவர்களும் முனிவர்களும் தம்மை வந்து காணுவார்கள் என்று நினைத்துத் தமது சிவசொரூபத்தை மறைத்துக்கொண்டு தட்சிண பூமிக்கு வந்து கொங்கர் நாட்டை யடைந்து தன் ஐந்து முகங்களையும் ஐந்து கிரிகளாக்கிநின்ருர். அதாவது பிரம முகம் பிரமகிரியாகவும், விஷ்ணு முகம் விஷ்ணுகிரியாகவும், உருத்திர முகம் உருத்திர கிரியாகவும், மயேசுர முகம் மயேசுரகிரியாகவும், சதாசிவ முகம் சதாசிவகிரியாகவும் மாறியது. இவ்வாறு தன் முகங் களைக் கிரிகளாக வளர்த்துக்கொண்டு சிவபெருமான் மறைந்து போனுர். தேவர் முனிவர்கள் மிகவும் வருந் தினுர்கள்.

## 2. தேவர் முனிவர்கள் துன்புற்றது

தேவர் முனிவர்கள் தமக்குச் சிவபெருமான் இட்ட சாபத்தை நினைத்து மிகவும் வருந்தினுர்கள். அதன்படியாகத் தென் சமுத்திரத் திடரின் நடுவில் உள்ள மகேந்திரபுரத்துச் சூரபதுமன் என்னும் அரசர்களால் அகப்பட்டு அவன் இட்ட கட்டளைச் செய்ய இயலாமல் அவனிடம் அடிபட்டும் உதைபட்டும் உடல் இளைத்தும் மெய்மறந்தும் பலவாறு வேதனைப்பட்டுத் தாம் செய்கின்ற தவங்களையெல்லாம் கைவிட்டு, நேமநிட்டை சிவபூசை முதலானவைகளை மறந்து தமது தெய்வபூசை சாலக்கிராமங்களெல்லாவற்றையும் காடு செடி வனந்திரங்களில் எறிந்துவிட்டு சீர்காழி என்னும் தலத்திற்குச் சென்று மூங்கிலாக முளைத்துப் போனுர்கள். தேவேந்திரனும் திருவண்ணுமலையருகே ஒரு மரப் பொந்தில் ஒளிந்து போனுன்.

## 3. அகத்தியர் புண்ணிய நதிகளைக் கமண்டலத்தில் அடக்கியது

இப்படியிருக்கும் நாளில் அகத்திய முனிவரானவர் இச் செய்திகளை யெல்லாம் அறிந்தார். சிவபெருமான் வட கைலையில் இருந்தால் தாம் பொதிய மலையில் இருத்தல் சரியானது. அப்படியில்லாமல் சிவபெருமான் தட்சிண பூமியில் காடுமலைகளில் மறைந்து போகவும் தாம் இங்கு இருந்தால் பூமி தென்கீழாகச் சாயும். தாம் பொதியமலையில் இல்லையென்றால் பூமி வடகீழாகச் சாயும். சிவபெருமான் தட்சிண கயிலையில் இருக்க நாமும் பொதிய மலையில் இருந்தால் பூமிக்கு அழிவுண்டாகும் என்று நினைத்து, இப்புவனத்திலுள்ள கம்பை நதி, பம்பை நதி, காவிரி நதி, கோதாவரி நதி, துங்கபத்திரா நதி, கிருஷ்ணவேணி நதி, வேத நதி, பம்ப நதி, சரசுவதி நதி என்ற ஒன்பது நதிகளையும் இதனுட்பட்ட பல ஆயிரங்கோடிகளையும் வருண சிவமந்திர முகாந்தரத்தினாலே வரவழைத்துத் தம் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு குடகுமலைச் சார்வில் அமைந்துள்ள பொதும்பரில் ஒரு குகையில் கமண்டலத்தைப் பாங்காக வைத்துக் கொண்டு இந்த நாள் என்று விடியுமோ எனச் சிவனை நினைத்துக் கண்ணை மூடித் தவம் இருந்தனர்.

## 4. தேவர்கள் சாபம் நீங்கியது

அகத்திய முனிவர் இவ்வாறு யாருமறியாத தாவில் தவம் செய்து கொண்டிருக்கவும் தேவர் முனிவர்கள் 91000 வருஷம் சூரர்களால் அவதிப்பட்டும் மூங்கிலாய் முளைத்தும் வருத்தப்பட்டு முடிந்த பின்பு சுய உருவம் பெற்று எழுந்தார்கள். தேவர்கள் தேவராகவும் முனிவர்கள் முனிவராகவும் மாறினார்கள். சீர்காழியிலுள்ள மூங்கில் வனம் தேவதா விஷேஷம் என்னும் பெயர் பெற்றது. பின் எல்லாரும் சீர்காழித் தலம் விட்டு மேற்கு முகமாக வந்தார்கள். தம்மைச் சூரர்கள் படுத்திய பாட்டையெல்லாம் சிவபெருமானிடம் முறை செய்ய வேண்டுமென்று எண்ணியவர்களாய் சிவபெருமானைத் திருவண்ணாமலையில் சென்று தேடிப் பார்த்தார்கள். சிவபெருமான் அங்கு காணப்படாததால் அவரை, சிவலோகம், கைலாயம், பிரம லோகம், வைகுண்ட லோகம், தவ லோகம், சத்திய

லோகம், மகா லோகம், இக லோகம், பர லோகம், ஈரேழு பதினுன்கு லோகங்கள், சத்திமுத்தி பாதாளம், ஆயிரத் தெட்டு அண்டம், இருநூற்றிருபத்து நான்கு புவனம், இரு பத்தோருயிரம் கோடி காதம் விஸ்தீரணமுள்ள புவனம் எங்கிலும் சென்று தேடினுர்கள். இறைவனே எங்கும் காணு தவர்களாகித் தேவர் முனிவர்கள் மிகவும் துக்கப்பட்டுக் கொண்டு திருவண்ணுமலையில் மறைந்து கிடந்த தேவேந் திர மகாராசனிடம் இவைகளே எடுத்துக் கூறினுர்கள். வேங்கை மரப்பொந்தில் ஒளிந்திருந்த இந்திரனும் வெளியே வந்து தமக்கும் தேவர் முனிவர்களுக்கும் ஏற்பட்ட துன்பங்களே யெண்ணி வருந்திக் கொண்டிருக்கும் வேளேயில் அவ்வழியாக நாரத முனிவர் வீணுகானம் செய்து வந்தார்.

## 5. நாரதர் சிவபெருமான் இருக்குமிடத்தை அறிவித்தது

நாரத முனிவரைக் கண்ட தேவ முனிவர்கள் முக மலர்ந்து அவரை வணங்கி அவரிடம் தமது குறைகளே எடுத்துக் கூறி தமக்குச் சிவபெருமான் இருக்குமிடத்தை அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். நாரத முனிவரும் மனம் வருந்தி, "சிவபெருமான் வெள்ளி யங்கிரி மலேச் சார்பில் தமது ஐந்து முகங்களேயும் ஐந்து கிரிகளாக்கி மறைந்து போனுர்" என்று உரைத்தனர். பின்பு எல்லாரும் தெற்கு நோக்கி வந்துகொண்டிருக்கையில் எல்லா நதிகளும் வற்றிப் போய் இப்புவனத்தில் எங்கும் மழைமாரி யில்லாமல் காடு மலேகளெல்லாம் வெந்து கருகிக் கிடப்பதைக் கண்டார்கள் இதற்குக் காரணமென்ன வென்று நாரத முனிவரைக் கேட்கவும் அவர், "சூரர்கள் கொடுமையினுல் இவ்வுலகம் இந்நிலேயிலானது. அகத்திய முனிவர் ஒன்பது நதிகளேயும் உள்ளிட்ட ஆயிரம் கோடி நதிகளேயும் தமது கமண்டலத்தில் அடக்கிக்கொண்டு குடகு மலேச் சார்வில் வெள்ளியங்கிரிப் பொதும்பில் தவம் செய்து கொண்டிருக்கின்ருர்" என்று கூறினுர். மீண்டும் தேவர்கள் முனிவர்களும் நாரதரை நோக்கி, "முனிபுங்கவனே! மீண்டும் எல்லா நதிகளேயும் பெருக்கெடுத்தோடும்படிச் செய்யவும் நாங்கள் சிவபெருமானது அருளேப் பெறவும் யாது செய்ய வேண்டும். அதற்கு ஒரு வழி

எங்களைப் பாதுகாக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண் டார்கள்.

தேவர்கள்பால் கருணை கூர்ந்த நாரத முனிவர் கூறுவார். ''தேவர் முனிவர்களே! நீங்கள் நேராகக் கன்னிகா வனம் என்னும் திருவாவினன்குடிக்குச் செல்லுங்கள். புரட்டாசி மாதத்தில் ஐந்து வாரம் எம்பிரான் விரதம் என்று சனீசுவரனைக் குறித்துத் தவம் செய்யுங்கள். சனீசுவரன் தோன்றுவார். அவரிடம் முறையிட்டால் அவர் தமது காக வாகனத்தை ஏவி அகத்தியர் அடக்கிய கமண்ட லத்தைக் கவிழ்க்கச் செய்து முன்போல நதிகளைப் பெருக் கெடுக்கச் செய்வார். உங்களுக்கும் ஆவன செய்வார்'' என்று கூறினர். அது கேட்ட தேவர்கள் முதலாயினோர் நாரத முனிவரையும் உடன் அழைத்துக்கொண்டு கன்னிகா வனம் திருவாவினன்குடித் தலத்திற்குச் சென்று புரட்டாசி ஐந்து வாரமும் சனி பகவானைக் குறித்து அரிய தவம் செய்தனர்.

## 6. தேவர் முனிவர்கள் ஐந்து சனி வார விரதம் இருந்தது

தேவர் முனிவர்கள் செய்த அரிய தவத்திற்கு மகிழ்ந்த சனீசுவரன் தேவர்களுக்குத் தன் காக வாகனத்தில் அமர்ந்து காட்சி கொடுத்தார். தேவர்கள் சனிபகவான் திருவடிகளைப் பணிந்து வணங்கி, ''எம்பெருமானே! சிவ பெருமானது சாபத்தால் நாங்கள் 91000 வருஷம் அசுரர் கையில் அகப்பட்டு அடிமைப்பட்டு அநேகம் துன்பத்திற் குள்ளானோம். இப்போது எங்கள் சிறை இன்னும் நீங்க வில்லை யென்றாலும் சுய உருவத்தை மட்டும் பெற்றுள் ளோம். எங்களை யெல்லாம் மறுத்து பூலோகத்திலுள்ள நதிகளும் வற்றிப் போயின. இப்புவனம் புவனமாக இல்லை; எங்களைப் பாதுகாத்தருள வேண்டும்'' என்று விண்ணப்பித் தனர். மகிழ்ந்த சனீசுவரன், ''நீங்கள் ஆண்டுகள்தோறும் இதுபோலவே புரட்டாசி மாதந்தோறும் ஐந்து வாரம் எம்பிரான் விரதம் இருப்பதாக ஒப்புக்கொள்ளுங்கள். எம் பிரானுக்கு அறிக்கை ஒப்பித்து வருவோமென்று அறிக்கை பண்ணிக் கொள்ளுங்கள். உங்களைப் பிடித்த நவக்கிரக தோஷங்கள் முதலாயின நீங்கிவிடும். சிவன் கிருபையால்

சுப்பிரமணியர் தோன்றி உங்கள் துன்பங்களைத் தீர்த்து அருள் புரிவார். நீங்களும் தேவ லோகத்தில் இனிது இருப்பீர்கள். இப்புவனமும் செழிக்கும்'' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பின், சனீசுவரன் தேவர்களிடம் கூறியது போல தேவர் முனிவர்களும், ''அவ்வாறே செய்து வருகின்றோம்'' என வாக்கு வரம் தந்தனர். சனீசுவரன் மனம் மகிழ்ந்து தன் காக வாகனத்தை நோக்கி, ''அகத்தியர் தவம் செய்யுமிடம் சென்று கமண்டலத்தைக் கவிழ்த்து எல்லா நதிகளையும் பெருக்கெடுத்து ஓடச் செய்து அகத்தியர் தவத்தையும் கலைத்து அவரையும் அழைத்துக்கொண்டு அரைக்கணத்தில் வருவாயாக!'' என்றனர். காக முனியும் அவ்வாறே செய்து வந்து சனீசுவரரிடத்தில் தாம் செய்து வந்ததை விவரமாகக் கூறினர். சனீசுவரனும் மறைந்து திருவாவினன் குடிக்குச் சென்றனர்.

## 7. காவிரி முதலான நதிகள் பெருக்கெடுத்தோடியது

இவ்வாறாகக் காக முனிவர் அகத்தியரது கமண்டலத்தைக் கவிழ்க்கவும் அதிலுள்ள ஒன்பான் நதிகளும் பிற நதிகளும் பெருக்கெடுத்தோடின. ஆயிரமாயிரம் நதிகளும் கம்பை, அம்பை, காவேரி, கோதாவரி, கிருஷ்ணா, வேதநதி, சிவகங்கை நதி என்பனவெல்லாம் பெருக்கெடுத்து எல்லா விடங்களிலும் சென்று பாய்தல் கண்ட அகத்திய மகா முனிவர் இவைகளின் ஓசையால் தவம் கலையப் பெற்று, ''இப்பூவுலகிற்கு இன்றுதான் நல்ல காலம் வந்திருக்கிறது'' என மகிழ்ந்து காக முனிவர்பால் யாவும் கேட்டுணர்ந்து தாமும் தேவர்கள்பால் செல்லப் புறப்பட்டனர்.

இங்ஙனம் ஆயிரமாயிரம் நதிகள் பெருகி வருவதைக் கண்ட உலக மக்கள் யாவரும் மனம் மகிழ்ந்தார்கள். கன்னிகா வனத்தில் 'சிவாசலநதி' பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்டு தேவர்கள் முனிவர்கள் யாவரும் அதில் மூழ்கியெழுந்து சனீசுவரன் பெயரால் அங்கு இலிங்கம் தாபித்து அருச்சனை ஆராதனைகள் செய்தனர். தாம் எப்பொழுதும் சதுர்யுக காலம் சனி விரதம் இருந்து வருவதாகக் கூறிச் சனி ஈசுவரனை மீண்டும் வணங்கிவிட்டு எல்லாரும்

கன்னிகா வனத்தைவிட்டு பவானிக் கூடல் என்னும் திரு நணுவுக்கு வந்தார்கள். அங்கு அகத்திய முனிவரும் வந்து சேர்ந்தனர். தேவேந்திரன் காவிரி நதி தீரத்தில் மணலினுல் லிங்கம் தாபித்து வணங்கினுர். திருநணு விலுள்ள திருநணு வுடையாரை யாவரும் வணங்கிய பின்பு ஐப்பசி மாதம் முழு தும் பவானியில் தங்கி இருந்து காவிரி வானி கூடுமிடத்தில் துலாமுழுக்கு மூழ்கியெழுந்தார்கள். அதன் பிறகு நாரதர் கூறியவாறு சிவன் இருக்குமிடம் அறிய மேற்கு நோக்கி வந்தனர். ஐந்து முகங்களையும் ஐந்து லிங்கமாக்கி மலைகளில் மறைந்துள்ளார் இறைவன் என்பதைக் கேட்டு தேவர் முனி வர்களும், அகத்தியர் நாரதர் தம்மோடு பிரம கிரிக்குச் சென்ருர்கள். ‡பிரமகிரி என்பதே அயன்மலையாகும்.

## 8. தேவர் முனிவர்கள் பிரமகிரிக்குச் சென்றது*

தேவர் முனிவர்கள் கார்த்திகை மாதம் முதல் சோம வாரத்தில் பிரமகிரிக்குச் சென்று அங்குள்ள 1C08 இதழ் கமல நதி, பிரம நதி, சரசுவதி நதி, அன்ன நதி, சதுர் வேத நதி என்ற பஞ்ச நதிகளில் மூழ்கியெழுந்து பிரம தேவனைக் குறித்து ஏழு நாள் தவம் இருந்தனர். பிரமன் காட்சி தந்தனர். தேவர்கள் தம் குறைகளை எடுத்துக் கூறுபவர்களாய், ''தேவனே! எங்களுக்குச் சிவதரிசனம் எப்போது கிடைக்கும்? எங்கள் துன்பங்கள் எப்போது தீரும்?'' என்று பணிந்து கேட்டனர். பிரமதேவன் அவர் களைத் தேற்றி எல்லாரையும் அங்குள்ள வட்டப்பாறையில் இருத்தி, பாறையைச் சதுர் கோணமாக மெழுகி அதில் 108 வெண்முத்துக்களைப் பரப்பித் தன் வேதத்தை அவிழ்த்துப் பார்த்து, ''கார்த்திகை கடைசி சோமவாரத்தில் சிவனருள் கிட்டும்; இன்னும் 32 ஆண்டுகளின் பின்பு சுப்பிரமணியர் தோன்றி உங்கள் துன்பம் தீர்ப்பார்'' என்று திருவாய்

‡ அய்யாசாமி மலை எனப்படும்.

* அயன்வரை உமையா ளோங்கல அவரொளி வெள்ளி வெற்பு
புயனிகர் மேனிச்செல்வன் பொருப்புயர் மருதக்குன் றென்
றியலுமைந் தடுக்கன் மாட்டு மிரும்புனல் தீர்த்தந் தோறும்
வயமிகு னிறைவ னுர்த மலரடி பூசித்தாரால்.

(பேரூர்ப் புராணம்- அபயப்படலம். 38)

மலர்ந்தருளினர். பின்பு எல்லாரும் அங்குள்ள அதிசயங்களைக் கண்டு களித்து பிரமதேவனையும் தம்மோடு அழைத்துக்கொண்டு திருமால் கிரிக்குச் சென்றனர்.

## 9. திருமால்கிரிக்கும் உருத்திர கிரிக்கும் சென்றது

இரண்டாம் சோம வாரத்தில் தேவர் முனிவர்கள் திருமால் கிரிக்குச் சென்றனர். அங்குள்ள சங்காளி நதி, கருட நதி, சக்கர நதி, அனுமந் நதி இவைகளில் தீர்த்த மாடினர். ஏழு நாள் தவம் இருந்தனர். இந்திரன் அங்கு விஷ்ணு லிங்கம் தாபிதம் செய்தனர். தேவர்கள் முனிவர்களும், பிரமன் நாரதன் அகத்தியர் முதலானவர்களும் திருமாலை வணங்கினர். திருமால் காட்சி தந்தனர். அவருடைய அருளையும் பெற்றுக்கொண்டு அவரையும் அழைத்துக்கொண்டு எல்லாரும் உருத்திரகிரிக்குப் புறப்பட்டனர். இந்திரன் விஷ்ணுகிரி வாசலைச் சாத்தி முத்திரையிட்டு, சுவரடைப்பில் இராமபாண முத்திரையையும் வைத்து மீண்டனன். பின் எல்லாரும் உத்திரகிரி யென்னும் உருத்திர கிரியில் உள்ள வீரபத்திர நதி, கன்னி நதி, தகர நதி, அக்கினி நதி, காற்று நதி என்னும் பஞ்ச நதிகளிலும் மூழ்கியெழுந்து ஏழு நாள் தவம் இருந்தனர். ஏழாம் நாள் அக்கிரியில் உருத்திரலிங்கம் தாபித்து வணங்கினர். உருத்திர பகவான் காட்சி தந்தனர். தம் குறைகளையெல்லாம் எடுத்துரைத்தனன். உருத்திர மூர்த்தியும் தேவர்களுக்கு ஆறுதல் கூறினர். பின் உருத்திரரையும் உடன் அழைத்துக் கொண்டு எல்லாருமாக மயேசுர கிரி என்னும் மகேசுர கிரிக்குச் (வெள்ளியங்கிரிக்கு) சென்றனர். மூன்றும் சோம வாரத்தை உருத்திர கிரியில் கழித்தனர் என்க.

## 10. மயேசுரகிரிக்கும் சதாசிவகிரிக்கும் சென்றது

பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், அகத்தியர், நாரதர், தேவர், முனிவர்கள் யாவரும் நான்காம் சோம வாரத்தில் மாணிக்கப்பச்சை மரகதகிரி என்னும் மயேசுர வெள்ளியங் கிரியில் அங்குள்ள ரிஷப நதி, பச்சை நதி, சிவகங்கை நதி, கன்னி நதி, விநாயகர் நதி என்னும் பஞ்ச நதிகளிலும்

மூழ்கி எழுந்தனர். தேவேந்திரன் கிரிவாசத்தில் உள்ள குகையை மாணிக்கப்பச்சை மரகத இரத்ன கோபுர குகையாகச் சோடித்து அங்கு பிருதுவி, அப்பு, தேயு, வாயு என்ற சதுர்வித லிங்கத்தைத் தாபிதம் செய்தனன். எல்லாரும் மகேசுர தேவனைத் தொழுதனர். மயேசுர பகவான் காட்சி கொடுத்தனர். தேவர்கள் தம் குறைகளை யெல்லாம் எடுத்துரைத்து மகேசுவரனிடம் வாக்கு வரம் பெற்றுக் கொண்டனர். அங்கு ஏழு நாள் தவம் இருந்து ஏழாவது நாள் மயேசுர தேவனையும் உடன் அழைத்துக் கொண்டு ஐந்து கிரி வேரும் ஒன்று கூடுகின்ற ஆராதார வீடாகிய சதாசிவ கிரி என்னும் நீலி கிரிக்கு வெள்ளியங்கிரி குகை வழியாகச் சென்றார்கள்.

சதாசிவகிரிக்குச் சென்ற எல்லாரும் அங்குள்ள சுப்ரதீப நதி, பஞ்சகல்யாணநதி, நீலமேகவண்ணநதி, பரமசோதிநதி, பரிமள கங்கா நதி, பரமானந்த நதி என்ற ஆறு நதிகளிலும் மூழ்கியெழுந்தனர். பின் தேவேந்திரனால் சோடித்து அலங்கரிக்கப்பட்ட குகைவாசத்தில் ஆகாயலிங்கமென்னும் சதாசிவ லிங்கத்தைத் தாபித்து வணங்கினர். ஐந்தாவது சோமவார இறுதி நாளாகிய அன்று சிவபெருமான் தன் ஐம்முகங்களாலும் தேவர்க்குக் காட்சி தந்தனர். தேவர்கள் முதலாயினார் பெரும்பேறு பெற்றவர்களாகி இறைவனைக் கண் குளிரக் கண்டு திருவடிகளை வணங்கினார்கள். பின்பு இறைவன் ஆணைப்படி எல்லாரும் வந்த வழியே திரும்பி வெள்ளியங்கிரிக் குகை வழியாக முன்போலவே மயேசுர கிரிக்கு வந்தனன்.

சிவபெருமான் மகேசுவரகிரியில் அலங்கரிக்கப்பட்ட குகையில் ஆறுகாற் பொற்பீடத்தின் மேல் வெண்புலி ஆசனம் விரித்து அதன்மேல் அமர்ந்துகொண்டு தேவர்களை நோக்கி, ''உங்கள் குறைகளையெல்லாம் சொல்லுங்கள்'' என்றனர். *தேவர்களும் சூரன் தம்மைப் படுத்தின பாட்டையெல்லாம் விரித்துக் கூறினார்கள். இவைகளைத் தன் செவிகளாலே கேட்ட சிவபெருமான் மிகவும் சித்தம் இரங்கி, சூரன்மேல் அதிகமான கோபம் உடையவராகி, ''சூரர்களையும் இராட்சதர்களையும் பஸ்மாங்கித தூளிதம் செய்யவேண்டும்'' என்ற எண்ணமுடையவராகி ஆதாரக் காட்டில் இருக்கின்ற பராபர மூர்த்தியைத் தன் சடாட்சரத் திருமந்திர முகாந்தரத்தினாலே தியானித்து பிரணவக் குடிலாகிய நெற்றிக் கண்ணின் வழியாக அக்கினிப் பொறியைத்

* திருப்பேரூர்ப் புராணம் அபயப்படலம் காண்க.

தருவித்தார். தேவர்களும் முனிவர்களும் உக்கிரம் தாங்காதவர்களாகி வில்வ வனத்திற் புகுந்து ஒளிந்து கொண்டார்கள். சுப்பிரதீப அனலைக் கண்ட பரமேசுவரியம்மையாரும் அலறி விரைவாக எழுந்திட்டாள். அம்மையாரது காற்சிலம்புகள் ஒன்றோடொன்று உராய்ந்த தட்டியன. அச்சிலம்புகளிலிருந்து ஒன்பது இரத்தினப் பரல்கள் அங்குப் பாறையின்மேல் உதிர்ந்தன.

சிவபெருமான் அவ்விநாடியே அந்த ஒன்பது இரத்தினக் கற்களையும் தன் பிரம முகத்தால் பார்த்தனர். ஒன்பது இரத்தினங்களும் ஒன்பது பெகண்ணாக மாறினார்கள். மற்றும் இரண்டாம் முறையாகச் சதாசிவன் அப்பெண்களைத் தன் பிரமமுகத்தால் பார்க்க அவ்வொன்பது பேரும் கருப்பம் கொண்டனர். இதைக் கண்ட உமையவளான பார்வதியம்மையார் திரேதாயுகத்தில் இனி 32 ஆண்டுகள் வரை இக்கருப்பங்கள் பிறவாதிருக்க வேண்டும் என்று சாபம் கொடுத்தனள். ஒன்பது பெண்களும் இறைவனையும் இறைவியையும் வணங்கித் திருக் கைலையிலேயே இருந்து வந்தனர். கோபம் தணிந்த சதாசிவன் வருணவாயு பகவான்களை அழைத்து விடவும் அவர்கள் சுப்ரதீபத்தை நீராட்டி அக்கினியைத் தணிய வைத்தார்கள். பின்பு களப கஸ்தூரி பன்னீர் மழையைப் பெய்வித்து எங்கும் நறுமணத்தை உண்டாக்கினர். பின்பு சதாசிவன் நாரத முனிவரை அழைத்து, ''நீவிர் தேவர்களையெல்லாம் இங்கு அழைத்து வாருங்கள்'' என்ன, அவரும் தேவர் முனிவர்களை அழைத்து வந்து குகை வாசத்தில் விட்டனர். தேவர் முனிவர்கள் யாவரும் மகிழ்ந்து இனிது இருந்தார்கள்.

## 11. ஆறுமுகக் கடவுள் அவதாரம்

வெள்ளியங்கிரியில் வீற்றிருக்கும் பஞ்சலிங்க மூர்த்திகளான சிவனார் வாயுவருண பகவான்களை அழைத்து, ''இச்சுப்பிரதீபத்தை எடுத்துச் சென்று சரவணப் பொய்கையில் போட்டு விடுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளவும் அக்கடவுளர் அவ்வாறே சுப்பிரதீபத்தை எடுத்துச் சென்று சரவணப் பொய்கையில் இட்டார்கள். அதுசமயம் எப்போதும்போல் சரவணப் பொய்கைக்கு வந்து நீராடிச் செல்லுகின்ற தேவலோக கன்னியர் ஏழுபேர் வழக்கம்போல் பொய்கையில் வந்து நீராடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள்

தம் துகில்களைப் (சேலைகள்) பொய்கையின் கரையில் வைத்து விட்டுச் சரவணப் பொய்கையில் குதித்தும் நீந்தியும் விளையாடினார்கள். சிவபெருமான் அருளால் வாயுபகவான் அச்சேலைகளை வெகுதூரம் அடித்துச் சென்றுவிட்டனன். மூழ்கியெழுந்து வந்த சப்த கன்னியரும் தமது துகில்களைக் காணாது வருத்தமுற்றனர். பின்பு சரவணப் பொய்கையில் சுப்பிரதீபம் இருப்பதையறிந்த சப்தகன்னியரும் சுப்பிரதீபத்தைக் கொண்டு பொய்கையின் கரையில் குளிர் காய்ந்து கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருத்தியாகிய சிவகன்னி குளத்துள் குதித்து மறைந்து போனாள். மற்ற ஆறுபேரும் சுப்பிர தீபத்தைக் காய்ந்ததால் சுப்ரதீபத்தின் வெப்பத்தால் கருப்பங்கொண்டனர். சில நாட்களில் அந்த ஆறு பெண்களும் ஆறு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். தேவ கன்னியராகிய அவர்கள், ''இக்குழந்தைகளை வளர்த்து வருவோமானால் வேதரிஷிகளும் நமக்குப் பொல்லாதவர்களாவார்கள். வேதமுறை நீதி ஒழுக்கம் தவறி இப்புவனத்தில் யுகாந்த பிரளயம் உண்டாகும்'' என்று தமக்குள் கூறிக்கொண்டு அக்குழந்தைகளைச் சரவணப் பொய்கையில் விட்டுவிட்டு தாங்களும் பொய்கையில் குதித்து நரலோகம் சேர்ந்து நரகன்னியர்களானார்கள். ஆறு குழந்தைகளையும் தாமரை இலைகள் தாங்கி நின்றன. அப்போது அங்கு இறைவன் அருளால் கார்த்திகைப் பெண்கள் ஆறுபேர் தோன்றினர். அவர்கள் அக்குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்த்து வந்தனர்.

இது இவ்வாறாக பூலோக கைலாச வெள்ளியங்கிரியில் தேவர்களெல்லாம் தம்மைச் சூழ்ந்திருக்கவும் நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும், அஷ்ட முனிவர்களும், அஷ்ட பாலகர்களும், அஷ்ட வசுக்களும், அஷ்ட கஜங்களும் தம்மைச் சூழ்ந்து நிற்கவும் சிவபெருமான் வெண்புலியாசனத்தின் மேல் வீற்றிருந்தார். சரவணப் பொய்கையில் நடந்த வரலாறுகளையெல்லாம் நேரில் கண்டறிந்த வாயு வருண பகவான்கள் சிவபெருமானிடம் வந்து அந்நிகழ்ச்சிகளை அவரிடம் எடுத்துரைத்தார்கள். மிகவும் மகிழ்ந்த பரமேசுவரர் உமையவளாம் பார்வதிதேவியாரையும் மற்ற எல்லாரையும் அழைத்துக்கொண்டு சரவணப் பொய்கையை அடைந்தார்கள். தேவர் முனிவர்கள் யாவரும் சூழ்ந்திருக்க அம்மையப்பனாகிய அவர்கள் சரவணப் பொய்கையில் விளையாடிய குழந்தைகளை மகிழ்ச்சியோடு பார்த்தார்கள். குழந்தைகளில் ஒன்றை வளர்க்க வேண்டுமென்று ஆவல்

கொண்ட உமையவள் குழந்தைகள் ஆறு பேரையும் பார்த்து, ''மக்களே வாருங்கள்'' என்றனள். தம்மைத் தாயார் அழைப்பதை அறிந்த குழந்தைகள் அறுவரும் தாயின் மடியில் வந்து அமர்ந்தனர். உமையவள் தன் திருக் கைகளால் அவ்வறுவரையும் அணைத்து மகிழ அக் குழந்தை கள் இறைவன் இறைவி ஆகியோர் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். அவர்களை மீண்டும் வாரி எடுத்த உமையாள் அவர்களை மார்போடணைத்து இறுகத் தழுவி உச்சிமோந்து தம் உண்ணுமுலைப் பாலமுதம் தந்து மகிழவும் அவர்கள் ஆறுமுகமும் பன்னிரு கையும், பன்னிரு நயனமும் செவியும், கால் இரண்டும் உடல் ஒன்றுமாக அமைந்திருந் தனர். இதைக் கண்ட அன்னையர், ''**ஆறுமுகா**'' என்று அழைத்து ஆறுமுகனைத் தம் இறைவனான சிவபெருமானிடத் துத் தந்தனள். அவர் ஆறுமுகனைத் தன் இரு கைாளாலும் வாங்கி மடியில் வைத்துக்கொண்டு, ''எந்தன் குருவே'' என்றும், ''உலகைக் காக்க வந்த உத்தமனே' என்றும் தம் வாயாரப் புகழ்ந்து போற்றினர்.

## 12. நவவீரர் தோன்றியது

ஆறுமுகக் கடவுள் தோன்றியதை முன்னிட்டுத் தேவர் முனிவர்கள் பொன்மாரியும், பூமாரியும் பொழிந்தார்கள். பின் எல்லாரும் வெள்ளியங்கிரிக்கு எழுந்தருளினர்கள். சிவபெருமான் உமாதேவியாரைப் பார்த்து, ''நம் மகனுக் குத் துணையாக உன் கால்சிலம்பில் அவதரித்த நவரத்தினங் களையும் அழைப்பாயாக!'' என்றனர். உமாதேவியும் அந்த ஒன்பதின்மர் வயிற்றில் 32 ஆண்டுகள் வளர்த்திருந்த நவவீரர்களையும், ''உந்திக் கமலத்தின் வழியாக ஓடி வாருங்கள்'' எனவும் அந்நவவீரர்களும் ரணவீர மாலை யிட்டுக்கொண்டு குந்தம், பரிசை, கேடயம் என்னும் இவை களைக் கையில் தாங்கிக்கெண்டு வீரக் குலவையிட்டுக் கொண்டு ஓடிவந்தனர். வந்ததும் உமையவள் பாதங்களில் சரணடைந்தார்கள். பின்பு அந்த நவவீரர்களுக்கும் துணை யாக அந்த ஒன்பது பெண்களின் சரீர வியர்வையின் வழி யாக இலட்சம் தளவீரர்களும் வரவேண்டுமென்று உமைய வள் திருவாய்மலர்ந்தருளவும் இலட்சம் தளவீரர்களும் அப்படியே வந்து உமையவள் பாதத்தில் சரணடைந்தார் கள். உமையவள் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் யாவரும் கந்தனுக்குத் துணையாக இருந்து இந்த மூன்று உலகங்

களையும் கைக்கொள்வீராக!" என்று அவர்களுக்கு ஆணையிட்டனள்.

உந்திக் கமலத்தில் பிறந்த நவவீரர்களில் நந்திதேவரானவர் வலமாணிக்க கெற்பத்தில் தோரண வீரமாலையிட்டுப் பிறந்ததால் பத்மாசூர சங்காரப் போர் செய்ய வந்த **'இரணவீரபாகு'** எனப் பெயரிட்டு அழைத்தனர். அஷ்ட வசுக்களானவர் அஷ்ட வீரராக அவதரித்ததால் அவர்களுக்கு **'அஷ்ட வீரர்கள்'** என்றும் பெயர் தந்தனர். ஒன்பது பெண்களின் சரீர வியர்வையில் தோன்றிய இலட்சம் வீரர்களுக்கு **'வீரசமத்தர்'** என்றும் பெயர் கொடுத்து வீரபாகுதேவர் தலைவராக உள்ள லட்சம் வீரரையும் சுப்பிரமணியர் வசம் ஒப்படைத்து, இலட்சம் வீரரும் அடிமை செய்து வரவேண்டும் என வீரர்களுக்கு ஆணையிட்டு, சக்கிரவாளகிரி உள்ள வரைக்கும் சத்திசிவனும் சந்திராதித்தரும் உள்ளவரைக்கும் இந்த லட்சம் வீரர்களையும் காத்து வரவேண்டுமென சுப்பிரமணிய தேவருக்கும் ஆணையிட்டு சக்தியுமையாகிய பரமேசுவரியம்மையாள் தன் நவகோடி சக்திகளையும் ஒன்ருக்கி அச்சக்தியை வேலாகச் சமைத்து அவ்வேலைச் சுப்பிரமணியன் கையில் கொடுத்து, "இன்று முதல் நீ சுப்பிரமணிய வேலணுகி பத்மாசுரனைச் சங்காரம் செய்து வெற்றி கொண்டு தேவேந்திராணிக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்தும் தேவேந்திரனையும் தேவர்களையும் சிறைவீடு விடுவித்துக் காத்து, தேவேந்திரனுக்கு முடி சூட்டுவித்து இவ்வுலகைக் காப்பாயாக!" என்று ஆசி மொழிகள் கூறியருளினுர். வேலவனும் தளவீரர் வீரபாகு முதலானவர்களும் சத்திசிவனை வணங்கி அவரது ஆசியையும் பெற்றுக்கொண்டு தேவர்கள் தக்கமுனி அகத்தியமுனி முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகியோருடன் கைலயங்கிரியான வெள்ளிமலையில் தங்கியிருந்தனர்.

## 13. சூரபதுமனேடு போரிட்டு வென்றது

சுப்பிரமணியனும் நவவீரரும் இலட்சம் வீரரும் ஆதிசிவ கைலாசமாகிய வெள்ளிமலையில் இருப்பதைக் கண்ட தென்பால் கடல் நடுவில் மகேந்திரபுரியில் வாழும் சூரபதுமன் என்பவன், "இவர்கள் நம்மை அழிக்கவே தோன்றியிருக்கிருர்கள். இவர்களை வளரவிட்டால் நமக்கு ஆபத்தாகப்

போய்விடும்'' என்று எண்ணியவனுய்த் தான் *உவப்பநாரத ரிஷி என்பவரைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு தகர வேள்வி யாகம் ஒன்றைச் செய்தான். அந்த யாகத்தின் முடிவில் சண்டமாருதயமன் பகடுபோலப் பிறந்து கோடை இடிபோலக் கர்ஜித்து ஆயிரத்தெட்டண்டமும் நிலைகுலைந்து அசையும்படியாக ஆர்த்து எழுந்தான். எழுந்து, ''எனக்கு இட்ட பணி யாது?'' என்னவும், ''உனக்கு எதிர் வெள்ளியங் கிரியில் சுப்பிரமணிய தேவரும் இலட்சம் தளவீரரும் நவ வீரரும் இருக்கின்றார்கள். அங்குப் போவாயாக!'' என்று சூரபதுமன் ஆணையிட்டான். அச் சண்டமாருத யமனும் 'அவ்விதமே செய்வேன்' என்று கூறி மகாமேரு பர்வதமாகிய வெள்ளியங்கிரிக்குச் சென்று மலையை முட்டி அசைத்துக் கோடை இடிபோல முழங்கி நின்றான். உடனே ஆயிரத் தெட்டு அண்டமும் சக்கரவாளகிரியும் நடுநடுங்கியது. சிவன் சக்திமுகமாகத் திரும்பினர். சூரிய சந்திராதித்தர்கள் சூறைக் காற்றால் எழும்பிய செம்மையான புழுதியில் மறைந்து போனார்கள். எங்கும் இருள் சூழ்ந்தது.

இது இவ்வாறாகச் சூரபதுமனுதியர் தம்மைத் தாக்க வருவதாக அறிந்த தேவர்களும் முனிவர்களும் மிரண்டு கலைந்து திசைகெட்டு ஓடிப் போய் உருத்திரகிரிக்கும் தென் பால் விஷ்ணுகிரிக்கும் கீழ்ப்பால் உள்ள சக்திகிரி முத்திகிரி அடிவாரத்தில் வடபாரிசத்தில் படுபாறையின்மேல் (தேவர் கூட்டத் திருப்பாறை) கூடியிருந்துகொண்டு, ''இவ்வாறு எல்லாத் தேவதைகளும் மிரண்டு நின்ற காரணம் என்னவோ! இது மாய்கையும் மாயமுமாய் இருக்கின்றதே!'' என்றெல்லாம் கூறியவர்களாய் மறைந்திருக்கும்போது, அச்சண்டமாருத யமன் ‡ஆட்டுக் கிடாயாக (தகர்) உருவம் தரித்துக்கொண்டு சிவகுமாரனோடு போர்புரிய வந்தனன். சிவகுமாரன் ஏவலால் வீரபாகு தேவர் சிறிதும் அஞ்சாமல் அதனைப் பிடித்து வந்து (அத்தகரை) சிவன் பாதத்தில் விட்டார்கள். மகிழ்ந்த சிவபெருமான் வீரபாகுவுக்குச்

---

* இதிலிருந்து வரும் கதை கந்தபுராணத்திற்கு மாறுபட்டது. சோழன் பூர்வ பட்டயத்தில் உள்ளபடி இங்கு கூறப்பட்டுள்ளது.

‡சிவபெருமானுக்குப் பிரீதியாகும் வண்ணம் நாரதர் முனிவர்களோடு சேர்ந்து செய்த யாகத்தில் தோன்றிய ஆடு. தேவர்கள் இதைக் கண்டு அஞ்சினர். வீரபாகு அவ்வாட்டைப் பிடித்து வந்தனன் என்பது கந்தப் புராணம் தகர்ஏறுபடலம் (உற்பத்திக்காண்டம்) இங்கு சூரபதுமன் செய்த யாகம் என மாற்றி உரைக்கப்பட்டுள்ளது முரண்பாடு.

சரிகை, வெண்சாமரை, இலவண்டை, மல்லாரி, வீரசேகணம், வலம்புரிச்சங்கு, வெற்றித்தாரை, இரணவீரவரி, வேங்கைப் புலிக்கொடி, நிசானி (ஒரு பறை) முதலானவைகளை வரிசையாகக் கொடுத்து வீரபாகு பிடித்து வந்த தகரை சூர சங்காரத்திற்குப் பின்பு வேல்முருகனுக்கு வாகனமாக்கு வீராக என்று கூறி கடம்ப மாலையும் சங்கு சக்கரமும், திரி சூலமும் கொக்கற்கும் (கொக்கரை வலம்புரிச் சங்கு, வாள்) கொடுத்து, ''நீயே தேவர் சேனாபதியாவாய்'' என்று திரு வெண்ணீற்றுக் காப்பிட்டு மகிழ்ந்தார்.

பின் வேலனும் வீரபாகு முதலியவர்களும் திருமாலையும் உடன் அழைத்துக்கொண்டு தேவர்கூட்டத் திருப்பாறையை அடைந்தனர். இவர்களைக் கண்ட தேவர் முனிவர்கள் பாறையைவிட்டு எழுந்தருளி முருகன் திருமால் ஆகியோரை வணங்கினர். எல்லார்க்கும் ஆதரவு கூறிய சுப்பிரமணியர் தாம் அங்கு வந்ததற்கு அடையாளமாக அந்தப் பாறையில் ஐராவதக் கல்வெட்டுப் பொறித்து அங்கு ஐராவதப் பொய்கை, தேவர் பொய்கை, அகத்தியர் பொய்கை, நாக தேவ கன்னிகள் பொய்கை, சங்குசக்கரப் பொய்கை, ரிஷப நதி, சரவணப் பொய்கை நதி, பிரமதீர்த்தம், கர்ப்ப நதி என்னும் இவைகளையெல்லாம் அவரவர்கள் பெயரில் உண் டாக்கி முருகன் முதலிய எல்லாரும் இப்பொய்கைகளில் மூழ்கியெழுந்து திருமாலின் திருவடிகளையும் ஐராவத பதத் தையும் வணங்குகிறார்கள். பின்பு யாவரும் சத்திகிரிக்குச் சென்றார்கள். சுப்பிரமணியர் அங்கு இருந்துகொண்டே தன் வேலாயுதத்தை வடகாசிக்கு அனுப்பினார். வேலாயுதம் வடகாசிக்குச் சென்று அங்கு பாதாள குகையிலிருந்த வட வாலை, சிவகங்கை, பளிங்கு லிங்கம் என இவைகள் மூன் றையும் கொண்டுவந்து சமர்ப்பித்தது. இங்கு வந்ததும் சிவகங்கை வேல்வாவியாறாகப் பெருகியது. பளிங்கு லிங்கம் வடகாசிக் குமரலிங்கமாயிற்று. வடவாலையாறு வடகாசி யாறாயிற்று. இவ்வாறுகளில் பாலசுப்பிரமணியன் முதலிய எல்லாரும் மூழ்கி எழுந்து, பிரமதேவனைக் கொண்டு குமர லிங்கத்தைத் தாபிதம் செய்து லிங்கத்தை வணங்கிக்கொண்டு எல்லாரும் எழுந்தருளி சிவசக்தி கைலாசத்திற்குச் சென்றார்கள்.

சிவபெருமான் சுப்பிரமணியனுக்குச் சேனாதிபதிப் பட்டங்கட்டி பிரமா, ருத்திரர், விஷ்ணு, மயேசுரர் என்ற நான்கு முகங்களையும் துணையாகச் சேர்த்து, நவவீரருடனே

இலட்சம் வீரரையும் சேர்த்து, முப்பத்து முக்கோடித் தேவர் களையும், தக்கமுனி அகத்தியமுனி மற்ற முனிவருடனே ஆயிரங்கோடி வெள்ளம் பூதகணங்களையும் சதுரங்க சேனை பலமாக அமைத்து உவப்ப நாரதர் அனுப்பிய தகரை வாகனமாக்கி, "சூரபதுமனையும் அவன் வீரர்களையும் கொன்று வருவாயாக!'' என்று கூறி அனுப்பினுர். சுப்பிர மணிய தேவரும் இவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு காசிக்குப் போய் விசாலாட்சி, விசுவநாதரைத் தரிசித்துக் கொண்டு, பின் காஞ்சீபுரம் காமாட்சி ஏகாம்பரரைத் தரிசித்துக்கொண்டு பின் மதுரை சென்று மீனுட்சி சொக்க நாதரைத் தரிசித்துக்கொண்டு, காஞ்சியிலிருந்த இரணவீர துர்க்கை கருமாரியையும் உடன் அழைத்துக்கொண்டு, சேனு முகத்துடன் போர் செய்யப் புறப்பட்டார். சர்ப்பகிரி, திருவாவினன்குடி, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, திருவேரகம், திருச்செந்தூர் ஆகிய இடங்களைப் படை வீடு களாக அமைத்துக்கொண்டு தமது படைகளை ஆங்காங்கே நாரதமுனிவரையும், வீரவாகுதேவரையும் மயேந்திரப் பட்டணத்துச் சூரபதுமனிடம் தூதாக அனுப்பினுர். அவர்கள் போய் வந்த பின்பு சுப்பிரமணிய தேவர் சூர பதுமனையும் அவன் வமிசத்தார்களையும் சங்காரம் செய்து முடித்தார். தேவர் சிறையை மீட்டினுர்.

பின்பு சுப்பிரமணியர் இந்திரனுக்குத் தேவலோக அரசை அளித்து ஆறுதல் கூறினுர். திருச்செந்தூரை விட்டுத் திருப்பரங்குன்றை அடைந்து இந்திரன் மகள் தெய்வயானையை மணந்து இன்புற்ருர். திருத்தணிகை சென்று வள்ளியம்மையாரைத் திருமணம் புரிந்தார். பின்பு தேவர் முனிவர்களை அழைத்துக்கொண்டு வெள்ளியங் கிரிக்கு வந்து சிவன் பாதங்களையும் சிவகாமி பாதங்களையும் தொழுது நின்றனர். சிவசுப்பிரமணிய தேவர், நவவீரர்கள், இலட்சம் வீரர்கள் ஆகியோருடைய பராக்கிரமங்களைக் கண்ட சிவபெருமான் மிகவும் மகிழ்ந்தார். தேவர் முனி வர்கள் பூமாரியும் பொழிந்தார்கள். சிவபெருமான் ஆதி கைலாசத்தில் இருந்துகொண்டு அகத்தியரைப் பொதிய மலையில் இருக்கச் செய்தார். பிரமனுக்குப் பிரமலோகத் தையும், இந்திரனுக்குத் தேவலோகத்தையும், விஷ்ணுவுக்கு விஷ்ணுலோகத்தையும் கொடுத்து ஆளும்படிச் செய்தார். முனிவர்களையும் இருடிகளையும் ஆங்காங்கு பயம் இல்லாமல் தவம் செய்து வரும்படித் திருவாய்மலர்ந்தருளி எல்லாருக்கும் நல்வாழ்த்துக்களைக் கூறித் தான் என்றும்போல் சிவலோக

கைலாசத்தில் உமையவளோடு வீற்றிருந்து இவ்வுலக மக்களுக்கு அருள் புரிந்துகொண்டிருந்தனர். இவ்வாறு திரேதாயுகத்தில் பூலோக கைலாயமென்னும் இவ்வெள் ளியங்கிரியில் இத்தகைய அதிசயங்களெல்லாம் நிகழ்ந்த படியால் இக்கிரிக்குப் 'பூர்வ கைலாசகிரி' என்று பெயரா யிற்று என்பதாக இவ்விருத்தாந்தங்களைச் சமய முதலி களானவர் கரிகால மன்னனுக்கு விரித்துரைத்தனர்.

## 14. கரிகாலன் வெள்ளியங்கிரிக்குச் சென்றது

முட்டத்து நல்லூரில் இருந்துகொண்டு கரிகால மன்னன் முதலானவர்கள் வெள்ளியங்கிரியின் விருத்தாந்தங் களைச் சமய முதலிகள்பால் கேட்டுணர்ந்து தாமும் தமது பரிவாரங்களுடனும் உடன் வந்த சமய முதலிகள் சேரமான் பெருமான், கஸ்தூரிரங்கப்ப செட்டி, திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன், சுப்பிரமணிய பண்டிதர் முதலியவர் களோடு பஞ்சகிரிகளுக்கும் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி, மூர்த்திகளைத் தரிசித்தும் அங்குள்ள அதியற்புதங் களைக் கண்டும் முடிவில் வெள்ளியங்கிரிக்கும் சென்று அங் குள்ள பஞ்சலிங்கத்திற்கு அபிசேக ஆராதனைகள் பலவும் செய்து மீண்டும் முட்டத்து நல்லூருக்கே வந்து சேர்ந்தனர். இங்குப் பல நாட்கள் தங்கியிருந்தனர். எல்லா ஆலயங் களுக்கும் மானியங்கள் விட்டனர். நாட்டுக்கு எல்லைகள் வகுத்தனர். கொங்கு நாடு என ஒரு தனி நாட்டை 24 நாடுகளாகப் பிரித்தனர். தாராபுரத்தைத் தலைநகராக் கினர். ஏற்றவாறு ஆங்காங்கு பல அதிகாரிகளையும் தலைவர் களையும் நியமித்துப் பட்டயங்கள் வழங்கினர். பல தொழில்கள் செய்து வரும் தொழிலாளர்களுக்கு அறவழியில் வரிகள் முதலானவைகளை ஏற்படுத்தி எல்லாரும் நன்கு வாழக் குடிகளுக்குப் பல வகைகளில் நன்மைகள் செய்தனர்.

பின் எல்லாரும் பேரூர், அவிநாசி, திருமுருகன்பூண்டி, கொச்சி, சேரமான்கண்டி, செம்புகட்டி நாராயணர் கோவில், மோகாம்புரி, நஞ்சுண்ட கூடல், திருவண்ணமலை, திருச்சிராப்பள்ளி, வெஞ்சமாக் கூடல், பவானி கூடுதுறை, விஷ்ணுகாஞ்சி, சிவகாஞ்சி, கருமாரியம்மை கோயில், சிதம்பரம், சீர்காழி, திருப்பதி, திருத்தணிகை, ஆற்காடு,

மதுரை, காசி, ஊஞ்சலூர், கதிர்காமம், பூம்பறை, திருக்காளத்தி என்னும் தெய்வத் தலங்களுக்கெல்லாம் சென்று ஆங்காங்குச் செய்யவேண்டிய திருப்பணிகளைச் செய்து முடித்தனர். தாம் திருப்பணிகள் செய்த திருத்தலங்களுக்கெல்லாம் ஆங்காங்குள்ள மூர்த்தங்களின் வடிவில் செம்பு விக்கிரகங்கள் செய்து அவைகளை ஆங்காங்கு உரிய அன்பர்கள் வசம் அனுப்பி வைத்தார்கள். இவ்வாறாக எல்லாரும் செய்து முடித்த பின்பு சோழ நாட்டுக்கு வந்து தத்தமது இருப்பிடங்களை அடைந்தனர். சோழ மன்னர்கள் 27 தலைமுறைகள் நன்கு நீதி தவறாமல் ஆட்சி புரிந்தனர். சமய முதலிகள் முதலியவர்களும் தமது கடமைகளை நன்கு புரிந்து வந்தனர். நாடு நலம் பெற்றது. மாதம் மும்மாரி தவறாமல் பெய்தது.

# 15. நாரதமுனிவர் வெள்ளியங்கிரிக்குச் சென்றது

வெள்ளியங்கிரியின் வரலாற்றை நந்தீசுவரர் வாயிலாகக் கேட்டுணர்ந்த முருகக் கடவுள் அவ்வரலாற்றை நாரத முனிவருக்கு எடுத்துரைத்தனர். நாரதமுனிவரும் வெள்ளியங்கிரிக்கு வந்து இறைவனை வணங்கிச் செல்ல விருப்பங் கொண்டார். சிவபெருமானைத் தம் உள்ளத்திலேயே தியானித்துக் கொண்டு, தென்னையும் கமுகும் சூழ்ந்த வளப்பம் பொருந்திய கொங்கு நாட்டிலுள்ள வெள்ளியங்கிரி மலைக்கு வந்தனர். அன்பினால் கண்ணீர் ஆறாகப் பெருகவும் பக்தியினால் பல பண்புகளைத் தம் வீணையில் அமைத்துப் பாடிக்கொண்டு மலைச்சாரலில் வந்து தங்கினார். அங்கு வண்டுகள் ரீங்காரம் செய்யும் சோலைகளையும் மலர்களையும் கண்டு வியந்தார். பன்றிகள் கிழங்குகளைத் தோண்டித் தின்றன. சிவபெருமானது உருவமாக விளங்கிய அம்மலைகள் யானைகள் குறும்பு செய்தன. இறைவன் அமர்வதற்கேற்ற ஆசனத்தை யாமே தந்தோம் என்ற களிப்பினால் புலிகளும் சிங்கங்களும் களித்து விளையாடின. மான் கரடி போன்றனவும் அரவினங்களும் ஆடின. சிற்றருவிகள் நெளிந்து ஓடின. நீண்ட துதிக்கைகளையுடைய யானைகள் தம்முள் போரிடுவதால் அவைகளின் கால்கள் பட்டு உடைந்த மூங்கில்களுள் முத்துக்கள் உதிர்ந்தன. வைரமணிகள் ஒளிவிட்டு மின்னியன. வெண்மையான திருநீறு பிரகா

சித்தது. பல வகையான பறவைகளும் வண்டுகளும் எழுப்பும் ஒலிகள் நிறைந்தன. சோதிமரம் ஒளி வீசியது. வேடர்கள் முழக்கும் வாத்திய ஒலிகள் விண்ணை முட்டியன. நல்ல காற்று வீசும் திடர்களும் மேகங்கள் மூடிய மலைகளும் தென் பட்டன.

இத்தகைய காட்சிகளையெல்லாம் கண்டு களித்த நாரதர் வியப்படைந்து உயர்ந்து விளங்குகின்ற மலைகள் ஆறையும் கடந்து சென்று ஏழாவது மலையாகிய வெள்ளியங்கிரியை அணுகினர். அங்கு இறைவன் நடம் புரிகின்ற சிலம்பின் ஓசையும் சிவனடியார்கள் தேவர்கள் இவர்களது முழக்கமும், தேவ துந்துபி நாதம் முதலாயினவும் கேட்டு மகிழ்ந்தார். பின்பு இப்பூவுலகத்தவர்கள் தொடுவதற்கு அஞ்சுகின்ற குளிர்ச்சியையுடைய புதுமணம் வீசுகின்ற நதியாகிய ஆண்டிகளையில் நீராடினர். பின் தமது மெய்முழுதும் திருநீறு பூசிக்கொண்டு நேமநிட்டைகளைச் செய்து முடித் தனர். அங்கு தமக்குக் காட்சியாகத் தென்பட்ட பிரமன் மலை, வேலன் மலையாம் மருதமலை, திருமால்மலை, சத்திகிரி, கணபதி மலை ஆகிய இவைகள் வெள்ளியங்கிரியின் அடிவரை யாகக் காணப்படுவதை யறிந்து இங்கிருந்தும் அவைகளை வணங்கினர். பின் மலையின்மேல் நின்று சுற்று முற்றும் பார்க்கவே பீடங்களைப் போன்று காணப்படுகின்ற மலைத் தொடர்களையும் சிவலிங்கம்போல் காட்சி தருகின்ற கிரிமலை யையும் கண்டு வியந்தார். ஏழாம் மலையாகிய கிரிமலையின் உச்சியை அடைந்த நாரதர் அங்கு சிவலிங்கமாகக் காட்சி தருகின்ற இறைவன் தன்மையைக் கண்டு உள்ளம் உருகவும், மெய்ம்மயிர்சிலிர்க்கவும் கண்ணீர் அருவியெனப் பொழியவும் புளகாங்கிதம் அடைந்து தம் இருகைகளையும் உச்சிமேல் குவித்துக்கொண்டு இறைவனை வணங்கினர். ''இக் குன்றின் மேல் வீற்றிருந்து இவ்வுலக மக்களுக்கு அருள் புரிகின்ற முக்கண் இறைவனே! பராபரனே! அடியேனுகிய எனக்கு அருள்புரிந்த அற்புதம்தான் என்னவோ!'' என்று வாயாரப் போற்றி மகிழ்ந்தார். பின் பல பூசனைகளும் புரிந்தனர். தேவர்கள், விஞ்சையர்கள், சித்தர்கள், சாரணர்கள், தவசிகள், என்பவர்கள் விரும்பி வாழுகின்ற வெள்ளியங்கிரி யின்கண் கணபதியையும், வேலனையும் உமையவளையும் தன் அருகில் வைத்து மகிழ்கின்ற இறைவனைத் தம் பண்ணிசை யால் பாடி மகிழ்ந்தார்.

இப்பிறவியில் தாம் விரும்பிய போகங்களையெல்லாம் துய்த்துப் பின் பேரின்பம் வேண்டி நிற்கும் அன்பர்கள்

வெள்ளிமலையானையே வணங்குவார்கள். அத்தகைய இறைவன் திருவடிகளை மேலும் தொழுத நாரதர் கணபதி, முருகன், உமையாள் ஆகியோரையும் தம் இசையாற் பாடி மகிழ்ந்தார். பின் மலைச்சாரலில் மேற்குத் திசையில் சென்று பார்க்கின்றார். அங்கு பொன்மயமாக விளங்குகின்ற ஆலயத்தைக் கண்டு மேலும் களிப்படைந்து அக்கோயிற்குச் சென்றார். ஒளி விடுகின்ற பூரணநிலவுகளும், மும்மதம் பொழிகின்ற ஆயிரம் கொம்புகளையுடைய வெள்ளையானைகளும், பொன்மயமான தேரில் பூட்டியுள்ள குதிரைகளும் அக்கோயிலின் பொற்படிகளில் நின்றுகொண்டிருந்தன. *பிண்டிபாலம், கப்பணம், முசலம், மழு, கதை, தண்டு, சக்கரம், வச்சிராயுதம், சூலம், சுரிகை, குயம், சிலை, வாள், பாசம் என்னும் ஆயுதங்கள் பலவற்றையும் தாங்கியுள்ள பூதகணங்கள் அருகே மொய்த்து நின்றன.

பணை, துடி, படகம், தக்கை, பணவம், திண்டிமம், தடாரி, கிணை, பதலை, மொந்தை, சல்லரி, பம்பை, கேழ், மண் கணைவளை, கோடு, பீலி, காளகம், தாரை என்னும் வாத்தியங்களைக் கையில் ஏந்திய பூதகணங்கள் ஒருபுறம் ஆர்த்து நின்றன. †நைவளம் போன்ற பண்புகள் எட்டையும் விளக்கஞ் செய்கின்ற குறிஞ்சியாழும், ¶அராகமாகிய ஐந்தையும் தோற்றுவிக்கும் பாலையாழும், விண்ணவரும் போற்றும், ‡படுமலைப் பாலைமுதல் எட்டுப் பண்களையும் தோற்றும் மருதயாழும், நெய்தலுக்கான விளரியாழும்,

---

* "கழுக்கடை பிண்டி பாலங் கப்பண முசல ஞாங்கர்
மழுக்கதை தண்டுநேமி வஞ்சிரஞ் சுரிகை சூலம்
எழுக்குயஞ் சிலைவாள் பாச மின்னபல் ரடையினேடும்
அழுக்கடை யாத பூத ராலய மருங்கு மொய்ப்ப."

"பணைதுடி படகந் தக்கை பணவந் திண்டிமந் தடாரி
கிணைகுளிர் பதலை மொந்தை சல்லரி பம்பை கேழ்மண்
கணைவளை கோடு பீலி காளகந் தாரை முற்றுந்
துணையறு கணங்க ளோர்பால் அவையமிழ் தெனச்சேவிப்ப."
(பெரும்புராணம். நார-வழி. படலம்)

† "நைவளங் காந்தாரம் படுமலை மருளொடு
வயிர்ப்புப் பஞ்சுரம் அரற்றுச் செந்திறம்
இவ்வகை எட்டும் குறிஞ்சியாழ்த் திறனே" [பிங்கலந்தை, 276]

¶ "அராக நேர்திறம் உறுப்புக் குறுங்கலி
ஆசான் ஐந்தும் பாலையாழ்த் திறனே" [ஷை 275]

‡ "நவிர் வடுகு வஞ்சி செய்திறம் நான்கும் மருதயாழ்க்கு
வருந்திறனாகும்" (பிங்கலந்தை)

"நேர்திறம் பெயர்திறம் காதாரி முல்லைஎன
நாலும் செவ்வழி நல்யாழ்த் திறனே" (பிங்கலந்தை)

நேர்திறம் முதலிய முல்லையாழும், தீங்குழலும் என இவைகளை இயக்கவல்ல கந்தர்வகான முனிவர்கள் அங்குக் காணப்பட்டனர்.

*காந்தாரம், புறநீர்மை, கௌசிகம், குச்சரி, நருத்தை, கவடி, நாட்டை, சாதாரி, கௌவாணம், கொல்லிக் கௌவாணம், காஞ்சி, சாயரி, பஞ்சுரம், பழம்பஞ்சுரம், சுரம், குறண்டி, மலரி, பைரவி என்னும் பண்களைப் பாடவல்ல பாணர்கள் உயர்த்துப் பாடவும், கொடுகட்டி, பாண்டரங்கம், கபாலம் என்ற இறைவன் ஆடல்களையும், குடை கொட்டி என்னும் ஆடல்களையும் ஆடவல்லார் ஆடவும், குடம்மல்லுமரக்கால், அல்லியம் என்னும் கூத்துவகைகளைக் கூத்துவல்லார் ஆடவும், மற்றும் அரம்பையர், எழுவகை மாதர், இந்திராணி, இலக்குமி, கலைமகள் ஆகியோர் பலவகைக் கூத்துகளையும் முறைப்படி ஆடவும், ‡உறுவசி, மேனகை, திலோத்தமை என்பவர் மலர்க் கைகளின் வழியே விழியும் விழிகளின் வழியே உள்ளமும் செல்லுமாறு மனம் மகிழ்ந்து நடமாடவும், தும்புருநாரதர் பலர் வீணைகள் வாசிக்கவும் கணக்கில்லாத இந்திரர்களும் பிரமர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும், கணக்கில்லாத சூரிய சந்திரர்களும், இந்திரலோகத்து விஞ்சையர் பலரும், கந்தருவர், கருடர், சாத்தியர், சித்தர், கருமதேவர், இந்திரர் என்பவர் பலரும் 'சய சய சய' என்று போற்றவும் சந்தனம் அறைத்தும் ஆலவட்டம் வீசியும் கவரி கொடிகளனைத்தும் பிடித்து நிற்பார் பலர் அங்கு சிவப்பணி புரியவும் கண்டு ஆனந்தமடைந்தார்.

உமையவளைத் தன் இடப்பாகத்திலும், கணபதி முருகன் ஆகியோரை அருகிலும் அமைத்துக்கொண்ட இறைவன் ஒளிவிடுகின்ற பொன்மயமான ஆசனத்தில் வீற்றிருந்தனர். இவ்வாறு இறைவன் இருப்பதைக் கண்ட நாரத முனிவர்

---

* "காந்தாரம் புறநீர்மை கௌசிகங்குச் சரிநருத்தை கவடி நாட்டை
வாய்ந்தோதுஞ் சாதாரி கௌவாணங் கொல்லிக்கௌ வாணங் காஞ்சி
ஆய்ந்தார் கொள் சாயரிபஞ் சுரம் பழம்பஞ் சுரங்குறண்டி யமிழ்தாய்க் காதிற்
போந்தேறு மலகரிகற் பயிரவியென் றிவைவல்லார் புகழ்ந்து பாட"
(நா. வ. படலம்)

‡ உறுவசிமே னகையரம்பை திலோத்தமையென் பவர்பலர்தா மொழுங்கி னின்று
நறுமலர்க்கை வழிவிழியும் விழிவழியுள் ளமுநடப்ப நடனமாட"
(நா. வ. படலம்)

தமது உள்ளத்தின் அன்பெனும் கடல் பொங்கி எழவும் அக் கோயிலின் வாயிலில் நின்று, சடாமுனிகள் சரியவும் உடை இழகவும் ஆனந்தத்தால் ஆடியும் பாடியும் மகிழ்ந்தார். அங் குள்ள கூட்டத்தவர்களையெல்லாம் கடந்து உள்ளே புகுந்து தமது உடல் மண்ணுள் படியுமாறு வீழ்ந்து வணங்கினர். பின் தமது கைகள் தாமாக உச்சியை அடையவும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து முன் சென்றார். நாரத முனீசுவரர் வருவதைக் கண்ட நந்தீசுவரர், ''நாரதரே வருக! முந்துக!'' என்று கூறவும், எல்லாம் வல்ல இறைவன் நாரதரைக் கண்டு, "நாரதரே, எப்பொழுது வந்தீர்கள்?'' என்று கேட் கவும் நாரதர், ''எம்பெருமானே! இன்றே வந்தனன்'' என்று கூறினர்.

* இறைவன் இருக்கும் இருப்பை நோக்கி மிகவும் மகிழ்ந்த நாரதர் வெள்ளியம்பல வாணனைத் தம் வாயாரப் புகழ்ந்து தம் வீணையை மீட்டிக்கொண்டு பாடலுற்றார்:

1. தண்ணார் மதியும் தனல்வா னரவும்
   சடிலத் தணியும் தலைவா சரணம்
   பண்ணாரிசையும் பகைமான் குரலும்
   படர்செஞ் செவிநா யகனே சரணம்
   பெண்ணு முமையு நீயா ணுருவும்
   பிணையுந் திருமே னியனே சரணம்
   விண்ணோ டருமண் ணவரும் பணியும்
   வெள்ளிக் கிரிவே தியனே சரணம்.

2. அண்டங் களனைத்து நொடிக் குழுன
   மடலைப் பொடியாக் குநுதற் சுடராற்
   பண்டின் பமனிக் குமலாக் கணைவேள்
   படவென் றருள்மீ ளிமையாய் சரணம்
   தொண்டன் றுமலா லறியா தவர்தஞ்
   சுரிகுஞ் சிமுடிக் கணியாஞ் சரணம்
   மிண்டுங் தருமன் படிவத் துதவும்
   வெள்ளிக் கிரிவே தியனே சரணம்.

3. தண்டா துலகோர்க் குவரம் பலவுந் தழையச்
   சொரியங் கையின்மும் மலமும்
   அண்டா தடைவா ருடலும பொருளு மணுவுந்
   தரவேற் றருள்வாய் சரணம

* ''ஆல மார்ந்த மிடற்றினன் கோல நோக்கிக் குளிர்ந்தனன்
சால வன்பு தழைத் தெழச் சீல மார்துதி செப்புவான்''

கண்டா னலனென் றெவரும் பரவுங் கடியார்
மலர்துன் றுபதத் திடைமண்
விண்டான் பதுமக் கண்ணீங் தருளும்
வெள்ளிக் கிரிவே தியனே சரணம்.

4. மத்தக் கரியீருரி போர்த் தருளும் வயவா
வியவார்க் கருளாய் சரணம
பத்திக் கமிழ்தா கியினித் தருளும் பரமா
புரமாய்த் தவனே சரணம்
எத்திக் குமிறைஞ் சநடம் புரியு மிறைவா
மறைவாய் மொழியாய் சரணம்
வித்தைக் கொருவைப் பெனவே திகழும்
வெள்ளிக் கிரிவே தியனே சரணம்.

5. அழலங் கையினுய் சரணஞ் சரண
மரிதங் கையினுய் சரணஞ் சரணம்
பழியென் பணியாய் சரணஞ் சரணம்
பரவென் பணியாய் சரணஞ் சரணம்.
குழவெண் மதியாய் சரணஞ் சரணங்
குணவோர் மதியாய் சரணஞ் சரணம்
விழிமும் மையினுய் சரணஞ் சரணம்
வெள்ளிக் கிரியாய் சரணம் சரணம்.

6. செய்யா வுருவாய் சரணம் சரணம்
செய்யாய் கரியாய் சரணம் சரணம்
நெய்யா வுடையாய் சரணம் சரணம்
நெய்யார் படையாய் சரணம் சரணம்
பொய்யார்க் குரியாய் சரணம் சரணம்
பொய்யார்க் கரியாய் சரணம் சரணம்
வெய்யாய் தணியாய் சரணம் சரணம்
வெள்ளிக் கிரியாய் சரணம் சரணம்.

எனப் பலவாறு பராவிப் புகழ்ந்து பாடக்கேட்ட இறைவனுர் நாரத மகா முனிவரை நோக்கி, ''நாரத முனிபுங்கவனே! உன் விருப்பம் யாது? கூறுவாயாக'' என்று திருவாய் மலர்ந்தார். அற்கு நாரத முனிவர், ''மேகங்கள் என்றும் படிந்துள்ள தென் கைலாயம் என்னும் வெள்ளியம்பலத்துள் உமையவளோடு வீற்றிருக்கின்ற எந்தையே! இன்றுபோல என்றும் தங்கள் திருவடித் தாமரைகளைத் தொழுகின்ற பெரும் பேறு தந்து அருளவேண்டும்'' என்றனர். நாரத

முனிவர் கேட்டவாறு வரம் தந்தார் இறைவன். பின்னர் நாரதர் எம்பெருமானது திருவடிகளை மீண்டும் வணங்கி அவ் விடத்தைவிட்டு நீங்காமல் நீங்கி இறைவன் நடம் புரிகின்ற வெள்ளியம்பலத்தைக் கண்டு ஆனந்தமடைந்து சிவலிங்க வடிவமாகக் காணப்படுகின்ற கிரிமலையை மூன்று முறை வலம் வந்து மீண்டும் இறைவனைத் தொழுதனர். அதன்பின் நாரதர் மாணிக்கங்களையும் பொன்னையும் வாரி வருகின்ற என்றும் வற்ருத காஞ்சி மகா நதியையும் அதன் கரையி லுள்ள வளம்பொருந்திய சோலைகளையும் கண்டு பேரா னந்தம் அடைந்து அந்த நதியில் நீராடி மூழ்கி எழுந்தார். வெள்ளியம்பலத்துள் காணப்படும் விம்மிதங்கள் யாவற்றை யும் கண்டு மகிழ்ந்த பின்பு காஞ்சிமகா நதியின் கரைவழியே வந்து அரசம்பலம் என்னும் திருப்பேரூர் நகரை அடைந் தனர்.

நாரத முனிவர் திருப்பேரூரின்கண்ணே ஒளி விடுகின்ற கற்களால் அமைந்த பட்டியம்பெருமானின் கோபுரத்தின் முன்பாக நின்று, இறைவன்மேல் வைத்த அன்பினுல் கண் களில் நீர் சுரக்கவும் கைகள் தாமே சென்று சிரத்தின்மேல் குவியவும் பட்டீசுவரரின் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங் கினுர். பேரின்ப வெள்ளத்தில் மூழ்கியெழுந்த நாரதர் மாயையினின்றும நீங்கப்பெற்றவராக நின்ருர். அரன், அரி, அயன் என்னும் மும்மூர்த்தியுமாகி படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்து மும்மூர்த்திகளுக்கும் எட்டாத ஆனந்தப் பொருளாகி, மும் மூர்த்திகளும் போற்றுகின்ற வெள்ளியம்பலவாணன் இங்கு ஆதிலிங்கமாகக் காட்சி தருகின்ற பட்டியெம்பெருமானைக் கண்டு வறியவர்கள் மாணிக்கத்தை அடையப் பெற்று மகிழ் வதைப்போல மிகவும் உவகை கொண்டு இறைவன் வீற் றிருக்கின்ற பீடத்தின் அருகே சென்று நின்றனர். அங்கு தாம் பிறவிக்கடலை நீக்குகின்ற ஒள்ளிய அமிர்தத்தை அருந்துவது போன்ற ஆனந்தத்தை அடைந்தார். கடலி னின்றும் பெருக்கெடுத்து வருகின்ற அலைகளைப்போல ஆனந்தக் கண்ணீர் பெருகவும், அன்பின் மிகுதியால் மெய்யி னின்றும் வியர்வை வடிந்து கண்ணீரோடு கலந்து உடம்பை நனைக்கவும் இறைவனை மனமொழி மெய்களால் வாழ்த்திய நாரத முனிவர் அருட்கடலில் மூழ்கியெழுந்தார். பின்பு இருளைப்போன்ற கூந்தலையும் கருணை மிகுந்த கண்களையும், அழகிய தோள்களையும் புகழ்மிக்க திருவடிகளையும் கொண்ட மரகதவல்லியம்மையாராகிய, பச்சைநாயகியம்மையாராகிய

இறைவன் பங்கில் உறைகின்ற உமையவளைக் கண்டு வணங்கிப் பல பாடல்களையும் பாடி மகிழ்ந்தார்.

ஒன்றாகிப் பலவாகி உருவாகி அருவாகி இல்லையாகி உள்ளதாகி அணுவாகி மகத்தாகி இன்னும் எல்லாமாகி நின்ற எம்பெருமான் தில்லைச் சிற்றம்பலவன் திருப்பேரூர் அரசம்பலத்தில் நடம் செய்கின்ற திறத்தையும் அங்குள்ள விம்மிதங்களையும் கண்டு மகிழ்ந்தனர். *பின் காஞ்சிமகா நதியின் கரையில் சிவலிங்கம் தாபித்து அருகில் ஒரு தீர்த்தத்தையும் உண்டாக்கி (நாரத தீர்த்தம்) அருச்சனை ஆராதனைகளை முடித்துக்கொண்டு மீண்டும் இறைவனை வணங்கினார். பின் என்றும்போல் நாரத முனிவர் இனிதே இருந்தனர். நாரத முனிவரைப் போலவே இப்பூலக மக்களும் வெள்ளியங்கிரியையும் திருப்பேரூரையும் கண்டு இறையருள் பெற்று உய்வார்களாக!

## 16. வெள்ளியங்கிரியில் விம்மிதங்கள்

''எம்மையாளு மிரசத மால் வரை
மும்மை வையக முந்தொழு மூன்றுகட்
செம்மலார்தந் திருவுருவாதலால்
விம்மி தங்கள் விறந்தன வாங்கரோ.''

எனப் பேரூர்ப் புராணத்தில் கூறப்பட்டவாறு வெள்ளியங்கிரி மலையில் அதிசயமான மரங்களும் நதிகளும் பொருள்களும் என்பன பலவாக ஆங்காங்குக் காணப்படுகின்றனவாம். மற்றவர்கள் கண்களுக்குத் தெரியாத திவ்வியாஞ்சன மரங்களும், பாதுகையாகக் கொண்டால் ஆகாயத்திற் கொண்டு செல்லும் மரங்களும், பசிதாகம் தீர்க்கும் மரங்களும், என்றும் சிரஞ்சீவியாக வாழச் செய்து நரை திரை மூப்புக்களை ஒழித்து சதா ஆனந்தத்தை விளைப்பதுமாகிய

---

* "தவழ்புனற் காஞ்சி யாற்றுத் தடங்மரை மருங்கு முக்கட்
பவனருட் குறியொன்றன்பாற் பதிட்டைசெய் தாங்குப் பாங்கர்
நவமுறத் தீர்த்த மொன்று நலத்தக வாக்கி யந்தச்
சிவமலி நீரினாட்டிச் செய்தனன் பூசை முற்றும்.''

''அன்னதன் சிவலிங்கத்தி னருச்சனை முறையிற் செய்து
மன்னிய வாதி லிங்க வரதனைப் பணிந்தும் வெள்ளி
நன்னகத் திறைவன் கோல நயத்தகக் கண்டும் வையத்
தென்னுமன் பிலாத தூய னின்னன மிருக்கின்றானால்.''

(நாரதன். வ. படலம்)

மரங்களும், காயசித்தி யோகசித்தி தரும் மரங்களும், திரிகால ஞானத்தை உணர்த்துவதும், எட்டு வகையான சித்திகளைத் தருவதும் சர்வக்ஞ கலைஞானத்தைத் தரும் மரங்களும், அழல், வளிவிடம் என்னும் வெவ்வேறு வகையில் தம்பனங்கள் செய்ய உதவும் மரங்களும் வரோகதாரு என்னும் மரங்களும் இம்மலையில் உள்ளனவாம்.

மற்றும் மாங்கிசபேதி, அங்கிசபேதி, அயபேதி, சிலாபேதி, அன்னபேதி, உலோகபேதி என்பனவும், ஒளி தருகின்ற சோதியங் கொடிகளும், மிருத சஞ்சீவி அயக்காந்தம், அதிகாந்தம், வெய்யோன் காந்தம் என்பனவும், நாற்கோட்டு யானைகளும், நவமணிகள் விளையும் திடர்களும், பஞ்ச பூதங்களையும் தம்பம் செய்யும் மணிவகைகளும், இரசமணிக் கிணறு, அமுத கிணறு கந்தகமடு அற்புதமான குகைகள் என்பனவும், என்றும் உள்ள அன்னங்கள், விரசு சரசுகள் என்பனவும் இம்மலையை அடுத்த சாரல்களில் உள்ளன. இம் மலையின் தெற்குப் பகுதியில் ஏமகிரி என்னும் ஒரு கிரியுண்டு. அதற்கு மேற்புரத்தில் ஒரு குகையும் அங்கு தாமரை மலர்ந்த ஓடையும், அவ்வோடையில் முழுகினர் சகல சித்திகளும் பெறுமளவு யாவும் இம்மலையில் உள்ளன. அதற்கும் தெற்கே உள்ள மலைகளில் பால் கிணறும் உண்டு. இதன் பாலை அருந்தியவர்கள் ஆறு திங்கள் பசி தாகம் இன்றி இருப்பர். பால் கிணற்றுக்குக் கீழ்த்திசையில் மூன்று யோசனை தூரத்தில் சோதி மரமும் சர்க்கரை நதியும் அதற்கு மேற்கே பல நதிகளும் உள்ளன. அங்கு பல சித்தர் சாதுக்கள் தவம் புரிவர். சர்க்கரை நதிக்கருகில் உள்ள அத்திமரச் சோலையில் சித்தர் முனிவர் தவம் செய்வர். அருகே தாமரையோடையும் சிலா நதியும் உள்ளன. இந்நதியிற் பட்ட பொருள்கள் சிலையாகிவிடும். சிலா நதிக்கரையில் மணமுள்ள அநேக மருந்துப் பொருள்களும், அதற்கு வடக்கே தேவகுங்கிலிய மரமும் உள்ளது. இதன் பால் நரை, திரை, மூப்பு இவைகளை ஒழிக்கும். இராசவாத வித்தை நலம் தரும். இங்கு கோடி சூரியர்கள் உதிப்பதுபோன்று ஒளிவிடுகின்ற பளிங்கு மலையும் உள்ளது. இதன் பளிங்கு கொண்டு சிவலிங்கம் செய்து தொழுவோர் பெரும்பேறு பெறுவார்கள். இறைவன் தோன்றி அருளும் புரிவர்.

இதற்குக் கீழ் ஒரு யோசனை தூரத்தில் படிகமலைக்கு வடபாரிசத்தில் பாதரசக் கிணறு (பாதசரசு) உள்ளது. இதன் கரையில் கோடித் தூண்களோடு கூடிய கனக மண்டபமும்

அங்கு எம்பெருமானது சிவலிங்க வடிவமும் காணப்படும். அங்கு நாரதர், ஐங்கரர், வேலவன் முதலியோர் சிவன் பாதம் தொழுது நிற்பார்கள். தேவர்களுக்கு அல்லாது மற்றவர்களுக்குக் கேட்காத துந்துபி ஒலிகளும் அங்கு எழும். தூய உள்ளமுடையோர்க்கு மட்டும் இவ்வொலி கேட்குமாம். இதன் வடமேற்குப் பகுதியில் எறிதிரை நீர் ஓடை உள்ளது. சந்தான கரணி, சௌபாக்ய நற்கரணி, சஞ்சீவகரணி, சல்லியகரணி என்னும் பல மூலிகைகளும், குறையாத சித்தி தரும் மருந்துகள் பலவும், ஐந்து தலை மாணிக்கப் பாம்பு களும், ஆறு ஏழு தலை நாகன்களும், அயன்மலையில் சந்தனச் சோலையில் சிலா நதியும் சித்திர மூலியும், கருமை வெண்மை சிவப்புக் குன்றிகளும், பட்டுச் சிலம்பி முதலாயினவும் அங் குள்ளன. விஷ்ணுகிரியில் விஷ்ணு தீர்த்தமும் ஏலம், எலுமிச்சை, சாதிக்காய் என்பனவும் உண்டு. மருதவரையில் காமதேனு என்னும் தெய்வப் பசு எப்பொழுதும் வாசம் செய்கிறது.

'' திருவெள்ளி மாமலை மீதுதெய் வீகமார் தீபவதி
மிருதசஞ் சீவி சூதக் குழிசோதி விருட்சமகா
தருவைந் தலையகி பொன்மணி சேர்த்துச் சமைத்தவொரு
அருமைத் தனிமண் டபமுள வற்புத மானதுவே ''

* * *

'' நேரிற் றனஞ்சயன் மாதவச் சூழலு நீதிபரன்
போரிற் புளிஞனைப் போலடி பட்டதும் போனவைவர்
பாரிக் குயிலொடு பள்ளிகொள் பாறையும் பாய்நறவம்
ஏரிக் கரைததும் பும்வெள்ளி மாமலை யேறியவே ''

* * *

'' பதிபல வெள்ளி மலைமீதி லோடையும் பாற்கிணறும்
நதிபல சர்க்கரை யாறுள பாபவி நாசமுள
நிதிபல நாஞ மணியுள வாழ்க னிகுஞ்சமுள
எதிபல காஞ்சி நதியுள செல்வீ ரிவை தெரிந்தே ''

என்ற வெள்ளிமலைக் கட்டளைக் கலித்துறை அந்தாதிப் பாடல்களையும் காண்க.

# ஈ. பின் பகுதி

## 1. மலைகள்மேல் திட்டுகள், நதிகள், மூலிகைகள்

*வடக்கு மலையில் வேட்டைக்காரன் கோயில்—அவ்வழியில் வேலூத்து—கொங்கர்பட்டிக்கு அருகே தாழையூற்று—இராயர் கோயில் மொக்கை—இதன் மேற்கு வடபுறம் ஒற்றைவேங்கை—கல்லுருளிப்பாறை—அணைத்துறைமலை—பாபநாசம் அணை—அணையேத்தம்—தெற்கே நாகசெட்டித் திட்டு—அருகில் செங்கல்திட்டு—நெல்லிக்காய்த் திட்டு—காரிமலைக்காடு—விரிப்பாறைக்காடு—சூலக்கல்லடிப்பாறை—கம்பத்துப் படிகைக்குழி—முல்லைப்பூச் செடிகண்டி—மாரன் பதிக்காடு—தொளாயிரம் மூர்த்திக்கண்டி சின்னத் தண்ணீர்க்காடு — கானவரைப் பாதை — கொரக்கன்கல் கொட்டை—பைத்திட்டு—ஓரைக்காடு—கந்தப்பன் (வேளாளர்) திட்டு—மாவூத்து—விளாவூத்து—வால்கரடு †அப்பியார்த் திட்டு—வேட்டைக்காரன் மலை—தண்டக்காரன் பாறை (ஒரு ஏகர் பரப்புள்ளது வடக்கு மலையில்) வேலூத்து—சோபானம் சொட்டூத்து — விஷ்ணுகிரி அடிவாரத்தில் இச்சிக்குழி ஊற்று—(இராயர் கோவில் மொக்கையில் பெருமாள் லிங்கமும் பூசையும் உண்டு) பூண்டி அடிவாரத்திலிருந்து வடக்கேயும் கிழக்கே திருமால்கிரி வரைக்கும் உள்ள மலைத்தொடர்களில் சில மேற்கண்ட பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இராயர் கோயில் மொக்கைக்கு வடக்கே பூமாதேவிக் கோயிலும், மலையாள பகவதி கோயிலும் உள்ளன. கொங்கர்பட்டியில் பட்டீசுரர் கோவில் உள்ளது. மாடுகள் இங்கிருந்தும் கிரிமலைக்குச் சென்று பால்

---

* இக் குறிப்புக்களை ஈந்தவர், நரசீபுரம் உயர்சைவத் திருவாளர் செங் கவுண்டர் அவர்கள், இவர் தமிழறிந்த அறிஞர்.

† தேவராயபுரத்திலிருந்தவர் அப்பியார் என்பவர். திருவாளர் S.M. இளமசாமிக் கவுண்டர் முன்னவர், வேய்ங்குழல் ஊதுவதில் வல்லவர், அப்பியார் திட்டு என்னும் வடக்கு மலையில் வேய்ங்குழல் கானத்தின் மூலம் இறைவனை வழிபட்டுத் தவம் இருந்து அங்கேயே சிவனடி சேர்ந்தார். தைமாதம் இத்திட்டில் குருபூசை நடைபெறும்.

சொரியுமாம். பட்டியார் கோயில் பாறையில் மாட்டின் குளம்பு கொம்பு பட்டுள்ள சுவடுகள் உள்ளனவாம். பூண்டியருகே இடும்பன் கோவில்—பட்டி வெளியிலிருந்து வருவது வேலூற்று. (வழிப்பாலத்தின் அடியில் உள்ள பள்ளம்)—அணை வெளியில் மாமரத்தருகே பாபநாசம் கோயில்—அதன் கிழக்கே பட்டியார் கோயில் சுந்தரப் பெருமாள் கோயில்கள்—அருகே கரிகால் மன்னன் கட்டிய முட்டத்து அணை (கல்லணை) நீலியாறு மலையின் மேல்பாகத்திலேயே காஞ்சியாற்ருேடு கலந்துவிடுகின்றன.

*சத்திகிரி என்பது வடபாகத்தில் உள்ளது. இதன் தொடர் பாரத மலைத்தொடர். சத்திகிரியின் பின்புறம் வடபாகத்தில் சர்ப்பநதி (பாம்பாறு) ஓடுகிறது. தெற்கே கூச்சிமலையில் வெள்ளியாறு (இரசதக் கிணறு) உள்ளது. முதல் மலையில் வெள்ளி விநாயகர் கோயிலுக்குக் கிழக்கே தாழையூற்று (ஆகுவாகன் நதி) மயில் நதி—வேலூத்து—பூண்டியில் மறைந்து 13 ஆண்டுகள் ஆயின. கிரிமலையின் அருகே கருட நதி—வெள்ளைக் கருடன்கள் இங்கு குளிக்க வருமாம்—அருச்சுனன் பாறை இங்குள்ளது—வசவநதி—பூண்டியிலுள்ள குடிநீர் ஊற்று. இராமர் நதியும் அநுமந் நதியும் சீதை வனத்தில் தென்வடலாக ஓடுகின்றன—பீமன் கரு உருண்டைக்கு அரை மைல் தூரம் மேல் அகத்திய தீர்த்தம் (கருதப்படுகிறது)—ஆண்டிகளையில் ஆறு நதிகள் கூடுகின்றன. கிரிமலைக்கு அடியே அபிரகம், படிகம் மிகுதியாம்—நீலியாறு காஞ்சியாற்றின் கிளை ஆறு—ஆண்டிகளைக்குக் கீழ்த் திசையில் பறையன்பாறை—இங்கு பறை ஒலி கேட்கும். இரண்டாவது மலையில் வழுக்கற்பாறையும் பாம்பாட்டிச் சுனையும் (சுப்பிரமணிய தீர்த்தம்).

1. முதல் மலையில்: மூங்கில், தேக்கு, சாதி மரங்கள், சோதிப்புல், சோதிக்காய் (இக்காய்கள் இரவில் மின்னும்) பூண்டிக்கு அருகே ஒரு குகையும் உள்ளது. மலை ஏறும் படிக்குக் கீழ்பாகத்தில்.

2. இரண்டாவது மலையில்: வழுக்கைப்பாறை மலை, மிளகு, திப்பிலி என்பன கிடைக்கும்.

---

* இது முதல் இப்பகுதியில் வரும் குறிப்புகளை ஈந்தவர் உயர்சைவத் திருவாளர். B. M. இராமு அண்ணு அவர்கள். பூண்டி ஆதீன அர்ச்சகர் மூத்த குமாரர். சிறந்த சித்தமருத்துவரும் சிவநேசச் செல்வரும் தமிழறிஞருமாவார், போளமாம்பட்டியினர்.

3. மூன்றுவது மலையில்: கைதட்டுஞ் சுனைமலை, மிளகு திப்பிலி அதிகம், உதிரவேங்கை (ரோம விருட்சம்) இதன் பட்டை பிணநாற்றம் வீசும்; மழை நீர்போல் நுனியில் ஒழுகும், ரோமம்போல் சிலிர்த்திருக்கும்; இலைக்கள்ளிகள் உண்டு.

4. நான்காம் மலை: (ஒட்டன் சமாதிமலை) சல்லிக் குச்சிகள் மிகுதி; வசுவாசி (மதுரக் களிப்பாக்கு) அதிகம்; துவர்ப்புடையது; வாடாமஞ்சள் (சீறமஞ்சள்) உண்டு.

5. ஐந்தாம் மலை: (பீமன் களி உருண்டை மலை) வட பகுதியில் சண்பக மரங்கள் உண்டு. காட்டுப்பூக்கள் (குறிஞ்சிப் பூக்கள்) மிகுதி.

6. ஆறுவது மலை: ஆண்டிகளை மலை, வெள்ளை நாபி, வாசனைப் புற்கள், அட்டைப் பூச்சிகள், புல்லுருவிகள், சிவப்புக் கற்றுளை, கற்பூரவல்லி, மிளகு, திப்பிலி, பலாமரம், படிகக் கற்கள், இரத்தசூரி, சல்லிவேர் (சல்லி மூலி), பாம்பு போன்ற மரங்கள், ஏறுசிங்கை, இறங்கு சிங்கை, வண்ண மலர்ப் பூக்கள், சோலைக் கிழங்கு, கருங்கொடிக் கிழங்கு, உண்ணப் பசி தீர்க்கும் பல மூலிகைகள்—கிழங்குகள். அர்ச்சுனன் தவம் செய்த இடம். 5—6 மலைகளுக்கிடையே சேத்திழைக் குகை. 70 பேர்வரை தங்கலாம்—பிறம்புக் காடுகளும் உள்ளன.

7. ஏழாவது மலை (சாமிமுடிமலை): தோரணக்கல்—குகை—பஞ்சலிங்கங்களுள் மூன்று வெளியே உள்ளன. குளம்புச் சுவடுகள் பெரிய லிங்கத்தில்—விபூதிமேடு—மாடு இருந்த இடம்—பலகாரமேடை (தேவர்களை முறை விசாரித்த இடம்) சுவாமி மலைக்கு வடமேற்கே ஒரு ஊற்று உண்டு. சிறுவானிமலையில் வானி உற்பத்தியாகும் இடத்தில் அதாவது வரையாட்டு மலைக்கு மேலே தடாகம் போன்ற ஊற்று உண்டு—அதன் பெருக்கமே வானியாறு. குஞ்சர முடி என்பது வரையாட்டுமலை. கூடைப்பாம்புகள் மரக்கிளைகளில் ஒட்டியிருக்கும். உருண்டு வரும். மிருகங்கள் மிகுதி. கிரிக்குச் செல்லும் பாதைகளில் இப்போது இருக்கும் பாதையோடு. சிறுவானியிலிருந்து கிரிக்கும், வேலூத்திலிருந்து கிரிக்கும், நரசீபுரத்திலிருந்து கிரிக்கும் செல்லும் பாதைகள் உள்ளன. கிரியிலிருந்து மலையாளத்திற்குப் பாதை உண்டு. சிறுவானியிலிருந்து வண்ணூரக்காட்டுக்கு வழி உண்டு. பூண்டியில் பூசை செய்துவரும் அருச்சகர் மரபு: நஞ்சைய

பிள்ளை, இளைய பெருமாள்பிள்ளை, தாண்டவராயப்பிள்ளை, பெருமாள்பிள்ளை, சின்னையபிள்ளை, பின் நஞ்சையபிள்ளை. இப்போது இருப்பவர் மருதாசலம்பிள்ளை என்பவர். இவர்கள் இந்த ஏழு தலை முறைகளிலும் போளமாம்பட்டியிலிருந்து கொண்டு பூண்டி வெள்ளியங்கிரிக்குச் சென்று பூசை செய்து வருகின்றனர். இவர் குமாரரே திரு. ம. இளமுஅண்ணு அவர்கள். தத்துவ சன்மார்க்க வழிபாட்டினர்; சிறந்த அறிஞர்; தக்க சித்த மருத்துவர். மருதாசலம்பிள்ளையவர்கள் 17-3-64 ல் இறைவனடி சேர்ந்தனர்.

## 2. மருதகிரியும் கரிமலையும்

மருதமலையைப் பஞ்சகிரிகளில் ஒன்றெனப் பேரூர்ப் புராணம் கூறுகின்றது. வேலன் குன்று என்றும் இது மருதமரத்தைத் தல விருட்சமாகக் கொண்டதால் இப் பெயர் பெற்றது. மருதமரம் வெண்மருது கருமருது பில்லை மருது எனப் பலவகைப்படும். வெண்மருது சுனையருகில் நன்கு வளரும். வெண்மருது உள்ள இடத்தில் சுனையும் நன்கு அமைந்திருக்கும். அருணகிரியார் பாடிய திருப்புகழ் இத்தலத்திற்கு உண்டு. 'திரிபுரமதனை' என்று தொடங்கும் திருப்புகழில்,

"அரவணை துயிலும் அரிதிரு மருக
அணிசெயு மருத மலையோனே
அடியவர் வினையும் அமரர்கள் துயரும்
அறஅருள் உதவும்—பெருமாளே"

என வருவதும் காண்க. "குலோத்துங்கன் கி. பி. 1149-1183 காலத்திய அவிநாசி சாசனத்தில் மருதன்மலையான் என்ற குலோத்துங்க விக்கிரமாதித்திய தேவர் என்ற சாமந்தப் பிரபுவும், வீர ராசேந்திரன் (1207-1255) காலத்தில் மருதன் முதலி என்ற வணிக சக்கரவர்த்தி என்ற பேரூர் நாட்டு முட்டத்து வியாபாரியும் அப்பெயர் பெற்றதில் மருதமலையின் பெயர் 12, 13 நூற்றாண்டுகளிலேயே நிலவியிருந்தது என்பதை அறிகின்றோம்" என 'மருதமலை மான்மியம்' என்னும் நூலுள் கோவை கிழார் கூறுவது காண்க. இம்மலையின் தொடரில் அநுபாவிமலை என்னும் அனுமக் குமரமலை இருக்கின்றது. தான்தோன்றிப் பிள்ளை

யார் கோயில், இம்பன்கோயில், பாம்பாட்டிச் சித்தர் குகை என்ற இடங்களும், மருதாசல மூர்த்தி கோயிலும் சிறப்புடையன. மருத தீர்த்தம், கன்னிகை தீர்த்தம், கந்த தீர்த்தம், அனுமதீர்த்தம், வக்கணூற்று என்னும் நீர்ச் சுனைகளும் சரவணப் பொய்கை என்னும் விசேடதீர்த்தமும் இங்கு உண்டு. முருகன் வளர்ந்த இடமாகும். தேவர்களை இங்குள்ள முருகனை வழிபட்டு இக்குமரக் கடவுளைக் கொண்டு சூரர் சிறையினின்றும் தப்பினர் என்ற செய்திகளையும் திருப்பேரூர்ப் புராணம் அபயப்படலம், மருத வரைப்படலம் என்னும் இவைகளைக் காண்க. மருதவரையின் மான்மியங்கள் அந்நூலில் மிகுத்துக் கூறப்பட்டுள்ளன.

துடியலூர் பற்றிய துடிசைப் புராணமும் இம்மலையின் சிறப்புக்களை வழுத்தும். பூர்வபட்டையம் குறிப்பிடும் தேவர் கூட்டத் திருப்பாறை என்ற பரந்த இடம் இதுவே எனலாம். இத்தலம் விஷ்ணு கிரிக்குக் கீழ்ப்பால் உள்ள தென்க. இம்மலைக்குச் சென்று மருதாசலக் கடவுளை வணங்குகின்றவர்கள் இம்மை மறுமைப் பேறுகளையும் இறுதியில் முத்தியையும் அடைவார்கள். இம்மலையின் சிறப்புக்களை உணர்த்தும் நூல்களும் பிரபந்தங்களும்: திருப்பேரூர்ப்புராணம், திருத்துடிசைப் புராணம், மருதாசல மூர்த்தி சதகம், மருதாசலமூர்த்தி தாய்மகளேசல், உயிர் வருக்கமாலை, குமரேசர் சந்திப் பதிகம், மருதாசலக் கடவுள் பிள்ளைத்தமிழ், அலங்காரம், யமக அந்தாதி, நவரச வண்ணத் திருப்புகழ், சந்திப்பதிகம், அம்மானை, வெண்பா என்னும் பல நூல்களையும் கோவை கிழார் மருதமலை மான்மியத்தில் குறித்துள்ளனர். சில பாடல்களையும் அதனுட் காண்க. இந்நூல்களுள் ஒரு சில கிடைத்தற்கரியனவாம். இவைகளை அச்சிட்டு, ''மருதாசலக் கடவுள் பிரபந்தத் திரட்டு'' என்னும் நூலாக்கி அன்பர்களுக்கு வழங்கினால் மிகவும் புண்ணியம் உண்டாகுமல்லவா?

இனி குஞ்சர முடி என்றும் யானைமுடி என்றும் கூறப்படுகின்ற கணபதிமலையைக் குறித்துக் கூறுவோம். கூத்தாடித் திடருக்கு மேற்கே வானி உற்பத்தியாகும் சிறுவானி மலைத் தொடர்வரையிலுள்ள பகுதியைக் கரிமலைத் தொடர் என்று கூறுகிறோம். தெற்கே உயர்ந்து காணப்படுவதே குஞ்சரமுடி என்னும் யானைமுடி. இதுவே கணபதி இருப்பிடமாகக் கொண்ட திடராகும். இக்கிரியைக் குறித்த வேறு குறிப்புகள் எதுவும் கிடைத்திலது.

# 3. பூண்டிக் கோயில்

பூண்டியை அடைந்தே வெள்ளியங்கிரிக்குச் செல்ல வேண்டும். சிவபெருமானும் அருச்சுனனும் விற்சரம் பூட்டிய இடமே பூண்டியாகும்.

> " பற்குனன் பாசுபதம் வேண்டு நாளுற்ற பண்டமரில்
> விற்சரம் பூட்டுமிடம பூண்டியென்பர்......"
>
> (கலித்துறை அந்தாதி)

என்னும் பாடலும் காண்க. சிற்றூர் போலக் காட்சி தரும் இத்தலத்தில் முருகனும் பூண்டி விநாயகரும் சத்திசிவனும் காட்சி தருகின்றனர். ஆதிகாலத்தில் மரத்தடியில் சிவ லிங்கத்திற்குப் பூசை செய்து வந்தார். இந்த லிங்கம் அயம்பு லிங்கமாகும். அந்த லிங்கத்தில் குளம்புச் சுவடும் கொம்படிபட்ட சுவடும் இருந்தனவாம். அக்காலம் அருகிலுள்ள ஊர்களில் வாழ்ந்த தேவேந்திரகுலம் நந்தி மரபினைச் சார்ந்த பள்ளர்களும் வன்னியர் குலத்தவரும் பூசாரியைக் கொண்டு பூசை புரிந்து வந்தார்கள். அருகில் காடுகளில் வாழ்ந்த இருளர் மூப்பர் போன்ற மலைவாழ் மக்கள் பூண்டி இறைவனை பக்தியோடு வழிபட்டனர். முன்னம் இருந்த சுயம்புலிங்கம் பள்ளத்தாக்கில் இருந்த தால் மழை காலங்களில் லிங்கத்தைத் தண்ணீர் மறைத்து மூழ்கடிக்கச் செய்துவிட்டதால் பூசை செய்பவர்கள் நீரை இறைத்துப் பின்னர் பூசை செய்வார்களாம். இந்நிலையை அறிந்த நல்ல சிவபக்தரான தொண்டாமுத்தூர் மாரண்ண கவுண்டர் (ஒக்கலிக மரபினர்) என்பவர் முதலில் இங்கு திருப்பணி செய்து முடித்தனர். இறைவனுக்கு ஒரு கோயிலும் கோவிலைச் சுற்றிலும் மேடைகளும் உயரமாகக் கட்டி முடித்தனர். முன்னம் இருந்த லிங்கம் உயர்த்தப்பட்ட பகுதியில் மறைந்துபோனதால், *கோவிலில் இப்போதுள்ள லிங்கத்தை—அருள் நிலையில் சாமியாடிச் சென்று நீலி வாய்க்காலிலிருந்து கொண்டுவரப் பட்டதை — அவர்

---

* பெரும் பொருள் செலவு செய்த மாரண்ணகவுண்டர் அவர்கள் மலை சாதியினர் பலரையும் சேர்த்துப் பெருவிழாக் கொண்டாடினர். மலைசர் ஒருவர் மருள் கொண்டு ஓடினர். அவர்பின் பலரும் சென்றனர். முடிவில் நீலியாற்றில் அம்மருளாளி ஒரு லிங்கத்தைத் தழுவி வந்தனர். அந்த லிங்கமே பூண்டியில் உள்ளது. இந்த லிங்கத்தின்கீழ் முன்னைய சுயம்புலிங்கம் இருக்கின்றதென்பர்.

பிரதிட்டை செய்வித்தார். மேடைக்கு முன்புள்ள மண்டபம் முதலானவைகளைக் கட்டிவைத்தவர்கள் வெள்ளிமலைப் பட்டணம் குமாரசாமிக்கவுண்டர் முன்னவரான ஒரு குமார சாமிக்கவுண்டராவர்.

பின்னர் சௌந்தர பாண்டிய சுவாமிகள் என்பார் இங்கு வந்து செய்து முடித்த திருப்பணிகள் பலவாம். இவர் பழனிக்குப் பக்கம் உள்ள மீனாட்சி புரத்தைச் சார்ந்த தொண்டை மண்டல வேளாளர் ஆவர். சந்தேகவுண்டன் பாளையம் (சந்த நகர்) முத்தைய முதலியார் அவர்களது உறவினருமாவர். அக்காலம் பூண்டி இருள் சூழ்ந்த காடாக (வெள்ளையர் காலத்தில்) இருந்ததால் மரங்களின் மேல் பரண்கள் கட்டிக்கொண்டு தாமும் தம் மாணவர்களும் மிருகங்களுக்கு அஞ்சி அங்கேயே தவம் புரிந்து வந்தனர். பல வாண்டுகள் கழிந்தன. சிறந்த ஞானியான இவர்பால் பக்கத்தூர் அன்பர்கள் பலர் இவரிடம் உபதேசம் பெற்றனர். வெள்ளிமலைப் பட்டனம் பெருநிலக் கிழார்கள் திரு குமாரசாமிக் கவுண்டர், திரு. V. N. சுப்பண்ண கவுண்டர், சந்தநகர் சேனாபதிக்கவுண்டர், தெனம நல்லூர் பெ. இராமசாமிக்கவுண்டர், விராலியூர் மணியம் முத்துசாமிக்கவுண்டர், குழந்தை கவுண்டர், நரசீபுரம் ஊர்க்கவுண்டர் சுப்பண்ண கவுண்டர் என்போர் பல ராவார். இவர் தம் மாணவர்களின் துணைகொண்டு பூண்டியில் தெப்பக்குளத் திருப்பணியும் நவக்கிரக மண்டபமும், மலை அடிவாரத்தில் படித்திருப்பணியும் செய்து முடித்தனர். விசுவாவசு தை 2-ம் தேதி தொடங்கி (1906-ல்) 1913 வரை இத்திருப்பணிகள் நடைபெற்றன. வசவநதி ஊற்று என்னும் இடத்திலிருந்த நீரைத் தெப்பக்குளம் *பசுவின் வாயில் விழுமாறு செய்தவர் இப்பெரியாரேயாவர். மாணவர்கள் உதவியே பெரிதென்க. இப்பெரியார் தமது இறுதிக் காலத்தில் இங்கேயே வாழ்ந்தனர். ஒரு பங்குனி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தனர். இவர் மாணவர்களில் தலையானவர் வெள்ளிமலைப் பட்டணம் V. N. சுப்பண்ணகவுண்டர் அவர்களாவர். இவருக்குச் சமாதியும் கோயிலும் மேடையும் கட்டிவைத்தனர். பங்குனி ஆயில்யம்தோறும் பூண்டியில் குருபூசையும் பெரிய அன்ன தானமும் செய்து வருகின்றார் இவர் மாணவராகின்ற இப் பெருந்தகையார். திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகளில்

---

* தவத்திரு சௌந்தர பாண்டிய சுவாமிகள் வீரசைவ மரபினர் என்பர்.

திருமடத்திற்கு நமது திரு. V. N. S. அவர்கள் செய்துள்ள நன்மைகள் பலவாகும்.

பூண்டியில் சன்னிதி விலக்குதல் போன்ற திருப்பணியில் அக்காலம் முதல் செய்து வந்தவர்கள் தேவேந்திர குலப் பள்ளர் மரபினர். வன்னியர் குலத்தவரும் இத்தலத்திற்கு மிகவும் உரியவர்கள் எனக் கூறப்படுகிறது. நாக பட்டணம் போளமாம்பட்டி இங்கெல்லாம் இக்குலத்தோர் முன்னம் வாழ்ந்து வந்தனர். எனவே சௌந்தர பாண்டிய சுவாமிகள் சென்ற நூற்றூண்டின் இறுதியிலேயே இங்கு வந்தனர் என்பதும் அதற்கு முன்னமேயே இத்தலத்து இறைவன் சுயம்பு லிங்கமாக அன்பர்களுக்குக் காட்சி தந்தனர் என்றும் அறிகின்றோம்.

பூண்டியிலுள்ள மரப்பெட்டி வீடு ஒன்று நரசீபுரம் தம்பீகவுண்டர் அவர்களால் இலச்சிபாளையம் முத்துசாமி சாமிகளுக்குச் செய்து தரப்பட்டது. அர்ச்சகர் வீடு தேவத் தானம் கட்டியது. உயர்திருவாளர் V. C. பழநிசாமிக் கவுண்டர் இக்கோவிலைப் பரிபாலித்து வந்த நாளில் 1935-ல் கோவை நாட்டாண்மைக் கழகத்தின் சார்பில் நீர்த்தேக்கம் கட்டப்பட்டது. பூண்டியில் நீர் வசதியை முதன் முதலில் உண்டாக்கியவர் சௌந்தர பாண்டிய சுவாமிகள் ஆவர். பின் வசவநதி (ஊற்று)யின் நீரானது நீர்த்தேக்கத்தில் தேக்கப்பட்டது. பெரும்பாலான யாத்திரீகர்களுக்கு இதன் நீர் போதவில்லை. தண்ணீர்ப் பஞ்சம் உண்டாயிற்று. பின் வசவநதியை நன்கு தோண்டியெடுத்து என்றும் குறையாத நீரை அங்கு கண்டு மகிழ்ந்து அதன் நீரைத் தூய்மை செய்து ஊற்றை நன்கு மூடி நீரைக் கெடாதவாறு செய்து முடித்து இங்கு ஒரு நீர் இறைக்கும் இயந்திரத்தை வைத்து ஆங்காங்கு தண்ணீர்க் குழாய்களின் மூலம் வேண்டிய இடங்களுக்குத் தண்ணீர் கொண்டு சென்றூர்கள். இத்தகைய பெரிய திருப்பணி போளமாம்பட்டி பஞ்சாயத்து சபையாரால் செய்யப்பட்டது. இவ்வூர்ப் பஞ்சாயத்து சபைத் தலைவர் திருவாளர். B. K. ஆண்டியப்பன் அவர்கள் பெரு முயற்சியால் நமது சென்னை அரசாங்கத்தின் ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டது. இந்தத் திருப்பணிக்குக் கால்பாகம் பணஉதவி செய்தவர் கோவை. உயர்சைவத் திருவாட்டி மசனம்மாள் அவர்கள் புதல்வர் திருவாளர். கருப்பண்ண கவுண்டர் அவர்களாவர். இப்பெருந்தகையார் பூண்டியில் பங்குனி உத்திரத்தின் போது சிறந்த அன்னதானம் ஒன்று செய்து வருகின்றனர்.

எத்தனை பேர் கொண்ட கூட்டம் வந்தாலும் சரியே மனம் மகிழ்ந்து விருந்து படைக்கின்றனர். மூன்று நாட்கள் வரை இந்த அன்னதானம் குறைவின்றி நடக்கும். மணி மேகலாதேவியின் அட்சய பாத்திரத்தில் அன்னம் குறை யாது வருவதை உண்பது போன்று பூண்டியில் இந்த மூன்று நாளும் குறையாது சமைக்கப்படுகின்ற உணவுவகைகளைப் பல்லாயிரக்கணக்கானவர்கள் உண்டு செல்லுகின்றனர். 'அன்னதானமே சிறந்த தானம்' என்பதைக் கைக்கொண்ட கருப்பண்ண கவுண்டரவர்கள் வெள்ளிமலையான் அருளால் எல்லா நலனும் பெறுவாராக! இதைக் காட்டிலும் சிறந்த புண்ணியம் வேறு எங்கே உள்ளது?

முன்னொரு சமயம் வசவநதியாகிய ஊற்று மண்மூடித் தூர்ந்து போனதை யறிந்த நரசீபுரம் திருவாளர். R. பொன்னுசாமிக்கவுண்டர் அவர்கள் தந்தையார் இளமண கவுண்டர் என்பவர் 1933-ல் இவ்வூற்றைத் தமது ஆட்களை விட்டுப் பறித்துச் சேற்றை விலக்கித் தூய்மைப் படுத்தினர். அதனுள் எக்காலத்தில் எவரால் கொண்டுவந்து இடப் பட்டனவோ தெரியாது அழகிய சிலைகள் மூன்றும் கிடந்தன. பின் எடுக்கும்போது பின்னமடைந்தனவாம். காளி சிலை, முருகன் சிலை, சூரியனார் சிலைகளாகும். இவை களுள் காளிசிலை அழகுடையது. இச்சிலைகள் 1933 கார்த் திகை தீபம் 3ஆம் நாள் மிருகசீரிட நட்சத்திரத்தன்று எடுக்கப்பட்டனவாம். குளக்கரையில் வைக்கப்பட்டுள்ள அவைகளைக் காணுங்கள் (வீரகாளி கோயில்-முன் பகுதி காண்க). பூண்டியின் மேல் முதன் மலையில் வெள்ளி விநாயகர் கோவிலைக் கட்டி முடித்தவர் வெள்ளலூர் ஆறு முகத் தேவரும் கந்தசாமித் தேவருமாவார்கள். கிரிமலையில் சுவாமி சந்நிதியில் கம்பிகள் நிறுத்தி வசதி செய்து தந்தவர் பெருமகனார் கோவை பத்திரகிரி செட்டியார் அவர்களா வார்கள். அருள் உள்ளம் படைத்த இப் பெரியார் பூண்டி யில் உள்ள மடத்தைக் கட்டிவைத்தவர் (தேவாங்கர்மடம்). இப்போது பூண்டியில் உள்ள திருமடங்கள் முறையே: 1. வெள்ளிமலைப் பட்டணம் நஞ்சப்பகவுண்டர் *சுக்கிர கவுண்டர் மடம். 2. முத்துசாமிக் கவுண்டர் மடம். 3. வெள்ளலூர் அகமுடையார்மடம். 4. தொண்டா முத்தூர் குஞ்சம்மாள் மடம். 5. கோவை பட்டிபோயன்

---

* பூண்டி சுக்கிர கவுண்டர் என்னும் அன்பர் நரசீபுரம் வெள்ளிமலைப் பட்டணத்தில் இன்னும் உள்ளனர். சிறந்த தமிழன்பர், சிவபுண்ணியர்.

மடம்; ஓட்டன் சமாதி என்னும் இடத்தில் சமாதியானவர் இவர் மரபினரே. 6. புரவிபாளையத்தார் மடம். 7. தேவாங்கர் மடம் (பத்திரைய செட்டியார்). 8. கோவை இராம போயன் மடம். 9. சந்தனபுரம் என்னும் சந்தேகவுண்டன் பாளையம் கார்த்திகேய மடம். 10. கோவை இலட்சுமி மில்காரர் மடம்.

## 4. அன்னதானமும் ஒளி வழிபாடும்

" யாவர்க்குமா மிறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே "

(திருமூலர் திருமந்திரம்)

* * *

" அன்ன தானமோ ராயிரங் காசியின்
மன்ன நாளும் வழங்கும் பெரும்பயன்
இன்ன மாநக ரீந்திடும் பிச்சையால்
என்னை யாளுடையா யெய்தல் வேண்டுமால் "

(பேரூர்ப் புராணம் : விசுவாமித்திரர் வரம்பெறு படலம்)

* * *

" ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே "

* * *

" இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வாண்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது "

(மணிமேகலை)

என்னும் ஆன்ருேர் வாக்குப்படி அறம் செய்வதே சிறந்தது என்றும் அவ்வறங்களுள் அன்னதானமே தலையானது என்றும் அறிகின்ருேம். அருட்பிரகாச வள்ள

லாரது நெற்றியும் அதுவே. சிவத்தலங்களுள் சிறந்த கயிலைமலையில் அன்னதானம் செய்வது என்பது மேலான காரியமாகும். இத்தலத்தில் அன்னதானம் செய்கிறவர்கள் மேலான பதவியை அடைவார்கள். சகலவிதமான பாவங்களினின்றும் நீங்கப்பெற்று நற்சுகமும் நற்பேரும் பெற்று இம்மை மறுமை என்ற இரண்டும் சிறப்புற்று நற்கதியடைவார்கள்.

பூண்டியில் ஒளி வழிபாடு செய்பவர்கள் மிகவும் சிலரேயாவர். ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் அண்ணமலை தீபத்தின்போது பூண்டியிலும் வெள்ளியங்கிரியிலும் தீபங்கள் வைத்து ஒளி வழிபாடு செய்யும் முறையை முதன் முதலில் தொடக்கியவர் நமது செளந்தர பாண்டிய சுவாமிகள் ஆவார்கள். இவர் சந்தேகவுண்டன்பாளையம் என்னும் சந்தநகர் முத்தைய முதலியார் அவர்கள் உறவினராகையால் அவர்களைக் கொண்டும் நரசீபுரம் வெள்ளிமலைப் பட்டணம் அன்பர்களைக் கொண்டும் இப்பணியைத் தொடக்கி வைத்தார். சுமார் 50 ஆண்டுகளாகவும் சந்தேகவுண்டன்பாளையத்தினர் கார்த்திகை சோதியன்று இங்கு ஒளிவைத்து வழிபட்டு வருகின்றனர். கார்த்திகை மாதம் திருவண்ணமலை தீபத்தன்று இவ்வூரிலுள்ள பக்த சனங்கள் அதிகாலையிலேயே கிரிமலையை நோக்கி நடந்து செல்வார்கள். பல மாதங்களுக்குப் பின் கார்த்திகை மாதம் கிரிக்குச் செல்வது மிகவும் கடினம். புற்கள் வளர்ந்தும், மலைவழிகள் நீரோடைகளால் கரைக்கப்பட்டும் செல்லுவார்க்கு அருமையுடையதாக இருக்கும். மிருகங்களின் துன்பம் ஏற்படினும் படலாம். வழியில் ஏற்படும் எத்தகைய இடர்ப்பாடுகளையும் பொருட்படுத்தாமல் மாலை நேரத்திற்குள் கிரிமலையையடைந்து உரிய காலத்தில் பஞ்சலிங்கத்திற்கு அபிசேக ஆராதனைகளை முடித்துக்கொண்டு அங்கு ஒளி வைத்து வழிபடுவர். கார்த்திகை மாதம் எவ்வளவு மழையும் குளிரும் ஏற்பட்டாலும் சரியே இரவு முழுவதும் அங்கேயே தங்கியிருப்பார்கள். மறுநாட் காலையில்தான் பூண்டியை அடைவார்கள். எந்த நிலையிலும் ஒளிவைத்து வழிபடுவதில் இவர்கள் தவறுவதில்லை. இவர்கள் கிரிமலையில் ஒளிவைத்து வழிபடுவதால் அவ்வொளி திருப்பூர் நகரம் வரை காணப்படும் என்பர். தம் சொந்தவூரில் உண்டான ஒரு பெருவிழாப்போலவே கருதி ஊர் மக்கள் அனைவரும் திரண்டு வந்துஇவ்விழாவைக் கொண்டாடுகின்றாரென்றால் இவர்கள் கொண்ட இறையன்பை என்னென்றுரைப்பது? மறு

நாள் பூண்டியில் பெரிய அன்னதானம் நடத்துகின்றனர். சுமார் 45 ஆண்டுகளாகவே இப்பணியைத் தொடர்ந்து நடத்துகின்றனர் என்க. நரசீபுரம் அன்பர்களும் இப் பணியை விடாது நடத்தி வருவது மிகவும் போற்றத்தக்கது. பூண்டியில் வெள்ளைக் கிணர் உயர்திருவாளர் V. C. பழனி சாமிக் கவுண்டர் அவர்களும் இப்போது இவர் குமாரர் திரு வாளர் V. P. கந்தசாமிக் கவுண்டர் அவர்களும் இத்தலத் தில் ஒளிதீபம் வைத்து வழிபட்டு வருகின்றனர். மற்றும் இங்கு திருமடம் கட்டியிருக்கும் எல்லா அன்பர்களும் இப் பணியைச் செய்கின்றனர். கார்த்திகை சோதியன்று இறை வன் எல்லா மடங்களுக்கும் எழுந்தருளுவார். போளமாம் பட்டியினரான திருவாளர் B. K. பழநிக்கவுண்டர் இவ் விழாவில் பெரும்பங்கு கொள்வர். போளமாம்பட்டி திரு. R. மாஸ்தையா பாகவதர் தலைமையில் சுமார் 38 ஆண்டு களாக இவ்விழாவின்போது பஜனைக்குழு தவறாமல் இங்குச் சென்று வழிபட்டு வருகின்றனர்.

பூண்டியின் அருகே வீரகாளியம்மையார் கோயிலுக்குக் கிட்டான் மகன் சாடன் என்பவர் பூஜை செய்து வருகின் றனர். மலைவாழ் மக்கள், போரேத்தி, ஜாகீர் போரத்தி, வெள்ளைப்பதி, பொட்டபதி, கல்லொத்திப்பதி, சீங்கிப்பதி, தாணிக்கண்டிப்பதி, முத்திகுளப்பதி, பச்சைபதி என்னும் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். பூண்டிக் கோயிலை முன்னம் பரிபாலித்து வந்த மரபினர்களுள் இவர்களும் ஒரு வகையினராவர்.

பூண்டியில் நிழல்தரு மரங்களும் பரந்த இடமும் காணப் படுதலின் அன்னதானம் செய்ய நல்ல வசதிகள் இருக் கின்றன. தண்ணீருக்குப் பஞ்சம் இல்லை. அவ்வகையில் அன்னதானம் செய்பவர்கள் பலராவர். ஒருசிலர் பெயர் களே எனக்குக் கிடைத்தன. அவைகளை ஈண்டுக் குறித்தல் நலம். விடுபட்ட பெயர்கள் மீண்டும் எமக்குக் கிடைக்கு மானால் பின் இவைகளையும் சேர்த்துக் கொள்வோம். நிலை யிற் பெரிதோ சிறிதோ தம்மால் இயன்வரை அன்னதானம் என்ற அறத்தை எளிதிற் செய்ய விரும்புவார்களாக!

1. **வெள்ளிமலைப்பட்டணம் நரசீபுரம் :** தம்பி கவுண் டர் மரபினர் குமரசாமிக் கவுண்டர், ஊர்க்கவுண்டர் வகையில் பெரியசாமிக் கவுண்டர்—இரா. பொன்னுசாமிக் கவுண்டர் வகையினர்—ஆறுமுகக் கவுண்டர் வகையினர்— பெத்தாக் கவுண்டர்—செல்லக்குட்டிக் கவுண்டர்—ந. சுப்

பண்ண கவுண்டர்—விளாங்குறிச்சி இராயப்ப கவுண்டர்—கருப்ப கவுண்டர்—செம்பெரிச்சிக் கவுண்டர்—செங்கவுண்டர் என்னும் அன்பர்களாவர்.

2. **சந்தேகவுண்டன் பாளையம் :** கார்த்தியேக மடத்தினர். (சோதிக்கு மறுநாள்)

3. **புத்தூர் :** பொன்னே கவுண்டர் வகையினர்.

4. **ஆலாந்துறை :** திருமதி இராமாக்காள் அம்மாள், துரைசாமிக் கவுண்டர் பெத்தி செட்டியார் வகை—முத்துசாமிக் கவுண்டர் என்னும் திருவாளர்களாவார்கள்.

5. **தொம்பிலிபாளையம் :** திரு. T. P. அட்டிமுத்துக் கவுண்டர்; இவ்வூர் தேவாங்கர் மரபினரும் சின்னசாமி நாயுடுவும்.

6. **செம்மேடு :** திரு. V. P. கந்தசாமிக் கவுண்டரும் அவர் சகோதரர்களும்; புளியம்பாளையம் கந்தசாமிக் கவுண்டர் என்னும் அன்பர்கள்.

7. **மங்கலப்பாளையம் :** சுப்பண்ணகவுண்டாவகையினர்.

8. **மோனபாளையம் :** மணியக்காரர் வகையினர்.

9. **இராமநாதபுரம் :** ஊர்க்கவுண்டர் மரபினர்.

10. **சீனிவாசபுரம் :** திரு. S. M. இராமசாமிக் கவுண்டர், சின்னசாமிக் கவுண்டர்.

11. **போளமாம்பட்டி :** திரு. B. N. கிருஷ்ணசாமித் தேவரும், B. N. கருப்பண்ண கவுடரும் உள்ளூர் பஜனைக் குழுவினர் வகை.

12. **பரமேசுவரன் பாளையம் :** திருவாளர்கள், கனகாசலக் கவுண்டர்—இராமலிங்கக் கவுண்டர் வகையினர்; துரைசாமிக் கவுண்டர் வகை (தேவராயபுரம்) நடராச கவுண்டர்.

13. **தொண்டாபுத்தூர் ;** திரு. பொன்னுசாமி 14. தானியூர். திருவாளர் T. T. S. திப்பையா அவர்கள்—தீனம்பாளையம் மாரண்ண கவுண்டர் வகை. 15. வெள்ளருகன் பாளையம் காரமடை நாயக்கர் மரபினர். 16.புள்ளாக் கவுண்டன் புதூர்அவிநாசிக்கவுண்டர் மரபினர். 17. திருவாளர் மாதம்பட்டி மிராசுதாரர் வகையினர்.

18. மத்திபாளையம் திருவாளர் மத்தி கவுடர் மரபினர். 19. வெள்ளலூர்க்காரரர். 20. கோவை இராமநாத புரத்தினர், நஞ்சுண்டா புரத்தினர்; 21. உப்புமண்டி கருப்பண்ண கவுடர் (பசனம்மாள் குமாரர்) பாக்கு மண்டி ஐயண்ண கவுடர் மரபினர். பொன்னே கவுடர் மரபினர். டாக்டர் இராமசாமி ஐயர் வகையினர், வழக்கறிஞர் வகையினர், பாலாபிசேகக் குழுவினர், நடராச கவுண்டர் மரபினர்—தேவாங்கன் மரபினர்—தொரையர் மகாசனங்கள்; 22. காரமடை அரங்க சாமி முதலியார், கோவை லட்சுமி மில் அதிபர்; 23. சூலூர் ஆறுமுகம் பிள்ளை மரபினர் (முதன் முதலில் அன்னதானம் செய்தவர் இவரே); 24. மேட்டுப்பாளையம் சுப்பிரமணிய செட்டியார் மரபினர் என்றவாறு இன்னும் பலரும் அன்னதானம் செய்து புண்ணியம் பெறுகின்றனர்.

மற்றும் அமாவாசைகள் தோறும் பூண்டிக்கு வந்து வழிபாடு செய்பவர் திருப்பூர் உயர்திரு. அவிநாசி செட்டியாராவர். பூண்டியில் வேனிலின்போது நீர் மோர் தருதல் நிமித்தம் மூன்று மாதங்களிலும் தண்ணீர்ப் பந்தல் வைத்து நடத்துபவர், வெள்ளலூர் ஆறுமுகத் தேவர், கந்தசாமித் தேவர் ஆவார்கள். பொள்ளாச்சியிலிருந்து வரும் ஐயர் ஒருவரும் இப்பணி செய்கின்றனர். பூண்டியில் விநாயக சதுர்த்தி, சங்கட சதுர்த்தி கொண்டாடுபவர். நரசீபுரம் ஆறுமுகக் கவுண்டர், பெத்தாக் கவுண்டர் வகையினர். V. N. சுப்பண்ண கவுண்டர் குழுவினர் சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்து வருகின்றார். செம்மேட்டுக் கவுண்டர் மரபினர் பூண்டிக்கு வரும் வண்டி மாடுகளுக்குத் தீனி தந்து உதவுகின்றனர். தேவத்தானத்தார் டைனமோ விளக்குகளை அமைத்து ஒளியுண்டாக்குகின்றனர். இக்கரை போளமாம்பட்டி பஞ்சாயத்து சபை இங்குள்ள துப்புரவு வகை, தண்ணீர் வகை, தண்ணீர் நிறைவு நிலையையும் பிறவற்றையும் கவனித்து வருகிறது. பஞ்சாயத்துச் சபை மின்விளக்குகளை அமைக்க ஆவன செய்து வருகின்றமை போற்றத்தக்கதாம். கோவை மாநகரத்திலிருந்து பாலாபிசேகக் குழுவினர் பலர் ஆண்டுகள்தோறும் வந்து பூண்டியில் பெருவிழாக் கொண்டாடுகின்றனர். அன்னதானமும் நிகழ்த்துகின்றனர். ஒரு குழு இங்கு வந்து நிகழ்த்தும் இசை வழிபாடு மிகவும் சிறப்புப் பெற்றது. திரு. நடராச கவுடர் அவர்கள் தலைமையில் பல இசை வித்துவான்களும் வந்து பங்குனி சித்திரை மாதங்களில் நடத்துகின்ற இசைவழிபாட்டுக்கு நிகராக வேறு எதையும் சொல்ல இயலாது.

கொங்கு நாடு இசைத்துறையிலும் சிறப்புற்று விளங்கு கின்றதென்பதை இவ்விழா நமக்கு அறிவுறுத்தும்.

பூண்டியில் கிருத்திகை விழா முன்னம் நடைபெற வில்லை. சென்ற கர வருஷம் சித்திரை மாதம் 23 ஆம் தேதி முதல் சுமார் 13 ஆண்டுகளாக இங்கு கிருத்திகை விழாக்கள் நடைபெறுகின்றன. ஆண்டுக்கு 13 விழாக்களையும் கொண் டாடி வருவதற்கு ஏற்றவாறு வழி வகுத்தும் தாம் பல கிருத்திகைகளையும் செய்தும் வருபவர், தொம்பிலிபாளையம் பெருநிலக்கிழார் உயர்திருவாளர் T. P. அட்டிமுத்துக் கவுண்டரவர்களாவர். இப்பெருந்தகையாரது தலைமையில் தான் இவ்விழாக்கள் நடைபெறுகின்றன. தொண்டா முத்தூர்பஞ்சாயத்து யூனியன் உபதலைவராகிய இவர் கல்வி, சமூகம், கடவுள் பற்றிய பணிகள் பல புரிந்து வருபவர். இவரால் தொடங்கப்பட்ட இவ்விழா இன்றுவரை மிகவும் சிறப்பாகநடந்துவருகிறது. போளமாம்பட்டி உயர்திரு. B. K. பழநிக் கவுண்டர் இதற்குச் செயலாளராவர். கார்த்திகை மாத சோதியன்று தலைவரவர்களே நன்கு இவ்விழாவைக் கொண்டாடி வருகின்றார். சோதித் திருவிழா திருவாளர் V. P. கந்தசாமிக் கவுண்டர் தலைமையில் நடைபெறும்.

13 கிருத்திகை விழாக்களையும் கொண்டாடும் பேரா ளர்கள்: 1. தொம்பிலிபாளையம் என்னும் மத்துவராயபுரம் திருவாளர் T. P. அட்டிமுத்துக் கவுண்டர் அவர்கள் (பெரு நிலக்கிழார்); 2. போளமாம்பட்டி பஜனைக்குழு. திரு வாளர்கள் B. N. கிருஷ்ணசாமித் தேவர்*, திருவாளர் B. N. கருப்பண்ண கவுடர்*; 3. ஒக்கிலி பாளையம் திரு. பொன்னே கவுடர்; 4. ஆலாந்துறை மணியம் உயர்திரு. பொன்னுசாமிக் கவுண்டரும், திரு. முத்துசுவாமிக் கவுண் டரும்; 5. ஆலாந்துறை திரு. இராசு செட்டியார், திரு, ரீ. வீரி செட்டியார்; 6. நரசீபுரம் திரு. N. குமாரசாமிக் கவுண்டர்; 7. நரசீபுரம். திரு. V. R. பொன்னுசாமிக் கவுண்டர்; 8. நரசீபுரம் திரு. N. S. ஆறுச்சாமிக் கவுண் டர்; 9. நரசீபுரம் திரு. K. பழநிக் கவுண்டர்; 10. நாயகன் பாளையம் திரு. இராமசாமிக் கவுண்டர்; 11. செம்மேடு திரு. V. P. கந்தசாமிக் கவுண்டர்; 12. செம்மேடு புளியம் பாளையம் திரு. கந்தசாமிக் கவுண்டர்; 13. செம்மேடு திருவாளர் வெங்கட் ராவ் அவர்கள்; 14. மத்வாரராயபுரம்

---

* இவர்கள் திருப்பேரூரில் மாணிக்கவாசகர் குருபூசையும் நடத்தி வரு கின்றனர்.

திரு. கணபதி முதலியார்; 15. சந்தனபுரம், கார்த்திகேய மடத்தார் (சந்த நகர்) அவிநாசி சாளைபாளையம் நாயுடு மரபினர்; 17. பொன்னே கவுண்டர் புதூர் திரு. சென்னி மலைக் கவுண்டர்; 18. சீனிவாசபுரம் திரு. S. M. இராம சாமிக் கவுண்டர்; 19. வெள்ளைக்கிணர் திரு. V. K. நடராச கவுண்டர்; 20. வெள்ளைக்கிணர் திரு. V. V. காளிச்சாமிக் கவுண்டர்; 21. ஆலாந்துறை வீரி செட்டியார் இரண்டு விழாக்களை நடத்துகின்றனர்; 22. செம்மேடு ஊர்ப் பொது வில் ஒரு விழா நடைபெறுகின்றது.

## 5. பஞ்சகிரிகளுக்கு உட்பட்ட ஊர்கள்

### 1. *முட்டத்துநல்லூர் (நாகபட்டணம்)

பழமை பொருந்திய இவ்வூரின் சிறப்புக்களை முன்னமே முற்பகுதியில் உரைத்தோம். முட்டம் நல்லூர் என்பன ஒன்றே அக்காலத்தில் பெரிய ஊராக இருந்ததென்பதை உணரலாம். நாகன் என்பான் ஒருவன் ஒருகாலத்தில் இவ்வூரைத் தோற்றுவித்தானே அல்லது நாககாளி பெயரால் பின்னர் நாகபட்டணம் என்று ஆயதோ, ஆதிசேடனுல் பூசிக்கப்பட்ட தலம் என்பதால் இப்பெயர் ஆனதோ தெரியவில்லை. அமரபுயங்க சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டதால் அமரபுயங்க பாண்டியனுக்கும் இவ்வூருக்கும் என்ன தொடர்பு என்பதை அறிய இயல வில்லை. மலைவாழ்மக்களுக்கும் இப்பகுதிக்கும் மிகுந்த தொடர்பு இருந்ததாம். மலைசர் இருளர் இசைக்கும் இசை சிறந்த இசையாகும். இவர்கள் வாத்தியம் அக்காலம் திருமணங்களிலும் பயன்பட்டனவென்பர். கோயில்களில் இவர்கள் இசைத்தனர். ''இறயில் வல்லுவன் கோவன்'' என்ற நாகீசுரர் கோயில் கல்வெட்டுக் காண்க. மீண்டும் இவர்கள் இசைக்கும் இசைக்கலைக்கும் புத்துயிர் அளிக்க வேண்டும். செம்மேட்டுக்கு மேற்கே வெள்ளிமலையடிவாரம் காட்டில் முள்ளாங்காட்டருகே இவர்களுக்கு ஒரு ஊர் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வூர் மூட்டத்து நல்லூர் என்னும் பெயரால் வழங்குகிறது. இவ்வூரை

* நாகீசுரர் கோயிலிலும் பெருமாள் கோயிலிலும் உள்ள கல் வெட்டுக் களை 1910ல் அரசினர் படியெடுத்துள்ளனர். 150 முதல் 157 வரை.

நியமித்தவர் நமது அரசினராவர். இவ்வூர் தோன்றுவதற்கு மூலகாரணமானவர் போளமாம்பட்டிப் பஞ்சாயத்துத் தலைவர் உயர்திருவாளர் போ. க. ஆண்டியப்பத்தேவர் அவர்களாவர். மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திலும் சமூகம், கல்வி, கடவுள் பணிகளிலும் தொண்டாற்றி வருபவர். போளமாம்பட்டி—செம்மேடு பாதையைச் சீரமைத்தும், பூண்டியில் குடிநீர்க் குளத் திருப்பணியில் முன்னின்று பங்குகொண்டு மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்தவர் இவரே. தமிழ்நாடு பஞ்சாயத்து சபையின் செயலாளராகவும் இன்னும் பலவற்றுட் பங்கு கொண்டு வருபவருமான இவர் இப்பகுதியின் வளர்ச்சிக்குப் பல தொண்டுகள் புரிந்துள்ளனர் எனல் மிகையாகாது. அதேபோல பூலுவட்டி கிராமத்திலும், மத்துவராயபுரம் கிராமத்திலும் பலவகையிலும் தொண்டாற்றி வருபவர்கள் உயர்திருவாளர் வெ. எல்லமநாயுடு M. L. A. அவர்களும், திருவாளர் T. P. அட்டி முத்துக்கவுண்டர் அவர்களுமாவர். முட்டத்து நல்லூரில் உள்ள பெருமாள் கோயிலுக்குப் போதிய வழிவசதியில்லை. 300 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வூர் நன்கு இருந்திருக்க வேண்டும்.

## 2. இக்கரை போளமாம்பட்டி

போளன் என்ற ஒக்கலிகர் (லிங்காயத்தினர்) ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டது. நாகபட்டணம் அழிந்த பின்பு முக்குலத்தோருள் ஒருவரான பாண்டிய நாட்டுத் தேவர் (மறவர்) மரபினர் இங்குக் குடியேறினரென்பர். இவர்கள் பழங்குடி மக்கள். இங்குள்ள அங்காளம்மன் கோயில் 300 ஆண்டுகளின் முன்பு நாகபட்டணத்தினின்றும் கொண்டு வரப்பட்டு இங்கு கட்டப்பட்டதாம். இக்கோயிலிலுள்ள செம்பு விக்கிரகம் பழமையானது. ஐதரலி காலத்தில் விடப்பட்ட மானிய நிலம் அங்காளம்மனுக்கு உண்டு. கோயிலில் அக்கினிக் குண்டம் மாசி சிவராத்திரியில் நடைபெறும். உள்ளூர் தேவர் மரபினர் (செம்பாத் தேவர்—ஊர்க்கவுண்டர்) ஆறை நாட்டுப்பட்டக்காரர் பழநியப்பன் (நாவிதர்) மரபினர், வேடநாயகர் மரபினர், வெள்ளருகன் பாளையம் வன்னியர் மரபினர், கோவை தனவைசியர் மரபினருக்கெல்லாம் குலதெய்வமாம். காரமரத்தூர் உயர் திருவாளர் சுப்பண்ண கவுண்டர் மரபினர் கோவிலைப் பரிபாலித்து வருகின்றனர்.

இவ்வூரில் சாமுண்டீசுவரி (ஒக்கலிகர் தெய்வம்) மாரியம்மன், மாகாளியம்மன், ஏமராயர், வாகை விநாயகர், முருகன், வீரப்பெருமாள், முத்தாலேயம்மன், அநுமந்தராயர், இருளாண்டி, மாதேசுவரர் (மாதே ராசா), முனீசுரர் கோயில்கள் உள்ளன. வாகை விநாயகர் பிரபந்தங்கள் பாடிய வித்துவான் ஆறுமுகம்பிள்ளேயும், வெள்ளிமலேக் கட்டளேக் கலித்துறை பாடிய அங்கண்ண முதலியார் அவர்களும், வழிநடைச் சிந்து பாடிய அக்காலப் பெருநிலக்கிழார் இராசகோபால ஐயங்கார் அவர்களும், இப்போதுள்ள மணியம் திருவாளர் K. சீனிவாச ஐயங்கார் மரபினர் நாரணேயங்காரும், குப்புசாமி ஐயங்காரும், பூண்டியில் பூசை புரியும் திருவாளர் மருதாசலம் பிள்ளேயவர்களும் இவ்வூரினரே. திரு. பட்டக்கார இராமசாமித் தேவர் அவர்கள் மருத்துவரும் தமிழறிஞருமாவார். திரு. B. R. கருப்பண்ணன், மாஸ்தைய பாகவதர், மிருதங்கம் வாசிப்பவர்களான B. M. சுந்தரம் R. திம்மே கவுடர், B. G. தங்கவேலு, இசை அறிஞர் B. G. ஆறுமுகம், ஆகியோர் உள்ளிட்ட சிறந்த இசைக்குழு இங்கு உள்ளது. அக்காலம் இராமர் கோவிலேத் தோற்றுவித்தவர் இவ்வூர் சின்னேயபிள்ளே என்பவர். ஊராண்மைக் கழகத்தலேவர் B. K. ஆண்டியப்பனூர் இவ்வூரினரே. அக்காலம் இவ்வூரிலிருந்த தம்மண்ணகவுடர் என்பார் சிறந்த தமிழறிஞர்.

## 3. பிள்ளேயார்பாளேயம், ஏகனூர்

நாகபட்டணத்தருகே இருந்த இவ்வூர்கள் இப்போது இல்லே. ஏகனூரில் கூகாளியம்மன் கோவிலும், பெருமாள் கோயில்களும் இருக்கின்றன. பின் இவ்வூர் கீழ் அழகிரி பாளேயம் ஆகி இப்போது அவ்வூரும் அழிந்து நரசீபுரத்தோடு இணேக்கப்பட்டது. இப்பகுதிகளில் மாண்டார் குழிக் கற்கள் மிகுதி. பிள்ளேயார் பாளேயத்து விநாயகரே வாகை விநாயகர். இவ்வூர் போளமாம்பட்டியோடு இணேக்கப்பட்டுவிட்டது.

## 4. செம்மேட்டுப் புதூர்

நாகபட்டணத்து நல்லூர் இருந்த இடம். சிறைக்காடாகக் கிடந்து பின் சென்ற நூற்றுண்டில் வெள்ளேக் கிணர் திரு. சின்னப்ப கவுண்டர் மரபினர் இப்பகுதியை விலேக்குப் பெற்றுப் புதிய ஊரைக் கட்டினூர்கள். செம்

மேட்டுப் புஞ்செய் எனக் குறிப்பிடப்பட்ட இடமாகும். செம்மேடு உயர்திரு. V. C. வெள்ளியங்கிரிக் கவுண்டர், திருவாளர் V. C. பழனிசாமிக்கவுண்டர், M. L. A. அவர்கள் காலத்தில் இப்பகுதிகள் வளமுடைய பகுதி களாயின. வெள்ளிமலை யாண்டவன் அருளால் அவதரித்த இப்பெருங்குடிச் செம்மல்கள் தம் காலத்தில் வெள்ளியங்கிரித் தலத்திற்குச் செல்ல வழிகள் உண்டாக்கியும் ஆண்டவ னுக்குப் பல திருப்பணிகள் புரிந்தும் இத்தலத்திற்கு யாவரும் வந்து போகும் அளவு இந்நூற்றாண்டில் விளக்கம் செய்த வர்கள். வெள்ளியங்கிரி தேவத்தானத்தை இன்னும் இவர் குடும்பத்தவர்களே பரிபாலகர்களாக இருந்து நடத்தி வருகின்றனர். இப்போது வெள்ளியங்கிரிக்குத் தர்மகர்த்த ராக இருப்பவர் உயர்திரு. V. P. கந்தசாமிக் கவுண்டரவர் களாவர். இக்குடும்பத்தினர் திரு. V. C. சுப்பைய கவுண்டரவர்கள் செய்துள்ள சமயப் பணியும் கடவுட்பணி களும் அளவிறந்தன. பூண்டியில் கார்த்திகைக் கிருத்திகை தோறும் இவர்கள் புரியும் அன்னதானம் மிகவும் சிறப் புடையது. பல்லாயிரம் மக்களுக்கு உணவு தரும் பெருமை பெற்றது.

கரிய காளிகோயில் என்னும் நாககாளி கோயிலைப் புதிதாகக் கட்டியவரும், பூண்டி அருகே முள்ளாங் காட்டு மூலையில் தண்ணீர்ப் பந்தல் வைத்தவருமான அம்மையார் உயர் சைவத்திருவாட்டி தாயம்மாள் பழநிசாமிக்கவுண்டர் அவர்கள் இறைவனடி சேர்ந்தனர் எனினும் இவ்வம்மையார் செய்த நல்லறங்கள் அளவிலடங்காதனவாம். உள்ளூரில் நடைபெறும் தைப்பூசத் திருவிழா சிறப்புடையது. செம் மேட்டுப்புதூரும் வெள்ளியங்கிரிமலை பூண்டியும் இக்கரை போளமாம்பட்டி கிராமத்தினைச் சார்ந்தனவே.

## 5. *வெள்ளிமலைப் பட்டணம்—நரசீபுரம்

இவ்விரண்டு ஊர்களும் ஒரே இடத்தில் உள்ளன. வெள்ளிநகர், வெள்ளியங்கிரிப்பட்டணம் என்று சாசனங் களில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வூர் வெள்ளிமலையான் பெயரால் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள அன்பர்கள் பெரும்பாலோர் பண்டைக் காலத்திலிருந்தே வெள்ளியங் கிரிக்குத் தொடர்பானவர்கள். வெள்ளிமலையான் அருள் பெற்ற சிவநேசச் செல்வர்களாவர். கல்விவளமும் செல்வ

* S. I. Inscription, Vol. III, Part I, No. 1187.

வளமும் நிரம்பிய பெருங்குடி மக்கள் பலர் இங்கு உள்ளனர். சௌந்தரபாண்டிய சுவாமிகளின் மாணவர்கள் பலரும் பூண்டியில் மடங்கள் கட்டிய சிவபக்தர் திரு பூண்டி அக்கிரகவுண்டர், குமாரசாமிக்கவுண்டர் முதலியவர்களும், செங்கவுண்டர், புலவர் இராமசாமி, செம்பரிச்சிக்கவுண்டர் போன்றவர்கள் இவ்வூரில் உள்ளனர். எல்லா அன்பர்களும் குறிப்பிடத்தக்கவர்களே யாவர். பூண்டியில் அன்ன தானங்கள் விழாக்கள் நடத்தாத குடும்பமே இங்கு இல்லை. தருமர் கோயிலில் (பாரதமலைத் தொடர்க்குச் சம்பந்தம் உள்ளதாம்) குண்டத் திருவிழா நடைபெறும். விநாயகர் கோயில், சுந்தரப் பெருமாள் கோயில், பெருமாள் கோயில்கள், பட்டியார் கோயில் என்பன இவ்வூரின் எல்லையில் உள்ளன. திருப்பேரூரில் திருமடம் கட்டியுள்ள குமாரசாமிக் கவுண்டர் முன்னவர் ஒரு குமாரசாமிக் கவுண்டர் காலத்தில் சௌந்தர பாண்டிய சாமிகள் இருந் தனர். இக்குடும்பம் பூண்டிக்கு மிகுந்த தொடர்பு கொண்ட தாகும். முன்காலத்தில் இவ்வூரில் பழநியப்பபிள்ளை என்பார் பெரும்புலவராவர். நரசிங்கபுரம் என்பதே நரசீபுரம். சுப்பிரமணிய பாளையம், மேல் கீழ் அழகிரிகவுண்டன் பாளையம் என்னும் ஊர்கள் அருகில் இருந்தன; இப்போது இல்லை.

## 6. விராலியூர், செலம்பனூர், வெள்ளருகம் பாளையம், புள்ளாக்கவுண்டன்புதூர்

இவ்வூர்களிலும் கோயில்கள் பலவுள்ளன. வேளாண் குடிமக்கள் வாழும் ஊர். உயர்சைவக் குடும்பங்கள் பல உள்ளன. விராலியூர் மணியகாரர் குடும்பத்தினரும், கொழந்தைகவுண்டர் என்பவரும் நன்கு கற்றவர்கள். புள்ளாக்கவுண்டன் புதூரில் முருகன் கோயிலும், விராலி யூரில் விநாயகர், அம்மன், முருகன் கோயில்களும் உள்ளன. பூண்டிக்கு வந்து பலர் அன்னதானம் விழாக்கள் நடத்து கின்றனர்.

## 7. நாயகன்பாளையம்-சந்தனபுரம் (சந்நநகர்)

தண்டநாயகன்பாளையம் என்று கூறுகின்றனர். இவ் வூரில் அயன்வரையிலிருந்து வந்த அய்யாசாமி கோவில் உள்ளது. வாரந்தோறும் அருள்வாக்குப் பிரிப்பர் ஒருவர். பிற கோயில்களும் உண்டு. இவ்வூரும் வெள்ளிமலைப்

பட்டணமும் முன்னர் ஜாகீர் ஊர்களாக (கோவிந்த ராவுக்கு) இருந்தன.

சந்தனபுரம் என்பதே சந்த நகர் (சந்தே கவுண்டன் பாளையம்). இங்குள்ள மசான ராயர் கோயிலும், மாதேசுரர் கோயிலும் அழிந்து போயின. பழைய ஏட்டில் சந்த நகர் என்று கூறப்பட்டுள்ளது. மாரியம்மன் கோயில் உள்ளது. பூண்டியில் சௌந்தரபாண்டிய சுவாமிகள் காலத்திலிருந்தே ஒளிவைத்து வழிபடுகின்றனர். பூண்டி கார்த்திகேய மடத்தைக் கட்டிவைத்தவர்கள் இவ்வூர்க் குடிமக்கள். முன்நின்று செய்தவர்கள். திரு. இரா. சம்பந்தசாமிக் கவுண்டர், திரு. பழனிசாமிக் கவுண்டர், கோவை கோனி யம்மன் கோயில் தேவார ஓதுவார் திருவாளர் க. அருணா சலமும், இவர் தந்தையார் சிவநேசச் செல்வர் கணபதி சுவாமிகளும் இவ்வூரினர். திருவாளர் தமிழிசை வாணர் இரா. கந்தசாமி அவர்கள் தலைமையில் இசைக் குழு ஒன்று உள்ளது. கார்த்திகை சோதிக்கு அடுத்த நாள் பூண்டியில் அன்னதானம் செய்பவர் இவ்வூரினரே.

## 8. தேவராயபுரம்—பரமேசுவரன்பாளையம்

இவ்வூர்ப் பெருங்குடி மக்கள் பலர் வேளாளர்களே. சிறக்க வேளாண்மை புரிபவர் திரு. துரைசாமிக்கவுண்டர், தோட்டத்துச் சின்னப்ப கவுண்டர், திரு. குப்புசுவாமிக் கவுண்டர் என்பவர்கள் தமிழறிந்த தண்ணளியர் சின்னப்ப கவுண்டர் என்ற இளமணகவுண்டர் விநாயகர் ஆலயம் தாபித்தவர். இவ்விரண்டு ஊர்களும் ஒன்றாக உள்ளன. காணியாட்சி முன்னம் பரமேசுவரன்பாளையம் காணியாளிக் கவுண்டர் மரபினரதுவாம். இவ்வூர்த் தெய்வங்கள் தவத் திரு. கந்தசுவாமி சுவாமிகள் (சிரவைக் கௌமார மடாலயம்) அவர்களால் பாடல் பெற்றவை. சில பிரபந்தங் களைப் பாடியுள்ளனர். விஷ்ணுகிரி இவ்வூர்களைச் சார்ந்தன. பரமேசுரவன்பாளையத்தில் வெங்கடேசுரர் கோயில்உள்ளது. உலகளந்த பெருமாள் கோயிலும் மங்கையம்மன் கோயிலும் உள்ளன. தேவர்கள் பாதச் சுவடு பட்ட இடம் தேவராய புரம். பரமேசுரன்பாளையம் P. இலட்சுமண கவுண்டர், P. A. ஆறுமுகக்கவுண்டர் முதலியோர் இறைவழிபாடு களிலும் சன்மார்க்கத்திலும் விருப்புடையவர்கள். பரமே சுரன் பாளையம் கோயிலில் வெங்கடேசுரர் கோயிற் படிமங்கள் சில உள்ளன. இவ்வூர்கள் பழங்காலத்து

ஊர்கள். பூண்டியோடு தொடர்பு கொண்ட பல அன்பர்கள் இவ்வூரில் உள்ளனர்.

## 9. கொண்டையன்பாளையம்—தெனமநல்லூர்

கொண்டையன் பாளையத்தில் முருகன் கோயிலும் காளி கோயிலும் உள்ளன. பெரும்பள்ளம் இதன் அருகில் உள்ளது. கொண்டையன்பாளையம் இந் நூற்றாண்டில் பெருமை பெற்றது. கோவையிலுள்ள முத்தமிழ்க்கவி. வித்துவான் K. R. அரசப்பனார் என்பவர் இவ்வூரினர். இவர் பெரும் புலவர். அரசப்பன் அலங்காரம் என 300 சிலேடைப் பாடல்களையும், (இருசொல் அலங்காரம்) கோவைச் சிலேடை வெண்பா என நூறு சிலேடை வெண்பாக்களையும், பிற தனிப்பாடல்கள் பலவற்றையும் நாடக நூல்கள் ஆராய்ச்சி நூல்கள் பலவற்றையும் இந்நூற்றாண்டில் இயற்றிய கொங்கு நாட்டுப் புலவராவர். தெனமநாயக்கன் பேரால் ஆனதே தெனமநல்லூர். இக்காலம் பஞ்சாயத்து சபைத் தலைவர் திரு. T. S. இளமசாமிக் கவுண்டர் முன்னவரான பெ. இராமசாமிக் கவுண்டர் செய்துள்ள தான தருமங்கள் கணக்கில. வெள்ளிமலையில் இவர் பெயரால் இன்னும் அன்னதானம் நடைபெறுகிறது.

## 10. தொண்டாமுத்தூர்—புத்தூர்

தொண்டைமான் புத்தூர் என்று குறிக்கப்படும். வஞ்சியம்மன் கோவில் உள்ளது. முன்னம் சிதம்பர தாண்டவ முதலியார் என்னும் புலவர் இங்கு வாழ்ந்து, 'திருப்பேரூர் மரகத மஞ்சரி' என்னும் நூலை இயற்றினர். அருகிலுள்ள பல ஊர்களுக்கும் இது தாய்க் கிராமம். மாரியம்மன் கோயில் தேர்த்திருவிழா சிறப்புப் பெற்றது. தொண்டாமுத்தூர் இவ்வட்டாரத்திற்குத் தலைமை பொருந்தியது. வட்டாரப் பஞ்சாயத்து சபை இங்கு உள்ளது. புத்தூர், முத்திபாளையம், குளத்துப்பாளையம், கெம்பனூர், தீனம் பாளையம், பூச்சியூர், சிக்கராயபுரம் என்னும் ஊர்களில் ஒக்கலிகர் மரபினர் பலர் வாழ்கின்றனர். செங்குந்த முதலியார் மரபினர் சிலர் இங்கு வாழ்கின்றனர். சென்னை சைதை ஆசிரியர் பயிற்சித் தலைவர் திருவாளர் M. R. பெருமாள் முதலியார் M. A., L. T. அவர்கள் முத்திபாளையத்தினர். தமிழ் வித்துவான் திரு பூ.சு. அரங்கசாமியும், திரு. வித்வான் நஞ்சுண்டன், திரு. வித்வான் அப்பாவு ஆகியோர் தமிழ்ப்

பணி புரிந்து வருகின்றனர். புத்தூருக்குத் தெற்கே பொன் கட்டி விநாயகர் கோயில் இருந்ததாம்.

## 11. தாளியூர்—தீனம்பாளையம்

ஒக்கலிகர் மரபினரான பெருங்குடி மக்கள் வாழும் ஊர்களாகும். தீனம்பாளையம் திருவாளர் மாரண்ண கவுண்டர் அவர்கள் பெருநிலக்கிழார். கோவையில் மாரண்ண கவுண்டர் உயர்நிலைப்பள்ளி உள்ளமை காண்க. தாளியூரில் தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து ஒன்றிப்புத் தலைவர் உயர் திருவாளர் T. T. S. திப்பையா அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். முன்னாள் நாட்டாண்மைக் கழக உபதலைவராக இருந்தனர். கல்வி சமூகம் தெய்வம் என்னும் திருப்பணிகள் பல செய்துவரும் தண்ணளியாராவர். அன்பே உருவான இப் பெருந்தகையார் இவ்வட்டார வளர்ச்சியில் பெரு நோக்குக் கொண்ட உத்தமர்.

## 12. வடவழி

மருதகிரிக்கு இவ்வழியே செல்ல வேண்டும். முன்னாட் புலவர் வடவழி அருணாசலக் கவிராயர் யவன காவியம் என்னும் சோதிட நூலைத் தமிழில் பெயர்த்தவர். திருப்பேரூர் உலா, மருதாசலக் கடவுள் பிள்ளைத் தமிழ் என்னும் செந்தமிழ் நூல்களை இயற்றியவர். திருப்பேரூர்க் கனக சபையைக் கட்டிய அழகாத்திரி நாயக்கர் இவ்வூர் வழியாகவே மருதமலையினின்றும் சிற்பக் கற்களைக் கொண்டு சென்றனராம்.

## 13. திருப்பேரூர்

கச்சியப்ப முனிவர் திருப்பேரூர்ப் புராணம் பாடியுள்ளனர். கோயில் கனகசபை சிற்பச் சிறப்புள்ளது. தீர்த்தம், மூர்த்தி, தல விசேடங்கள் நிறைந்த சிவத்தலம். இத்தலத்தின் மேல் பல புலவர்கள் பல பிரபந்தங்களைப் பாடியுள்ளனர். 17-ஆம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்த தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் கொலை மறுத்தல், வைராக்ய தீபம், வைராக்ய சதகம், அபிரோதவுந்தியார் என்னும் சைவ நூல்களை இயற்றியருளினார். கொங்கு நாட்டுக்கு மையமாக இங்கு தமிழ்க் கல்லூரி உள்ளது. இங்கிருந்து பல புலவர்கள் கற்று வெளியேறியுள்ளனர்.

தமிழ் மொழியையும் சைவத்தையும் வளர்க்கும் இம்மடாலயத்தில் முன்னம் தவத்திரு. மாணிக்க சுவாமிகளும், இன்று தவத்திரு. இராமசாமி அடிகளாரும் தலைமை தாங்கித் தமிழ்ப்பணி புரிகின்றனர். தவத்திரு சாந்தலிங்கரது நூல்களுக்கு அவர் மாணவர் போரூர் சிதம்பர சுவாமிகள் உரை எழுதியுள்ளனர். திருப்பேரூரில் பண்டித அ. கந்தசுவாமிப் பிள்ளையவர்கள் பழம்பெரும் புலவர்களில் ஒருவர்; உயர் சைவத் திருவாளராம் இவர் சிவானுபூதி பெற்றவர். இலக்கண நிறை கடல் எனப்படுவர். உயர் திருவாளர் ப. சு. மணியம் அவர்கள் மாபெரும் புலவர் பெருமகன் இவ்வூரில் உள்ளனர். திருவாளர். வித்வான் கோட்டை ஈசுவரனும், திருவாளர். வித்வான் வையாபுரியவர்களும் தமிழ்க் கல்லூரியில் பணி புரியும் பெரும் புலவர்களாவார்கள்: புலமை மிகு திருவாளர் சென்னியப்பனும் சைவ அன்பர் திருவாளர் மாணிக்கவாசக சோதிடர் அவர்களும், திருவாளர் வித்வான் நல்லமுத்து M. A. அவர்களும் தமிழ் நலங்கருதி வாழ்பவர்களே.

கோவைக்கருகிலுள்ள சிரவணபுரம் கௌமார மடாலயம் தமிழ்ப் பணி புரிந்து வருகிறது. திருவாமாத்தூர்க் கௌமார மடாலயத்தின் கிளை மடமாகும். தவத்திரு. இராமானந்த சுவாமிகள், மாணவர் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் பாடியுள்ள காவியங்கள், பிரபந்தங்கள், பாடல்கள் அளவில்லாதன. மகா கவியாகிய இத்தவப் பெரியார் இறைவனடி சேர்ந்தது மக்கள் புரிந்த தவக் குறையே. குறுகிய காலத்தில் இம்மகான் திருவாய் மலர்ந்தருளிய நூல்கள் அனந்தம். உயர்பள்ளி இம் மடாலயத்தில் நடைபெறுகிறது. சைவம், தமிழ் இவ்விரண்டையும் இரு கண்களெனப் போற்றும் இம் மடாலயத்தின் இன்றைய தலைவர் தவத்திரு சுந்தரம் அடிகளாராவர்.

## 14. மாதநகர்—குப்பனூர்

பிரமகிரி வாசத்தில் அக்கிரியின் நிழல்படும் ஊர்கள். "மாதநகர் மேவு நஞ்சப்பன் மனம் அகலாத மருதாசலக் குமரனே," இம் மகுடம் கொண்ட பாடல்கள் மருதாசல மூர்த்தி சதகத்தில் உள்ளன. நஞ்சப்பன் என்ற வள்ளல் இவ்வூரினர். இவ்வூர்ப் பெருங்குடி மக்கள் தலைவராய் உள்ளவர் உயர்திருவாளர் நடராச ஆண்டியப்பப் பட்டிலிங்கக் கவுண்டரவர்களாவர். குப்பனூர் மலையை அடுத்து உள்ளது.

கரடிமடையும் மலையை அடுத்த ஊரே. கிழக்கே தீத்தி பாளையம் என்ற ஊரும் உள்ளது.

## 15. தென்கரை, மத்திபாளையம், சென்னனூர்

தென்கரையே தாய்க் கிராமம்; இவ்வூர் இப்போது இல்லை. கரடிமடை, மத்திபாளையம், சென்னனூர் என்பன தென்கரையைச் சார்ந்தன. கூத்தாடித்திடர் அருகே இவ்வூர்கள் உள்ளன. மத்திபாளையம் மலையடிவாரத்து ஊர். பாரி மன்னனின் பறம்புமலை காணப்படுவது போல இவ்வூர்ப்புறத்தே கூத்தாடித்திடர் காணப்படுகின்றது. இவ்வூர்ப் பெருங்குடி மக்கள் தலைவர் உயர்திருவாளர் M. K. மத்தீகவுடர் அவர்களாவர். இனிய முகமும், இனிய சொல்லும் ஆழ்ந்த அறிவும் அன்புடைமையும் ஒருங்கே அமைந்தவர். தான தருமங்களில் தலைசிறந்த குடியினர். சமூகப் பணியும் கல்விப் பணியும் இறையன்பும் கொண்டவர். சென்னனூரில் பெருமாள் கோயில் உள்ளது. இங்குள்ள பஜனைக் குழு சிறப்புடையது. வைணவ பக்தர்கள் பலர் வாழும் ஊர். பாதை அருகே அப்பச்சிமார் கோயில் (அப்பூதியடிகள்) உள்ளது. இங்கு திருமணங்கள் நடைபெறும். அருள்வாக்குக் கேட்க அநேகர் வருவர்.

## 16. மேல், கீழ்ச் சித்திரைச் சாவடிகள்

இப்பெயர்க் காரணமும் ஊர்களும் இன்று இல்லை. எனினும் அரசினர் கணக்கில் இவ்வூர்கள் உள்ளன. நன்செய்க் கிராமங்கள், அருகே காஞ்சிமகாநதிக்குச் சித்திரைச் சாவடி மூன்றுவது அணையும் பாதை வழியில் கோயில்களும், பெ. இராமசாமிக் கவுண்டர் மடமும், இராம கிருஷ்ண விவேகானந்த மடமும் உள்ளன.

## 17. சுண்டப்பாளையம், வேடபட்டி

ஆற்றுக்கு வடபால் சிக்கராயபுரத்திற்குக் கீழ்ப்பால் உள்ளன. சுண்டப்பாளையத்தில் பழங்காலத்துத் திருமால் கோயில் உள்ளது. கோயில் பெரிது. ஆழ்வார்கள் பின் மரபினரோடு தொடர்பு கொண்ட ஊராகும். இங்கு விழாக்கள் நடைபெறும். தேர்த்திருவிழா நடைபெறும் போது பெருங்கூட்டம் கூடும். வேடபட்டி நஞ்செய் நிலங்கள் சூழ்ந்த வளமான பகுதியில் அமைந்த ஊராகும்.

## 18. வீரகேரள நல்லூர்

ஒக்கலிகபாளையம் எனப்படும் இது கோவை அருகே உள்ளது. சேர மன்னர்கள் கொங்கின்மீது படையெடுத்து வந்து இப்பகுதியை வென்று இப்பெயர் வைத்துச் சென்றன ராம். இவ்வூரைக் குறித்த கல்வெட்டுகள் உள்ளனவென்பர் கோவைகிழார்.

## 19. பூவிலுவர் பட்டி (பூலுவபட்டி)

ஏழு ஊர்கள் கொண்ட கிராமம் பூலுவபட்டி. மோள பாளையம், வடிவேலன் பாளையம், திம்மராயபுரம், இராம நாதபுரம், சீனிவாசபுரம், கிளி கவுண்டன் பாளையம் என்பன. நாத கவுண்டன் புதூர், புதிய ஊர் இவ்வூரோடு சேர்ந்துள்ளது. பூலுவபட்டி சந்தை கூடுமிடம். வடிவேலம் பாளையம் மோளபாளையம் மலையடிவாரம் கரிமலைத்திடர் அருகே அமைந்துள்ளன. இங்கு முருகன், வென்னல் பெருமாள் கோயில்கள் உள்ளன. இராமநாதபுரத்தில் கரிவரதப் பெருமாள் கோயில், பெருமாள் கோயில், விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில், அயனூர் கோயில்களும், தாயுமானவர் மரபு பொன்னம்பலனூர் தர்ம வைத்திய தாயுமானவர் ஆசிரமும் உள்ளன. சீனிவாசபுரத்தில் மாரியம்மன், முருகன் கோவில்களும் உள்ளன. வேளாண் குடி மக்கள் பலர் இங்கு உள்ளனர். திருவாளர் S. M. இராம சாமிக் கவுண்டர் அவர்கள் மரபினர் இங்கு வாழ்கின்றனர். இராமநாதபுரத்தில் சிறந்த பஜனைக்குழு இருக்கின்றது. கிளி கவுண்டன் பாளையம் ஆலாந்துறையோடு இணைந்துள்ளது; வியாபாரத்தலம்.

நாதகவுண்டன் புதூரில் வேளாண் குடி மக்கள் பலர் உள்ளனர். உயர் திருவாளர் வெ. எல்லம நாயுடு M. L. A. அவர்கள் இவ்வூரினர். அருள் நோக்கும் கனிந்த முகமும், இன்முகமும், சொல் வன்மையும் அன்பும் நண்பும் ஒருங்கே அமைந்த அன்பர். சன்மார்க்க நிலையில் நின்று வாழ்பவர். பொதுநலப் பணியும் கல்விப் பணியும் புரியும் உத்தமர்.

## 20. ஆலாந்துறை, சங்கராயபுரம்

இவ்வூர் ஒரு வாணிகத் தலம். சங்கராயபுரம் இப்போது இல்லை. வெகு காலத்திற்கு முன்னம் இருந்த இவ்வூர் அரசினர் கணக்கில் 1914 வரை இருந்தது. பின்னர் ஆலாந்துறையோடு இணைக்கப்பட்டது. ஆலாந்துறை தாய்க்

கிராமம். முகாசிமங்கலம் காளிமங்கலம் என்பன இவ் வூரைச் சார்ந்தன. லிங்கே கவுண்டன் பாளையம் என ஒரு ஊர் இருந்து ஆலாந்துறையோடு சேர்க்கப்பட்டது. இவ் வூரின் பெருநிலக் கிழாராக இருந்த இராமக்கம்மாள் என்ற திருமால் பக்தை இவ்வூரில் வேணுகோபால சுவாமி கோயிலைக் கட்டியுள்ளனர். அங்கு இராமானுச கூடம் என ஒரு கல்யாண மண்டபமும் கட்டி இறைவருக்குப் பல விழாக் களையும் கொண்டாடி வந்தனர். வைகுந்தம் அடைந்த இவ்வம்மையாருக்குப் பின்பு இது சமயம், இவ்வூர் மிராசு தாரணி A. K. பருவதம்மாள் அவர்கள் இப்பணிகளைச் செய்து வருவதோடு, போளமாம்பட்டி நாகீசுரர் திருமுத்துவாளி கோயில்களில் நித்திய பூசையும் விழாக் களும் நிகழ்த்தி வருகின்றனர். வேணுகோபாலசுவாமி பக்தகான சபை என்ற இசைக் குழுவினரும் அதன் தலைமை யாக நாச்சிமுத்து பாகவதரும், இறைவன் சீர்பாத ஊழியத் திற்கு ஆமருவியாச்சாரியார் என்பவரும் உள்ளனர்.

## 21. முகாசிமங்கலம் காளிமங்கலம்

ஆலாந்துறைக்குத் தென்புறம் ஒரு கடிகை தூரத்தில் உள்ள பழய ஊர்கள். மலையை அடுத்து உள்ளன. இவைகள் ஆலாந்துறையைச் சார்ந்தன. வேளாண் குடிப் பெருமக்கள் பலர் வாழும் ஊர்கள். மங்கலம்மன் கோயில் உள்ளது. நல்ல வளமாகிய பகுதிகள். காளிமங்கலம் முன்பு சிறந்து விளங்கியது. இவ்வூரில் கோயில்கள் பல உண்டு. காளிமங்கலத்தின் மறு தோற்றமே நாத கவுண்டன் புதூர். முகாசிமங்கலத்தில் இசைக் குழுவினர் உள்ளனர். நாதகவுண்டன் புதூர் மருதமலைக் கவுண்டர் என்பவர் மருதமலையோடு பண்டை நாளிலிருந்து தொடர் புடையவர். இவ்வூரில் முருகன் கோயிலும் பிற கோயில் களும் உள்ளன.

## 22. மத்துவராயபுரம், தொம்பிலிபாளையம்

மத்துவராயம் என்பதே தொம்பிலிபாளையம். இப்போது தொம்பிலிபாளையம்தான் உள்ளது. மத்துவராயபுரம் அருகே இராமநாதபுரம், சங்கரராயபுரம் என்பன மத்துவர், சங்கரர், இராமாநுசர் ஆகிய மதாசாரிகளை நினைவூட்டுகின் றன. தொம்பிலி கவுண்டர் என்பார் நமது உயர்தலைவர் திரு

வள்ளர் T. P. அட்டிமுத்துக் கவுண்டர் அவர்கள் முன்னவர். இவர் பலவகையான சித்து விளையாட்டுக்களில் வல்லவராவர். இவ்வூரின் அக்காலத்துக் காணியாட்சியாளர். இவர் பெயரால் உண்டானதே இவ்வூர். பாதையோரத்தில் இவர்க்குக் கோயிலும் உள்ளது பூண்டி பக்தர்கள் இவரை வணங்கிச் செல்லலாம். இவ்வூர் கூடுதுறை அருகே உள்ளது. இவ்வூரின் நீர்த்துறையே கூடுதுறை. காஞ்சிமகா நதியும் நொய்யலாறும் கூடும் புண்ணிய தலம். இத்தலத்தில் கூடுதுறையில் முழுகியவர்கள் பஞ்சநதியில் மூழ்கிய பேறு பெறுவர். கூடுதுறையில் முருகன் கோவிலையும், சன்மார்க்க சபையையும் கட்டி வைத்தவர் சீனிவாசபுரம் திருமதி பொங்கம்மாள் என்பவர். இவ்வம்மையார் இறைவன் நிழல் அடைந்த பின்பு இவர் மரபினரான திரு S. M. இராமசாமிக் கவுண்டர் குமாரர் திரு. இரத்தினசுவாமிக் கவுண்டர் அவர்கள் இக்கோயிலையும், சன்மார்க்க மடாலயத்தையும் பரிபாலித்து வருகின்றனர். இங்கு கிருத்திகை விழாக்கள் நடைபெறுகின்றன. ஆலாந்துறை P. கிருஷ்ணசாமிக் கவுண்டர் தலைமையில் பசனைக் குழுவின் ஆதரவில் இசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மேற்கே செல்லும் பாதை சிறுவாணி பாதை. மேற்கு குஞ்சரமுடிக்கு அப்பால் மலைக்கு அடுத்த சாரலில் ஓடும் ஆறே சிறுவாணி. வானியாறு சிறிதாக இங்கு வெள்ளிமலைத் தொடரில் உற்பத்தியாவதால் சிறுவாணி எனப்பட்டது. இவ்வாற்றைத் தேக்கி அந்நீரை மலையைக் குடைந்த குகையின் வழியே இப்பக்கத்திற்குக் கொணர்ந்து குழாய் வழியாகக் கோவைக்கு அனுப்புகின்றனர். கோவை மக்கள் உண்ணுவது வெள்ளிமலையான் வழிச் செல்லும் நீரேயாம். உண்ணுதற்கு அமிர்தமாகிய இந்நீரை அக்காலம் கோவைக்குக் கொண்டு சேர்க்க ஆவன செய்தவர் கோவை திவான்பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியாரவர்களாவர். இத்திருவாளர் கோவைக்குச் செய்த திருப்பணிகள் பலவாகும். சிறுவாணித் திட்டத்திற்கு முன்பு ஆலாந்துறைப் பாதை போளமாம்பட்டிப் பாதை என வழங்கியது. இப்பாதை அக்கரை போளமாம்பட்டி என்னும் ஊருக்குச் சென்றடைந்தது. சிறுவாணிமலை அடிவாரத்தின் பகுதியை இவ்வாறு அக்காலம் குறிப்பிட்டனர். பின் இப்பகுதி மத்துவராயபுரத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. மலையிலுள்ள சிறைக் காடுகள் போளமாம்பட்டி ரேஞ்சு என்று கூறப்படுவதும் இருட்டுப் பள்ளத்தில் அதுபற்றிய அலுவலகம் இருப்பது காண்க.

# 6. ஆராய்ச்சிக் குறிப்புகள்

**1. சோழன் பூர்வ பட்டையம்:** இந்நூலில் சாலி வாகனன் இறைவனடி எய்தியது கலி. 1443 என்பது. கி. மு. 1658 ஆகும். 3652 ஆண்டுகளுக்கு முன் சாலிவாகனன் இருந்தான் என்பது பொருந்தாது. இதுபோழ்து சாலி வாகன சகம். 1886 என அறிக. இது நீங்க கரிகாலன் பட்டம் சூட்டிக்கொண்டது கலி. 3567-க்கு கி. பி. 466. ஐந்தாண்டில் கரிகாலன் வாழ்ந்தான் என்பதும் பொருந்தாது. ஈண்டு குறிக்கப்பட்ட கரிகாலன் கரிகாற் பெருவளத்தான் அல்லன். இடைக்காலத்தில் வேறு யாராவது சிறப்பில்லாத ஒரு கரிகாலன் இத்திருப்பணிகளைச் செய்தான் என்பது பொருந் தும். கொங்கு நாடு இறுதியில் இராசராசசோழன் கைக்கு வந்தது. பிற்காலச் சோழர்களே இந்நாட்டை ஆண்டனர். அதுபோழ்து கொங்கு சோழர்கள் என்பார் இந்நாட்டைத் தனியாக ஆண்டுள்ளனர். கொங்கு நாடு சோழர் கைக்கு உட்படுவதன் முன்பு பெயரளவில் சோழநாட்டை ஆண்ட உறையூர்ச் சோழர்களில்—ஒரு கரிகாலன் (பல்லவர் காலத்தில்) இத்திருப்பணிகளைச் செய்திருக்க வேண்டும். இம் மன்னன் பட்டமேறியது முதல் திருப்பணி முடிவுவரை சுமார் கி. பி. 466 முதல் 528 வரை 64 ஆண்டுகள் ஆண்டுள் ளனன். கி. பி. 466-ல் (கலி. 3567) பட்டமேற்ருன் என்ப தால் அப்போது வயது 13 ஆகையால் இவன் கி. பி. 455-ல் பிறந்திருக்க வேண்டும். பேரூர், முட்டம் ஆகிய இடங்களின் திருப்பணிகள் கலி. 3613 (கி. பி. 512), கலி. 3629 (கி. பி. 528) என இருக்கவேண்டும். அப்போதுதான் அதிலுள்ள தமிழ் ஆண்டுகளுக்கு நேராக இருக்கும். இடைக்காலச் சோழர்களுள் இவனும் ஒருவன் எனலாம். பெயரளவில் அரசனுக இருந்து குறிப்பிட்ட சிறு பகுதியை ஆண்டு வந்தவ னுகையால் கோயில் திருப்பணிகள் செய்யப் போதிய அவ காசம் உடையவனுஞன். பல ஆண்டுகள் இத்திருப்பணியி லேயே ஈடுபட்டனன் எனலாம். மிகப் பெரிய மன்னன் இக் காரியங்களைச் செய்து முடிக்கவல்லவனெனினும் தானும் உடன் இருந்து செய்வதற்கு இயலாதவனேயாவன். இம் மன்னனும் பிறரும் பற்றற்ற துறவிகளைப்போல் இந்நாடு முழுதும் சுற்றியுள்ளனர் எனலாம்.

மற்றும் அக்கால மக்களுடைய பழக்க வழக்கங்கள், அவர்களது தெய்வபக்தி, சத்தியம் பிறழாத முறை என்னும் இவைகளை இந்நூலால் அறிகின்ருேம். கற்பவர்களைப் பல

நூற்றுண்டுகளுக்கு முன் இழுத்துச் செல்லும் நன்னடை பொருந்திய நூல். சமயப் பற்றையும் தெய்வ நம்பிக்கையையும் உண்டாக்கும் நூலாகும். கொங்கு நாட்டிலுள்ள பழய இடங்களை மிக நன்கு விரித்துரைக்கின்றது. ஊர்களின் பெயர்கள் நன்கு உரைக்கப்பட்டுள்ளன. நதிகள், மலைமேல் திட்டுகள், சிறு சுனைகள் என்பனவற்றை நன்கு அறிவிக்கின்றது. இதிலுள்ள சோழர்கள் வரலாறு பொருத்தமாக இல்லை என்றாலும் தெய்வத் தலங்களின் வரலாறுகள், செவி வழிச் செய்திகளுக்கும், ஆங்காங்குள்ள குறிப்புகளுக்கும், தலபுராணங்களுக்கும் ஏற்றவாறு ஒத்துள்ளன. திருப்பேரூர்ப் புராணம் அபயப்படலம் பற்றிய கருத்து இந்நூலின் வெள்ளியங்கிரி வரலாற்றில் காணலாம். சுமார் 6ஆம் நூற்றுண்டுக்கு முன் சில காலங்கள் கொங்கு நாடு சீர் கெட்டு இருந்தது என்பதும், பின்னர் சில பெரியோர்கள் இந்நாட்டைச் சீர்படுத்தி அமைத்தார்கள் என்பதும் உண்மையாகலாம். அக்காலம் சமண சைவமதப் போராட்டங்கள் நிகழ்ந்ததைக்கொண்டு இவ்வரலாறு சாலிவாகனன் பேரால் எவராவது ஒருவர் சைவ வைணவமென்னும் தமிழ் மதங்களைக் காக்கும் கருத்தோடு கற்பித்துக் கதையாக எழுதியிருக்கலாம் என்றே கொள்ளவேண்டும். இந்நூலிற் கூறப்பட்ட சில கருத்துக்கள் (எருமைக்கிடா பலி போன்றவை) பிற்காலம்வரை நடைபெற்று வந்துள்ளன என்பது உண்மையே. தெய்வப்பணி செய்த இப்பெருமக்களான கரிகாலன் முதலியோரை நாம் பின்பற்ற வேண்டும். ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் ஐந்து சனிவார விரதமும், ஐப்பசி மாதம் துலா முழுக்கும், கார்த்திகை ஐந்து சோம வார விரதமும் என அவைகளைத் தேவர் முனிவர்களும் கொண்டாடினர் என்று பூர்வ பட்டையம் கூறுகின்றது. சனிவார விரதம் கன்னிகாவனமாகிய திருவாவினன்குடி (பழநி)யிலும் கார்த்திகை வார விரதம் பஞ்சகிரிகளிலும் கைக்கொண்டதாகக் கூறப்படுவதால்தான் கொங்கு நாட்டு மக்கள் இவ்விரதங்களை நன்கு கடைப்பிடிக்கின்றனர். இம் மாதங்களில் ஊர்கள்தோறும் பஜனைகளும் ஊர்வலங்களும் நடைபெறுவதை நம் கொங்கு நாட்டில் இன்றும் காண்கிறோம்.

**2. பஞ்சகிரிகள்:** இந்நூலில் கூறப்படும் பஞ்சகிரிகளுள் சதாசிவகிரி என்னும் நீலிகிரியும், பேரூர்ப் புராணம் கூறும் சத்திகிரியும், உருத்திரகிரி என்னும் மலையும் வெள்ளியங்கிரியின் வடபால் உயர்ந்து காணப்படும் குன்றுகளேயாகும்.

அங்கெல்லாம் சென்று ஆராய்தல் நலம். அதாவது தடாகத்திற்கு மேற்கே காணப்படுவதும், கிரிமலைக்கு வடக்கே காணப்படுவதுமான குன்றுகளை ஆராயவேண்டும். நீலிகிரியில் நீலியாறு உற்பத்தியாகிக் காஞ்சியோடு மலைமேல் கலக்கின்றது வெளிப்படை. இறைவன் கிரியான மயேசுரகிரியிலிருந்து உற்பத்தியாவது காஞ்சியும் சாமிமுடியாறு என்னும் ஆண்டிகளையும் என்க. மற்றும் பட்டயத்துட் கூறும் நதிகள் மலையின்மேல் உள்ளனவென்றே கூறவேண்டும். பலவிடங்களிலும் சரிவுகளிலும் பள்ளங்களாக இருக்குமிடங்களில் சுனைகள் உள்ளன. வட்டமாகத் தெரிகின்ற மலைகளுள் உள்ள சுனைகளைத் தொகுத்துக் கூறுகின்றன எனலாம். இருட்டுப் பள்ளம், முட்டத்துறையாறு, முரசம்பூர் ஆறு, பெரியாறு, உரிக்கட்டிப்பள்ளம், பீட்டுப்பள்ளம், பெரும் பள்ளம், புத்தூர்ப்பள்ளம் போன்றவைகளை நதிகளாகவே கொள்ளவேண்டும். அக்காலத்தில் இந்நதிகளுக்கு இடப்பட்ட பெயர்கள் இன்று நமக்குத் தெரியாதல்லவா? எனவே பெயர் விளங்கி இடம் விளங்காத சுனைகளை இல்லை என்று கூறுவதற்கில்லை. தேவர் கூட்டத் திருப்பாறையில் தேவர்கள் சுப்பிரமணிய தேவனைத் தொழுதனர் என்று பட்டயத்தில் கூறப்படும் இடம் மருதமலையே. தேவர் முனிவர்கள் பல தீர்த்தங்களை உண்டாக்கினர் எனப்படுவதால் மருதமலையில் பல தீர்த்தங்கள் உள்ளன என்பதும் அறிக. மருதாசலக் கடவுளைத் தொழுவோர் எக்காரியங்களிலும் வெற்றி பெறுவர்.

**3. திருப்பேரூர்ப் புராணம்:** நம் தமிழ் மொழியின் வளத்தை அறிவிப்பனவே புராணங்கள். கச்சியப்ப முனிவர் பாடிய பேரூர்ப் புராணத்தைப் பிற்கால உரையாசிரியர்கள் பலர் கையாண்டுள்ளனர். தமிழ்த் தாத்தா என்ற மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் போன்ற பெரும் புலவர்களால் கையாளப்பட்ட நூல். இந்நூலிலுள்ள விம்மிதப்படல வரலாற்றைச் சிலர் கட்டுக்கதை என்பர். வெள்ளிமலையிலுள்ள தமிழ்ச் சித்தர் மூலிகைகள் பலவாம். அவைகளுள் பல அருமையும் பெருமையுமுள்ள சக்தி வாய்ந்தனவென்பதைத் தமிழ் மருத்துவர் அறிவர். மூலிகை மர்மங்களே விம்மிதங்களாம். மலைகளில் உள்ள மண் வகைகள், தாவரங்களின் வகைகள், கற்களின் வகைகள், உலோக வகைகள் என்னும் இவைகளை முழுக்க அறிந்தவர்கள் இலர். ஒரு இடத்தில் ஒன்று இருப்பதாக நம் முன்னோர்கள் கூறுகின்றனர் என்றால் அதைக் கண்டுபிடித்துப்

பயனடைய முயல வேண்டுமேயல்லாமல் மலைவெளியில் சுற்றிப் பார்க்காமலும், அங்குப் போகாமலும் எல்லாம் கண்டறிந்தவர்போல் அது இல்லை இது பொய் என்று கூறுதல் பொருந்தாது. கலைகள் 64 என்று கூறப்படுகின்றது. இக்கலைகள் யாவை? எவை எவையுள்ளன? உள்ள கலைகளின் பெயர்களாவது விளங்குகின்றனவா? அக்கலைகளின் உட் கருத்துகள் நமக்கு இன்னதென விளங்குகின்றனவா? முயன்று எல்லாக் கலைகளையும் கண்டு அவைகளைப் பயிலுதல் நன்று. கலைகள் இல்லை எனக் கூறுதல் பொருந்தாது. அக்கர விலக்கணம், சோதிடம், சகுனம், உருவசாத்திரம், இரத்தின பரீட்சை, பூமி பரீட்சை, ஆகருடணம், உச்சாடணம், வித்து வேடணம், இரசவாதம், ஆகாயப்பிரவேசம், ஆகாய கமனம், பரகாயப் பிரவேசம், யோகம், அக்கினித் தம்பம், சலத் தம்பம், வாயுத் தம்பம், திட்டித் தம்பம் என்பனவெல்லாம் கலைகள்தானே! பல கலைகளைப்பற்றிய நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. எங்கேனும் மூலை முடுக்குகளில் உள்ள ஏட்டுப் பிரதிகளைக் கண்டுபிடித்துத்தானே தமிழ்த் தாத்தா அவர்கள் தமிழ் நூல்களைப் பதிப்பித்தனர். எனவே பேரூர்ப் புராணம் கூறும் விம்மிதங்களை ஆராய்ந்து இன்னதெனக் காணுதல் நம் கடனாகும்.

## 7. தெய்வீக நிகழ்ச்சிகள்*

**1.** பூண்டியின் அருகே பல பதிகளில் மலைவாழ் மக்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர். ஒருசமயம் அம்மரபினர் பலர் வறுமை உற்றனர். இவர்களில் ஒருவர் சிவபக்தராக இருந் தாராம். தம் கொடுமைகளை எண்ணி இறைவரிடம் முறை யிட்டனராம். மனம் கனிந்த இறைவன் இவர்களுக்கு மாறு வேடத்தில் வந்து உணவு தந்து மறைந்தனராம். இவ்வாறு சில நாள் நடந்ததாம். கட்டுச்சோறு கொடுத்தவர் ஒரு பண்ணையார் என்றே இருந்த அவர்களுக்குப் பின்னரே இறைவன் திருவிளையாடல் இதுவென விளங்கியது.

**2.** பொன்னன் என்னும் இருளன் பூண்டியில் ஆடு மாடுகள் மேய்த்து வந்தனன். கோயில் மேடையில் இறைவன் திருப்பாதங்களை நினைத்துக்கொண்டு தினமும் உறங்குவானும். இவனுக்கு ஒரு நாள் பசியுண்டாயிற்று.

*இந்நிகழ்ச்சிகள் செவிவழிச் செய்திகளாகும். பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தவைகளாம்.

கோயிலிலிருந்து ஒரு தேங்காய் உருண்டு வந்தது. இதைக் கண்ட அவன் மனம் மகிழ்ந்து அதை உடைத்துத் தின்று பசியாறினன். இவ்வாறு எட்டு நாட்கள் நடந்தனவாம். மற்றவர்கள் இதை அறியவே அத்தேங்காய் உருண்டு வருவது நின்றுவிட்டது. இவ்வாறு ஒரு ஐதீகம் கூறுகின்றனர்.

3. பூண்டிப் பூசாரியின் மரபினர் முன்னம் ஒரு நாள் உணவு சமைத்தற்கேற்ற காய்கறிகள், அரிசி பருப்போடு கிரிக்குச் சென்றனன். அங்கு உணவு சமைத்து உண்டனர். பின் மறுநாள் வழிபாடுகள் முடிந்ததும் கீழே இறங்கினர். சில கத்தரிக்காய்கள் எஞ்சினவற்றைக் கூடையில் வைத்து அவைகளை உடன் கொண்டு வந்தனர். அக்காய்கள் ஆண்டிகளை வந்ததும் அழுகிக் கிடந்தன. வெம்பிய அக்காய்களைப் பூண்டியில் வந்து பார்க்கவும் கற்களாயினவாம். இப்படி ஒரு வரலாறு உண்டு.

4. வீரகாளியம்மையார் கோயிலுக்குக் கோவையிலிருந்து பூண்டிக்கு வந்திருந்த தேவாங்கர்குல அம்மையார் ஒருவர் சென்றனர். அருகில் உள்ள நொய்யல் ஆற்றில் மூழ்கி எழுந்து தமது ஆடைகளைத் துவைத்து வந்து வீரகோல அம்மன் கோயிலருகே காயவைத்திருந்தவர், வரும் போது அதை எடுத்துவர மறந்தனர். பின்னர் நினைவு வந்த அவர் மீண்டும் சென்று பார்க்க அச்சேலை அங்கு காணப்படவில்லை. அக்கோயிலில் பணிபுரிந்து வந்த மலைசர் ஒருவர் அதைக் கவர்ந்தனர். அவரை விசாரித்ததில் தாம் அதை எடுக்கவில்லை என்று சத்தியம் செய்தனர். கோவையினரான அம்மையார் வீரகாளியம்மையாரை நோக்கி, "நீயே மூன்று நாட்களில் சோதனை காட்டவேண்டும்" என்று வணங்கி வந்தனர். அவ்வளவுதான் அச்சேலையைக் கவர்ந்தவர் மறுநாள் இறந்துவிட்டார். அச்சேலையை எடுத்த அவருக்கு அச்சேலையைப் போர்த்துத் தகனம் செய்தார்களாம்.

5. சந்தனபுரம் (சந்தேகவுண்டன்பாளையம்) என்னும் ஊரில் சேனுபதிக் கவுண்டர் என்ற பெருநிலக் கிழார் ஒருவர் இருந்தனர். இவருக்கு முட்டத்தில் (வெள்ளிமலை அடிவாரம்) வயல்கள் இருந்தன. ஒரு சமயம் மழையற்றதால் வயலுக்கு நீர் அரிதாயிற்று. உழவர்கள் முறை வைத்துப் பாய்ச்சிக் கொண்டனர். நீர் பாய்ச்சும் அதிகாரி (நீர்மணியம்) உடன் இருந்து நாழிகைக் கணக்குப்படித் தண்ணீர்ப் பாய்ச்சிக் கொடுத்தனர். சேனுபதியவர்கள் நிலம் மிகவும் காய்ந்து

விட்டது. பயிர்கள் வெப்பத்தால் வெண்ணிறம் அடைந்தன. தமக்கு நீர்முறை வரும்வரை வயல் தாங்காது என்பதை யறிந்தனர். இப்பெருமகன் சௌந்தரபாண்டிய சுவாமிகள் காலத்தவர். சுமார் 70 ஆண்டுகளின் முன்னவர். மேலான சிவபக்தர். பூண்டி இறைவன்மேல் அளவுகடந்த அன்புடையவர். அன்று வயல் இருந்த நிலைமையை அறிந்த அவர் இறைவனை வேண்டி முறையிட்டனர். "உன் நிழல் தோயும் இப்பகுதி இவ்வாறு காய்ந்து கிடக்கலாமோ?" என இறைவனை வேண்டினர். பின்னர் இறைவனை எண்ணித் தம் வீட்டையடைந்தனர். இறைவன் அருளால் வயல் முழுக்க மடைகள் வழிய நீர் நின்றது. காலையில் சென்று பார்த்த அன்பர் அதிசயப்பட்டு வயல் தலைமடையைச் சென்று பார்த்தனர். அடைத்த இடம் அப்படியே இருந்தது! வாய்க்காலில் நீர் வரவுமில்லை! அவ்வாண்டு முதல் பூண்டியில் இரண்டு சலகை நெல்லால் ஒரு அன்னதானம் நிகழ்த்தி வந்தனராம்.

6. இச்சேனுபதிக் கவுண்டர் நல்ல பக்தர் ஆகையால் திருமுத்துவாளியும், நாககாளியும் இவரது வேண்டுகோளுக்கு இணங்கி இவ்வன்பர் சென்ற வழியே உடன் சென்று தமக்கு மிருக பயம் இல்லாமல் செய்வார்களாம். இட்ட பணியையும் செய்வார்களாம்.

7. ஒரு பெரியவர் நாகேசுரத்திற்கு அருகில் உள்ள வேளாண்மைக் காட்டிற்கு இரவு காவலுக்குச் சென்றனர். மழைத்துளி வந்தது. நடுயாமம். நாகேசுரர் மண்டபத்தில் உறங்கினர். சிறிது நேரத்தில் அங்கு ஒரு கிழவியின் இருமல் ஒலி கேட்டது. யார் என்று கேட்டதும், "நான் வெள்ளி மலைக்குப் போக வந்தேன். இருண்டுவிட்டதால் இங்கு வந்து உறங்கினேன்" என்றனள். யாமத்திற்குப் பின்னர் இருள் மிகுந்த வேளையில் தூங்கி எழுந்து பார்க்க அக்கிழவி அங்குக் காணப்படவில்லை. தமக்குத் துணையாகவே இறைவி அங்கு வந்ததாக அப்பெரியார் கூறினர்.

8. ஈரோட்டில் உயர்சைவத் திருவாளர் கா. மாரிமுத்து முதலியார் என்பவர் இருக்கின்றனர். 1915-ஆம் ஆண்டிலிருந்து வெள்ளியங்கிரிக்குத் தவறாமல் சென்று வருபவர். வெள்ளி மலை யானைத் தலைவனாக வணங்கி வரும் அன்பர். அருள் உள்ளம் படைத்த இவ்வன்பர் செம்மேடு அருகே கானலாக இருந்த காலத்திலேயே அங்குச் சென்று வந்தனர். அடர்ந்த காடுகளுக்கிடையே திசை தெரியாமல் தவித்து நாள் முழுதும்

சுற்றிப் பின் கோயிலை அடைந்ததும் உண்டு. மலையின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றித் திரிந்தவர். பல தவயோகி களுடன் பழக்கம் உடையவர். அக்காலம் வெள்ளிமலைக்கு வந்து போன பெரியோர்களை இவர் அறிவர். இவர் ஆண்டு தோறும் வெள்ளிமலைக்கு வரும்போதெல்லாம் இவருடைய பெண் 12 வயதுடைய **'சம்பூரணம்'** என்பவள் இவருடன் பூண்டிக்கு வருவதாகக் கூறினள். பல தடவைகளில் முயன்றும் இக்குழந்தையைப் பூண்டிக்கு அழைத்து வர இயல வில்லை. இக்குழந்தை பூண்டி இறைவன்பால் ஆழ்ந்த அன்பு வைத்திருந்ததை எவரும் அறியவில்லை. எப்பொழுதும் இறைவழிபாட்டிலேயே இருந்த இக்குழந்தை ஒரு சமயம் பிணியுற்றது. அப்பிணி மிகுந்துவிட்டதால் தமக்கு இறுதி நாள் வந்ததை அறிந்து, "இதோ வெள்ளியங்கிரிக்குச் செல்லுகிறேன். ஒரு துறவி என்னை அழைக்கிருர். அவ ருடன் நான் போகிறேன். நீங்கள் இங்கே இருங்கள்" என்று கூறி இறைவனடி சேர்ந்தாள் இக்குழந்தை. தவவழியில் நின்ற இக்குழந்தையின் அன்பையும் அருள் வாக்கையும் எண்ணி இன்றும் மனமுருகுகின்றனர் ஈரோட்டு ஐயா அவர்கள். சம்பூரணத்தின் நினைவுச் சின்னமாகப் பூண்டி இறைவன் கோயில் முன்பு நந்தி மண்டபத்தின் அருகே வேல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. தன் தந்தையாரின் உள்ளத்தை இறைவன்பால் கொண்டு செலுத்திவிட்டுத் தான் மறைந்த இத்தெய்வத்தின் சார்பில் பூண்டியில் அபிசேகம் ஆராதனை களை ஆண்டுதோறும் செய்து வருகின்றனர்.

9. *தென்னுட்டில் தெய்வம் குடிகொண்ட தலங்கள் பலவாம். திருப்பதி போன்ற மலைத்தலங்கள் பல உள்ளன. வெள்ளிமலையினும் உயர்ந்த திருப்பதி மலைக்குச் சென்று வரும் பத்தர்கள் மிகவும் அதிகம். வெள்ளிமலைக்கு மூங்கில் தடியோடு சென்று திரும்புகின்றனர். பிற மலைத்தலங்களில் மூங்கில்கள் மிகுந்திருப்பினும் அதை அங்குச் செல்பவர் நினைப்பதில்லை. இதற்குக் காரணம் உண்டு. வெள்ளிமலை கைலைமலை! அருச்சுனன் கயிலையில் தவம் புரிந்து பாசுபதாத் திரம் பெற்று மீண்டனன் என்னும் வரலாறு பாரதத்தில் உள்ளது. எனவே அருச்சுனன் பாசுபதாத்திரம் வாங்கி வருகின்ற தோற்றமும் பக்தர்கள் கையில் மூங்கில் தடியோடு

---

* அருச்சுனன் பாசுபதம் பெறும் வரலாற்றை முத்தமிழ்க்கவி வித்துவான் அரசப்பனுர் இயற்றிய 'வெள்ளியங்கிரி மகிமை' என்னும் நூலில் நாடக வடிவத்தில் கண்டு மகிழ்க.

திரும்பி வருகின்ற தோற்றமும் ஒன்றாகத்தான் இருக்கிறது. அருச்சுனனோடு போர் புரிந்த சிவபெருமான் களைத்து விழுந்த இடமே ஆண்டிகளையாகும்.

# 8. கொங்கு நாட்டுக் குறிப்புக்கள் *

## 1. குன்று தோறாடல்

கொங்கு நாட்டிலுள்ள மலைக்கோயில்கள் பலவாம். சிலவற்றை நாம் தொகுத்துக் காணல் நன்று.

### அ. கோவை மாவட்டம்

**1. கோவை வட்டம்**

1. **மருதமலை :** கோவைக்கு மேற்கே 7½ கல்—திரு முருகன் பூண்டி சாசனத்தில் இதன் பெயர் உண்டு—800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தலம். திருப்புகழ்: 'திரிபுரமதனை.'

2. **குருடி மலை :** (குருவிருடிமலை) துடியலூரிலிருந்தும் 4 மைல்—அடிவாரம் பொன்னூத்துமலை—உயரம் 600 அடி—'கருடன்மிசைவரு' என்ற திருப்புகழ் உண்டு.

3. **அனுமக்குமார் மலை :** தடாகத்திற்கு மேற்கே—அனுபாவி மலை என்பர். பெரிய தடாகத்தில் பழங்கால விக்கிரகங்கள் தோண்டியெடுக்கப்பட்டன.

4. **கணவாய் மலை :** சுந்தரர் கீரையைத் தின்று கக்கினூராம்—கக்குமல்லேசுவரர்—திருப்புகழ் வெளி வரவில்லை.

5. **செவணன்பட்டிக்கரடு :** சத்தி போகும் வழியில் சிரவணபுரம் அருகே உள்ளது. விநாயகர் எழுந்தருளியுள்ளார்.

6. வெள்ளியங்கிரி மலையும், பஞ்சகிரிகளும் முன்னம் உரைக்கப்பட்டன.

**2. அவிநாசி வட்டம்**

1. **ஓதிமலை :** 2157 அடி உயரம். முருகன் பிரணவத்தை ஈசனுக்கு ஓதிய இடம்—கண்வ ரிஷி வாழ்ந்த இடம். 'அதிமகமாயி', 'சோதி விதத்து' என்ற திருப்புகழ்ப் பாடல்கள் உள.

---

* கொங்குக் கட்டுரைகள் என்ற நூற் குறிப்புகளாகும்.

**2. குருந்தமலை:** காரமடைக்கு மேற்கே 3 மைல்—கோண முடி—பாறையில் கல்வெட்டு உண்டு.

**3. தோகைமலை:** காரமடைக்குத் தென்மேற்கே தோளம்பாளையம் செல்லும் பாதையில்.

## 3. பல்லடம் வட்டம்

**1. தென்சேரிகிரி:** பல்லடம் பொள்ளாச்சிப் பதையில் உள்ளது; 150 அடி உயரம்; கடல் மட்டத்திற்கு மேல் 1356 அடி.

**2. அலகு மலை:** அவநாசி பாளையத்திலிருந்து வடக்கே 3 மைல்; கடல் மட்டத்திற்கு மேல் 1359 அடி.

**3. முத்துக்குமார் மலை:** பல்லடத்திற்குக் கிழக்கே 3 மைலில் புஞ்செய் மாதப்பூர்; இங்கிருந்து பெங்களூர் செல்லும் பாதை அருகில்.

**4. மலைப்பாளையம்:** நொய்யல் ஓரம் சாமளா புரத்திலிருந்து மங்கலம் வரை செல்லும் பாதையில் உளது.

## 4. பொள்ளாச்சி வட்டம்

**1. கிணற்றுக்கடவு—பொன்மலை:** கோவை பொள்ளாச்சி பாதையில் 12 கல்லில் உளது; நிலத்தின் மேல் 100 அடி; கடல் மட்டம் 1212 அடி; ஒரே பாதையாலானது; புரவிபாளையம் சமீன் பரிபாலகர்; மைசூர் மன்னர் காலத்திய செப்பேடு உண்டு; இவ்வூர்ச் சந்தையின் சுங்கம் பட்டயப் படி ஆலயத்திற்குச் சேர்ந்தது; 'அரிவையர்கள்' என்ற திருப்புகழ்.

**2. கோலார்பட்டி:** பொள்ளாச்சி; உடுமலை பாதையில் 7 கல்லில்.

**3. ஆனைமலை:** பொள்ளாச்சியிலிருந்து 8 மைல்; யானைமலைத் தொடரில் பல ஆலயங்கள் உள்ளன.

## 5. உடுமலை வட்டம்

1. திருமூர்த்தி மலை—உடுமலையிலிருந்து 12 கல்; பல கோயில்கள் உள்ளன.

## 6. தாரை வட்டம்

*ஊதியூர் மலை*—காங்கேயம்—தாராபுரம் பாதையில் 8 மைல்—3 மைல் நீளம்; $1\frac{1}{2}$ மைல் அகலம்; கடல் மட்டம்

மேல் 1275 அடி—கொங்கணகிரி—'ஐங்கருணை ஒத்தமனம்' என்னும் திருப்புகழ்.

2. **சிவமலை:** காங்கேயம் திருப்பூர் பாதையில் 3 கல்; மூன்று திருப்புகழ் உண்டு; அச்சிட்டோர் இப்பாடல்களைப் பழநியோடு சேர்த்தனர்.

3. **பட்டாலியூர்:** இத்தலத்திற்கு வடக்கே உள்ளது; திருப்புகழ் தனியே உள்ளன.

4. **வட்டமலை:** 953 அடி உயரம் காங்கேயம்; ஊதியூர் வழியில் காடையூர் கிராமத்தில்.

5. **திருமான் கரடு:** 970 அடி காங்கேயம்; வெள்ள கோயில் வழியில்.

## 7. ஈரோடு வட்டம்

1. **சென்னி மலை:** ஈங்கூர் நிலையத்திலிருந்து தெற்கே 4 மைல்; கடல் மட்டம் 1749 அடி; ஊரில் சிவாலயம் உண்டு.

2. **கதித்த மலை:** ஊற்றுக்குளியிலிருந்து 2 மைல்; கொங்கேழு மலைகளில் ஒன்று.

3. **மலைப்பாளையம்:** சீனுபுரத்திற்குக் கீழ் 1 மைல்; நிலத்தின் மேல் 50 அடி உயரம்.

4. **எழுமாத்தூர் மலை:** கடல் மேல் 1342 அடி; ஈரோடு—முத்தூர் பாதையில்.

5. **எட்டி மலை:** கடல் மேல் 618 அடி; கொடுமுடிக்கு மேற்கே 3 கல் தூரம்.

6. **அறச்சலூர் மலை:** ஈரோடு காங்கேயம் பாதையில் உள்ளது.

7. **அரசண்ணா மலை:** விசயமங்கலத்திற்கு அருகில்—கடல் மேல் 1493 அடி.

## 8. பவானி வட்டம்

1. **ஊராச்சிக்கோட்டை மலை:** பவானிக்கு வடக்கே 3 மைல்; கடல் மேல் 1437 அடி; மலை உச்சியில் பெருமாள் கோயில்.

2. **பருவாச்சி மலை :** பவானி—அந்தியூர் வழியில் உள்ளது.

3. **ஆப்பக் கூடல் மலை:** ஆற்றின் வடகரையில் உள்ளது; முருகன் கோயில்.

## 9. கோபி வட்டம்

1. **தவளகிரி:** சத்தியமங்கலம் குமாரபாளையம் அருகே உள்ளது. இங்கு கல்வெட்டுண்டு; மைசூர் மன்னன் சிக்க ராசன் கட்டியது.

2. **பவள மலை;** கோபிக்குக் கிழக்கே $1\frac{1}{2}$ மைலில் காட்டூர் மலை; கடல் மேல் 857 அடி.

3. **நாகமலை:** குருமந்தூரிலிருந்து சேவூர் செல்லும் வழியில் 1297 அடி உயரம்; ஏலத்தூர் கிராமத்தைச் சார்ந்தது.

4. **திட்டமலை:** நம்பியூருக்குப் பக்கம்; 3 மைல். கடல் மேல் 1218 அடி.

5. **ஒழுலக்கோயில்:** சிறுமலை; எம்மாம் பூண்டிக்கு அருகே உளது.

## ஆ. சேலம் மாவட்டம்

1. **திருச்செங்கோடு:** ஈரோடு—சேலம் பாதையில் சங்ககிரி துர்க்கத்திற்கு நிலையத்தின் அருகே 5 மைல்; 27 திருப்புகழ்ப் பாடல்கள் உள்ளன.

2. **கொல்லிமலை:** சேலத்திற்கும் திருச்சிக்கும் நடு எல்லை; தென் வடல் 18 கல்; கிழமேல் 12 கல்; சராசரி 400 அடி உயரம்; வேட்டைக்காரன் மலையும் உளது; உயரம் 4663 அடி. ''அழகு தவழ் குழல், கட்டமண்ணு மன்னல், தொல்லை முதல் தானென்று'' திருப்புகழ்கள் மூன்று.

3. **சங்ககிரி துர்க்கம்:** நிலையத்திலிருந்து 2 மைல்; நில மட்டம்மேல் 1500 அடி உயரம்; கடல்மேல் 2345 அடி; பெருமாள் கோயில்; மலைமேல்குன்றில் கெட்டி முதலியார் தாரமங்கலத்தில் வேலை செய்யாத சோம்பேறிகளைத் தண்டிப் பாராம். 1522-ல் விஜய நகரத்தால் கல்வெட்டும், 1588-ல் சிக்கதேவராயர் இதனை மைசூரோடு சேர்த்தார்.

4. **மோரூர் மலை:** சங்ககிரிக்கும் செங்கோட்டுக்கும் மத்தியில் உள்ளது.

5. **கஞ்சமலை:** திருமூலர் பரம்பரை கஞ்சமலைச்சித்தர் வாழ்ந்த இடம்.

6. **வேளுக்குறிச்சி:** நாமக்கல்—இராசிபுரம் பாதையில் உள்ளது; இவ்வூருக்கும் கிழக்கு கொல்லிமலை யடிவாரத்தில் முருகன் கோவில் உண்டு.

7. **நாமக்கல்:** தூசூர் நாட்டுக்குச் சேர்ந்தது; ஊர் நடுவே ஒரே பாறையின்மீது கோட்டை; சுந்தரபாண்டியன் கல்வெட்டும் நரசிம்மவர்மன் கோயில் உண்டு.

8. **கபிலமலை:** பரமத்து வேலூருக்கு மேற்கே உள்ளது; கபிலர் பூசித்தது; நிலமட்டம்மேல் 100 அடி.

9. **கந்தமலை:** மோகனூருக்கு வடக்கே 1 கல்; மலை சிறியது.

10. **சேர்வராயன்மலை:** சேலத்திற்குக் கிழக்கே உள்ள மலைத்தொடர்; அடிவாரத்திலிருந்து 7 மைல் குறுக்கே ஏறினல் மலைமேல் கோயில்.

### இ. திருச்சி மாவட்டம், (கரூர் வட்டம்)

1. **புகழிமலை:** ஈரோடு—கரூர் வழியில் புகலூர் நிலையம். இங்கிருந்து 3 மைல்; ஆறு நாட்டார்மலை; கல் வெட்டு உண்டு; சமணர் இருப்பிடமென்பார்.

2. **வெண்ணெய்மலை:** கருவூர்க்கு வடக்கிழக்கு 2 கல் தூரத்தில் உள்ளது.

### ஈ. மதுரை மாவட்டம் (பழநி வட்டம்)

1. **பழநி:** நில மட்டம்மேல் 500 அடி; 95 திருப்புகழ்ப் பாடல்கள்.

2. **வராகமலை:** பழநிக்குத் தெற்கே 5 கல்; சண்முகநதி ஓரம்.

3. **ஐவர்மலை:** பழநி—கொழுமம் பாதையில் புஷ்பத் தூர் நிலையத்திலிருந்து செல்லலாம்; கல்வெட்டு உண்டு—அயிரூர் மலை.

5. **கொண்டரங்கிமலை:** தாராபுரம் — திண்டுக்கல் தாலூகாவிற்கும் இடையில் உள்ளது.

## உ. புலவர்களும் நூல்களும்*

1. **கொங்கின் சங்கப் புலவர்கள்:** 1. செங்குன்றூர் கிழார். 2. பொன்முடியார். பெருஞ்சேரலிரும்பொறை யின் நண்பர்; தகடூர் யாத்திரையில் இவர் பாடல்கள் உண்டு. 3. பெருந்தலைச்சாத்தனர்: பவானியாற்றின் தென் கரையில்

---

* 1950-ல் கோவை கிழாரால் தொகுக்கப்பட்ட கொங்குப் புலவர் வரிசையிலிருந்து.

உள்ள பெருந்தலையூரினர் என்பர். கவந்தப்பாடி அருகே உள்ள இவ்வூரில் பழய சிவாலயமும், கல்வெட்டுக்களும், கோயிலுள் கண்ணப்பர் சிலையும் உண்டு. சுவாமி மகிழீசர், அம்மையார் பெருந்தேவி நாச்சியார். 4. அந்தில் கீரனார்: அகநானூற்றில் பாடல் உண்டு. 5. கருவூர் கதப்பிள்ளை: புறப்பாட்டு உண்டு. 6. கருவூர் கந்தப்பிள்ளை சாத்தனார்: புறப்பாட்டு உண்டு. 7. கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூத நாகனார்: கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்க மனமுருகிப் பாடியவர். 8. கருவூர்க் கோசனார்: பாலைநற்றிணையில் பாட்டுளது. 9. உரோடகத்துக் கந்தரத்தனார்: உலகடத்தினர் என்பர்.

**2. சமணப் புலவர்கள்:** 1. கொங்குவேளிர்: பெருங்கதை பாடியவர்; விசயமங்கலத்தினர். 2. அடியார்க்கு நல்லார்: சிலப்பதிகார உரையாசிரியர்; கொங்கு குறும்பு நாட்டில் நிரம்பை என்னும் ஊரினர். 3. பவணந்தி முனிவர்: நன்னூல் இலக்கணம் பாடியவர்; கொங்கு சீனபுரத்தினர். 4. குணவீர பண்டிதர்: நேமிநாதம் என்னும் சின்னூல் இலக்கணம் வரைந்தவர்; வச்சணந்தி முனிவர் பெயரால் வெண்பாப் பாட்டியல் வரைந்த இவர் வாரக்க நாட்டுக் களந்தையில் இருந்தவர். 5. கார்மேகக் கவிஞர்: கொங்கு மண்டல சதகம் பாடியவர்; விசயமங்கலத்தினர்.

**3. சித்தர்கள்:** 1. கருவூர்ச் சித்தர். 2. கஞ்சமலைச் சித்தர் (சேலம் ஓமலூர்க்கருகில்). 3. போகநாதர்—பழநியில். 4. புலிப்பாணி முனிவர். 5. கொங்கணச் சித்தர் (தாராபுரம் ஊதியூர்மலை). 6. இடைஞானியார்: பழநி தென்கரை நாட்டவர். 7. பாம்பாட்டிச் சித்தர் (மருதமலையில்).

**4. புராண ஆசிரியர்கள்:** 1. அவிநாசிப் புராணம்: இளையான் கவிராயர் ஊர்; குன்றிடம் 1020 கவிகள். 2. திருமுருகன் பூண்டிப் புராணம்: ஓராட்டுக் குப்பைசெட்டி பாளையம் வாசுதேவ முதலியார். 618 செய்யுட்கள்; பவாநிப் புராணமும் இவர் செய்ததே. 3. கொடுமுடிப் புராணம்: சாமக்குளம் வேங்கடரமண தாசர்; வைணவர் பின் சைவர்; 819 பாக்கள். 4. கருவூர்ப் புராணம்: பெயர் தெரியவில்லை; சத்தியஞானியார் சீடர். கி. பி. 1618-ல்—செய்யுட்கள் 1129. 5. வெஞ்சமாக் கூடல் புராணம்: அச்சாகவில்லையென்பர்.

**5. வைப்புத் தலங்கள் பற்றியன:** 1. பேரூர்ப் புராணம்: சிவஞான முனிவர் மாணவர் கச்சியப்ப முனிவர். 2. பிறவா நெறிப் புராணம்: 1608-ல் செய்யப்பட்டது. 6 சருக்கங்கள், 342 பாக்கள். 3. சேவூர்ப் புராணம்: கொடுமுடி சிவஞான தேசிகர். 4. துடிசைப் புராணம்: கொங்கு சோழன் குலோத்துங்கன் காலம். 13-ஆம் நூற்றுண்டினது. ஆசிரியர் பெயர் காணப்படவில்லை. 15 சருக்கங்கள் 516 செய்யுட்கள். 5. பழநித்தல புராணம்: பாலசுப்பிரமணிய கவிராயர் கி. பி. 1618-ல் செய்தது; 23 சருக்கங்கள்; 987 பாடல்கள். 6. அப்பிரமேயத்தல புராணம்: இளையான் கவிராயர்; இத்தலம் தாராபுரம் அமராவதிக் கரையில் உள்ளது; 490 கவிகள். 7. திருவள்ளுவப் புராணம்: அட்டாவதானம் சொக்கலிங்கப் புலவர்; சைவர்; குன்றத்தூரார்; 653 செய்யுள். 8. சேலம் பாவநாச புராணம்: முற்கூறிய சொக்கலிங்கப் புலவர் செய்தது; 672 செய்யுள். 9. தீர்த்தகிரிப் புராணம்: சைவ எல்லப்ப நாவலர்; 330 வருடங்களுக்கு முன்னவர்; 445 செய்யுட்கள். 10. கரபுரத் தலபுராணம்: சேலம் வேம்படி தாளத்திற்கும் இளம் பள்ளிக்கும் அருகே உள்ளது; உத்தம சோழபுரம். 11. சிவமலைத் தலபுராணம்: சீர்காழி அம்பலவாணக் கவிராயர்; செய்யுள் 497. 12. தென்சேரிகிரிப் புராணம்: அம்மையப்பர் பாடியது; உரையாசிரியர் பெயர் தெரியவில்லை; 255 செய்யுட்கள். 13. தாராபுரம் தலபுராணம்: வேலாயுதப் பண்டிதர்; 243 பாடல்கள். 14. திருமூர்த்திமலைப் புராணம்: வேலாயுதப் பண்டிதர்; 963 பாடல்கள். 15. அன்னியூர்த் தலபுராணம்: சிரவணபுரம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பாடியது; 10 படலங்கள்; 339 செய்யுட்கள். 16. கௌசைப் புராணம்: பாடியவர் இவரே; சுமார் 66 நூல்களைப் பாடிய மகாகவி.

**6. வைணவ தலங்கள்:** 1. காரமடைப் புராணம்: இராமானுச நாவலர்; கரடிபாவியினர் (பல்லடம் வழி).

**7. ஏனைய புராணங்கள்:** 1. சைவ புராணம்: வேலாயுத பண்டிதர். 2. வேளாள புராணம்: வீராச்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர். 3. தேவாங்க புராணம்: மாம்பழக் கவிராயர். 4. பழனித் திருவாயிரம்: முருகதாச சுவாமிகள். 5. சத்திரிய புராணம்: கரடிபாவி இராமானுச நாவலர்.

**8. மற்ற இலக்கியங்கள்:** 1. தக்கை ராமாயணம்: எம்பெருமான் பக்தகோடி; இடையர்; சங்ககிரித் துர்க்கத்

தினர் (சேலம்); 2. குமண சரிதம்: இரா. கந்தசாமிக் கவிராயர், கொழுமம்; 3. அருச்சுனன் தீர்த்த யாத்திரை: அரங்கநாதக் கவிராயர்; பவானி தளவாய்ப்பேட்டை 1452 செய்யுள்; 4. உரிச்சொல் நிகண்டு: காங்கேயர் எழுதியது; 5. உசித சூடாமணி நிகண்டு: பொள்ளாச்சி—ஊற்றுக்குளி சிதம்பரம் பிள்ளை; மிகவும் நல்ல நிகண்டு (சிதம்பர கவிராயர் எனப்படுவர்).

9. **சதகங்கள்:** 1. அறப்பளீசுர சதகம்: அம்பலவாணக் கவிராயர்; கொல்லிமலையில் ஒரு வைப்புத் தலம்; 2. சோழீசுவரம் சதகம்: ஊதியூர் ஆண்டவர்மீது பாடப்பட்டது; 3. கார்மண்டல சதகம்: ஆறை கிழார்; அவிநாசியினர் பாடியது; கார்காத்த வேளாளரைக் குறித்தது; 4. கருணும்பிகை சதகம்: வாசுதேவ முதலியார் (ஓ. கு. செ. பாளையம்); 5. மருதாசல மூர்த்தி சதகம்: மாத நகர் நஞ்சப்பன் என்னும் வள்ளலால் ஆதரிக்கப்பட்ட ஒரு புலவர்; 6. கஞ்சகிரி சித்தேசர் சதகம்: அனந்த நாரயண சர்மா பாடியது.

10. **குறவஞ்சிகள்:** 1. பாம்பண்ண கவுண்டன் குறவஞ்சி; பவானி பாலபாரதி முத்துசாமி ஐயர் பாடியது; 2. திருச்செங்கோட்டுக் குறவஞ்சி; 3. அமரவிடங்கர் குறவஞ்சி; கோபி. பாரியூர் இறைவன்மேல் பாடியது; 4. பொங்கலூர்க் குறவஞ்சி: பிரமயனப் புலவர்; 5. கெங்க நாயகர் குறவஞ்சி: காவடிக்க நாட்டுச் சோமமங்கலம், பொள்ளாச்சி தாலூகா கீழ்பாகம்.

11. **கோவைகள்:** 1. அசதிக் கோவை: ஔவையார் அசதிமேல் பாடியது; 2. பட்டீசுரக் கோவை: பெயர் தெரியவில்லை; தொண்டாமுத்தூர் சிதம்பர தாண்டவராய முதலியார் என்று கூறுவர்; 3. உலகுடையான் கோவை; 4. கோபன மன்றுடியார் கோவை: பாளையக்காரர்மீது பாடிய கோவை; 5. பட்சிக் கோவை: பறவைகளைத் தலைவி தலைவனிடம் அனுப்புவது; 6. திருப்பேரூர்க் கோவை.

12. **நாடகங்கள்:** 1. இரணிய நாடகம்; 2. வாணசூர நாடகம்; 3. தொண்டனூர் அரக்கி நாடகம்.

13. **அம்மானை:** கள்ளழகர் அம்மானை.

14. **பிரபந்தங்கள்:** 1. புறநானூறு. 299, 310, 312, பொன்முடியார்; 2. அகம் 13, 224, நற்றிணை 262, புறம் 151, 164, 165, 205, 209, 294: பெருந்தலைச் சாத்தனார்; 3. அந்தில்

கீரனார் பாடியது, அகநானூறு 71-ம் பாட்டு; 4. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்: அகம் 309. நற்றிணை, 343; புறம் 168; 5. கருவூர்க் கலிங்கத்தார்: அகம் 183; 6. கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதனார்: புறம் 219; 7. கருவூர்க் கோசனார்: நற்றிணை 214; 8. கருவூர்க் கிழார்: குறுந்தொகை 170; 9. கருவூர்க் கண்ணம்பாளனார்: அகம் 180, 263, நற்றிணை 148; 10. கருவூர் சேரமான் சாத்தன்: குறுந். 268; 11. கருவூர் நன்மார்பனார்: அகம் 277; 12. கருவூர் பௌத்திரனார்: குறுந்தொகை 162; 13. பூதஞ்சாத்தனார்: அகம் 50; 14. தகடூர் யாத்திரை யாசிரியர்: தகடூர் யாத்திரை; 15. கருவூர்ச் சித்தர்: திருவிசைப்பா, களந்தை ஆதித்தேசுரர் பதிகம்; 16. போகர் புலிப்பாணி: பழநியினர், பலமருத்துவ நூல்கள்; 17. கொங்கணர்: பல திருப்புகழ்ப் பாடல்களும் மருத்துவ நூல்களும்; 18. பாம்பாட்டி சித்தர்: பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள், ஞானக் கோவை காண்க; 19. பொள்ளாச்சி சபாபதிப்பிள்ளை, பொள்ளாச்சி நடராசர் பாமாலை, முதலியன. 20. சக்கரபாணி ஆச்சார்: ஊஞ்சலூர், செல்லாண்டியம்மன் சதகம், தாரநகர் அகத்தியநாதர் அகல் அந்தாதி; 21. இராமலிங்கம்பிள்ளை, சித்தூர்: கொச்சிசீமை; தொல். சண்முகவிருத்திக்கு மறுப்பு, கார்தருமணி செய்யுளின் மறுப்புக்கு மறுப்பு; 22. தாரை அனந்தம் நாராயண பிள்ளை: சுபத்திரை திருமணப்படலம் உரை; 23. வ. வேலூர், உடுமலை பாப்புசாமி நாயுடு; கரை காளியம்மன் வழிநடைச்சிந்து; 24. சல்லிப்பட்டி (உடுமலை) அப்பாசாமி நாயுடு: திருமூர்த்திமலைக் காவடிச்சிந்து; 25. சண்முகம்பிள்ளை அணிக்கடவு (உடுமலை) தனிப்பாடல்கள்; 26. ஐயாசாமிப் பிள்ளை-கோவை; திருக்கல்யாண ஊசல்; 27. சுண்டக்கா முத்தூர் வையாபுரி முதலியார்; சாமுத்திரிகாலட்சண சாத்திரம்; 28. முகலூர்க் கந்தசாமிக் கவிராயர்: வேதநாயகியம்மை பிள்ளைத்தமிழ்; 29. சேலம் சிற்றம்பல உபாத்தியாயர்: திருச்செங்கோட்டுப் புராண உரை; 30. சேலம் துரைசாமிபிள்ளை: போற்றித் திரு அகவல்; 31. வேட்டைக்காரன் புதூர், முத்துக்குமாரசாமிகள்: சிவஞான தத்துவ தீபம் சரவணபவமாலை, கதிர் காமத்தந்தாதி; 32. துடிசைக் கிழார்; திருமந்திரஉரை, விபூதிருத்திராக்க விளக்கம், அகத்தியர் வரலாறு போன்ற பல நூல்கள்; 32. (a) முத்துசாமிக்கோனார் திருச்செங்கோடு: கொங்கு மண்டல சதகப் பதிப்பு விவேக திவாகரம் முதலியன; 33. சேலம் இராமசாமிக்கவுண்டர் M A; L. T. பகவத்கீதை மொழி

பெயர்ப்பு; 34. கோவை, சி. கு நாராயணசாமி முதலியார்; பல வரலாற்று நூல்கள், புலவர் வரலாறுகள், தனிக் கட்டுரைகள் என அனந்தம்; 35. பவானி கு. குமாரசாமிப் பிள்ளை; பவானி பதிற்றுப்பத்தந்தாதி; 36. கோவை, கந்த சாமிமுதலியார், பேரூர்ப்பிரபந்தங்கள் 6, மருதமலை, 2; 37. கோவை, வீராசாமிபிள்ளை வழக்கறிஞர், கோவை, பழநீப் பதிகங்கள்; 38. வீராச்சி மங்கலம் சிவண்பிள்ளை: பிங்கலநிகண்டு பதிப்பு; 39. கோவை, சந்திரசேகரம்பிள்ளை: பல தனிப்பாடல்கள்; 40.கோவை; சிருச்சிற்றம்பலம்பிள்ளை; மாணிக்கவாசகர் வரலாறு முதலிய 8 நூல்கள்; 41. போளமாம்பட்டி ஆறுமுகம்பிள்ளை: வாகை விநாயகர் பிரபந்தங்கள்; பட்டிவிநாயக மாலை, ஊடல் உற்சவச் சிறப்பு; 42. கும்பகோணம் சபாபதிப்பிள்ளை: கோவை சௌடாம்பிகை மாலை, திருப்பேரூர் அந்தாதி முதலியன; 43. வடவழி அருணசலக் கவிராயர்: மருதாசலக் கடவுள் பிள்ளைத்தமிழ் பேரூர் உலா, அவிநாசி உலா, யவனகாவியம் மொழி பெயர்ப்பு முதலியன; 44. போளமாம்பட்டி, அங்கண்ண முதலியார்: வெள்ளிமலைக் கட்டளைக் கலித்துறை அந்தாதி, வாகை விநாயகர் கீர்த்தனங்கள்; 45. போளமாம்பட்டி, இராசகோபால ஐயங்கார்: வெள்ளிமலை வழிநடைச்சிந்து; 46. பாலபாரதி முத்துசாமி ஐயர்: பவானி; பாம்பண கவுண்டன் குறவஞ்சி; 47. கோபால தேசிகர், கோவை, சோதிட நூல்கள்; 48. நரசிம்ம சுவாமியார்: ஒண்டிப் புதூர்; வேதாந்த நூல்கள் பல; 49. கோவை. கவீசுவர சுப்பிரமணிய ஐயர்: மீனாட்சியம்மை ஊஞ்சல்; 50. செட்டி பாளையம் குட்டியானை முதலியார்: தனிப்பாடல்கள்; 51. கோவைகிழார்; கொங்கு வரலாறு முதலியன; 52. சி. கு. நடேச கவுண்டர், கோவை. மங்கையர்க்கரசி பிள்ளைத்தமிழ், எட்டிகுடி முருகன் பிள்ளைத்தமிழ், பட்டீசுவரக் கலம்பகம் முதலியன பலவாம்; 53. திருப்பூர் பழநி சாமிப்புலவர்: கொங்கச் செல்வி (ஆராய்ச்சி); 54. செட்டி பாளையம், R. N. கலியாணசுந்தர கவுண்டர், கந்தன் சித்திர பந்தன மாலை, முதலிய 23 நூல்கள், இவர் சித்திர கவியாவர்; 55. C. K. சுப்பிரமணிய முதலியார்; பெரிய புராணம் உரை முதலியபன்னூல்களின் ஆசிரியர்; 56. புலவர் சி. குழந்தையம்மாள், M. L. A. கோவை, அறம் வளர்த்த மங்கையர்; இன்னும் சில நூல்கள்; 57. அ. கந்தசாமிப் பிள்ளை, பேரூர்: பல தனிப்பாடல்களும், கட்டுரைகளும்; 58. தியாகராச தேசிகர்: அனந்த ரங்கன் கோவை;

59. பகடால நரசிம்மலுநாயுடு: தென்னுட்டின் சரித்திரம் போன்ற பல நூல்களை இயற்றியவர்; ஆராய்ச்சியாளர்; 60. தமிழ்வேள், S. R. வேங்கட கிருஷ்ணமுதலியார், கொங்குக் கட்டுரைகள்; 61. குருவூர் பழநி உபாத்யாயர்: தென்சேரிமலை; 62. பேரூர் ஞானசித்த சாமிகள்: பட்டீசுரப் பதிகம்; 63. பேரூர் நடராசபிள்ளை: பேரூர் நான்மணிமாலை; 64. சேலம், குமாரசாமி முதலியார்: கந்தபுராணக் கீர்த்தனைகள்; 65. வடவழி கந்தசாமிக்கவிராயர்: அதிசய நாடகம்; 66. பழநிசாமிப்பிள்ளை: தடாகம், பின் அஞ்சுவாடி: முக்கூடற்பள்ளு; 67. வீரபத்திர கவுண்டர்: தொண்டனூர் அரக்கி நாடகம்; 68. முத்துநைனுத்தை முதலியார்: செட்டிபாளையம்; பச்சை நாயகியம்மை பிள்ளைத்தமிழ்; 69. சிதம்பரதாண்டவராய முதலியார், பேரூர் மரகத மஞ்சரி; 70. கவந்தப்பாடிபுதூர் நஞ்சையப் புலவர்: பல பிரபந்தங்கள்; 71. பூங்கோதையார்: தக்கை இராமாயணம் பாடிய எம்பெருமான். கவிராயர் மனைவி, தனிப்பாடல்கள் (கொங்குமண்டல சதகம் காண்க); 72. கோவை, பலராம ஐயர்: யவனும்பிகை பிள்ளைத்தமிழ்; 73. முத்தமிழ்க்கவி. இரா. அரசப்பனுர், கொண்டையன் பாளையம் அரசப்பன் அலங்காரம், தனிப்பாடல்கள், கோவைச் சிலேடை வெண்பா முதலியன; 74. குட்டி கவுண்டர்: பேரூர் அரசம்பல விருத்தம்; 75. இராமசாமிக் கவிராயர், திருப்பேரூர் சிகையறுத்தான் வண்ணம்; 76. திரு. P. G. கருத்திருமன் M. P. அவர்கள் கம்பராமாயணத் தொகுப்பு (உரையோடு).

மற்றும் ஏனைய புலவர்களைக் குறித்தும் அவர்கள் வரைந்த நூல்களைக் குறித்தும் கொங்கு வரலாறு, கொங்குப் புலவர்கள் வரிசை போன்ற நூல்களால் அறிக. இன்னும் பல புலவர்களைப் பற்றிய வரலாறுகளையும் அவர்கள் பாடல்களையும் ஆராய்ந்து தனி நூலாகக் கண்டால் அது மிகவும் நன்மை தரும்.

## 3. கல்வெட்டுக்கள் உள்ள இடங்கள்

1. அவிநாசி வட்டத்தில் நடுவாச்சேரி, காரமடை, காவலூர், குன்றத்தூர் சிவாலயம், மொண்டிபாளையம். 2. பவானி தாலுகாவில் அந்தியூர், உலகடம், கெட்டிசமுத்திரம், ஆப்பக்கூடல், பவானி கோயில், நெருஞ்சிப் பேட்டை பழய காவிரி அணை இங்குள்ளது. ஊராய்ச்சிக்

கோட்டை மலை; 3. கோவை வட்டத்தில், வெள்ளலூர், துடியலூர், முட்டம், கோவில்பாளையம், இடிகரை, குறிச்சி, சிங்கநல்லூர், ஒற்றைமாநகரம்; 4. தாராபுரம் வட்டத்தில் தாராபுரம், கொழுஞ்சிவாடி, காங்கயம், முத்தூர், பரஞ்சேர்வழி, வெள்ளி இறைச்சல், கொடுவாய், கருக்கைப் பாளையம், குண்டடம், சடையம்பாளையம், கோனபுரம், தளவாய்ப் பட்டணம், அலங்கியம், கொங்கூர், கொத்தனூர், மாவ பாளையம், பிரமியம், துராம்பாடி, இலக்க நாயகன் பட்டி, மயிலிரங்கன், வெள்ளைக்கோயில், மந்தாரபுரம், கன்னபுரம், மடவிளாகம், நத்தக்காரையூர், மறுதுறை, அகிலாண்ட புரம், கீரனூர், அரசம்பாளையம், காத்தங் காணி, ஆரத்தொழுவு, காடையூர்; 5. ஈரோடு வட்டத்தில் ஈரோடு, திங்களூர், விஜயமங்கலம், அரசண்ணமலை, சீனுபுரம், வெள்ளோடு, பூந்துறை, அப்பச்சிமார் மடம், காஞ்சிக்கோயில், வேங்கம்பூர், சிவகிரி, ஆதியூர் குன்றத்தூர் சிவாலயம்; 6. பல்லடம் வட்டம்: பல்லடம், திருப்பூர். சூதூர், சாமளாபுரம், பெருமாநல்லூர், கொடுவாய்; 7. பொள்ளாச்சி வட்டம்: பொள்ளாச்சி, சமத்தூர்; 8. கோபி வட்டம், சத்தியமங்கலம், பாரியூர், கூகலூர், நம்பியூர், எலத்தூர், பெருந்தலையூர், கொடுவேரி, ஆயலூர்; 9. உடுமலையில் கண்ணடிப் புத்தூர், கொழுமம், குமர லிங்கம், சங்கிராம நல்லூர், சோழமாதேவி, கடற்றூர், குடிமங்கலம்; 10. சேலம் வட்டம்: சேலம், உத்தம சோழபுரம்; 11. திருச்செங்கோடு, கொக்கராயன் பேட்டை, குமாரமங்கலம்; 12. இராசிபுரம்: ஓமலூர் தாராமங்கலம், வெள்ளாறு; 13. நாமக்கல்: நஞ்செய் இடையார், குன்னுமலை, கார்க்குடி, கபிலமலை, வெள்ளூர்; 14. திருச்சி வட்டம்: கரூர், மொடக்கூர், நத்தமங்கலம், நெரூர், புலியூர், சோமூர், திருமுக்கூடல்; 15. மதுரை: பழநி, ஐவர் மலை, கீரனூர், மானூர், பெரிய கோட்டை.

என்னும் மேல்கண்ட இடங்கள் கல்வெட்டுக்கள் உள்ள ஊர்களாகவும், கல்வெட்டுக்களால் குறிக்கப்படுகின்ற இடங்களாகவும் உள்ளன. தென்னாட்டுக் கல்வெட்டுத் தொகுதிகளில் இவ்வூர்களில் உள்ள கல்வெட்டுக்களையும் அதில் குறிக்கப்பட்டுள்ள செய்திகளையும் அறியலாம்.

# 4. மன்னர் மரபினர்

கொங்கு நாட்டை கி. மு. 27 முதல் கி. பி. 189 வரை ஆண்டவர்கள்: வீரராய சக்கரவர்த்தி, கோவிந்தராயர் I, கிருஷ்ணராயர், காவல்லபராயர், கோவிந்தராயர் II, சதுர்ப்புஜ கன்னரதேவ சக்கரவர்த்தி, திருவிக்ரம தேவ சக்கரவர்த்தி என்போராவர். தலைநகர் தாராபுரம் (ஸ்கந்தபுரம்); பின் தாராபுரத்தைத் தலைநகராகக்கொண்டு கங்கர்கள் ஆண்டனர். கி. பி. 189 முதல் கி. பி. 880 வரை ஆண்டவர்கள் கொங்கானி வர்மன் I, மாதவன் I, அரி வர்மன், விஷ்ணு கோபன், மாதவன் II, கிருஷ்ண வர்மா, திண்டிக்கார ராயர் என்னும் அரிச்சந்திர தேவராயர், கொங்காணி வர்மன் II, அவநிதன் (துர்விநீதன்), முஸ் கரன், திரிவிக்ரமன், பூவிக்கிரமன் (கசபதி), கொங்காணி வர்மன் III, கோவிந்த நந்தி வர்மன், சிவராமன், சிவ ராமராயன் (பிருதிவி கொங்கணி), மல்லதேவன் I, கவுட தேவன், சத்தியவாக்கியன், குஞ்ஞேத்தமன், மல்லதேவன் II, பிருதிவீபதி I. இவர்களுள் அரிவர்மன் கி. பி. 290ல் தாரா புரத்தை விட்டுத் தலைக்காட்டைத் தலைநகராகக் கொண் டான் என்றும், (கி. பி. 290 முதல் கி. பி. 814 வரை தலைக்காடே தலைநகரம்) மேல் கௌட தேவன் முகுந்த பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டான் என்றும் கூறுவர்.

கி. பி. 850 ல் பிற்காலச் சோழர் விஜயாலயன் ஆட்சி தொடக்கம். 894—897 வரை. ஆதித்தனும் பராந்தகனும் கொங்கின் பகுதிகளைக் கைக்கொண்டனர். இராசேந்திர சோழன் (1012—1044) தலைக்காட்டைப் பிடித்துக்கொண்ட தால் கங்க வம்சம் ஆட்சி அழிந்தது. கங்கர்கள் காலத் திலும், பிற்காலச் சோழர் காலத்திலும் தெற்கே ஆண்ட பாண்டிய மன்னர்களில் ஒரு சிலர் சில சில சமயங்களில் கொங்கின் சில பகுதிகளைப் பிடித்துத் தம் நாட்டோடு சேர்த்துக் கொண்டுள்ளனர். கி. பி. 680 முதல் 970 வரை ஆண்ட பாண்டியர்கள் சடையன் இரணதீரன், பராங்குச மாறவர்மன் என்னும் இராசசிம்மன் I, நெடுஞ்சடையன், பராந்தகன், இராசிம்மன் II, வரகுண மகாராசன், சீமாரன் சீவல்லபன், வரகுணன் II, பராந்தக பாண்டியன், இராசசிம்மன் III, வீர பாண்டியன், அமரபுயங்க பாண்

டியன், இடைக்காலத்தில் பிற்காலச் சோழர் ஆட்சியில் இராசராசன் சிறந்த மன்னனுதலால் எல்லாப் பகுதிகளையும் தானே வென்று நன்கு ஆண்டனன். இவன் மகன் இராசேந்திரன் இவனினும் சிறந்தவன். கொங்கு மண்டலத்தில் தனியாகப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். சில ஆண்டுகளில் தஞ்சைச் சோழர்களின் வலிமை குறைந்ததும் கொங்கு மண்டலத்தைக் காத்துவந்த பிரதிநிதிகள் கொங்கு சோழர் என்ற பெயரில் ஆளத் தொடங்கினுர்கள். கி. பி. 1004 முதல் 1252 வரை ஆண்ட கொங்கு சோழர்கள்: விக்கிரமன், குலோத்துங்கன், வீரசோழன், வீர ராசேந்திரன் என்பவராவர். இவர்கள் கல்வெட்டுக்கள் கொங்கின் பலவிடங்களிலும் உள்ளன.

கி. பி. 1189—1340 வரை துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ஒய்சள மன்னர்கள்: விஷ்ணுவர்த்தனன் (பிட்டிதேவன்), நரசிம்மன், வல்லாளன், வீரசோமேசுவரன், வீரவல்லாளன் III, என்னும் இவர்களில் வீரவல்லாளன் நொய்யல் வடகரைச் சீமையை ஆண்டனன். பின் டில்லி ஆப்கானியர் இவர்களை ஒழித்தனர். கி. பி. 1335 முதல் 1667 வரை ஆண்டனர். முறையே முதல் வம்சத்தில் அரிகரன் II, தேவராயன் I, அரிகரன் III. இரண்டாம் வம்சத்தில் கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர், சதாசிவ ராயர், மூன்ரும் வம்சத்தில் வேங்கடபதி I ஆகிய மன்னர் காலத்தில் கொங்கு நாடு அவர்கள் வசம் இருந்தது.

பின்பு உம்மத்தூர்த் தெற்கணும்பி மன்னர்கள் (1489—1517) ஆண்டனர். அதாவது பேரூரில் தெப்பக் குளம் கட்டிய காலம். பின் மதுரை நாயக்கர் ஆட்சி கி. பி. 1557—1763 வரை இருந்தது. 1559ல் விசுவநாத நாயக்கர் கோவை, ஈரோடு ஆகிய பகுதிகளைக் கைக்கொண்டனனும். 1641 ல் கண்டீரவ நரச ராசன் கொங்கின் பகுதிகளைக் கைப்பற்றினுன். பின் மைசூர் ஆதிக்கம் (1557—1763) கிருஷ்ணராச உடையார் கி. பி. 1734—1765 வரை ஆண்டனர். சிக்கராசன் சத்தியமங்கலம் தவளகிரியைக் கட்டினுன். 1588ல் சிக்கராசன் சங்ககிரி துர்க்கத்தை மைசூரோடு சேர்த்தனன். பின் ஐதரும் திப்புவும் ஆண்டனர். 1799ல் ஆங்கில ஆட்சி நிலவியது. இவ்வாறு கொங்கு நாடு பல மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கங்கர்களைப் பல்லவர்கள் வென்றதும் உண்டு என்க.

# 5. பிற குறிப்புகள்

சோழ நாட்டில் உள்ள சிவாலயங்கள் 191, ஈழ நாட்டில் 2, பாண்டி நாட்டில் 14, மலை நாட்டில் 1, நடுநாட்டில் 23, தொண்டை நாட்டில் 32, துளுவ நாட்டில் 1, வட நாட்டில் 5, கொங்கு நாட்டில் 7 (275).

## 1. கொங்கேழு சிவாலயங்கள்

அவிநாசி, திருமுருகன் பூண்டி, பவானி திருச்செங்கோடு, வெஞ்சமாக்கூடல், பாண்டிக்கொடுமுடி, கருவூர்.

**அவிநாசி :** தலநதி நள்ளாறு, அருகில் சேவூர், அதன் அருகே குடக்கோட்டூர் என்னும் மொக்கனீசுவரம், மொக்கனீசுவரம்—திருவாசகப்பாடலால் குறிக்கப்பட்டுள்ளது.

**திருமுருகன் பூண்டி :** அவிநாசி அருகே உள்ளது.

**பவானி :** திருநண்ணுலூர் ஈரோட்டின் அருகே—வானி காவிரி கூடல்.

**திருச்செங்கோடு :** சங்ககிரி இருப்புப்பாதை அருகே தென்கிழக்கில் 5 மைல்.

**வெஞ்சமாக் கூடல் :** வெஞ்சன் என்ற அரசன் தலை நகர். கருவூர்க்கு மேற்கே அரவக்குறிச்சி வழியாகக் கல் சாலையில் 10 மைல் சென்று பின் தெற்கே 3 மைல் செல்லுக.

**கரூர் :** இரயில் நிலையம் உள்ளது.

திருச்செங்கோட்டுத் தலத்தை விலக்கி அதனோடு பேரூரைச் சேர்த்து கொங்கேழு சிவாலயம் என்று சோழன் பூர்வ பட்டையம் உரைக்கின்றது. திருமுறைகளில் பேரூர் வைப்புத் தலமாயிற்று.

> "ஆதிகருவூர் திருவெஞ்ச மாங்கரை சேர்
> நாதர் அவிநாசி நண்ணுவூர்—ஓதுபுகழ்
> தஞ்சமாம் பேரை தருமுருகன் பூண்டியிவை
> நெஞ்சிலே நன்ருய் நினை."

(பூர்வ பட்டையப் பாட்டு)

## 2. வைப்புத்தலங்கள்

1. **பேரூர்:** "மீகொங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூரர் பெருமான்" (சுந்தரர்)

2. **அன்னியூர்:** (அண்ணூர்)

"மன்னியூர் உறை சென்னியார் பிறை
அன்னியூர் அமர் மன்னு சோதியே"

என்பது திருஞானசம்பந்தர் பாட்டு; இவ்வூரில் சம்பந்தர் மடம் உண்டு; 56 கல்வெட்டுக்கள் உண்டு; 'அன்னியூர்ச் சிலாசாசன ஆராய்ச்சி' என்னும் நூல் காண்க.

3. **மாட்டூர்:** (சேவூர்) சுந்தரர் ஊர்த் தொகையில் குறிக்கப்பட்டுள்ளது; அவிநாசிக்கு வடக்கே 5 கல்.

4. **குரக்குத்தளி:** (பெரியபாளையம்) திருப்பூருக்குக் கிழே 5 மைல்: கூளிபாளையம் நிலையத்திற்குத் தெற்கே 2 மைல் சுந்தரர் ஊர்த்தொகை; மைசூர் உம்மத்தூர் அரசன் நச்சராயன் கல்வெட்டு உண்டு; இது குதுப்பு நாடு.

5. **பூந்துறை;** அடைவுத்திருத் தாண்டகம் 11-ம் பாட்டு; பூந்துறை நாடு ஈரோடு தாலூகாவின் வடகீழ்ப் பாகம்; சமணர் பாசநாத தீர்த்தங்கரர் கோயில் உண்டு.

6. **மூலனூர்:** தாராபுரத்திலிருந்து 14 கல்; சுந்தரர் நாட்டுத் தொகை 3-ம் பாசுரம்; ஆலயமும் கல்வெட்டும் உண்டு.

7. **தகடூர்:** சுந்தரர் நாட்டுத் தொகை 3-ஆம் பாசுரம்; சேலம், தருமபுரி.

8. **திருக்கரபுரம்:** திருவீரட்டானக் காப்புத் திருத் தாண்டகம்; 7-ம் பாட்டு; வேம்படித் தாளம் நிலையத்திற்கு அருகில்.

9. **ஏமூர்:** சேத்திரக்கோவை திருத்தாண்டகம் 5-ம் பாட்டு; திருச்செங்கோட்டுக்குக் கிழக்கே 14 மைல்.

10. **தோமூர்:** அப்பர் அடைவுத் திருத்தாண்டகம்; 4-ம் பாசுரம்; நாமக்கல்லுக்கு வடமேற்கு 6 கல்.

11. **அறைப்பள்ளி:** அப்பர் சேத்திரக்கோவை, அடைவுத் திருத்தாண்டகம்; கொல்லி மலை மீது உள்ளது; மலை உயரம் 4663 அடி.

12. **களந்தை ஆதித்தேசுரம்:** கிணற்றுக் கடலி லிருந்து 6 மைல் வச்சணந்தி முனிவர் வாழ்ந்த ஊர்.

## 3. வள்ளல்கள்

காரி (முள்ளூர் மலைப்பகுதி) ஓரி—கொல்லிமலை, அதிக மான் நெடுமானஞ்சி (தகடூர்—தருமபுரி) வேள் ஆய்,

பேகன், குமணன் (கொழுமம்) ஆகிய வள்ளல்கள் கொங்கு நாட்டினர் ஆவர். பாரிவள்ளலுக்கும் பாரியூருக்கும் (கோபிவட்டம்) தொடர்பு உண்டா என்பது ஆராயத் தக்கது.

## 9. முட்டத்து நாகீசர் கோயில் கல்வெட்டுகள்*

முன்னொரு காலத்தில் சிறந்து விளங்கிய முட்டத்து நல்லூர் இடைக்காலத்தில் நாகபட்டணம் என்ற பெயருடையதாகி மைசூர் அரசர்கள் காலத்திலோ அல்லது அதற்கு முன் விஜய நகரத்தார் காலத்திலோ அழிவுற்றுச் சிறைக் காடாகப் போயிற்று. நாகபட்டணம் என்ற ஊரும் மைசூர் ஆதிக்கத்தின் முன்பே அழிவுற்றது எனலாம். நல்லூருக்குச் சேர்ந்த ஊர்கள்: முட்டத்துறை, முரசம்பூர், நாகபட்டணம் என்பன வெகு காலத்திற்கு முன்பே அழி வுற்றன. வடக்கே இருந்த மன்னர்கள் சரிவர இப்பகுதியைக் கவனிக்கவில்லை எனலாம். திப்புசுல்தான் என்ற மைசூர் மன்னன் ஆண்டபோது இப்பகுதியில் (கோவை வட்டத்தில்) பலவாறு போர்கள் நடைபெற்றதால் மக்கள் அங்கும் இங்கும் அச்சத்தால் அவதிப்பட்டும் திசை கெட்டு ஓடி விட்டார்களாம்; 1801 முதல் ஊர் அடங்கல் கணக்குகளில் நாகபட்டணம் என்ற கிராமமும் நிலத்தின் விவரங்களும் குறிக்கப்பட்டு வந்தன; ஆயின் இப்பகுதி பெரும்பாலும் மானிய நிலமாகவே இருந்து வந்தனவாகையால் பொது மக்கள் இப்பகுதியைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை; பெர்கூசன் என்ற ஆங்கிலேயர் இப்பகுதிக்கு வந்து ஓரளவு புகுந்து பார்த்து, ''இங்கு ஒரு பெரிய குளம் (உக்குளம்) உடைந்து கிடக்கின்றது; இச்சிறைக் காடுகள் நல்ல நஞ்செய் நிலங்களாக இருந்திருக்க வேண்டும்'' என்று குறித்தாராம். இங்குள்ள கோயில்களின் மான்யம் என்ற நிலங்களும் கோயில்களும் அழிவுற்றனவென்று கண்டு எக் காரணத்தாலோ யாது கருதியோ இப்பகுதியைப் பொது மக்களுக்கு உரிமையாக்கினர் வெள்ளையர்களாம் அரசினர். சென்ற நூற்றாண்டின் இடையில் நிலங்கள் மான்ய நிலங்களாகக் குறிக்கப்பட்டுப் பின் அவைகள் சர்க்கார் தரிசு

* நாகீசர் கோயிற் கல்வெட்டுகளை ஆராய்ந்து கூறியவர். திருவாளர் கோவை கிழார் அவர்களாவர்.

என அமைக்கப்பட்டு பின் ருஷ்தமாஜி சேட்டு என்பவர்க்கோ அவர் முன்னோர்க்கோ உடைமையாக்கி விட்டனர்; மற்ற பொது மக்களுக்கும் பலவாறு நிலங்கள் வழங்கப் பட்டன. அவர்கள் மிகவும் அருமையாக இக்காடுகளை அழித்து வனவிலங்குகளைக் கொன்றும் ஓட்டியும் விவசாயம் செய்து வந்தனர்; குளமும் பிற்காலத்தில் கட்டி முடிக்கப் பட்டது; பின் சென்ற நூற்றாண்டின் இடையில் செம்மேட்டுக் கவுண்டர் மரபினர் இவைகளை விலைக்கு வாங்கி மேலும் இப்பகுதியை வளமாக்கி செம்மேட்டுப் புஞ்செய் என்னும் இடத்தில் ஒரு ஊரையும் அமைத்தார்கள்; இந் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இப்பகுதி மிருக பயம் உடையதாகவே இருந்தது எனலாம்.

1910-ல் இப்பகுதியிலுள்ள நாகீசுரர் கோயில், வெங்கடேசுரர் கோயில் இவைகளிலுள்ள கல்வெட்டுக்களை அரசினர் படியெடுத்துள்ளனர். இடம் அச்சத்திற்குரிய இடம்; பகலிலேயே மிருக பயம். கோயில் வேறு அழிந்தும் இடிந்தும், புதர்கள் மூடியும் கிடக்கின்றன; கோயிற் சுவர்களின் கீழ்ப்பாகத்தில் உள்ள கல்வெட்டுகள் முழுதும் மண் தூர்ந்து கிடக்கின்றன. ஆயினும் தம்மால் இயன்றவரை மிக முயன்று எட்டு இடங்களிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளனர். ஒரு சில இன்னும் படியெடுக்காதனவாக உள்ளன எனலாம். கோயில் சுவரின் கீழ் உள்ள மண்ணைப் போக்கி நன்கு ஆராய்ந்து படி எடுக்க வேண்டுவது அரசினர் கடமை. 1910 ஆண்டைய 150 முதல் 157 வரை எண்கள் தரப்பட்டுள்ளன:

1. **1910/150.** கொங்கு சோழனை வீரராசேந்திர தேவன் (1207—1234) காலத்தில் அதிராசராசன் திருமடை விளாகம் என்ற ஊரினன் சிறந்த சிவபக்தன்; நாகீசர் கோயிலில் கதவு நிலைகள் இரண்டைத் தானம் செய்தானும்; மடவளாகம் என்பது தாராபுரம் வட்டத்தில் உள்ளதென்பதை 320, 1155 எண்களுள்ள பிற சாசனங்களால் அறிகின்றோம்.

2. **1910/151.** இராசராச தேவன் என்ற மன்னனது மூன்றாம் ஆண்டு சாசனம். முட்டம் என்னும் அமரபுயங்க நல்லூர் நாகீசுரருக்கு வழிபாட்டிற்காக நிலதானம் விட்ட செய்தியை உரைக்கின்றது. நிலத்தின் எல்லைகள் முதலியன கூறப்பட்டுள்ளன. இராச வாய்க்கால், உத்தமசீலி வாய்க்

கால் கன்னியப்பன் திட்டு என்ற தொடர்கள் காணப்படு கின்றன.

3. 1910/152. இராசராசனது மூன்றும் ஆண்டுக் கல் வெட்டு. கோயில் பணிவிடையாளருக்கும் வழிபாட்டிற்கும் நிலதானம் விட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

4. 1910/153. மேல் புறம் சுவரில் உள்ளது; விக்கிரம சோழ தேவனது 17-ஆம் ஆண்டுக் கல்வெட்டு—பூர்த்தியாக இல்லை.

5. 1910/154. வடசுவரில் உள்ளது. இராசகேசரி வர்மன் திரிபுவன சக்கரவர்த்தி வீரராசேந்திரன் தனது 27-ம் ஆண்டு கல்வெட்டு (1207—1234) முன்னுள் சேர மன்னர் களான அதிராசராசதேவன், இராசராசதேவன் என்ப வர்கள் நிலம் விட்ட செய்தி பற்றி உரைக்கப்பட்டுள்ளது. முட்டம் சேரர் காலத்தில் இரவிவர்ம சதுர்வேதி மங்கலம் என்று இருந்ததாம். மற்றும் அமரபுயங்க நல்லூர், இராச ராச நல்லூர் என்ற பெயர்கள் காணப்படுகின்றன; கோளூர் என்ற அருள்மொழி தேவி சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் இதனுள் காணப்படுகிறது: கோளூர் எங்கிருந்தது என்று கண்டு பிடிக்க வேண்டும்.

6. 1910/155. நாகீசுரர் முன் மண்டபத்தில் உள்ளது; கொங்கு சோழன் விக்கிரமன் (கி. பி. 1037) தனது 37-வது ஆண்டுக் கல்வெட்டு; நாகீசுரம் உடையார் கோவில் கோடி தேவர் என்ற தேவர்க்கு பணம் தானம் செய்தது பற்றிய விவரங்கள் உள்ளன; அமரபுயங்க நல்லூர், இரவிவர்ம சதுர் வேதிமங்கலம் என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

7. 1910/156. வெங்கடேசுரர் கோயில் சுவரில் உள்ளது; குலசேகர விண்ணகரத்து எம்பெருமானுக்கு நந்தா விளக்கு வைத்த செய்தி உரைக்கப்பட்டது.

8. 1910/157. மேல்கண்ட கோயில் மேல் சுவரில் உள்ளது; ஒருவர் நந்தா விளக்குகளுக்குப் பணம் தானம் தந்த செய்தி கூறுப்பட்டுள்ளது.

மற்றும் நாகீசர் கோயில் கீழ் (வடபுலம்) புதைந்து கிடக்கும் கல்வெட்டு ஒன்றில், "றயில் வல்லுவன் கோவன் விட்ட நிலம்" என்ற தொடர் காணப்படுகின்றது; கோவன் என்பான் இருளன்; றயில் வல்லுவன் எனவே இவர்கள் ஊதும் வாத்தியத்தில் வல்லவன் போலும்; எப்படியும் மலை

சாதிகள் கோயில்களில் பங்கு கொண்டிருந்தனர் என்பதை இதனால் அறிகின்றோமல்லவா? வடகீழ்த் திசையில் வல்லாள ஆண்டு என ஒன்றும், வெளியே சிதைந்து கிடக்கும் கல்வெட்டுக்களும், திருமுத்துவாளியம்மையார் கோயிலில் ஒரு கல்வெட்டும் உள்ளன. "அமுதுபடி...வட்டடு...நெல்விதை... வளமும் தேசாந்தர...நாங்கள்...பாட்டம் 3-க்கும் படி கால்... இப்படிக்கு கன்னியப்பன் எழுத்து உலகபரிபாலகன்...உத்தம சீலன் வாய்க்கால், நாராயணன் வாய்க்கால்...உலகுடைய பெருமாள் ஆதிநாத தேவர்க்கு..." என்ற தொடர் தென்புறச் சுவரில் உள்ளது. உத்தம சீலன், உத்தம சீலி என்பவர் யார் எனத் தெரியவில்லை! நீலி வாய்க்கால்தான் இப்பெயர் பெற்றதோ அன்றி இப்பெயர் கொண்டார் இங்கு பிரதிநிதியாக இருந்தாரோ என்பது ஆராயத்தக்கது. மேல் கண்ட கல்வெட்டுக்களின் உண்மை உருவங்கள் கிடைத்தில! படியெடுத்த இக் கல்வெட்டுக்களின் தொடர்கள் கிடைத்த போது இப்பகுதியை நன்கு விரிக்கலாம்; ஜில்லா கெஜடியர், மானுவல் போன்ற ஆங்கில சரித நூல்களும் பழங்கலை ஆராய்ச்சிக் கழக வெளியீடுகளான ஆர்கிலாஜிகல் பகுதிகளும் எமக்குக் கிடைக்காததால் மேற்கொண்டு சரிதத்தை ஆராய இயலவில்லை!

## 10. வெள்ளியங்கிரி யாத்திரையின் நற்பயன்களும் இனிச் செய்ய வேண்டுவனவும்

வெள்ளியங்கிரித் தலம் போளமாம்பட்டிக் காடுகளாகிய மரங்களடர்ந்த சோலைகள் சூழ உள்ளது. பொதுவாக எல்லாத் தலங்களிலும் இறைவன் காட்சி தருகின்றாரென்றாலும் ஆங்காங்குள்ள இட விசேடங்களினாலும் தட்ப வெப்ப நிலையின் காரணத்தாலும் சிறப்புக்கள் வேறு வேறாக அமைகின்றன. கன்னியாகுமரி முனையில் காணும் காட்சியும் வெள்ளியங்கிரியில் காணும் காட்சியும், சீரங்கத்தில் காணும் காட்சியும் வேறு வேறாக அமைந்திருக்கும். பலவிடங்களிலிருந்தும் வருகின்ற மருத்துவர்கள் விரும்புகின்ற உயர்ந்த மூலிகைகளும் மண் வகைகளும், தாதுப் பொருள்களும் இங்கு மிகுந்துள்ளன. போளமாம்பட்டிக் கணவாய் வழியாக வீசும் காற்று வெள்ளிமலை மூலிகைகளின் மணமும், பூக்களின்

மணமும் கலந்த சஞ்சீவிக் காற்ருக விளங்குவதோடு மக்களுக்கு ஆறுதல் உண்டாக்கவும் வல்லது. உயர்ந்த மலையின் மேல் ஏறி உலவுவதால் மூலிகை விசேடத்தால் நோயாளிகளும் சுகம் பெறுவர்; மற்றவர்கள் உடல் நலமும் உடல் வலிமையும் பெறுவர். பெருமூச்சு விட்டு மலையேறிச் செல்வதால் நல்ல காற்றை நுகர்வதாலும், உடம்பிலுள்ள கெட்ட நீர் வடிந்து போவதாலும், காற்றுக் குழாயும், சுவாசப் பையும் மார்பின் எலும்புகளும் நன்கு சுருங்கி விரிந்து அமைவதாலும் நாம் வலிமை பெறுகின்ருேம்; என்றும் பிணியுண்டாவதில்லை. சுனை நீர்களில் தாதுப் பொருளும், மண்ணின் சாரமும், மூலிகை வேரிலிருந்து வருவதால் பலவகையான மருந்துகளின் சாரமும் கலந்துள்ளன. எனவே ஆண்டிகளையில் குளிப்பதாலும் கைதட்டிச் சுனை போன்ற சுனை நீர்களைக் குடிப்பதாலும் நம் உடல் மிகவும் நலம் பெறுகின்றது; அதோடு நாம் செய்த பாவங்களும் தொலைகின்றன! இம்மலையின் வேங்கை மரப் பாலைத் திலகமாக இட்டுக்கொண்டால் முக வசீகம் உண்டாகும். பசுமையான காடுகளைப் பல மணி நேரங்கள் காண்பதால் கண்ணுக்குக் குளிர்ச்சியுண்டாகிறது.

மற்றும் நிலவின் ஒளியிலும், கதிரவன் கிரணங்கள் காலைமாலை படுகின்ற போதும் மேகங்கள் சூழ்ந்துள்ள காலங்களிலும் இம்மலையின் ஒவ்வொரு இடமும் அழகுறக் காண்பதைக் கண்டு மகிழலாம். நெஞ்சில் குடிகொண்ட எத்தகைய கவலைகளும் பறந்து போகும். இயற்கைக் கோபுரம் போன்ற மலை உச்சிகள், இரத்தினக் கம்பளம் விரித்தாற் போன்ற புல் வெளிகள், பூங்காவனங்கள், வானுற வளர்ந்து ஓங்கி நிற்கும் நன்மரங்கள், பின்னிப் படர்ந்து கிடக்கும் செடி கொடிகள், ஆயிரமாயிரம் பேர் கூடி அமர்ந்து உரையாடுவதற்கேற்ற பாறைகளின் வெளிகள், அருவிகளின் ஓசைகள், பறவைகளின் இன்னொலிகள், ஏழிசையும் இசைக்கவல்ல வண்டினங்களின் ரீங்காரம், உயரத்தே காணப்படும் தூரத்துக் காட்சிகளின் அமைப்பு, இரவில் மின்விளங்குகளால் உயர்ந்த கோவை மாநகரமும் பிற இடங்களும் காட்சி தருகின்ற அமைப்பு என இவைகளையெல்லாம் பிறவிடங்களிலும் நாட்டுப்புறங்களிலும் காண இயலுமோ?. இம்மலைக்கு வந்தவர்கள் இறைவனது படைப்பின் திறனை எண்ணி எண்ணி மகிழ்வார்கள். இயற்கையில் இறைவன் விளங்குகின்ருன் என்பது இதனுலன்ருே! தன்னை வியந்து தன் செல்வத்தை வியந்து கருவங்கொண்டு திரியும்.

எந்த அஞ்ஞானியும் தனக்கு மேலான இறைவன் படைப்பை எண்ணி வியந்து அடக்கமும் பணிவும் கொள்வார்கள்.

மற்றும் மனத்தில் இருளும், வாழ்வில் வறட்சியும் பிற குறைவுகளும் கொண்ட அன்பர்கள் தம் அறிவுக்கும் எட்டாத அற்புதங்களைக் கண்டு தெளிவடைவார்கள். படிகளின் மேல் ஏறிச் செல்வது மனிதன் படிப்படியாக நற்குண நற்செயல்களில் உயர்ந்து செல்லுதற்குரியவன் என்பதை உணர்த்துகின்றது. ஆறு மலைகளையும் கடந்து ஏழாம் மலையை அடைதல் மனிதன் பலவாறு ஏழெழு பிறப்புக்களைக் கடந்து உயர்ந்த மனிதப் பிறப்பை அடைந்துள்ளான் என்பதை நினைவூட்டும். மற்றும் பற்றுக்களை நீக்கிப் பற்றற்றான் பற்றைப் பற்றுதலில் மக்களினம் ஊக்கமுடையராதல் வேண்டுமென்பதையும் உணர்த்துகின்றது. கிரிமலையில் கிடைக்கும் திருநீற்றை மேனி முழுதும் பூசினால் தாம் செய்த வினைகளும் பிறவித் துன்பமும் ஒழியும். ''இறைவனே! அடியவனாகிய நான் தங்களை என் தலைவனாக ஏற்றுக்கொண்டேன். உம்மையன்றி இப்புவனத்தில் உயர்ந்தவர் எவருமிலர். நினக்கு ஒப்பாரும் மீக்காரும் எவரும் இலர். இயற்கையில் எழுகின்ற இன்னொலியே உன் வாக்கு; உயிருள்ளனவும் இல்லனவுமாகிய எல்லாப் பொருள்களும் உன் படைப்புப் பொருள்களேயாகும்; உய்ப்பனவும் துய்ப்பனவுமாகிய எல்லாவற்றையும் தோற்றுவித்தாய். என்னைப்பற்றிய பற்றுக்கள் நீங்க உன் திருவடிகளை வழுத்துகின்றேன். எனக்கு அருள் புரிவாயாக!'' என்று இறைவனை வணங்குவார்களாக! இம்மலையிலுள்ள பறவைகளும், விலங்குகளும் ஏனைய எண்பத்து நான்கு கோடி உயிரினங்களும் தாம் தாம் தமது குரலை எழுப்பி இறைவனை வணங்குகின்றன. அஞ்ஞானம் என்ற படலம் மறைக்கவும், பிறவியின் பயனை உணராது பலவாறு திசை கெட்டுத் துன்புறும் உயிரினங்கள் ஒருநாள் ஒரு பொழுதாகிலும் இறைவனை நினைத்தல் வேண்டும். எனவே ஆண்டுக்கு ஒருமுறையேனும் வெள்ளிமலையான் நிழலில் தோய்ந்து இன்புறுவார்களாக!

இந்த இருபதாம் நூற்றாண்டில் தென்னாட்டிலுள்ள தெய்வத் தலங்கள் பலவும் சிறப்புற்று விளங்குகின்றன; ஆங்காங்கு பல விழாக்கள் தலங்கள்தோறும் நடைபெறுகின்றன. ''ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்'', ''கலிகெழு மூதூர்'' என்ற சங்க நூற்றொடர்கள் நினைவுக்கு

வருகின்றது; அப்படியிருக்க முட்டத்து நல்லூர் நாகேசுர முடையார் கோயிலும், திருமுத்துவாளியம்மை யால்யமும் இவ்வாறு அழிந்து மண் மேடாகக் கிடக்கும் காரணம்தான் என்னவோ? உயர்ந்த சிற்ப விசேடம் உள்ள தலமாயிற்றே! அருகில் இனிய நீர் தரும் காஞ்சிமகா நதியுள்ளதே! இக் கோயில்கள் ஏன் அழிந்து கிடக்கின்றன? வெள்ளியங்கிரி வரும் அன்பர்கள் இக்கோவில்களைக் காணுங்கள். புண் ணியம் செய்வோர் நிழல் பட்டாவது இத்தலம் இனிமேல் சிறந்து விளங்குமாக! பஞ்சகிரிகளில் மாதந்தோறும் பிரம கிரிக்குப் பலர் செல்ல வழி வசதியுண்டு! (நெ. 14, வண்டி வசதியுண்டு) ஏனைய கிரிகளுக்குச் செல்லுவோர் அருகிக் காணப்படுகின்றனர்; ஏற்ற வழிவசதிகள் இன்மையே காரணம். ஆவன செய்வார்களாக! வெள்ளியங்கிரியில் நின்று வடக்கு முகமாகத் திரும்பி வணங்கி நில்லுங்கள்; அந்தப் பக்கங்களில்தான் சத்திகிரி, உருத்திரகிரி, சதாசிவ கிரிகள் உள்ளன.

**பூண்டி :** பூண்டி இன்னும் முன்னேற்ற மடைய வேண்டும். பூண்டியிடத்தை மேலும் விரிவுபடுத்த வேண் டும். தேரோடும் திருவீதி உலாவினைக் காண ஆவன செய்ய வேண்டும். வெகு தூரம் வரை காணப்படுமளவு பூண்டியில் உயர்ந்த கோபுரம் கொண்ட திருக்கோயில் கட்டப்பட வேண்டும். பூண்டிப்பாதை நேருக்கு நேர் நன்கு அமைய வேண்டும். பேருந்து வண்டிகள் மாதந்தோறும் நேராகக் கோயிலுக்கே செல்ல வழி வசதிகள் அமைய வேண்டும். பூண்டியில் மின்சாரம் அமைக்க போளமாம்பட்டிப் பஞ் சாயத்து ஆவன செய்து வருகின்றது போற்றத்தக்கதே. கிருத்திகை விழாக்களைப்போல இங்கு வேறு திருவிழாக் களும் நடைபெற வேண்டும். பூண்டி தேவத்தானம் பல வாறு முயன்று வருகின்றது. மலைமேல் பாதைகள் நன்கு அமைய வேண்டும். யாத்திரையாக வருபவர்கள் பூண்டி யின் துப்புரவில் கண்ணோட்டமுடையராதல் வேண்டும். பாலாபிசேகக் குழுவினர் கொண்டாடுவதுபோல் பல சிறப்புக்கள் நடைபெற வேண்டும். இருபுறமும் உள்ள அச்சத்திற்கிடனான காடுகள் அகற்றப்பட்டால் இன்னும் பல்லாயிரக்கணக்கானவர் வந்து கூடுவார்கள். மலையின் மேல் பக்தர்கள் தங்குவதற்கேற்ற மண்டபங்கள் அமைதல் நலம். சில இடங்களில் நிழல் தரும் மரங்கள் பயிரிடப்பட வேண்டும். மலைவாழ் மக்களுக்கு மேலும் பல வசதிகள் அளித்து கோயில்களில் அவர்கள் இசைக்கு ஊக்கம் தர

வேண்டும். போளமாம்பட்டி வழியாக நாகேசுரத்திற்கும் பூண்டிக்கும் பேருந்து வண்டிகள் சென்ருல் அது மிகவும் பயன் தரும். பூண்டியில் 63 நாயன்மார்களுக்கு மடாலயங் களும் கோயில்களும் எழுப்ப வேண்டும். பல அன்ன தானங்கள் மேலும் நிகழ வேண்டும். அருகிலுள்ள கூடு துறை சென்று மூழ்குவது பெரும்பயன் தரும். பூண்டியி லிருந்தும் தெற்கே நொய்யலுக்கு நல்ல வழி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். வீரகாளியம்மையாருக்குப் பெருங் கோயில் எழுப்பி மகிழ வேண்டும்.

நம் கொங்கு நாட்டில் முன்னம் வாழ்ந்த பெரியோர் கள் ஓலைச் சுவடிகளில் எழுதிப் படித்தார்கள். பல தலங் களின் வரலாறுகளும் கோயிற் பிரபந்தங்களும் ஆகிய பல ஏடுகளிலேயே உள்ளன. அவைகள் மூலை முடுக்குகளில் செல்லுக்கும், கறையானுக்கும் புழுதிக்கும் இரையாகி அழிந்து வருகின்றன. அன்பர்கள் ஆராய்ச்சிக்கிடனுன அந்தக் கருவூலங்களை அழியவிடாமல் காப்பார்களாக! உரி யவர்களுக்கு அனுப்பி ஆராயச் செய்து சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் தொண்டு செய்வார்களாக! மற்றும் சாசனங்கள், செப்பேடுகள், பழங்காலத்துக் காகிதங்கள் என்பனவற்றையும் பாதுகாக்க வேண்டும். எனக்குக் கிடைத்த சிலவற்றை அடியேன் நன்முறையில் பயன் படுத்தியும் பிற சிறந்த கல்விமான்களைக்கொண்டு, பயன் படுத்தச் செய்தும் மகிழ்வேன். வெள்ளிமலையான் விறலடி போற்றி! நாகீசர் பொன்னடி போற்றி! திருமுத்துவாளி யின் மெல்லடி போற்றி! பட்டீசர் பொன்னடி போற்றி! மரகதவல்லியின் மாண்புமிக்க திருவடிகள் போற்றி!

# 11. திருக்கைலாயத் தேவாரப் பாடல்கள்

## 1. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் :

### மூன்றும் திருமுறை

*(பண் சாதாரி)*

புற்றரவு பற்றியகை நெற்றியது
 மற்றொருகண் ஒற்றை விடையன்
செற்றதெயில் உற்றதுமை யற்றவர்கள்
 நற்றுணைவன் உற்ற நகர்தான்
சுற்றுமணி பெற்றதொளி செற்றமொடு
 குற்றமில தெற்றென வினுய்க்
கற்றவர்கள் சொற்றொகையின் முற்றுமொளி
 பெற்ற கயிலாய மலையே.

சிங்கவரை மங்கையர்கள் தங்களன
 செங்கை நிறை கொங்குமலர் தூய்
எங்கள்வினை சங்கையவை இங்ககல
 அங்கமொழி எங்குமுள வாய்த்
திங்களிருள் நொங்கவொளி விங்கிமிளிர்
 தொங்கலொடு தங்க அயலே
கங்கையொடு பொங்குசடை எங்கள்இறை
 தங்கு கயிலாய மலையே.

முடிசடை பிடியதொரு வடியமழு
 வுடையர் செடியுடைய தலையில்
வெடியவினை கொடியாகெட இடுகில்பலி
 நொடிய மகிழ் அடிகளிடமாம்
கொடியகுர லுடையவிடை கடியதுடி
 யடியினொடும் இடியினதிரக்
கடியகுரல் நெடியமுகில் மடியவதர்
 அடிகொள் கயிலாய மலையே.

## 2. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்!

### ஆறும் திருமுறை

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சந்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழுவாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குத் தேவனாய் நின்றாய் போற்றி
கானத் தீயாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல்லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீயானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையாகி நின்றாய் போற்றி.

### 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

(பண் பஞ்சமம்)

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியறியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்றுகண்
டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே.

அரவொலி யாகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்த் திசைப்ப
வரமலி வாணன் வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே.

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள் புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே.

---

## 12. வெள்ளியங்கிரி தோத்திரப் பிரபந்தப் பாடல்களும் பிறவும்

(1) சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு இராமானந்த சுவாமிகள் மாணவர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பாடிய வெள்ளியங்கிரிப் பிரபந்தத்திலிருந்து துதிப் பாடல்கள்:

### 1. விநாயகர் பதிகம்

ஏசியே வெறுக் கினும்விடா தென்னை
யிகலிமேலெடுத் தெழும்பெருங் காற்றின்
றாசிபோற்சுழற் றிடுங்கொடு மாயைத்
துவங்கினுற் றுயர்ந் தனன்றுணை புரிவாய்
தேசிலங்கெழின் மலையடிவாகுஞ்
சிவபிரானயல் பாலருளருவி
வீசியாட்டினன் மகிழ்தர வெள்ளி
வெற்படிக் கண்வாழ் விக்கினேச்சுரனே.

ஏது சொல்லினு தீதிருவுள்ளத் திரக்கமற்றவ
　　ரெனவிருந் திடில்யான்
சூது தோய்புலப் பகைவிருந்தாகித்
　　தொலைவதன்றி மெய்ந்நிலை பெறலுளதோ
போது கொண்டுபொன் னடிபணிவாரம்
　　புயத்திற் கற்பகம் புனைந்துதம் முடியின்
மீது கொள்ளவிண் ணவர்வரும் வெள்ளி
　　வெற்படிக் கண்வாழ் விக்கினேச்சுரனே.

## 2. வெள்ளியங்கிரிப் பதிகம்

கரணத் துடனைம் பொறியும் புலனுங் கலங்கும்படி யெய்தும்
மரணத் தியக்கந் தனையஞ்சினனின் மலர்த்தாட் சரணனேன்
புரணப் பொருளே கருணைக் கடலே புயங்கப் பணியானே
விரணப் படுநெஞ் சுவக்கப் புரிவாய் வெள்ளிக் கிரியானே.

ஊனைப் பொருளை மனையைச் சதமென் றுன்னிச் சுழல்வார்தம்
மானைக் கடங்கிச் சுகமெய்திடுவா னயருஞ் சிறியேற்குன்
சேனைக் கடந்த பதங்கண் டுவக்குஞ் செயலென்றருள் செய்வாய்
வீணைக் கரத்தன் புகழ்ந்தேத் திசைசால் வெள்ளிக் கிரியானே.

## 3. சத்திநாயக மாலை

காயமாஞ் சிறைக்கு ளின்பதுன்பப் பொய்க்
　　கனவுகண் டுழலு மென்னுயிர் நின்
தூயபேரின்பத் துணையடி வீட்டிற்
　　றோய்ந்து நித்திரை செயலுளதோ
நேயமா ருமையின் றேளன வரையா
　　நின்மலற் றழுவுது மென்று
வேயள வறவாய்ந் தோங்குதென்
　　கயிலை வித்தகா சத்தி நாயகனே.

உடம்பெலாம் வாயாப் பிறர்க் குபதேச
　　மோதினே னல்லதென் னுள்ளத்துள்
நடம்பயிலுனது திருவடித் துணைக
　　ணடிலே னெந்தவா றுய்வே

ளிட்ம் பெறுமேனி யிடம்பொலி பணியா
யிலங்கன் போலிய லிடமெங்கும்
விடம் பொலி பணிகள் விளங்குதென்
கயிலை வித்தகா சத்தி நாயகனே.

மற்றும் பஞ்சகிரித் திருப்புகழ் ஆகிய நூற்பாட
பிரபந்தத்துட் காண்க.

---

(2) முத்தமிழ்க் கவி வித்துவான் K. R. அரசப்பஉ
இரு சொல்லலங்காரம்

வெள்ளிமலை சார்ந்த நிலம் மிகுவளத்தைப் பெற்ற
தள்ளருங்கா விராமன் செலத் தாதையுயி ரற்றதே
நொய்யலினுல்—நொ

கோவை நகர் மேல்குன்றங் குழாய்நன்னீர் கொடு
பாவை புகல் நாவலர்நாப் பண்பெனுமாண் படுத்
சீர்வாணியால்—சீர்வ

---

(3) போளமாம்பட்டி முன்னுள் வித்வான் கு. அ
முதலியார் அவர்கள் பாடிய வெள்ளிமலைக்
கலித்துறை அந்தாதியிலிருந்து சில பாடல்க

கெட்டு மறிவிலே சொல்வதை நெஞ்சமுங் கேட்ப
விட்டுப் பிடுங்கிய வானரம் போல விழிக்கலுற்றே
மட்டுப் படாவெள்ளி மாமலைவாழு மரகத நீ
தொட்டுத் தெரித்திடா வென்வித்தை முற்றுஞ் கு

தெரிந்தே னறிகுறி யாய்வெள்ளி மாமலைச் சென்
கரியா னனனைக் கடம்பனை யம்மையைக் கன்
விரிபூத மைந்தி னபிதான முற்று விடயனுட்பம்
பிரியாத பேரொளி யாம்பஞ்ச லிங்கப் பிழம்பினை

அப்பனை வெள்ளி மலைமீ தமர்ந்த வருங்கனியைச்
செப்புமெய்ஞ் ஞானியர் தேக்கற் றருந்திய தெள்ளமுதை
ஒப்பனை செய்து விழிநீர் பெருக்கி யுடல் சிலிர்க்க
எப்பொழு தென்மன மேயாம ளுள்ளி லிருத்துவதே.

---

(4) ஒற்றியூர் சுப்பிரமணியக் கவிராயர் பாடியன :

பொல்லாச் செனன மிருந்தென்ன போயென்ன புத்தியில்லா
கல்லாத சென்மத்தை யேன்படைத் தாய்கயி லாசபதி
வில்லா லடியுண்டு முப்புரந் தீயிட்டு முடித்தவனே
கல்லாய்ப் பிறந்திலனே வெள்ளிமாமலைக் கானகத்தே.

அறமே வளர்ந்திடும் தென்கயி லாசர் அடியதனில்
சிரமாய்த் தவம்புரி நவகோடி சித்தர்கள் சேர்ந்திருக்க
உரமாகி நின்று காய்கனிதன்னை உதிர்த்து நிற்கும்
மரமாய்ப் பிறந்தில னேவெள்ளி மாமலை மார்க்கத்திலே.

(தோத்திர மாலை)

மற்றும் போற்றிப் பதிகம், அடைக்கலப் பதிகம் என்பனவும் உண்டு.

---

(5) பண்டித அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் பாடிய பேரூர்ப் பற்றிய தனிப் பாடல்கள்:

பேரூரை யில்லாய் பேரூரை யடைந்ததுவும் பெற்ற மூர்ந்து
சீரூரும் பட்டீச! முதியோனாய்ப் பச்சைப்பெண் செல்விதன்னை
யேரூர மணந்ததுவும் ஆனிருந்தாய் அரசினடி இருந்தவாறும்
நீரூர நினைப்பிலடி யாரோ டெமையாட்கொளலும் நீதிதானே.

அரும்மறை முதலாம் பட்டி ஐங்கரக் களிற்றின் சார்வும்
மருதமால் வரையின் வைவேல் வள்ளலார் அருட்கண் நோக்கும்
இரசிதமன் றந்தன்னில் எம்பிரான் நட்டமும் போற்றி
மருவியே வாழ்தற் கையர் மன்னருள் வருத்தவாறே.

இப்புறம் பட்டிப் பெம்மான் இட்ப்புறம் பச்சைத் தாய
பிப்பிலா ரணிய நீழல் பேசுசித் தாந்த சைவத்
துப்புர வுடையார் கூட்டம் துரிசிலாத் தமிழ்நன் மாந்தர்
வைப்பிடை வைகற் கையர் மன்னருள் வகுத்தவாறே.

காஞ்சிமா நதிநீர் மூழ்கிக் கருவினை பாவம் தீர்ப்ப
தாஞ்சிவ பிரம தீர்த்த அரியநீராடி நாளும்
பூஞ்சினை கொடிகள் பூத்துப் பொலியு நந்தனம் பூக்
வாஞ்சையின் வணக்க ஐயர் மன்னருள் வகுத்தவாறே.

படியிருக்க வானவரும் தவமிருக்கும் திருப்பேரூர்ப் ப
அடியிருக்க நிழல்வேட்ட அப்பர்செய லடியெனையும்

கொடியிருக்கவ் வதிகாரங் கொடுத்தவர்க்கீழ் எனைக்கா
கொ
குடியிருக்க ஓர்வீடும் கொடாதிருக்கும் திருவுள்ளக் கு

—o—